
# முத்தெழில்

## கலை இலக்கியப் பண்பாட்டு மலர் - 2015



அனுசரணை
வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வெளியீடு
பிரதேச பண்பாட்டுப் பேரவை, ஒட்டுசுட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

7732(P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தெழில்

## மூன்றாவது முகிழ்

## 2015


மலராசிரியர்

**திரு. வீரசிங்கம் பிரதீபன்**

(கலாசார உத்தியோகத்தர் - பதில்
பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான்)

இணை மலராசிரியர்

**திரு. ச. தில்லையம்பலம்**

(ஓய்வு நிலைக்கோட்டக்கல்லிப்பணிப்பாளர்
ஒட்டுசுட்டான்)



ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டுப் பேரவை
ஒட்டுசுட்டான்,
முல்லைத்தீவு



7732 (P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

நூலின் பெயர் :- முத்தெழில்

நூலின் வகை :- ஆண்டு மலர்

நூலாசிரியர் :- வீரசிங்கம் பிரதீபன்

அட்டைப்பட வடிவமைப்பு :- க.சுவீதன்

தாளின் வகை :- B5 - 70gsm

அச்சுப் பதிப்பு :- மல்ரிவிஷன் அச்சுக்கலையகம்

வெளியீட்டு திகதி :- 05.01.2016

அனுசரணை :- பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வட மாகாணம்

வெளியீடு :- பிரதேச பண்பாட்டுப் பேரவை,
பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான்.

வழிகாட்டலும் ஆலோசனையும் :- திரு.இ.ரமேஸ், (உதவி பிரதேச செயலர்,
பேரவைத் தலைவர்)
திரு.ச.தில்லையம்பலம் (பேரவை உப தலைவர்)

## மலர்க்குழு

திரு.சி.பிரபு (கணக்காளர்)

திரு.வீ.பிரதீபன் (செயலாளர்)

திரு.சி.வேதவனம் (உப செயலாளர்)

திரு.சி.நாகேந்திரராஜா (பொருளாளர்)

திருமதி.வே.நித்தியகலா (உறுப்பினர்)

திரு.வே.பிரதீபன் (உறுப்பினர்)

திரு.சி.திலகானந்தன் (உறுப்பினர்)

திரு.சி.சிவனேசன் (உறுப்பினர்)

* முத்தெழில் தாங்கிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை ஆக்கித்தந்த கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப்பட விளக்கம்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பழைமையான சிவ வழிபாட்டுக்கு ஆதாரமான வாவெட்டி மலைக் குன்றுகள் இவை. இம் மலை சங்கிலி மன்னனின் இராசதானியாக இருந்ததாக "யாழ்ப்பாண வைபவமாலை" கூறுகிறது. குன்றின் மேல் நிமிர்ந்து அழகாக நிற்கும் பாறையின் தோற்றமும், யானைகள் போல அணிவகுத்து நிற்கும் பாறைகளின் இயற்கையான தோற்றமும் கொண்ட வாவெட்டி மலைக்குன்றுகள் அட்டைப் படத்தை அலங்கரிக்கின்றன. ஆய்வாளர் அருணா செல்லத்துரையின் கைவண்ணத்தில் கிடைத்தவையே இப்படங்கள்.

சாகித்தியரத்னா
விருது பெற்ற
முல்லைமணி வே.சுப்பிரமணியம்
கலாபூசணமும்,
முல்லை மாவட்டத்தின்
இலக்கிய பிதாமகரும் ஆவார்.
2015 முத்தெழில்
அவரை
கௌரவித்து மலர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே.
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே.

ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே.
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே.
(வாழ்க)

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே.
தொல்லை வினைதரு தொல்லை அகன்றிட
சுடர்க தமிழ் நாடே.
(வாழ்க)

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே.
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே.

-மகாகவி பாரதியார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டான் பிரதேச கீதம்

இராகம் :-சாருகேசி தாளம் :-ஆதி

பல்லவி

வளம் கொழிக்கும் பூமி எங்கள் ஒட்டுசுட்டான் வாழ்கவே
தான் தோன்றி ஈசன் வாழும் தரணி என்றும் வாழ்கவே

அனுபல்லவி

பண்பாடு ஊற்றெடுத்துப் பாய்ந்து வரும் பொன்னிலம்
பண்டார வன்னியனின் பாதம் பட்ட செந்நிலம்.

- வளம் -

சரணம்

பழனம் எங்கும் கொண்டாடிப் பறவை பண்பாடும்
சாலி இனம் தலை குனிந்து நிலமகளைக் கொஞ்சிடும்
முற்றம் எங்கும் தானியங்கள் முளைத்து விளைவு தந்திட
முத்தையன்கட்டுக்குளம் முழுவளமும் நல்கிடும்.

- வளம் -

செந்தமிழும் கலைவளமும் ஒன்றி நின்று வளர்ந்திடும்
வந்தவரை வாழவைக்கும் எங்கள் ஊர் உயர்ந்திடும்
பந்தம் கொண்ட கறவையினம் பசும்பாலை பொழிந்திட
கந்தம் நந்த வனமெல்லாம் தென்றலிசை பாடவே.

- வளம் -

எம்மதமும், எம்மதமாய் சமசரத்தைப் பேணி நாம்
வாழ வழி தந்த அன்னை வாழ்ந்திடவே நிரந்தரம்
கானகத்து நறை சிந்தக் களிப்புடனே வாழ்கவே
வளம் செழிக்கும் பூமி எங்கள் ஒட்டுசுட்டான் வாழ்கவே.

ஆக்கம்:
வீரசிங்கம் பிரதீபன்
பதில் கலசார உத்தியோகத்தர்.

இசை:
சி.பிரதீபன்,
இசை ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



சாகித்தியரத்னா,
கலாநிதி முல்லைமணி வே.சுப்பிரமணியம்.
முல்லை மாவட்டத்தின்
மூத்த இலக்கியச் செம்மல்.

ஒட்டுசுட்டான் பிரதேச கலாசாரப் பேரவை வெளியிடும் மூன்றாவது "முத்தெழில்" சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டுப் பூரிப்படைகின்றேன்.

பண்டாரவன்னியன், முத்தையன்கட்டுக்குளம், கற்சிலைமடு தான்தோன்றீஸ்வரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், வாவெட்டிமலை ஆகியவற்றின் சிறப்புக்களை உள்ளடக்கி முத்தெழில் என்ற முத்தான இவ்விதழ் வெளிவந்துள்ளது.

எனது தாய் நாடாம் வன்னிப்பெருமையையும், வரலாற்றையும் எத்தனையோ கட்டுரைகளில் வெளிப்படுத்தியுள்ளேன். எனது ஆசியுரையிலும் சிறிது குறிப்பிட விரும்புகிறேன்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஈழநாட்டின் முப்பெரும் பிரிவுகளாக இராஜரட்டை, மாயரட்டை, றோகணம் என்பவற்றில் வன்னிக் குறுநில அரசுகளும் இருந்தனர் என்கிறார் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள். இதனால் தமிழ் பிரதேசங்களிலும், சிங்களப் பிரதேசங்களிலும் வன்னிமைகள் என அழைக்கப்படும் சிற்றரசுகள் இருந்திருக்கின்றன. அனுராதபுரத்துக்கு தெற்கேயுள்ள வன்னிமைகள் மகாவன்னி என அழைக்கப்பட்டன. மகாவன்னி சிங்கள மன்னர்களால் ஆளப்பட்டது.

இங்ஙனம் இலங்கை முழுவதும் ஆங்காங்கே வன்னிக் குறுநில அரசுகள் இருந்தபோதும் அடங்காப்பற்றே, வன்னி என்னும் பெயருக்கு உரிமை பூண்டது. செட்டிகுளம், பனங்காமம், மேல்பற்று, முள்ளியவளை, கருநாவற்பற்று, தென்னமரவடி என்பவை அடங்காப்பற்றிலுள்ள வன்னிப் பிரிவுகளாகும்.

அடங்காப்பற்றின் பெருவீரனே பண்டாரவன்னியன் ஆவான். அந்நியரை எதிர்த்து இறுதி மூச்சுவரை அயராது போரிட்ட வீர காவலன் இவன். பண்டார வன்னியன் வீரத்தை எடுத்துக்காட்டவே பண்டாரவன்னியன் நாடகத்தை எழுதினேன். இன்று எனது நாடகத்தை அடியொற்றி மேடை நாடகமாகவும், நாட்டுக்கூத்தாகவும், நாவலாகவும், காவியமாகவும் பண்டாரவன்னியன் பவனி வருகின்றான்.

வரலாறும், இலக்கியமும் வெவ்வேறு நோக்கம் கொண்டவை. உள்ளதை உணர்ச்சிக் கலப்பின்றி கூறமுயல்வது வரலாறு. உணர்ச்சியும், கற்பனையும் கலந்து அமைவது இலக்கியம். எனது பண்டார வன்னியன் நாடகம் இலக்கியமேயன்றி வரலாறு அல்ல. இதை விமர்சகர்கள் மனதில் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்.

அடுத்ததாக ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் பற்றியது. இவ்வாலயம் தட்சண கைலாய புராணத்தில் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாலயத்தைத் பற்றி தான்தோன்றீஸ்வரர் பாமாலை என்னும் நூல் என்னால் வெளியிடப்பட்டது. இவ்வாலயத்தோடு தொடர்புடைய ஆலயம் ஒன்று வாவெட்டிமலையில் இருந்ததாகக் கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. வாவெட்டிமலை பழைய இராசதானியாக இருந்தது என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டு.

இப்பிரதேச மண்ணில் முகிழ்ந்த இம் முத்தெழில் சஞ்சிகை பல்லாண்டு காலமாக வெளிவந்து எம் மண்ணில் முத்தாரமாக, முக்கனியாக திகழ வேண்டுமென முக்கண்ணன் தான்தோன்றீஸ்வரனை வேண்டுகின்றேன்.

சாகித்தியரத்னா,
கலாநிதி,
முல்லைமணி வே.சுப்பிரமணியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வடமாகண கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு செயலாளர்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் வருடாந்தம் வெளியிடும் "முத்தெழில்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தமிழர் பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இம்மலர் வெளியீடு அமைவதுடன் பிரதேசம் சார்ந்த விடயங்களை உள்ளடக்கி இளம் கலை, இலக்கிய ஆர்வலர்களது படைப்பாற்றல்களை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதற்கு இச்சஞ்சிகையானது களம் அமைத்துக் கொடுக்கின்றது.

பிரதேச மக்களின் ஆற்றல்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டை பிரதேச செயலகங்கள் கொண்டிருக்கின்றன. அவ்வகையில் பிரதேசத்தின் அபிவிருத்தி, பொருளாதாரம், கல்வி, மருத்துவம், கலைத்துறை சார்ந்த முக்கிய அடைவுகளையும் சாதனைகளையும் ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் முக்கிய வரலாற்று பதிவுகளாக பிரதேச மலர்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மலர் வெளியீடு சிறப்புற அமைய எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இ.இரவீந்திரன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும்,
இளைஞர் விவாகார அமைச்சு,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்

முல்லைத்தீவு மாவட்டம்.

# முத்தொழில் முத்தென மலர நல் வாழ்த்துக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசம் ஏனைய பிரதேசங்களை விட நிலப்பரப்பால் பெரிதாகவும், இயற்கையான நீர்வள நிலவளங்களை கொண்டதாகவும் காணப்படுகின்றது. அத்துடன் விவசாயத்தினை வாழ்வாதாரமாக கொண்ட மக்கள் பலர் வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். நீண்ட வரலாற்று சுவடுகளையும் பாரம்பரியங்களையும் தன்னகத்தே கொண்டது. குறிப்பாக பண்டாரவன்னியனின் வரலாற்று அடையாளங்களும் அதனோடு கூடிய கலை வடிவங்களும் பேணப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எம் மூதாதையர்கள் விவசாயத்தில் ஈடுபட்டதோடு ஓய்வுநேரங்களில் பல கலைகளையும் கற்று அவற்றை வெளிப்படுத்தியும் வந்துள்ளனர். இவை நாட்டுப்புற இலக்கியங்களாக அண்ணாவி முறையில் பேணப்பட்டுவந்துள்ளன. இவற்றை பாதுகாக்கும் அரும் பணியினை கலாசார பேரவைகள் மேற்கொள்வது காலத்தின் தேவையாகும்.

ஆண்டு தோறும் பாரம்பரிய கலை இலக்கிய வடிவங்களை கலாசார விழாவினூடாகவும், ஆக்க இலக்கியங்களை சஞ்சிகை மூலமும் வெளிக் கொணர்ந்து ஆவணப்படுத்தும் முயற்சி பாராட்டுதற்குரியதாகும். ஒருபிரதேசத்தின் தனித்துவம், பண்பாடு, கலை கலாசாரம் போன்றவற்றை ஏனையவர்களும் அறிந்து பயன்பெற அம்முயற்சிகள் உறுதுணையாக அமையும் என்பது உண்மை.

மேலும் இம்மலர் பண்பும், பயனும் மிக்கதாக மலர்வதற்கு உழைத்த ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் மற்றும் பண்பாட்டு பேரவை, ஏனைய உத்தியோகத்தர்களையும் மனமார பாராட்டுவதோடு மலர் சிறக்க எனது நல்வாழ்த்துக்களை வழங்குவதில் மனநிறைவடைகிறேன்.

திருமதி. றூபவதி கேதீஸ்வரன்,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



உதவிப்பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடக்கு மாகாணம்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகமும், கலாசாரப்பேரவையும் இணைந்து வருடா வருடம் நடத்தும் கலை, இலக்கியப் பெருவிழாவில் "முத்தெழில்" பிரதேச மலரானது வெளியிடப்பட்டு வருகின்றமைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒட்டுசுட்டான் புரதான மன்னர்கள் வாழ்ந்த தொல்லியல் சார்ந்த எச்சங்களை உள்ளடக்கிய பூமியாகத் விளங்குவதுடன் வளங்கொழிக்கும் பிரதேசமாகவும் விளங்குகின்றது என்றால் மிகையாகாது இப்பிரதேசத்தின் வனப்புகளை எடுத்தியம்பும் வகையில் இம்மலரானது ஒட்டுசுட்டான் பிரதேசததின் கலை, கலாசார, பண்பாடு, வரலாற்று விழுமியங்களையும் ஆவனப்படுத்தும் நோக்குடன் அமைந்துள்ளமை மிகவும் சிறப்பான அம்சமாகும்

எம் இனத்தின் மொழியும் பண்பாட்டு விழுமியங்களும் பல்லாயிர ஆண்டுகள் பழமை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. அவை இன்று வரை அழியாது சீரும் சிறப்புமாக பொலிவுடன் திகழ்வதற்கு இவ்வாறான பிரதேச மலர்கள் உதவுகின்றன.

அந்த வகையில் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக வெளிவரும் "முத்தெழில்" பிரதேச மலரானது சிறப்பாக வெளிவருவதற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் இச் செயற்பாட்டினை முன்னெடுத்த குழுவினருக்கு மனம் நிறைந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.வனஜா செல்வரட்ணம்,
உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரவைத்தலைவரின் உள்ளத்தில் இருந்து



மனித வாழ்வைப் பண்படுத்தும் மூலாதாரமே கலை ஆகும். கலையினால் பண்படுத்தப்பட்ட மனிதன் பொறுமை, சகிப்புத்தன்னை ஆகியவற்றைப் பெறுகிறான். சமூக நிலைப்பாட்டை அறிந்து ஒப்புரவு பெறுகிறான். தமிழரின் வரலாற்றில் முக்கிய பங்கு வகிப்பது பண்பாடு இப்பண்பாட்டை விழாக்களின் மூலம் ஆற்றுகைப்படுத்துவது தொன்று தொட்டு வரும் வரண்முறையாகும்.

முல்லைமாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசம் நீர்வள, நிலவளங்களால் நிறைந்த பிரதேசமாகும், மண்வளமும், மக்கள் மனவளமும், கலைவளமும் இப்பிரதேசத்தில் மண்டிக்கிடக்கின்றன. விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட இப் பிரதேச மக்களின் வாழ்வியலில் கலை ஒரு அங்கமாகவே திகழ்கிறது. பாரம்பரிய, நவீன கலைஞர்கள் நிறைவாகவே இங்கு தோன்றிக் கலை இலக்கிய முயற்சிகளில் பரிணமித்து வருவது கண்கூடு.

இவ்வகையில் எமது பிரதேச கலைப்பாரம்பரியங்கள், புராதன வரலாறுகள், இலக்கிய முயற்சிகள் அனைத்தையும் வருடா வருடம் முத்தெழில் மலர் மூலம் நாம் ஆவணப்படுத்தி வருகிறோம். எமது பிரதேசத்தின், மாவட்டத்தின் இருப்புகள் ஓரளவேனும் எமது வருடாந்த மலரில் ஆவணப்படுத்தப்பட்டு பின்வரும் சந்ததியினருக்கு உதவும் பெரும் தகவல்களாக அமையும் என்பதையிட்டு நாம் மகிழ்வடைகிறோம். மூன்றாவது மலராக மலரும் முத்தெழில் நூல் மணம்பரப்ப எல்லாம் வல்ல தான்தோன்றீஸ்வரப் பெருமான் அருள்புரிவாராக.

இம் மலரின் பிரசவத்திற்கு அருகிருந்து உழைத்த அனைவருக்கும் பண்பாட்டுப் பேரவைத் தலைவர் என்ற வகையில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.இ.ரமேஸ்,
உதவிப் பிரதேச செயலாளர்,
பண்பாட்டுப் பேரவைத் தலைவர்,
ஒட்டுசுட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முறிகண்டி விநாயகர் துதி

இராகம் - வலசி                    தாளம் - ஆதி

பல்லவி

முத்தி தரும் மூத்தவனே, முறிகண்டி வாரணமே.
சித்தி புத்தி வலம், இடமாய் நித்தம் அருள் புரிபவனே.

அனுபல்லவி

குடில் தனில் அமர்ந்திருந்தே குறைகளைத் தீர்ப்பவனே
அடி தொழும் அன்பருக்கு அள்ளி வரம் தருபனே
- முத்தி -

சரணம்

தான் தோன்றி ஈசனுக்குத் தவப்புதல்வன் ஆனவனே
மான் துள்ளும் காட்டருகே வந்தமர்ந்த தூயவனே
அறுகம்புல் மேனியனே, அத்திமுக நாயகனே
உறுதுன்பம் தீர்த்தருளும் உத்தமனே ஏரம்பா
- முத்தி

செந்தமிழால் உனைப்பாட வந்த வினை ஓடிவிடும்
சந்தனத்து மேனியனே சக்தி உமை பாலகனே
சுந்தரியின் துயர் களைந்து வந்தரிக்குத் துணை நின்றாய்
அந்தரத்தில் அருள்தரவே வந்திடுவாய் இக்கணமே.

ஆக்கம்
வீரசிங்கம் பிரதீபன்
கலாசார உத்தியோகத்தர் (பதில்)
பிரதேச செயலகம்
ஒட்டுசுட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஒரு இனத்தை அடையாளப்படுத்துவது அவ்வினத்தின் பண்பாடெனலாம். அப் பண்பாடு தொன்று தொட்டு வகுக்கப்பட்டு அமைவது. அதன் அடிச்சுவட்டில் பயணித்துக் கொண்டே புதியவற்றை தேட வேண்டும். படைக்க வேண்டும். ஒரு இனத்தில் இருப்பினை நிரூபிக்கின்ற வரலாற்று ஆதாரங்களையும், பாரம்பரியங்களையும் தேடத் துடிக்கும், தேடி வெளிப்படுத்தத் துடிக்கும் ஒவ்வொருவருக்கும் இந் நூல் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலின் உள்ளே மலர்ந்தவை


| இல | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 01 | கற்சிலைமடு தான்தோன்றி ஈஸ்வரர் ஒரு ஆய்வு | 01 - 19 |
| 02 | முல்லைத்தீவு மாவட்டத்தின் புராதன தொல்லியற் களஞ்சியம் ..... | 20 - 29 |
| 03 | ஈழத்தில் மகாவம்சத்திற்கு முற்பட்ட தமிழர் வரலாறுகளும் ..... | 30 - 35 |
| 04 | அந்நியர் எதிர்ப்பிலக்கியத் தலைவன் கயிலைவன்னியனார் | 36 - 41 |
| 05 | வளங்கொழிக்கும் 5 கிராம அலுவலர் பிரிவுகளின் மக்களும் ..... | 42 - 50 |
| 06 | ஓய்ந்து கிடக்கும் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை | 51 - 56 |
| 07 | பெண்ணியமும் முல்லைத்தீவு மாவட்டமும் | 57 - 72 |
| 08 | முல்லைமணியின் கமுகஞ்சோலை - ஒரு பார்வை | 73 - 83 |
| 09 | முல்லை மோடியில் அமைந்த கோவலன் கூத்து | 84 - 95 |
| 10 | ஈழத்து நாவல் உலகில் இன்றும் பேசப்படும் பாலமனோகரனின் ..... | 96 - 101 |
| 11 | அறநெறிப்பாடசாலைகளும் அவற்றின் இன்றைய நிலையும் | 102 - 105 |
| 12 | திறனாய்வு என்பது புகழுரையல்ல | 106 - 113 |
| 13 | ஆரோக்கிய இலக்குக்கொண்ட அந்நாளைய தமிழரின் வாழ்வு | 114 - 124 |
| 14 | என்றுமுள தமிழ் மொழி | 125 - 137 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரர் கோவில் - ஒரு ஆய்வு

-அருணாசெல்லத்துரை-

வன்னிப் பிரதேசத்தின் புராதன வரலாற்றிற்கு தேவையான தொல்லியல் சின்னங்கள் பிரதேசத்தின் காடுகளுக்குள் நிறைந்து காணப்படுகின்றன. தொல்லியல் சின்னங்களுக்கு ஆதாரமாக வரலாற்று நூல்களில் இருக்கும் குறிப்புகளும் சேர்க்கப்பட வேண்டியுள்ளன. முக்கியமாக வன்னி பெருநிலப்பரப்பில் ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள தொல்லியல் சின்னங்கள் மட்டுமே இந்த கட்டுரையின் வரலாற்று ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுகள் தொடர்ச்சியாக செய்யப்படும்போது தகவல்களில் திருத்தங்களும், மாற்றங்களும் ஏற்படுவது வழக்கம். இதற்காக முன்னர் எழுதப்பட்ட கட்டுரைகளின் பகுதிகளும் தேவை கருதி சேர்க்கப்பட்டுள்ளன என்பதையும் குறித்து வைக்கிறேன்.

வன்னிப் பிரதேசத்தின் மத்திய பகுதியில் இருந்த மலைகள், சிதைந்து மணல் மேடுகள் உருவாகியதும், மலைகளின் உயரம் குறைந்து மணல் பிரதேசம் அதிகமாகியுள்ளது. இது இயற்கையான நிகழ்ச்சியாகும். ஒட்டுசுட்டான் பகுதிகளில் குளங்களைக் கட்டி முறையான நீர்ப்பாசனத்தை வழங்கி விவசாயம் செய்த பெருங்குடிமக்கள் தொன்று தொட்டு வாழ்ந்துள்ளனர். வன்னிப் பிரதேசத்தில் 1000 குளங்களுக்கு மேல் இருக்கின்றன.

ஆரம்ப காலத்தில் அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்திலிருந்த குளங்களும், வயல்களும் "கமம்" என்ற பெயரில் தனித்தனியாக வயல் வெளிகளாகவும், பண்ணைகளாகவும் 32 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தன. இதற்கு தற்போதும் சான்று பகரும் வகையில் பாணன்கமம், அம்பாகமம் போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம். இவற்றோடு சேர்க்கப்பட்ட பிரதேசமாக தம்பலகமத்தையும் திரு.டைக் என்ற ஆங்கில ஆய்வாளர் குறித்துள்ளமை நீண்ட ஆய்வுக்குரிய விடயமாகும்.

மண் சரிவுகள் ஆறுகளை மூடியதனாலும், வெள்ளப் பெருக்குகளால் குளங்களின் கட்டுகள் அழிந்துள்ள காட்சிகளை காடுகளுக்குள் இன்றும் காணமுடியும். மலைகளில் இருந்து உற்பத்தியாகிய ஆறுகள், பிரதேசத்தின் கிழக்குக் கடலை நோக்கியும், மேற்குக் கடலை நோக்கியும் பாய்ந்து சமுத்திரத்தில் கலந்துள்ளன. இங்கு பாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான ஆறுகள் மறிக்கப்பட்டு குளங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆற்றங்கரைகளிலும், குளங்களின் கீழும் மக்கள் விவசாயம் செய்துள்ளனர்.

இலங்கையில் இருந்த ஒவ்வொரு இராஜதானிகள் பற்றியும், அங்கு இடம்பெற்ற ஆட்சிக் காலங்கள், யுகங்களாகப் பிரிக்கப்பட்டு வரலாறுகள் தனித்தனியாக தமிழில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் இலங்கையில் அடங்காப்பற்று வன்னிப் பெருநிலப்பரப்பு மட்டும் காடுகளாக கணிக்கப்பட்டு அதன் வரலாறுகள் எழுதப்படாமல் விடப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

## அந்நியர் ஆட்சிக் காலம்:

அந்நியர் ஆட்சிக் காலத்திற்கு முன்பிருந்தே வெள்ளப்பெருக்கு, வரட்சி, கொள்ளை, கோதாரி மலேரியாக் காய்ச்சல், போன்ற பல்வேறு காரணங்களினால் மக்கள் இந்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறியிருந்தமையால் அநேகமான பகுதிகள் பெருங்காடுகளாக மாறியிருந்தன. இந்தக் காடுகளுக்குள் இருந்த யானைகளே இந்தப் பிரதேசத்தின் பெருஞ்செல்வமாக அந்நியர்களால் கணிக்கப்பட்டிருந்தன. யானை வர்த்தகத்திற்கான கணக்கறிக்கைகளும் அதற்குத் தேவையான வரலாறுகளும், பிரதேசத்தின் தொல்லியல் ஆய்வுகளும், நூல்களாக ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டுள்ளன.

போர்த்துக்கேயருடைய ஆட்சியின்போது 1612 களில் யாழ்ப்பாணத்தில் பர-ராஜ-சேகர (பண்டாரம்) மன்னன் நிர்வாகம் செலுத்திய காலத்தில், சங்கிலி இளவரசன் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தினார். அப்போது ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக, பரராஜசேகர மன்னன் அங்கிருந்து வெளியேறி வன்னிப் பிரதேசத்திற்கு வந்து தங்கியிருந்ததாக யாழ்ப்பாணச் சரித்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் பர-ராஜ-சேகர மன்னன் வன்னிப் பிரதேசத்தில் தங்கியிருந்தமைக்கான வரலாற்றாதாரமாக வையாபாடல் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்த புலவர் ஒருவர், வன்னிப் பிரதேசத்திற்கு வருகை தராமலே பரராசசேகர மன்னனுடைய புகழை வையாபாடலில் பாடியுள்ளமை தெளிவாகிறது. பரராசசேகர மன்னன் ஒட்டுசுட்டான் வாவெட்டி மலையில் ஒழிந்திருந்ததாக ஒரு பாடலிலும், முள்ளியவளையில் இருந்ததாக மற்றுமொரு செய்யுளிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1921ம் ஆண்டளவில் முதன் முதலில் வெளியிடப்பட்ட வையாபாடலில் "எந்நாளு மிம்முறையே யாவரையும் வாழ்வீரென்று இருத்தி யங்கண் - மன்னனான விளவெலெனும் சங்கிலியை வாவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரச் செய்து" (செய்யுள்-99) என்று வாவெட்டி மலைபற்றியும், வேறு பல செய்யுள்களில் பரராஜசேகர மன்னனுடைய விபரங்களும், அத்தோடு வன்னிபற்றிய வரலாறுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன. வையாபாடலில் பல செய்யுள்கள் இடைச் செருகலாக இருப்பதினாலும், வரலாற்றுக் குழப்பங்கள் நிறைந்தது என்பதினாலும், அந்த நூலின் நம்பகத்தன்மையில் பல ஆய்வாளர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இதனால் வையாபாடல் கூறும் வன்னிபற்றிய வரலாற்றுத் தகவல்கள் நீண்ட ஆய்வுக்குரியதாகின்றன. சங்கிலி மன்னனுடைய விபரங்கள் குழப்பம் தருவதாக உள்ளன.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற குழப்பங்கள் 1612ம் ஆண்டளவில் இடம்பெற்றதாக, போர்த்துக்கேய அறிக்கைகளை அடியொற்றி யாழ்ப்பாண வரலாற்றை எழுதிய குறிப்புகளில் ஜோன் எச். மார்ட்டின் தெரிவித்துள்ளார். பரராஜசேகர மன்னனுடைய பெயர் "பர-ராஜ-சேகர-பண்டாரம்" என்ற பெயரில் வரலாறுகளில் பதியப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பர-ராஜ-சேகர-பண்டாரம் 1615ம் ஆண்டு காலமானார் என்று "Notes on Jaffna by John . H. Martyn (p.139) எழுதியுள்ள குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாவெட்டி மலை பற்றி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வாய்வழியாகப் பாடப்படும் பாடலொன்றின் வரிகளில் "வாவெட்டி மாமரம் தானரசு - மாணிக்கப் பண்டாரம் பூசை செய்து" என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக, பனைநிண்டான் என்ற கிராமத்தைச் சேர்ந்த பரம்பரைப் பூசகர் திரு.அம்பலத்தாடி வேலுப்பிள்ளை கூறியுள்ளார். முழுமையான பாடல் வரிகள் கிடைக்க வில்லை. இதில் கூறப்படும் மாணிக்கப் பண்டாரம் என்ற பெயரும், வரலாறும் ஆய்வுக்குரியவையாகும்.

போர்த்துக்கேயர், டச்சுக்காரர் பின்னர் ஆங்கிலேயர் என்ற மூன்று அந்நிய நாட்டவர்கள் இலங்கையை சுமார் 450 ஆண்டுகள் நிர்வகித்துள்ளனர். 1558ம் ஆண்டு தொடக்கம் 1658 வரை போர்த்துக்கேயரும், 1658 தொடக்கம் 1795 வரை ஒல்லாந்தரும், 1795க்குப் பின்னர் ஆங்கிலேயருடைய ஆட்சியையும் வன்னிப் பெருநிலப்பரப்புக் கண்டுள்ளது. ஆங்கிலேயருடைய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் கண்டி இராஜதானியைத் தவிர ஏனைய பிரதேசங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டதினால் பண்டைய இராஜதானிகள் என்று எதுவும் ஆங்கில வரலாறுகளில் குறிப்பிடப்பட வில்லை.

ஒல்லாந்தருடைய ஆட்சியின்போது கி.பி.1785ம் ஆண்டுக்குப் பின்னரும், கி.பி. 1795ம் ஆண்டில் இடம்பெற்ற ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலும், அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியனாராக நியமிக்கப்பட்டு, கடமையாற்றியவர் பண்டாரம் வன்னியனார். ஒல்லாந்த மற்றும் ஆங்கில ஆட்சிகளுக்கு எதிராக தாக்குதல்களை நடத்திய பண்டாரம் வன்னியனார் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை முன்னைய கட்டுரைகளில் தந்திருந்தேன். அவருடைய வாழ்புலங்களில் ஒன்றாக ஒட்டுசுட்டான்-கற்சிலைமடு புராதன பிரதேசம் இருந்துள்ளமைக்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

1903-4ம் ஆண்டுகளில் பண்டாரம் வன்னியனாருடைய தோல்வியை எடுத்துக்காட்டும் நினைவுக்கல் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே கற்சிலைமடு என்ற காரணப் பெயர் வந்ததாக ஒரு சிலர் பிழையாக எழுதுவது கற்சிலைமடுவின் புராதனத்தை 100 வருடங்களுக்குள் உள்ளடக்க எடுக்கப்படும் தவறான முயற்சியாகும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

01. படம் : அடங்காப்பற்று - வன்னி வரைபடம்




## சமய வழிபாடுகள்:

அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்திற்குள் இருக்கும் இரண்டு சிவலிங்க தலங்களைப் பற்றி ஏழாம் நூற்றாண்டிலிருந்து திருமுறைகள் பாடிய தென்னிந்திய நாயன்மார்களுள் முக்கியமானவர் திருஞானசம்பந்தர் ஆகும். இவர் 1008 சிவதலங்களுக்கு சென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானின் பெருமைகளை தேவாரங்களாகப் பாடியுள்ளார். இலங்கையிலுள்ள திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டு சிவதலங்களை மட்டும் நேரடியாக வந்து பார்க்க முடியாத ஞானசம்பந்தர், இராமேஸ்வரத்தில் இருந்து, தென் திசைநோக்கி ஞானக்கண்ணால் பார்த்து இந்தத் தலங்கள் பற்றிய தேவாரங்களைப் பாடினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமாயணத்தை இயற்றிய வடநாட்டு வான்மீகியும் இலங்கையை ஞானக்கண்ணால் பார்த்து எழுதியுள்ளார். 12ம் நூற்றாண்டில் வான்மீகி இராமாயணத்தை தமிழில் பாடிய, தலைசிறந்த தென்னிந்திய கவிஞரான கம்பரும் இலங்கைக்கு வந்திருக்கவில்லை. இலங்கைக்கு நேரடியாக வந்து பார்க்காமல் இலங்கையைப்பற்றி எழுதியவர்களுடைய குறிப்புகளை மட்டும் வைத்து கொண்டு, இலங்கையின் வரலாற்றை பலர் எழுதியிருக்கிறார்கள். எழுதியும் வருகிறார்கள். ஞானக் கண்ணுடையவர்களின் கற்பனைகளும், திறமைகளும் பக்திக்கும் வணக்கத்திற்கும் உரியனவையே ஒழிய, அதனை ஒரு நாட்டின் வரலாறாக நாம் எடுத்துக் கொள்ள முடியாது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

இலங்கையின் தலைசிறந்த சிவபக்தனான இராவண மகாராசா காலத்தில் பஞ்சகர்மாக்களின் தலைவரான "விஷ்வகர்மா" தெய்வ வடிவங்களை அமைத்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கருங்கல்லிலே பொளியப்பட்ட இலிங்க வழிபாட்டிற்குப் பின்னரே சிலை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். (நீண்ட ஆய்வுக்குரியது).

இந்த பிரதேசத்திலுள்ள தொல்லியல் சின்னங்களைப் பார்க்கும் போது இரண்டு வகையான கட்டட அமைப்புக்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. கருங்கல் தூண்களை நிறுத்தி கருங்கல்லினால் கட்டப்பட்ட கோவில்களும், வீடுகளும், இருந்துள்ளன. அதற்குப் பின்னர் அளவில் பெரிய செங்கற்களால் கட்டப்பட்ட கோவில்களும், வீடுகளும் இருந்துள்ளமைக்கு இங்குள்ள சிதைவுகள் ஆதாரங்களாக உள்ளன. கருங்கற்காலமும், செங்கற்காலமும் ஆய்வுக்குரியவையாகும்.

## அடங்காப்பற்றுப் பிரிவுகள்:

வன்னிப் பிரதேசத்தின் மத்திய பகுதியில் பிரிக்கப்பட்டுள்ள மேற்கு மூலை, கிழக்கு மூலைப் பகுதிகளில் இருந்தவர்கள் யாழ்ப்பாண இராஜதானிக்கும், இலங்காபுரம் இராஜதானிக்கும் அடங்காமல் ஒரு தனிப் பிரிவினராக இருந்த காரணத்தால் "அடங்காப்பற்று", என அழைக்கப்பட்டதாக யாழ்ப்பாண வைபவமாலை நூலில் "யாழ்ப்பாணச் சரித்திரம்" என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடங்காப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிப் பிரதேசத்தின் இயற்கை அமைப்பின்படி கிழக்கு மூலை என்பது முல்லைத்தீவு கடற் பகுதியாகவும், மேற்கு மூலை என்பது மன்னார் பகுதியாகவும் இருந்திருக்க வேண்டும். ஆனால் இவை இரண்டு பிரிவுகளும் ஏ 9 வீதியின் மேற்கு பகுதியில் இருக்கின்றன. மன்னார், மாந்தை, மாதோட்டம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி இருந்த "இலங்காபுர இராஜதானியை" மையமாக வைத்தே இந்த மூலைகள், பிரிக்கப்பட்டுள்ளன என்பதும் தெளிவாகிறது.

ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் இலங்கையின் அநேகமான பகுதிகளின் வரலாற்றை ஆய்வு செய்வதற்கு தேவையான இடங்களுக்கு நேரடியாகச் சென்று அங்கிருந்த எச்சங்களைப் பார்வையிட்டு குறித்து வைத்துள்ளார்கள். சார்ள்ஸ் பிரிட்ஹாம் என்பவர் இலங்கையின் வரலாறு மற்றும் இயற்கை வளங்கள் பற்றி 1849 லும், ஜே. ஈ. ரெனற் என்பவர் இயற்கை வளங்களை வரலாற்றோடு ஆய்வு செய்து 1859 லும், நூல்களாக வெளியிட்டுள்ளனர். 1879ல் பிறிற்றோ அவர்கள் யாழ்ப்பாண வைபவமாலையை மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் நூலாக வெளியிட்டுள்ளார். 165 ஆண்டுகளுக்கு முன்னதாக இவை வெளியிடப்பட்டுள்ளன. தொல்லியல் சின்னங்களை ஆய்வு செய்த திரு.வௌலர் மற்றும் திரு.நெவில் போன்றவர்களும் பாராட்டுக்குரியவர்கள். இவர்களுடைய ஆய்வுக் குறிப்புகள் 1886ம் ஆண்டு காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட பருவ கால அறிக்கைகளாக இருக்கின்றன.

1895ல் ஜே.பி.லூயிஸ் அவர்கள், வன்னிபற்றிய கைநூலுக்கான வரலாற்றுக் குறிப்புகளை சார்ள்ஸ் பிரிட்ஹாம், பிறிற்றோ, ஜே.ஈ.ரெனன்ற், ஆகியோர் எழுதிய நூல்களில் இருந்தும், வன்னிப் பிரதேசம்பற்றிய பருவ கால அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவற்றையும் தொகுத்து வன்னி பற்றிய கைநூலை வெளியிட்டிருந்தார். இதுவே வன்னிப் பிரதேசம்பற்றி தனியாக எழுதப்பட்ட வரலாற்றுக் குறிப்பாகவும், நூலாகவும் இருக்கின்றது. ஆனால் ஜே.பி.லூயிஸ், தனது கணக்கறிக்கைகளுக்கு மட்டும் தேவையான வரலாற்றுக் குறிப்புகளை சுருக்கமாக தொகுத்திருப்பதும் தெளிவாகிறது.

குளங்களைப் பற்றியும் ஏனைய தொல்லியல் சின்னங்கள், கல்வெட்டுக்கள் மற்றும் இந்தப் பிரதேசத்தில் நடைமுறையில் இருந்த நாணயங்கள் பற்றியும் விரிவான ஆய்வுகளைச் செய்த திரு.பார்க்கர் அவர்கள், தனது பருவகால அறிக்கைகளையும் சேர்த்து 1909 ல் நூலாக வெளியிட்டுள்ளார். அதாவது சுமார் 106 ஆண்டுகளுக்கு முன்னர் முதலில் நூல் வடிவமாக வெளியிடப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயருடைய நிர்வாகத்தில் முக்கியமான ஆய்வுகள் இடம்பெற்றபோது, தமக்கு கிடைத்த வாய்வழித் தகவல்களையும் சேர்த்து இந்த ஆய்வுகளைச் செய்துள்ளமை தெளிவாகிறது. ஆனால் அவர்களுக்குக் கிடைத்த மகாவம்சம், சூளவம்சம் போன்ற சிங்கள வரலாற்று நூல்களை ஒப்பீடு செய்து எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் நிறுவன ரீதியாக சிங்களத்தில் இந்த நூல்கள் தொகுக்கப்பட்டிருந்தமை அதற்கான ஒரு காரணமாக இருக்கலாம். அவற்றைப் போல தமிழ் நூல்கள் வெளிவந்திருந்தாலும், அவற்றில்கூட மேற்கூறிய சிங்கள மொழி நூல்களின் குறிப்புகளை ஆதாரமாகக் காட்டியுள்ளதினால், இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன்.

அடங்காப்பற்று வன்னியின் வரலாற்றை தெளிவாக 1926ம் ஆண்டு சி.இராசநாயகம் முதலியார் வெளியிட்ட **Ancient Jaffna** என்ற ஆங்கில நூலில் தொகுத்து எழுதியிருக்கின்றார். இந்த நூலில் அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தில் இருந்த இராவணனுடைய ஆதரவாளர்களான இயக்கர் மற்றும் நாகர்கள் பற்றி எழுதப்பட்டுள்ளது. ஆனால் அதற்குப் பின்னர் இராவணனுடைய வரலாறு முறையாக முழுமையாகத் தொகுக்கப்படவில்லை.

## இலிங்க வழிபாடு

கிறிஸ்துவிற்கு முன்னர் 3084ம் ஆண்டுகளில் இராவண மகாராசா திருகோணமலையிலும், மன்னார் பிரதேசத்தில் இருந்த மயனுடைய மகளான மண்டோதரி திருக்கேதீச்சரத்திலும், இலிங்க வழிபாட்டில் ஈடுபட்டதாக பல புராணங்கள் காவியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மண்டோதரியை திருமணம் செய்த காரணத்தால் இராவண மகாராசாவிற்கு மன்னார் பகுதியில் மாந்தைத் துறைமுகமும், இலங்காபுரம் இராஜதானியும் அமைத்துக் கொடுக்கப்பட்டன. அதனால் இலிங்க வழிபாடு இந்த இரண்டு தலங்களில் இருந்து பரவியதாக கொள்ளலாம். அதன்படி இந்தப் பிரதேசம் முழுவதிலும் இலிங்க வழிபாடு இருந்தமைக்கான தொல்லியில் அடையாளங்கள் பல இருக்கின்றன.

இராவணனுடைய ஆட்சிக்காலத்தில் கோயில்கள் கட்டுவதில் சிறந்தவர்களான இயக்க குல பஞ்சகர்மாக்கள், இலிங்கங்களை பிரதிஷ்டை செய்து வழிபாடுகளை நடத்தியுள்ளனர். சிவலிங்கங்களை **Rock God** என்று ஆங்கிலத்தில் குறித்திருப்பது நீண்ட ஆய்வுக்கான வரலாற்றுத் தொனிப் பொருளாகும். நாகர்கள் குளங்கள் கட்டி நீர்ப்பாசனம் செய்து விவசாயத்தின் மூலம் நாட்டைச் செழிப்பாக்கினர். அவர்கள் கடவுள் சிலைகளை வடிப்பதிலும் கை தேர்ந்தவர்கள். குளக்கட்டுகளிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளங்களுக்கு அண்மையிலும், ஐந்து தலை நாகசிலைகளை பிரதிஷ்டை செய்து வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

## ஒட்டுசுட்டான்:

இலங்கையின் மத்திய மலைப்பகுதியில் இருந்து வரும் உயர்ந்த மலைத் தொடர்கள் ஒட்டுசுட்டான் பிரதேசத்தை சுற்றி இருந்துள்ளன. ஒட்டுசுட்டான் பிரதேசத்திலும், அதனை அண்டிய பகுதிகளிலும் வாவெட்டி மலை, மண்மலை, தட்டயமலை, மன்னாகண்டல் மலை, திரவியமலை, மற்றும் ஒதியமலை, தட்டாமலை, குருந்தனூர்மலை, வெள்ளைமலை, கும்பகன்னன் மலை, போன்ற மலைக் குன்றுகளும், பேராற்றை மறித்துக் கட்டியுள்ள கருங்கல் அணைக்கட்டு, மண்மலைக்குளம் (முத்தையன்கட்டு), தண்ணிமுறிப்புக் குளம், ஆகிய இடங்களில் உள்ள ஐந்துதலை நாகசிலைகள், போன்றவற்றை புராதனத்திற்கு ஆதாரங்களாக கூறலாம்.

ஒட்டுசுட்டான் வரலாற்றோடு சம்பந்தப்பட்ட வாவெட்டியிலுள்ள மலைத் தொடர் சிதைந்துள்ளது. ஒட்டுசுட்டான் கிராமத்திற்கு அண்மையில் மூன்று குளங்கள் இருக்கின்றன. இந்தக் குளங்களும் வயல்வெளிகளும் ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுவரர் கோயிலுக்குச் சொந்தமானவை. அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தின் கிழக்கேயுள்ள பகுதிகளிலும் கரையோரப்பகுதிகளிலும் சிவலிங்க வழிபாடுகளும், நாக வழிபாடுகளும் ஆரம்பிப்பதற்கான பிரதான ஆரம்ப தளமாக விளங்குவது, மலைகளால் சூழப்பட்டதும் புராதன சின்னங்கள் நிறைந்ததுமான ஒட்டுசுட்டான் வாவெட்டி மலைப் பிரதேசமாகும்.

## ஒட்டுசுட்டானில் இலிங்க வழிபாடு:

இராவணனும், அவருடைய மனைவி மண்டோதரியும் வழிபட்டதாகக் கூறப்படும், மன்னார்ப் பகுதியிலிருந்த இலங்காபுரம் இராஜதானிக்கு உட்பட்டிருந்த திருக்கேதீச்சரம் பற்றிய பல ஆய்வுக் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. ஆரம்ப காலத்தில் வடஇந்திய மற்றும் தென்னிந்திய படையெடுப்புகளின் காரணமாக இந்தப் பிரதேசம் சிதைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் அந்நிய நாட்டவர்களான போர்த்துக்கேயர் மன்னார் பகுதியைக் கைப்பற்றிய பின்னர் சைவக்கோயில்கள் இடிக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. திருக்கேதீச்சரம் ஆலயமும் இடிக்கப்பட்டு அங்கிருந்த செங்கற்கள் மன்னாரில் கோட்டை கட்ட உபயோகப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திருக்கேதீச்சரத்தில் தற்போது வெளியே வைக்கப்பட்டுள்ள புராதன இலிங்கம், கி.பி.10ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டளவில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள பல மலைத் தொடர்களில் இலிங்க வழிபாடு இடம்பெற்றுள்ளது. குருந்தனூர் மலை, கும்பகன்னன்மலை, வாவெட்டிமலை, மன்னாகண்டல் போன்ற மலைகளின் உச்சியில் இடம்பெற்ற வழிபாடுகள் பற்றி ஆங்கிலேயருடைய ஆய்வுக் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளமை ஆழமான ஆய்வுக்குரிய விடயமாகும். ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்ட பல தொல்லியல் ஆய்வுக் குறிப்புகளில் Rock God (குன்றுக் கடவுள்) என்ற பதம், இலிங்க வழிபாடு இடம்பெற்ற இடங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். ஆனால் இவை புராதன இலிங்க வழிபாடு என்பதை குறிப்பிடத் தவறியுள்ளமையால் பல வரலாற்றுச் சிதைவுகள் ஏற்பட்டுள்ளன.

## வாவெட்டி மலை பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்:

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுவரர் கோவிலுக்கு தெற்கே சுமார் 2 மைல் தொலைவில் நீண்ட மலைத் தொடர்கள் காணப்படுகின்றன. இந்த மலைத் தொடர்கள் வாவெட்டை மலை எனவும் அழைக்கப்படுகிறது. இந்த மலைத் தொடரின் மேற்குப் பக்கமாக பேராறு வடக்கு நோக்கி வளைந்து பாய்ந்து ஒட்டுசுட்டானுக்கு வடக்கே, கிழக்கு நோக்கித் திரும்பிப் பாய்கிறது.

"வாவெட்டி மலைக் குன்றுகளின் தொடர், ஒட்டுசுட்டானுக்கு தெற்கே 1½ அல்லது 2 மைல் தூரத்தில் உள்ள வாவட்டைக் குளத்திலிருந்து ஆரம்பமாகி வடக்கு நோக்கி புதுக்குளம், சாளம்பன்குளம், தட்டயமலைக்குளம், மண்மலைக்குளம் வரை செல்கின்றது. இந்தக் குளங்கள் எல்லாம் தற்போது கைவிடப்பட்டுள்ளன" (JPLM.p.152) .

The tanks are, beginning at the south, Vavaddai kulam, 1 ½ or 2 miles south of Oddusuddan; Putuk kulam, Chalamban kulam, Taddayamalai kulam, and Manmalai kulam. All these tanks are now abandoned (JPLM.p.152) .

வாவட்டைக் குளத்திற்கு வாவெட்டி மலையில் ஊற்றெடுக்கும் குருவிச்சை ஆற்றிலிருந்து நீர் பெறப்படுகிறது. JPLM.p.152) குருவிச்சி ஆறு தொடர்ந்து பாய்ந்து ஒட்டுசுட்டானுக்கு கிழக்கே சில மைல் தூரத்தில் கருடமடு என்ற இடத்தில் பேராற்றுடன் கலக்கிறது

On the Kuruvichchai –aru (a tributary of the Per-aru) : Vavaddaikulam (JPLM.p.151)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாவெட்டி மலைத்தொடரில் கோயில்கள் பல இருப்பதாக 1886ம் ஆண்டில் எழுதப்பட்ட குறிப்புகளில் இருந்து தெரிய வந்தது. "வாவெட்டை மலைக் குன்றுகளில் கோயில்கள் இருக்கின்றன. ஒரு மலையில் பல தூண்கள் இருப்பது, கோயில்கள் (Temples) அமைந்து இருந்தமைக்கு சான்றுகளாக இருக்கின்றன. அங்கிருந்து கீழ் நோக்கிச் செல்லும் படிக்கற்கள் அடிவாரத்தில் அமைந்துள்ள கேணியை நோக்கிச் செல்கின்றன. இந்த மலைக்கு தெற்கே 100 யார் தள்ளி இருக்கும் மற்றுமொரு மலையில் குகைகள் காணப்படுகின்றன. இந்த மலையில் கோயில்கள் இருந்தமை தெளிவாகிறது" (JPLM.p.309).

There are rock temples at Vavaddaimalai. On one rock there are several pillars of the usual rough kind marking the site of a temple. A flight of steps from this leads down to a *'pokuna'* at the foot. The other rock, about 100 yards south of this one, has caves, which were evidently temples (JPLM.p.309).

வாவெட்டிமலையின் உச்சியில் உள்ள சிவலிங்கத்தை வழிபாடு செய்யச் செல்வதற்கு கற்களில் அம்புக் குறிகள் பொளியப்பட்டுள்ளதைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். இந்த மலைக் குன்றில் சிவலிங்க ஆலயம், பிள்ளையார் கோவில் மற்றும் முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகியன இருந்ததாக முதியவர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன். இந்த ஆலயங்களில் பூசைகள் செய்த பின்னரே ஒட்டுசுட்டான் சிவன் ஆலயத்தின் உற்சவங்கள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் பலர் தெரிவித்துள்ளனர். இதனால் கிழக்குக் கரையோரப் பிரதேசத்திற்கான சிவலிங்க வழிபாடு வாவெட்டி மலையில் இருந்து ஆரம்பித்துள்ளமை தெளிவாகிறது.

## வாவெட்டி மலையிலிருந்த புராதன சின்னங்கள்:

முள்ளியவளை மற்றும் முத்தையன்கட்டு ஆகிய இடங்களில் உள்ள ஐயன் கோவில்களின் பூசாரியாராக இருக்கும் திரு. கந்தையா சிவராசா அவர்கள் தகவல் தருகையில் : வாவெட்டி மலைத்தொடர் கருங்கல் உடைப்பதற்கு வழங்கப்பட்ட காரணத்தினால், அங்கிருக்கும் கோவில் சின்னங்களை அழிய விடக்கூடாது என்ற ஆதங்கத்தின் காரணமாக சிவலிங்கங்களையும், தூண்கள் சிலவற்றையும், உழவு இயந்திரத்தில் ஏற்றி வந்து தனது காணியில் வைத்திருந்ததாகக் கூறினார். அவற்றோடு முத்தையன்கட்டு இடது கரையிலிருந்த ஐயன் சிலையையும் கொண்டு வந்து சேர்த்திருந்ததாக பூசாரியார் தெரிவித்தார். அவை அனைத்தும் பாதுகாப்பு பிரிவினரால் பலவந்தமாக எடுத்துச் செல்லப்பட்டு கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரர் கோவிலிருந்த வளவில் வைக்கப்பட்டுள்ளன என்று மிகவும் கவலையுடன் குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்சிலைமடு வரலாற்றுக் குறிப்புகளும் புராதன சின்னங்களும்

## கற்சிலைமடு:

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியில் நாலு கிலோ மீற்றர் தொலைவில் கற்சிலைமடு இருக்கின்றது. ஆரம்ப காலத்தில் மழைநீர் தானாக தேங்கி நிற்கும் இடங்கள் மடு, அல்லது மோட்டை என்ற பெயர்களில் அழைக்கப்படுவது பிரதேச வழக்கம். பின்னர் அந்த மடுக்களை அடையாளம் காண்பதற்காக காரணப் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. "மடு" என்ற பெயரில் பல கிராமங்கள் இந்தப் பிரதேசத்தில் உள்ளன. இதற்கு உதாரணமாக கருடமடு, நயினாமடு, சேமமடு, இத்திமடு, சின்ன இத்திமடு, போன்றவற்றையும், காஞ்சூரமோட்டை போன்ற இடங்களை மோட்டை என்ற பெயருக்கும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். "மடு" என்ற பெயரிலிருந்த அநேக பள்ளங்கள் பின்னர் குளங்களாகக் கட்டப்பட்டுள்ளன. மடுக்கள் குளங்களாகக் கட்டப்பட்டாலும், பெயர்கள் மாற்றப்படாமல் காரணப் பெயராக அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கற்சிலைமடுக் குளத்திலிருந்து 50 ஏக்கர் காணிக்கு நீர்ப்பாய்ச்ச முடியும். இந்தக் குளக்கட்டின் கீழ் புராதன கட்டிடங்களின் சிதைவுகள் உள்ளன. மிகவும் அழகிய கிராமம். நிறைய புளியமரங்கள் உள்ளன. 1891 ல் ஒட்டுசுட்டானைப்போன்று சனத்தொகை 145 ஆக இருந்தது என்று ஜே.பி.லூயிஸினுடைய கைநூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்சிலைமடுக் கிராமக் குளத்தின் கீழ் புராதன சின்னங்கள் பல இருக்கின்றன. அண்மையில் மீண்டும் குளம் திருத்தப்பட்டுள்ளதை அங்கு சென்றபோது எம்மால் காணக்கூடியதாக இருந்தது. குளக்கட்டின் கீழ்பகுதியில் பல தொல்லியல் அடையாளங்கள் இருந்ததாக 1886ல் எழுதப்பட்ட ஆய்வுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. "கற்சிலைமடுவில் குளக்கட்டின் கீழுள்ள பகுதியில் ஆலயமொன்றின் (Temple) சிதைவுகளும், கருங்கல் தூண்களும், பலவித வடிவங்களில் கருங்கல் பொளிவுகளும், படிக்கற்களும், மற்றும் செங்கல் குவியல்களும், தலையில்லாத புத்தரின் சிலை ஆகியனவும் காணப்படுகின்றன" (JPLM.p.309) என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**'At Kachchilaimadu there are the ruins of temple under the tank bund – pillars, cut stones of various shapes, stone steps, bricks, and headless statue of Buddha' (JPLM.p.309).**

ஆங்கிலேயர்களுடைய வரலாற்றுக் குறிப்புகளில் கோவில் (Temple) என்று குறிப்பிடப்படுவது இலிங்க வழிபாட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலங்களையாகும். கற்சிலைமடுக் குளத்தின் கீழுள்ள பகுதியிலும் சிறிய அளவிலான இலிங்கம் ஒன்று நிலத்தில் சரிந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## கற்சிலைமடு-தான்தோன்றி ஈசுவரர் கோவில்:

ஒட்டுசுட்டான் வாவெட்டி மலையில் உள்ள இலிங்க வழிபாட்டுத் தலத்திற்கு அடுத்து தான்தோன்றி ஈசுவரர் கோவில் இருக்கின்றது. ஒட்டுசுட்டான் கோவிலில் இருந்து புதுக்குடியிருப்புக்குச் செல்லும் வீதியில் நாலு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கற்சிலைமடு குளத்தின் கீழ் புராதன கருங்கற் தூண்களும் பொளியப்பட்ட பெரிய நீள் சதுரக் கல்லும் சிறிய அளவில் பொளியப்பட்ட சிவலிங்கமும் காணப்படுகின்றன. இதனால்தான் கற்சிலைமடு என்ற புராதன பெயர் வைக்கப்பட்டது என்பதைக் குறித்து வைக்க விரும்புகிறேன்.

குளத்திலிருந்து சற்றுத் தூரத்தில் கற்சிலைமடு சிவலிங்கக் கோவில் (தான்தோன்றி ஈசுவரர்) இருந்துள்ளது. அதற்கடுத்ததாக கருடமடுவில் சிவன் தீர்த்தமாடும் கேணியும், அதற்குச் சற்றுத் தூரத்தில் கருங்கற்களால் கட்டப்பட்ட ஐயன் கோவிலும், இதன் தொடர்ச்சியாக மன்னாகண்டல் மலை உச்சியிலும், சிவலிங்க வழிபாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றதற்கு சான்றுகளாகின்றன.

கற்சிலைமடுவில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் "சிவலிங்கக் கோவில்" இருந்ததாக வயதில் மூத்தவர்கள் பலரும் தெரிவித்திருந்தனர். கற்சிலைமடு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் "சிவலிங்கக் கோவில்" எனவும், "கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரர் ஆலயம்" எனவும் அழைப்பதாக ஆலய உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

1933ம் ஆண்டு கற்சிலைமடுவில் பிறந்த நாகமணிப் பரியாரியாரிடம், கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரர் கோவிலைப்பற்றிய விபரங்களைக் கேட்டோம். சிறு வயது தொடக்கம் இந்தக் கோவிலக்குச் சென்று வழிபட்டு வந்ததாகக் குறிப்பிட்டார். முத்தர் தம்பையா என்பவரின் மகன் வாரித்தம்பியாகும். இவர் விதானையாராகவும் கடமையாற்றியவர். வாரித்தம்பிக்கு பொன்னம்பலம் என்ற பெயரில் சகோதரர் ஒருவர் இருந்தார். திரு. பொன்னம்பலம் அவர்கள் கற்சிலைமடுக் கிராமத்தை அண்டிய காட்டுப் பகுதியில் காணப்பட்ட சிவலிங்கத்தைக் கண்டு, அந்த இடத்தில் பிரதிஷ்டை செய்து வழிபாடுகளை ஆரம்பித்தார். இதனால் இவருடைய பெயர் "சிவா பொன்னம்பலம்" என அழைக்கப்பட்டதாகவும், இலிங்கம் தானாகத் தோன்றிய காரணத்தால் "தான்தோன்றி ஈசுவரர்" என்று பெயர் வைக்கப்பட்டதாகவும் நாகமணிப் பரியாரியாரின் கூற்றிலிருந்து தெளிவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புதுக்குடியிருப்பிலிருந்த சைவ குலத்தைச் சேர்ந்த ஒருவர் ஆரம்பத்தில் பூசை செய்ததாகவும், அவருக்குப் பின்னர் மற்றுமொரு சைவ குலத்தவர் தொடர்ந்து பூசைகளைச் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. சிவலிங்கக் கோவில், பூசைகளுக்கு பொறுப்பாக முன்னின்று “சிவா பொன்னம்பலம்” நடத்தியுள்ளார். சிவா பொன்னம்பலம் தொழில் நிமித்தம் சிங்கப்பூர் சென்றார். ஆலயத்திற்கான செலவுகளையும் தேவையான பொருட்களையும் சிங்கப்பூரிலிருந்து அனுப்பி வந்ததாக நாகமணிப் பரியாரியார் அவர்கள் நினைவூட்டினார். சிவா பொன்னம்பலம் அவர்கள் அனுப்பிய ஆலய வழிபாட்டிற்கான பொருட்களில் “கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரர் கோவில்” என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்ததாகவும், பின்னர் அவை கற்சிலைமடுவில் உள்ள மற்றுமொரு ஆலயத்தின் பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வாரித்தம்பியின் மூத்த மகளான முத்துப்பிள்ளையை, கதிர்காமர் கந்தையா என்பவர் திருமணம் செய்த காரணத்தினால் இந்த ஆலயத்தை அவர் பராமரித்து வந்துள்ளார். தனியார் ஆலயத்தை பராமரித்து வந்த காரணத்தால் ஆலயத்தைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆனால் ஆலயத்திற்கு பெருமளவிலான காணி எழுதப்பட்டிருந்தது.

7732(P)

கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரர் ஆலயத்தின் காணிக்கான உறுதியிலே பின்வருமாறு கோயில் காணி அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்கான ஆதன இடாப்பிலே “வடமாகாணம் வவுனியா பெரும்பிரிவு வவுனியா வடக்கு மேல்பற்று வடக்குப் பகுதி கற்சிலைமடு இறை “பெருங்கருகப்ப முறிப்பு சிவலிங்கத்தடிக் காணி” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

படம் : ஆதன இடாப்பு


ஆதனஇடாப்பு
வடமாகாணம் வவுனியா பெரும்பிரிவு
வடக்குப் பகுதி கற்சிலைமடு இ
வவுனியா வடக்கு மேல்பற்று ... சிவலிங்கத்தடிக் காணி உ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978ம் ஆண்டு காணியின் ஆதன இடாப்பு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது."In the Northern Province, Vavuniya District, Vavuniya North Melpattu North Division, Katsilaimadu Revenue, land called "PERUNGKARUKAPPA MURIPPU" SIVALINGTHADI KANI" என்று எழுதப்பட்டுள்ளது.

1892ம் ஆண்டு யாழ்ப்பாணம் கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களால் சோதிட பரிபால மடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரகுநாத ஐயர் அவர்களால் சோதிட பரிபாலன மடத்திலிருந்து வாக்கிய பஞ்சாங்கம் வெளியிடப்பட்டு வருகிறது. வாக்கிய பஞ்சாங்கத்தில் இலங்கையில் உள்ள ஆலயங்களின் உற்சவ விபரங்கள் வெளியிடப்படுவது வழக்கம். இதில் "கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரர் ஆலயத்தில்" நடைபெறும் அபிஷேக தினமாக வைகாசி (தமிழ்) மாதம் 28ந் திகதி அச்சிடப்பட்டு வருகிறது. சுமார் 65 வருடங்களுக்கு மேல் இந்த விபரம் அச்சிடப்பட்டு வருவதாக ஆலய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இது ஆலயத்தின் அமைவிடத்திற்கும் பெயருக்கும் குறிப்பிடத்தக்க ஆதாரமாகும்.

படம் : பஞ்சாங்க குறிப்பு


26 நீர்வேலி கதிர்காம
காரைநகர் அரசடிக்காடு சித்தி
நெடுங்கேணி தண்ணீர் முறிப்பு
விநாயகர்.
நவக்கரிதேவி.
27 மட்-கொம்மாதுறை
28 துன்னாலை வெல்லிங்டன் தோட்டப்
பிள்ளையார், வண்-கிழக்கு கலட்டி எச்
சாட்டி மாரியம்மை, புளியம்பொக்கணை
நாகதம்பிரான், கற்சிலைமடு தான்தோன்றி
ஈசுரர்.
ஞானிமடம் கம்பளி வைரவர்.

## கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரர் கோவிலின் தற்போதைய நிலை:

தற்போது ஆலயம் இருந்த இடம் பாதுகாப்பு பிரிவினருடைய முகாமிற்கு அண்மையில் இருக்கின்றது. இது பற்றி கடந்த ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலக சஞ்சிகையிலும் சில விபரங்களைக் குறித்திருந்தேன். மேலும் பல புராதன சின்னங்கள் பற்றிய விபரங்ளையும் வரலாற்றுக் குறிப்புகளையும் இந்தக் கட்டுரையில் எழுதுவதே எனது நோக்கமாகும். ஒட்டுசுட்டானை அண்டிய பகுதிகள் காடாக மாறியுள்ளன. வாவெட்டி மலையிலிருந்து தனியார் ஒருவரால் சேகரிக்கப்பட்ட சிவலிங்கங்களும் பீடங்களும், கருங்கல்லில் பொளியப்பட்ட கற்களும், மேலும் இந்தப் பிரதேசத்தின் பல இடங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட கருங்கல் தூண்களும் ஒன்று சேர்க்கப்பட்டு புராதன முறையில் நிறுத்தி வைக்கப்பட்டு ஒரு வழிபாட்டுத் தலம் பாதுகாப்புப் பிரிவினரால் உருவாக்கப்பட்டுள்ளது.

01.படம் : புதிய பிரதான வழிபாட்டுத்தலம்.

கருங்கல்லில் பொளியப்பட்ட நீள் சதுர வடிவிலான கருங்கல் பீடம் ஒன்று இருக்கின்றது. இது சுமார் ஐந்தடி நீளமும் இரண்டரை அடி அகலமும் ஒரு அடி உயரமும் கொண்டதாகும். இதன் ஓரங்கள் சீராகப் பொளியப்பட்டுள்ளன. சைவக் கோவில்களில் தெய்வச்சிலைகளை பிரதிஷ்டை செய்யும் பீடம் இருப்பது வழக்கம். பீடத்தில் அபிஷேகம் செய்யும் தீர்த்தம் வெளியேறுவதற்கான வெட்டுமுகம் நீள் சதுரப் பீடத்திலும் இருக்கின்றது.

02.படம் : கருங்கல்லில் பொளியப்பட்ட பீடம்

இது போன்ற பீடங்கள் ஒட்டுசுட்டானுக்கு தென் கிழக்கே தண்ணிமுறிப்புக் குளத்திற்கு கிழக்கே குருந்தனூர் மலையில் இருக்கின்றன. இந்த மலையின் ஒரு பகுதியில் சிவலிங்க வழிபாடும், மற்றுறொரு பகுதியில் ஐயனார் வழிபாடும் இருந்ததிற்கான அடையாளங்கள் இருக்கின்றன.

03.படம் : குருந்தனூர் மலையில் பொளியப்பட்ட பீடங்கள்

கற்சிலைமடுவில் வைக்கப்பட்டுள்ள நீள்சதுரப் பீடத்தின் ஒருபக்கத்தில் பொளியப்பட்ட சதுர வடிவமான இன்னுமொரு கருங்கல் வைக்கப்பட்டுள்ளது. சற்சதுர பீடங்களில் பல சிற்ப வடிவங்களும் பொளியப்பட்டுள்ளன. இதுபோன்ற சற்சதுர கருங்கல் வவுனியா தொல் பொருள் நிலையத்திலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்லில் சக்கர வடிவமும் வேறு பல வடிவங்களும் பொளியப்பட்டுள்ளன.

04.படம் சதுர வடிவக் கல்லில் சக்கர வடிவம்.

இங்கு சிறிய அளவிலான இலிங்கம் ஒன்று இருக்கின்றது. பிரதான வழிபாட்டுத் தலத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டுள்ள கருங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூணொன்றில் இந்த இலிங்கம் சாய்த்து வைக்கப்பட்டுள்ளது. தனிக்கருங்கல்லில் பொளியப்பட்டுள்ள சிறிய இலிங்கத்தின் புராதனம் ஆய்வுக்குரியதாகும்.

05. படம் : சிறிய இலிங்கம்

கற்சிலைமடுக் குளக்கட்டின் கீழுள்ள பகுதியில் கோவில் இருந்ததிற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. இங்கிருக்கும் கருங்கல் பொளிவுகளுக்கு நடுவே சிறிய அளவில் பொளியப்பட்ட கருங்கல் இலிங்கம் இருப்பதை அவதானிக்கக் கூடியதாய் இருக்கின்றது. இந்தப் பிரதேசத்தில் கோவில் (Temple) ஒன்றிருந்ததாக ஆங்கிலக் குறிப்புகளும் தெரிவிக்கின்றன. குளக்கட்டின் கீழுள்ள காட்டிற்குள் இருக்கும் சிறிய அளவிலான சிவலிங்கத்தின் படமும் ஒப்பீட்டிற்காக தரப்படுகின்றது.

06. படம் : கற்சிலைமடுவில் இலிங்க வடிவில் கருங்கல்

ஆரம்ப காலத்தில் ஆவுடையார் இல்லாமல் இலிங்கங்கள் வடிவமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆவுடையார் இல்லாத இலிங்கங்கள் இரணையிலுப்பைக்குளம், பாணன்கமம் மற்றும் குமாரபுரம் போன்ற பல இடங்களில் இருக்கின்றன. சிறிது காலத்தின் பின்னர் ஆவுடையார்கள் பொளியப்பட்டு அவற்றில் இலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரர் ஆலய வளாகத்தின் பின்பகுதியில், ஆவுடையார் இல்லாத பெரிய இலிங்கம் நிலத்தில் சரித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த இலிங்கம் எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்பதை சேகரித்து வைத்திருந்த ஐயன் கோவில் பூசாரியார் சிவராசா அவர்களினாலேயே அடையாளம் காட்ட முடியும்.

07. படம் : பெரிய இலிங்கம்

இதே போன்ற இலிங்கம் மேற்கு மூலையிலுள்ள இரணையிலுப்பைக் குளத்திலும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. வடிவத்திலும் அளவுகளிலும் சிறிய மாற்றங்கள் இருந்தாலும் இலிங்கத்தின் மேற்பகுதி அமைப்பில் எதுவித மாற்றங்களும் இல்லை என்றே கூறலாம். நிலத்துள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த இந்த இலிங்கம் ஆவுடையாரில் பிரதிஷ்டை செய்யப்படுவதற்காக வெளியே எடுக்கப்பட்ட போது அதன் முழுமையான அளவைக் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



01. பிரதான வழிபாட்டுத் தலம்



02. கருங்கல்லில் பொழியப்பட்ட பீடம்



03. குருந்தனூர் மலையிலுள்ள பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



04. சதுர வடிவக்கல்லில் சக்கர வடிவம்



05. சிறிய இலிங்கம்



06. கற்சிலைமடு குளத்தின் கீழ் இலிங்கவடிவில் கருங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. படம் : இரணையிலுப்பைக்குளம் இலிங்கம்.

முழுமையான பீடத்திற்கு அருகில் உடைந்த நிலையில் உள்ள நீள்சதுரக் கருங்கல்லு வைக்கப்பட்டுள்ளது. செம்மையாகப் பொளியப்பட்டுள்ள இந்தக் கருங்கல்லில் பறவைகள் மிருகங்கள் ஆகியவற்றின் உருவங்கள் பொளியப்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகிறது.

09. படம் : கல்லில் பறவைகளின் பொளிவுகள்

தூண்களின் அருகே வெள்ளைக் கல்லில் பொளியப்பட்ட யானையின் சிலையொன்று வைக்கப்பட்டு உள்ளது. இதன் முன்பக்கம் சிதைந்து போயுள்ளது. இந்தச் சிலையின் முகப் பக்கத்தையும், கால்களின் வடிவமைப்பையும், துதிக்கையின் வடிவத்தையும் கொண்டு இது ஒரு யானையின் வடிவம் என்பதை அடையாளம் காணக்ககூடியதாக இருக்கின்றது.

10 படம் : வெள்ளைக் கல்லில் யானையின் சிலை

ஆங்கிலேயருடைய ஆய்வுகள் இடம்பெறுவற்கு சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் 1783 களில் ஒல்லாந்த கப்ரன் தோமஸ் நாகெல், இந்தப் பிரதேசத்தில் இருந்த அனைத்து சைவ ஆலயங்களையும், ஏனைய சமய வழிபாட்டுச் சின்னங்களையும் சிதைத்துள்ளார் என்று வரலாற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வவுனிக்குளத்தில் இருந்த விஷ்ணு சிலை இடிக்கப்பட்டிருந்தமை பற்றி வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. பின் வந்த ஆங்கில வரலாற்றசிரியர்கள் உடைக்கப்பட்ட சிலைகள் அனைத்தும் புத்தபகவானுடைய சிலைகள் என்று குறிப்பிட்டிருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. வெள்ளைக் கல்லில் பொளியப்பட்ட மற்றுமொரு சிலை தலையில்லாமல் வைக்கப்பட்டுள்ளது. இதனை ஆங்கிலேயர்கள் தலையில்லாமல் இருக்கும் புத்தபகவானுடைய சிலை எனக் குறிப்பிட்டுள்ளனர். தலையில்லாத சிலையின் இடுப்புக்குக் கீழ், ஆபரணங்கள் இருப்பதுபோல் பொளியப்பட்டுள்ள பகுதி ஆய்வுக்குரியதாகின்றது. புத்தபகவான் ஞானம் பெற்ற பின்னர் ஆபரணங்கள் எதனையும் அணிந்ததாக எங்கும் குறிப்பிடப்படவில்லை.

11. படம் : வெள்ளைக் கல்லில் தலையில்லாத சிலை.

கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரர் (சிவலிங்க) ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள வெள்ளைக்கல் சிலைகள் எந்தப் பாரம்பரியத்திற்கு உரியவை என்பதையும், அவற்றின் காலத்தையும் அதில் உள்ள ஆபரணப் பொளிவுகளையும் அறிந்து கொள்ள நீண்ட ஆய்வுகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செய்யப்பட வேண்டியது அவசியம். வெள்ளைச் சிலையின் வடிவில் உள்ள ஆபரணப் பொளிவுகள் போன்று, கி.பி.4ம் அல்லது 5ம் நூற்றாண்டுகளில் குளக்கோட்டு மன்னனால் திருகோணமலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகக் கூறப்படும் விஷ்ணு சிலையிலும் இருக்கின்றன. புராதன தமிழ் பிரதேசத்திலிருந்து திரட்டப்பட்டு, கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரர் ஆலய வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தப் புராதன சின்னங்ளை ஆய்வு செய்வதற்கான வசதிகள் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்.

தனியாருக்குச் சொந்தமாக இருந்த ஆலயகாணிக்கான உறுதிப் பத்திரம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருக்கிறது. யுத்த சூழ்நிலையை காரணம்காட்டி கோவில் காணியையும், கோவிலையும், பாதுகாப்புப் பிரிவினர் சுவீகரித்துள்ளனர். அதில் ஒரு பகுதி திரும்ப வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தான்தோன்றி ஈசுவரர் கோவில் இருந்த பகுதி விடுவிக்கப்படவில்லை. கற்சிலைமடு தான்தேன்றி ஈசுவரர் கோவிலிருந்த காணியை சுவீகரித்ததோடு மட்டுமல்ல, அந்த இடத்தில் புதிதாக மற்றுமொரு தலத்தை செயற்கையாக அமைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள், பக்தர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

நல்லாட்சியை உருவாக்கி அமைதியை நிலைநாட்ட விரும்பும் காலத்தில், கோயில் காணியை திரும்ப வழங்கி, கற்சிலைமடு தான்தோன்றி ஈசுவரரை மக்கள் வணங்க வாய்ப்புகளை வழங்க வேண்டியது அரசின் கடமையாகும். அத்தோடு பொதுமக்கள் மத்தியில் நற்பெயரை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது பாதுகாப்புப் பிரிவினரின் பொறுப்பாகும்.

எமது புராதன சின்னங்களைக் காப்பாற்றுவதோடு, புராதன ஆலயங்களை வழிபட்டு அமைதியான சூழலில் மக்கள் நிம்மதியாக வாழ நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். அரச உயர் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவர்களின் தலையாய கடமையாகும். செய்வார்களா?.

**ஒட்டுசுட்டான் 2015 கட்டுரைக்கான படங்கள் :**

01. படம் : பிரதான வழிபாட்டுத்தலம்.

02. படம் : கருங்கல்லில் பொளியப்பட்ட பீடம்

03. படம் : குருந்தனூர் மலையிலுள்ள பீடம்

04. படம் : சதுர வடிவக் கல்லில் சக்கர வடிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



07. பெரிய இலிங்கம்



08. இரணை இலுப்பைக்குளத்தில் உள்ள பெரிய இலிங்கம்



09. கல்லில் பறவைகளின் பொளிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10. வெள்ளைக்கல்லில் யானையின் சிலை



11. வெள்ளைக்கல்லில் தலையில்லாத சிலை



12. கட்டுரை ஆசிரியர் அருணா செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. படம் : சிறிய இலிங்கம்

06. படம் : கற்சிலைமடு குளத்தின் கீழ் இலிங்க வடிவில் கருங்கல்

07. படம் : பெரிய இலிங்கம்

08. படம் : இரணையிலுப்பைக்குளம் இலிங்கம்.

09. படம் : கல்லில் பறவைகளின் பொளிவுகள்

10. படம் : வெள்ளைக் கல்லில் யானையின் சிலை

11. படம் : வெள்ளைக் கல்லில் தலையில்லாத சிலை.

12. படம் : அருணா செல்லத்துரை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தின் புராதன தொல்லியற் களஞ்சியம் ஒட்டுசுட்டான்

பண்டிதர்
வீரசிங்கம் பிரதீபன்

வரலாறுகளை ஒழுங்காக பதிவு செய்யாததால் உரிமை இழந்த இனங்களில் தமிழ் இனமும் ஒன்று எனலாம். இயற்கையாகவே தனித்துவமான மொழியைக் கொண்ட தமிழினம் அன்று தொட்டு இன்று வரை தம் பூர்வீக வரலாறுகளை எழுதிப் போணுவதில் நாட்டம் அற்றோராகவே காணப்படுகின்றனர் தமிழகத்திலும், ஈழத்திலும் இவர்களது பூர்வீக வரலாறுகள் மண்ணுக்கடியிலேயே புதையுண்டு கிடக்கின்றன. எச் செய்திகளையும் ஆதாரப்படுத்த முடியாத அளவிற்கு, எம் வரலாறுகளை எழுத முனைந்த வரலாற்று ஆசிரியர்களும் ஒன்றுக் கென்று முரணான கருத்துக்களையும் கூறியதால் இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறுகளும் தளம்பல் நிலையிலேயே காணப்படுகின்றன.

ஈழத்தின் வரலாற்றை ஆராய்ந்தோர் அனைவரும் சிங்கள மொழியில் அமைந்த "மாகவம்சம்"எனும் வரலாற்று நூலை ஆதாரமாகக் கொண்டே தமது கருத்துக்களைக் கூறுகின்றனர். ஆனால் விஜயனின் வருகைக்கு முன்னான ஆதிவரலாறுகள் இன்றும் தூசுபடிந்தவையாகவே அமைகின்றன.

## விஜயன் வருகை:-

வட இந்தியாவின் வங்காளம், ஒரிசா ஆகிய பகுதிகள் ஒரு காலத்தில் லாலாதேசம் என்று அழைக்கப்பட்டன. இந்த இராட்சியத்தை ஆண்டவன் சிங்கபாகு. இவன் சிங்கத்துக்கும், ஒரு இராஜகுமாரிக்கும் பிறந்ததாக வரலாறு. இவன் சிகாசிவாலி என்ற பெண்ணை மணந்து அவள் மூலம் 32 குழந்தைகளைப் பெறுகிறான். இவர்களில் மூத்தவனே விஜயன். இவனை பட்டத்து இளவரசனாக சிங்கபாகு நியமித்தான். ஆனால் விஜயன் கொடூரகுணங் கொண்டு செய்த அட்டூழியங்களைப் பொறுக்காத மக்கள் மன்னனிடம் முறையிடுகின்றனர். சிங்கபாகு மகனைத் திருத்த முயற்சிக்கின்றான். ஆனால் விஜயனோ, மேலும் மேலும் அட்டூழியங்கள் செய்பவனாகவே இருக்கின்றான்.

திருந்தாத தன் மகனையும் அவனோடு சேர்ந்த 700 தோழர்களையும் நாடு கடந்துகின்றான் மன்னன். மூன்று கப்பல்களில் ஏற்றி எங்காவது சென்று பிழைத்துக் கொள்ளுமாறு அனுப்பிவிடுகிறான். இவ்வாறு கடலில் தத்தளித்த மூன்று கப்பல்களும் இலங்கையை வந்தடைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயன் கப்பலை விட்டு இறங்கி இலங்கைத்தீவில் காலடி வைக்கிறான். இது கி.மு 543ல் நிகழ்ந்தது. அவன் இறங்கிய இடம் அழகிய இயற்கை நிறைந்தது. அங்கு ஒருமரத்தடியில் குவேனி என்ற இராட்சத குலந்துப் பெண் அமர்ந்திருக்கிறாள். (குவேனி என்ற சொல் கவினி என்ற தமிழ்ச் சொல்லின் திரிவு ஆகும். கவினி - பேரழகு படைத்தவள்) இதனை மகாவம்சம் இராவணனின் குலத்திலே தோன்றியவள் குவேனி எனக் கூறுகின்றது. மரத்தடியில் அமர்ந்திருந்த குவேனியை நாடிய விஜயன் தனக்கு அடைக்கலம் கோருக்கிறான். அத்தருணம் குவேனி அவனுக்கு அடைக்கலம் தருகிறாள். இவ்வேளை இருவருக்கும் இடையே காதல் மலர்கிறது. அக்காதல் திருமணத்திலே முடிவடைய இவர்களுக்கு ஒரு மகனும், மகளும் பிறக்கின்றனர். "விஜயனின் வருகை" என்ற தலைப்பில் 1956 ல் இந்த நிகழ்வினை இலங்கை அரசு சிறப்புத் தபால் தலை ஒன்றாக வெளியிட்டிருந்தது. இத் தபால் தலையைக் கண்ட அப்போதய சிங்களத் தலைமைகள் "விஜயன் இலங்கைக்கு வந்த போது குவேனி என்ற தமிழ்ப்பெண் இலங்கையிலே இருந்திருக்கிறாள் என்றால் இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழரே என்பதனை நாமே ஒப்புக்கொண்டதாகிவிடும் எனவே இத்தபால் தலையை வாபஸ் பெற வேண்டும்" என்று கூறினர். இதனால் இத்தபால் தலை வாபஸ் பெறப்பட்டுவிட்டது.

விஜயன் வருகையின் பின் பல நூற்றாண்டுகளின் பின்னரே "மகாவம்சம்", தீபவம்சம்" என்கின்ற வரலாற்று நூல்கள் தோன்றின. இதற்கு முந்தைய ஈழத்துப் பூர்வ குடிகள் யார் என்பதற்கு இது வரை எவ்வகை ஆதாரமும் கிடைக்கவில்லை.

மகாவம்சம் குவேனியை "இராவண குலத்தில் தோன்றிய பெண்" என்று கூறுவது வரலாற்றில் சிந்திக்கப்பட வேண்டிய விடயம். இலங்கையின் பூர்வீகக் குடிகளாக இயக்கர், நாகர் என்போரோடு அசுரரும் வரலாற்றுக் குறிப்புகளில் கூறிக்காட்டப்பட்டுள்ளனர். எனவே இலங்கையின் புராதனக் குடிகளாக இவர்களைக் கொள்ளுவதில் தவறில்லை. ஆனால் இவர்கள் பற்றிய எழுதப்பட்ட வரலாற்றுக்கள் எதுவும் கிடையாது.

## இலக்கியங்களில் இராவணன்:

எது எவ்வாறாயினும் அசுரர் குலத் தோன்றலாகிய இலங்கையை ஆண்ட புஜபல பராக்கிரம சாலியாக இராவணன் பல இலக்கியங்களிலும் புகழப்படுவது கண்கூடு. இற்றைக்குப் பல நூற்றாண்டுகளின் முன்தோன்றிய "வான்மீகி இராமாயணம்" இராவணன் பற்றித் தன் இலக்கியத்தில் கூறத்தவறவில்லை பின்வந்த கம்பனின் தமிழ்க் காவியமான இராமாயணம் இராவணனை எதிர்நாயகனாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியதனால் இராவணன் பல இன்னல்களை எதிர்நோக்கியது அறியத்தக்கது. எனினும், இலிங்க வழிபாட்டின் மூதாதையாக இவன் சிறப்புப் பெறுகின்றான். சிந்து வெளி நாகரிகம் இலிங்க வழிபாடு பற்றிப் பேசுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அக்காலத்தை ஒத்த இலங்கையின் இலிங்க வழிபாட்டினனாக இராவனனைக் கொள்வதில் தவறேதும் இல்லை, எனில் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு இலங்கையில் தமிழருக்கும் உண்டு என்பது எவராலும் குறித்து வைக்கப்படாத இரகசியம் ஆகின்றது.

கி.பி 7ம் நூற்றாண்டிலே தமிழ் வேதம் செய்த ஞானசம்பந்தராலும், நாவுக்கரசராலும் இராவணனுடைய பல பெருமைகள் பேசப்படுகின்றன. இவர்கள் இராவணனை 300ற்கும் மேற்பட்ட இடங்களில் வியந்து, விதந்து பாராட்டுகின்றனர்.

"ஏழ் கடல் சூழ் இலங்கை அரசன்"
"எரியார் வேற் கடற்தானை இலங்கை வேந்தன்"
"ஏவும் படை வேந்தன்"
"இலங்கை இராவணன்"
"இலங்கைக்கு இறைவன்"
"இலங்கைக் குலக்கோன்"
"இலங்கை மன்னுவாள் அவுனர் கோன்"
"இலங்கையின் மன்னனாகி எழில் பெற்ற இராவணன்"
"தேசு குன்றா தெண்ணீர் இலங்கை கோமான்"
"பரக்கும் தொல்சீர் தேவர்கள் சேனைப் பௌவத்தை துரக்கும்
செந் தீ போல் அமர் செய்வோன்"

என்றெல்லாம் இராவணனை தமிழ் வேதம் போற்றுவதில் இருந்து இராவணன் ஆண்ட தேசம் எமது ஏழ்கடல் சூழ் இலங்கையே என்பதும் அவன் பெரும் படை கொண்டிருந்தான் என்பதும் புலனாகின்றது. இலங்கை பற்றி தட்சிணகைலாய புராணம்,

"இழைத்த மாமணி எங்கும் இலங்கலால்
உழைத்த நீர் வயலூரும் இலங்கையே"

எனக் கூறும். இவ்வாறு இலங்கிய நாட்டின் முதல் மன்னன் என்ற சிறப்பு இராவணனையே சாரும். அது மட்டுமின்றி சிவலிங்க வழிபாட்டின் மூதாதை இவனே எனலாம். இவ் இராவணனோடு திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் எனும் சிவாலயங்கள் நெருக்கிய தொடர்புடையன என்பதும் நோக்கத்தக்கது. எனவே, இவன் காலம் இலங்கை முழுவதும் சிவாலயங்களும், இலிங்க வழிபாடும் சிறந்திருந்தமை வரலாற்று உண்மை எனலாம். இதனால் பின் வந்த திருமூலர் இலங்கையை "சிவபூமி" என்று அழைத்தார் போலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் விஜயன் வந்து ஈழம் ஆரிய மயமாவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கு நிலவிய பூர்வீகம் சிவ வழிபாட்டுடன் தொடர்புடையது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். **வரலாற்றுப் பேராசிரியரான எல்லா-வல தாம் எழுதிய "பண்டைய இலங்கையின் சமூகவரலாறு" எனும் நூலில், இலங்கை ஆரிய மயமாவதற்கு முற்பட்ட பூர்வீக காலத்தில் இலங்கையில் இலிங்க வழிபாடும், சைவ சமயமும் நிலை பெற்றிருந்தன எனும் கருத்தை** முன்வைக்கின்றார்.

இத்தகைச் சிறப்புடைய இலங்கை வேந்தனை திராவிடர் மறுக்கவும், மறுதலிக்கவும் வைத்தது ஆரிய காவியமான இராமயணமே. ஆனால் இலங்கைத் தமிழர் ஆகிய நாம் எமது மூதாதையான இராவணனுக்கென்று ஒரு வணக்க வழிபாட்டை நிலைநிறுத்தி திராவிடத் தெய்வமாகக் காணவேண்டியது எம் ஒவ்வொருவரினதுத் கடமையாகும். இராவணது பெயரிலே "இராவண பலய" எனும் ஒரு கட்சியே தென்னிலங்கையில் செயற்படுவதும் இங்கு நோக்கத்தக்கது.

இதுவரை, இலங்கையின் பூர்வீக வரலாற்றின் தந்தையாக இராவணனைக் கண்ட நாம் அக்கால வரலாறுகளை ஆவண வடிவில் காணாததால் "மகாவம்சம்" எனும் நூலையே இலங்கையின் வரலாற்று நூல் என்று மயங்கி இன்று குழம்பி நிற்கின்றோம். மகாநாமன் என்ற பௌத்த தேரரின் இன நோக்கு சிந்தனையையும், சிங்கள இனத்தின் இருப்பை நிலைநாட்ட எடுத்துக் கொண்ட முயற்சிகளும் ஈழத்தின் பூர்வீக வரலாறுகளைப் புறம் தள்ளிவிட்டன என்றே கூறலாம். மகாவம்ச வரலாற்றுக்கு முன்னரான தமிழ், சைவ வரலாற்று மேதையான இராவண சரித்திரத்தினை ஆவணப்படுத்தத்தவறியதால் தமிழரின் பூர்வீகம் உரிமையிழந்து நிற்கின்றது. அதுமட்டுமின்றி மண்ணுக்கு அடியில் புதையுண்டு அமைதியாகக் கிடக்கிறது.

காலா, காலம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள், அரசியல், சமூக, சமய மாற்றங்கள் என்பன பல வரலாற்று உண்மைகளை மறைத்து புதிய புதிய வரலாறுகள் கற்பனையோடு இன்று கிளர்ந்தெழுந்து நிலையான வரலாறுகளாய் பதியப்பட்டுவிட்டன. எந்த இனம் தனது வரலாற்று இருப்பை பதிவு செய்ய வில்லையோ அந்த இனம் தன் உரிமையை இழந்துவிடும் என்பதற்கு இவை தக்க சான்றாக அமைகின்றன எனலாம்.

இன்றைய தொல்பொருள் ஆய்வுகள் பல்வேறு உண்மைகளை நிறுவமுயன்றாலும் அவை நீர்மேல் எழுத்தாகிவிடுகின்றன. இவ்வகையில் ஈழத்தின் வடபுலம் முழுவதும் தொல்வியல் எச்சங்கள் நிறைந்திருப்பது நவீன ஆய்வுகளில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இதன் மூலம் பூர்வீகமான வரலாற்று எச்சங்கள் ஆங்காங்கே கண்டுபிடிக்கப்பட்டிருப்பது எமது வரலாற்றின் திருப்பு முனையாகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்து விடுகிறது. குறிப்பாக இயக்கர், நாகர்கால தொல்லியல் எச்சங்கள் இவற்றை நிரூபித்து நிற்கின்றன எனலாம்.

## ஒட்டுசுட்டானில் தொல்லியல் எச்சங்கள்:

வடமாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசம் தொல்லியற் சான்றுகளின் களஞ்சியமாகத் திகழ்வது அண்மைய ஆய்வுகளினால் வெளிப்பட்டு நிற்கின்றது. ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் பல்வேறு இடங்களிலும் இவற்றை காணமுடிகின்றது. குறிப்பாக

- ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரம்
- வாவெட்டிமலை
- தட்டயமலை
- தட்டயமலை நாகதம்பிரான் கோவில்
- கற்சிலைமடு
- கற்சிலைமடு - தான்தோன்றி ஈஸ்வரர் கோவில்
- ஒட்டுசுட்டான் ஒட்டுத்தொழிற்சாலை
- முத்தையன்கட்டு அடுக்குக்கல் அணைக்கட்டு
- பண்டாரவன்னி
- ஒதியமலை
- அம்பகாமம்

போன்ற பல இடங்கள் தொல்லியல் சான்றாதாரங்கள் நிறைந்த இடங்களாகும்.

## ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரம்:

ஒட்டிசுட்டான் பிரதேசத்தின் நடு நாயமாக இருந்து அருள்புரிபவர் தான்தோன்றி ஈஸ்வரரான வேகாவனப் பொருமான் ஆவார். ஈழத்தில் தான்தோன்றி ஈஸ்வரங்கள் இரண்டு

1.ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரம் - வடக்கு
2.கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரம் - கிழக்கு

இவ் ஆலய இலிங்கங்கள் தாமாகத் தோன்றியவை ஆதலால் சுயம்பு எனப்படுகின்றன. ஒட்டுசுட்டானில் தோன்றிய இவ் இலிங்கம் புரதான சிறப்புடையது. இவ் இலிங்கம் எக்காலத்துக்குரியது என்பது இன்னமும் துணியப்படவில்லை. ஆனால் புராதன கால சிவலிங்க வழிபாட்டுடன் தொடர்புடையது இவ் இலிங்கம் என்பது புலனாகின்றது. பூர்வீக கால வரலாறுகள் மண்ணோடு மண்ணானாலும் ஒரு சில இடங்களில் அவை வெளிப்பட்டுத் தமது இருப்பினை ஆதாரப்படுத்துவதற்கு ஒட்டுசுட்டான் சுயம்பு இலிங்கமும் ஓர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றாகின்றது. இவற்றோடு ஆலயத்தின் கோமுகை, கோபுர வாயிற்கல் என்பனவும் பூர்வீக வரலாறு கொண்டவை என்பதும் ஆராட்சியாளர்களின் முடிவாகின்றது.

## வாவெட்டிமலை:

ஒட்டுசுட்டானில் இருந்து 3 மைல் தொலைவில் மேற்கே அமைந்துள்ளது வாவெட்டி மலை ஆகும். இம் மலைப்பற்றி 1886ம் ஆண்டு J.P Lewis எழுதிய குறிப்புக்கள் பின்வருமாறு,

> "வாவெட்டைமலைக் குன்றுகளில் கோயில்கள் இருக்கின்றன. ஒருமலையில் பல தூண்கள் இருப்பது கோயில்கள் அமைந்திருந்தமைக்கு சான்றாக இருக்கின்றது. அங்கிருந்து கீழ் நோக்கிச் செல்லும் படிக்கற்கள் அடிவாரத்தில் அமைந்துள்ள கேணியை நோக்கிச் செல்கின்றன. இம் மலைக்குத் தெற்கே100 யார் தள்ளி இருக்கும் மற்றொரு மலையில் கோயில்கள் காணப்படுகின்றன."
>
> இக் கூற்றின் மூலம் இம் மலையிலும் கோவில்கள் இருந்தது தெளிவாகிறது.

கடந்த வருடம் இம்மலையில் ஆய்வுகளை நிகழ்த்திய வரலாற்று ஆசிரியர் அருணாசெல்லத்துரை அவர்கள் இங்குள்ள புராதன சின்னங்கள் பற்றிய விளக்கங்களை புகைப்படங்களுடன் "முத்தொழில் 2014" ஒட்டுசுட்டான் பிரதேச மலரில் தந்திருக்கிறார்.

> "வாவெட்டி மலையில் சிறிது தூரம் ஏறியதும் பிரதான ஆலயம் இருக்கும் இடத்தை சுலபமாக தெரிந்து கொள்ள அம்புக் குறிகள் பொழியப்பட்ட கருங்கற்கள் திசை காட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. அம்புக் குறிகள் காட்டும் திசையில் சென்றால் பிரதான கோவிலை அடைய முடியும். இம் மலையில் பல இடங்களில் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட கோயில்கள் இருந்தமைக்கு அடையாளங்களாக கருங்கற் தூண்கள் சரிந்துள்ளன. மலையின் உச்சியை சென்றடையும் முன் பல இடங்களில் குகைகள் அமைந்திருப்பதை காணமுடிகின்றது. மலை உச்சியில் வட்ட வடிவமான பீடம் ஒன்று சிதைந்த நிலையில் காணப்படுகின்றது...."

என்று இம்மலையின் புரதான சின்னங்கள் பற்றி அவர் குறிப்பிடுகிறார்.

இம்மலை சங்கிலி மன்னனின் இராசதானியாக இருந்தது என்பதனை 'யாழ்ப்பாண வைபவ மாலை" எனும் நூலை ஆதாரம் காட்டி கலாநிதி முல்லைமணி அவர்கள் நிறுவுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தட்டயமலை:

கற்சிலை மடுவில் இருந்து மேற்கே 5 மைல் தொலைவில் தட்டயமலை உள்ளது. இங்குள்ள குளத்தின் மேற்கே மூலையில் ஒரு மடாலயம் இருந்துள்ளது. இம்மடாலயம் கருங்கல்லால் ஆனது. இம்மடாலய கருகற்சிதைவுகளாக தற்போது 12 அடி நீளமும், 6 அடி அகலமும் 21/2 அடி உயரமும் கொண்ட சீரான அமைவுடன் செதுக்கப்பட்ட கருங்கல் காணப்படுகின்றது.

"வலதுகரை முத்துவிநாயகர் புரத்தில் துர்க்கை அம்மன் கோவில் ஒன்றுள்ளது. இக்கோவிலில் உள்ள கோமுகைக்கல் புராதனமானது இக்கல் தட்டயமலை அடிவாரத்தில் இருந்து கொண்டு வரப்பட்டதாகாக் கூறுவார்."

"இன்று காடாக மாறியுள்ள தட்டயமலை அடிவாரத்தில் பல புராதான கருங்கற்சிதைவுகள் காணப்படுகின்றன. இரண்டு பக்கமும் படிக்கற்கள் செருகி வைப்பதற்கான கருங்கல்லினால் ஆன யானைத் தலை வாசல்கள் பல இங்கு மண்ணுட் புதைந்து கிடக்கின்றன. அத்தோடு படிதாங்கிக் கற்கள் மலை உச்சிவரை அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இப்படிதாங்கிக் கற்களின் மேலே நீள்சதுர வடிவான 12 அடி நீளமும் 6 அடி அகலமும் கொண்ட செதுக்கப்பட்ட கருங்கல் ஒன்று உள்ளது. இப்படிக்கற்களும் ஏனைய வாசல்களும் மலையடிவாரத்தை சுற்றிப் பாயும் சாளம்பன் ஆற்றை நோக்கியே அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதி சுற்றுவர அடுக்கப்பட்ட கருங்கல் மதில் கொண்டமைந்திருக்கின்றது."

## தட்டயமலை நாகதம்பிரான்:

தட்டயமலை நாகதம்பிரான் ஆலயத்திலே சுமார் 1 1/2 அடி அகலமும் 3 அடி உயரமும் கொண்ட நீள் சதுரக் கல்லிலே பொழியப்பட்ட நாகசிலை ஒன்று உள்ளது. இது செதுக்கப்பட்ட முறை புராதான காலத்தைச் சேர்ந்தது என்பது தெளிவாகிறது. நீர்ப்பாசன முறையில் சிறந்த நாகர்களின் குலதெய்வமாக இச்சிலை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## கற்சிலைமடு:

கற்சிலைமடு கிராமத்தின் குளத்தின் கீழ் புராதன சின்னங்கள் பல இருந்தன. இதுபற்றி 1886ல் **J.P Lewis** ன் ஆய்வுக்குறிப்புக்கள்

> "கற்சிலைமடுவில் குளக்கட்டின் கீழ் பகுதியில் ஆலயம் ஒன்றின் சிதைவுகளும், கருங்கற்தூண்களும் பலவித வடிவங்களில் கருங்கற்ப் பொளிவுகள், படிக்கற்கள் மற்றும் செங்கற் குவியல்கள் காணப்படுகின்றன."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறுகின்றன.

இவ்விடம் தனியாருக்கு தற்போது சொந்தமானது. இங்கு கருங்கல்லில் பொளியப்பட்ட நீள்சதுர வடிவான கல் ஒன்று உள்ளது. இருக்கை அமைப்பதற்கான துளைகளும் இங்கு காணப்படுகின்றது. இதன் ஓரங்கள் சீராகப் பொளியப்பட்டுள்ளது. இவ்விடத்தை சுற்றிப்பாயும் சிற்றாறு ஒன்றின் கரையில் கருங்கற் தூண்கள் நிறுத்தப் பட்டதற்கான அடையாளங்கள் உள்ளன. பொளியப்பட்ட கருங்கல் ஒன்றும் காணப்படுகிறது.

## கற்சிலைமடு தான்தோன்றிஈஸ்வரர்:

இப்பகுதி தற்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டினுள் உள்ளது. அங்கு கருங்கற்தூண்கள் சீரான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள கருங்கல் தூணில் புராதனமான சிறிய சிவலிங்கம் ஒன்று சாத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆவுடையார் இல்லாத இன்னுமொரு லிங்கம் நிலத்திலே சரித்து வைக்கப்பட்டுள்ளது. இதே போன்று இலிங்கங்கள் இரணை இலுப்பைகுளம், பனங்காமம், குமாரபுரம் போன்ற இடங்களிலும் காணப்படுகின்றன என்கிறார் இவற்றை ஆய்வு செய்த வரலாற்று ஆசிரியர் அருணா செல்லத்துரை.

சைவக்கோவில்களில் தெய்வசிலைகள் பிரதிட்டை செய்யும் நீள் சதுரமான கருங்கல்பீடம் ஒன்று இங்கு உள்ளது. அப்பீடத்தின் மேலுள்ள சதுரக்கற்களில் பல்வேறு வடிவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

## ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை இலிங்கம்:

ஒட்டுசுட்டான் ஒட்டுத் தொழிற்சாலையில் உள்ள ஆலயத்தின் முன் இலிங்கவடிவில் ஒரு கல் வைத்து வழிபடப்பட்டு வருகின்றது. அண்மையில் இக்கல்லை ஆராய்ந்த பேராசிரியர் சி.பத்மநாதன், ஆய்வாளர் அருணா செல்லத்துரை ஆகியோர் இக்கல்லின் மேற்பகுதியில் எழுதப்பட்ட பிராமி எழுத்துக்களை அவதானித்தனர் அவ் வெழுத்துக்கள்

"வேள் நாகன் மகன் வேள் கண்ணன்"

என்பதாக பேராசிரியர் சி.பத்மநாதன் விளக்கம் தருகிறார். எனவே நாகர்கால நாகரிக பண்பாடு ஒட்டுசுட்டானில் நிலவியமை இதனால் உறுதியாகின்றது. அத்துடன் அக்கல்லில் நாய் போன்ற உருவங்களும் வரையப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுக்குக்கல் அணைக்கட்டு:

பேராற்றை மறித்து ஒட்டுசுட்டானின் வடக்கெல்லையில் அமைந்ததே அடுக்குக்கல் அணைக்கட்டு ஆகும். சுமார் 450 அடி நீளத்திற்கு கருங்கற்களை அடுக்கி வைத்துக் கட்டப்பட்ட அணைக்கட்டில் நீரைத்தேக்கி புதுக்குடியிருப்பு பிரதேச எல்லையுள் இருந்த மன்னாகண்டல் இராசதானிக்கு நீர்ப்பாசனம் வழங்கியதாக வரலாறுகள் குறிக்கின்றன. நீள்சதுரமாக 8-12 அடி நீளம் வரை பொளியப்பட்ட கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்அணைக்கட்டு சுமார் 12அடி அகலம் கொண்டது. இதுபற்றி 1895ல் வன்னிக் கைந்நூலில் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது.

"பேராறு பாயும் திசையில் இரண்டு மைல் தொலைவில் மற்றுமொரு அணைக்கட்டு உண்டு இது அடுக்குக்ல் அணைக்கட்டு என அழைக்கப்படுகின்றது. இதன் ஒரு பகுதி இயற்கையாகவும் மற்றைய பகுதி செயற்கையாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வணைக்கட்டு 150 யார் நீளத்திற்கு கட்டப்பட்டுள்ளது....."

சாதாரண மனிதரால் செய்யமுடியாத இச் செயலை தொழில் நுட்ப முனேற்றமற்ற புராதன காலத்தில் எப்படிச் செய்தார்கள் என அதிசயிக்க வைக்கும் இவ்வணைக்கட்டு பண்டைய நீர்ப்பாசன முறைக்கு இன்றும் சான்றாக அமைகின்றது.

## பண்டாரவன்னி:

கற்சிலைமடுவில் இருந்து 2**km** தென்கிழக்கே உள்ள இடம் பண்டாரவன்னி ஆகும். இங்கு கருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய தூண்கள் நாட்டப்பட்டிருக்கின்றன. இத்தூண்கள் 8அடிநீளமும் 11/2 அகலமும் கொண்டவையாக காணப்படுகின்றன. இவற்றில் பல கருங்கற்கள் தூண்கள் உடைத்து அகற்றப்பட்டுள்ளன. ஒரு தூண் மட்டும் முழுமையாக இருக்கிறது. அத்தோடு ஆங்காங்கே பல தூண் தாங்கு பீடங்களும் கருங்கல்லால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் ஒரு ஆலயம் இருந்ததாக ஊர்மக்கள் கூறுகின்றனர். ஆனால் இவ்விடத்தில் உள்ள கட்டிடங்களின் தொன்மை ஆராயப்படல் வேண்டியது அவசியம்.

## ஒதியமலை:

ஒட்டுசுட்டனில் இருந்து தென்கிழக்கே 18**km** தொலைவில் அமைந்துள்ள மலை இதுவாகும். இம் மலை புராதன சிறப்புமிக்கது, இம்மலை கால பைரவரால் காவல் செய்யப்பட்டதாக இங்குள்ள மூத்தோர் கூறுகின்றனர். சிவ, விஸ்ணு வழிபாடுகளுடன் தமிழ் பௌத்தர்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வழிபாடுகளில் ஈடுபட்டிருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இன்று இவ்விடம் இராணுவ கட்டுப்பாட்டினுள் அமைந்திருக்கின்றது.

இவைதவிர ஒட்டுசுட்டானின் பல்வேறு இடங்களிலும் புராதன சின்னங்களின் அழிபாட்டுச் சிதைவுகள் காணப்படுகின்றன. இலங்கையின் புராதன இடங்களான அனுராதபுரம், பொலனறுவை போன்று ஒட்டுசுட்டான் பிரதேசமும் புராதன பிரதேசமாக பாதுகாக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். இதற்கு சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசரமும் அவசியமும் கலந்த உடனடித் தேவையாகின்றது.

உசாத்துணை


1. குமரிக்கண்டம் முதல் சுமேரியா வரை தமிழர் வரலாறுகள் திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம் மணிமேகலை பிரசுரம் சென்னை
2. இலங்கை வேந்தன் இராவணன் - கட்டுரை பேராசிரியர் ஆ. சதாசிவம்
3. ஆய்வாளர் கவனத்தை ஈர்க்கத்தவறிய வாவெட்டிமலை இராசதானி - கட்டுரை, கலாநிதி முல்லைமணி
4. முத்து - ஜயன்கட்டுக்குளம், தட்டயமலை, ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரம் - கட்டுரை, அருணா செல்லத்துரை - முத்தெழில் 2013
5. ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் புராதன தொல்லியற்சின்னங்கள் - கட்டுரை, அருணா செல்லத்துரை - முத்தெழில் 2014






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் மகாவம்சத்திற்கு முற்பட்ட தமிழர் வரலாறுகளும், தொல்லியல் ஆய்வுகளும்.

திருமதி. தனபாக்கியம்
குணபாலசிங்கம்

தமிழர்கள் (பொதுவாகத் திராவிடர்கள்) ஆரியரைப் போல் வரலாற்றுப் பதிவுகளை கால வரிசைப்படி பதிவு செய்து பேணுவதில் அக்கறையுடையோராக இருக்கவில்லை ஆனால் ஆங்கிலேயர்கள் எப்போதும் வரலாறுகளைப் பின் நோக்கிப் பார்த்து ஆராய்வதில் அதிக ஆர்வம் உடையவர்கள். ஆதலால் தம் குடியேற்ற நாடுகளில் மக்கள் வரலாற்றினை ஆராய்வதில் மட்டுமன்றி, உலகளாவிய அளவில் மனிதனின் செயற்பாடுகளை ஆராய்ந்து வரலாறுகளைக் கட்டி எழுப்பியிருக்கின்றனர். அவர்கள் காட்டிய வழியிலேயே ஈழத்திலும் தொல்வியல் ஆய்வுகள் பல செய்யப்பட்டிருந்தன.

ஈழத்தில் செய்யப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் பெருங்கற்பண்பாட்டுச் சவக்குழிகள் திராவிடர் பூர்வீக வரலாற்றுகளைப் பதிவு செய்துள்ள களங்களாக அவதானிக்கப்பட்டுள்ளன. இவை ஈழத்தில் பல பாகங்களிலும் பரவலாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றில் புத்தள மாவட்டத்தில் உள்ள பொன்பரிப்பு சவக்குழிகளில் 12000 பேர்வரை புதைக்கப்பட்ட 8000 மட்பாண்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. தமிழரின் சவ அடக்கு முறைகளில் தாழிகளில் இறந்தோர் எலும்புகளை வைத்துப் புதைத்தல் ஒரு முக்கிய இயல்பாகும். இந்தப் பானைகள் கறுப்பு சிவப்பு நிறப் பானைகள் ஆகும். (கழுத்தில் கறுப்பும், கீழ்ப்பகுதியில் சிவப்பும் வருமாறு சாய்வாக வைத்து சுடப்டும் பானைகள்) இவை யாழ்குடாவில் கந்தரோடையில் மக்கள் வாழ்ந்த இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருற்தன. இவ்விரு களங்களினதும் காலக் கணிப்பானது கி.மு 1000 என உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆய்வாளர் "கிரகம் ஹன் கொக்கின்" கடல் ஆய்வுகளும், முடிவுகளும் மூன்றாம் சங்கப் புலவரான நக்கீரர் குறிப்பிட்ட தென்மதுரை, கபாடபுர கடல் கோள்களை உண்மையானவை என உறுதி செய்துள்ளன. இவரது காலக் கணிப்பின்படி தென்மதுரை நிலப்பரப்பு கி.மு 9600 அளவிலும் பின் கபாடபுர நிலப் பரப்பு கி.மு 5200 அளவிலும் கடலுட் தாண்டிருக்கலாம் எனத் தெரிகின்றது. இதனை விவிலிய வேதச் செய்திகளும் உறுதி செய்கின்றன. கடலில் தோணிகளில் இருந்து கதறிய முன்னோர்களை தான் பாபிலோனியாவிற்குத் கரை சேர வைத்ததாக யெகோவா, ஆபிரகாமின் பேரனான யேக்கப்பிற்கு இப் பேரலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து காப்பாற்றப்பட்டோர் பறறிக் கூறியிருப்பது ஒப்பிட்டு நோக்கத்தக்கது (ஈ.சா:14-17,16-17, 23-13)

ஈழத்துக் கிழக்கு மாகாண வரலாற்றினை தொகுத்துத்தரும் "மட்டக்களப்பு மாண்மியம்" கிழக்கு மாகாண வரலாற்றினை குபேரன் காலம் முதல் மாகோன் காலம் வரை பதிவு செய்துள்ளது. இக்காலத்தில் முன்பு நிகழ்ந்த கந்தன் படையெடுப் பற்றி கூறுகையில், வீர மகேந்திரபுரியை (ஈழத்தின் தெற்கே இருந்தது) ஆண்ட சூரபன்மனை அழிக்க ஏவிய முருகன் கை வேலானது அதிவேகமாக வருகையில் வாகூரமலையைப் பிளந்து (உகந்தை மலைக்கும் கதிரை மலைக்கும் இடையில் இருந்த மலை) நாகர்முனை, திருக்கோவில், மண்டூர், உகந்தை முதலான இடங்களில் கதிர்களைச் சிந்தியிருந்தது. அதனாலேயே இந்த இடங்களில் முருகனுக்கு ஆலயங்கள் எழுப்பப்பட்டன. இச் சூரசம்காரமானது கலியுக சகாப்த ஆரம்பத்தில் இடம் பெற்றதால் வாக்கிய பஞ்சாங்கம் இக்கலியுகத்துடன் முருகப்பெருமானை தொடர்படுத்தி இன்றுவரை 5127 வருடங்கள் கழிந்து விட்டதாக கணித்துள்ளது. (கலியுக வருட ஆரம்பம் கி.மு 3110 ஆகும்)

மேலும் மட்டக்களப்பு மாண்மியம் கந்தன் படையெடுப்பிற்குப் பின் ஈழத்தில் வாழ்ந்திருந்த நாகர்களை (அரவ வழிபாட்டினர்) குபேரன் ஆண்டிருந்தமையை

"பன்னவர்க்கு அரசனானவிருந்த முருகவேலோந்து பின்னர்
பிராணவர் முறைமை ஓங்க"

எனக் கூறும். குபேரன் முருக வழிபாட்டினை ஏற்றிருந் தமையையும் இது உறுதி செய்கின்றது. இக்காலத்தில் அரவ (பாம்பு) வழிபாட்டினராக இருந்த பூர்வீகக் குடிகள் தமிழர் ஆவர். சைவனான இராவணன் ஆட்சிக்குப் பின் ஏற்பட்ட கடல் கோளின் அழிவுகளினால் ஈழத்தின் பெரு நிலப்பரப்புகள் கடலுட் தாண்டிருந்தன. இவ்வாறு ஈழம் செழிப்பு இழந்த நிலையில் அத்தினாபுரத்தைச் சார்ந்த குருகுலநாகர் (துரியோதனன் வழிவந்தோர்) ஈழத்தை அடைந்து இயக்கரோடு இணைந்து உகந்தையை தலைநாகராக்கி ஆண்டிருந்தனர். இவ்வாறு அத்தினாபுரத்து நாகர்கள் புலம் பெயர்ந்த காலம் கி.மு 1000 வரையிலான காலப்பகுதி எனக் கருதலாம். இப் புலப்யெர்வுகள் வட இந்தியரின் நில ஆக்கிரமிப்புகளாக தொடர்ந்து நடைபெறலாயின.

குமரிக்கண்ட மக்கள் சுமேரியாவை நோக்கு கி.மு 5200இல் இடம் பெற்ற கடல் கோளின் போது புலம் பெயர்ந்தனர். காலப்போக்கில் கைவிடப்பட்டிருந்த ஏழ்பனை நாடான ஈழத்தை குபேரனும், இராவணனும் கைப்பற்றி ஆண்டனர். இராவணன் ஆட்சிக்குப் பின்னும் ஏற்பட்ட கடல்கோளினால் ஈழம் கைவிடப்பட்ட நிலையில் மீண்டும் ஈழத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி நாகர்களின் புலப் பெயர்வுகள் சாத்தியமாயிற்று.

முருகன் படையெடுப்புப் பற்றிக் கூறும் கந்தபுராணம் முற்கால சோழமன்னனான முசுகுந்த சக்கரவர்த்தியை சமகாலத்தவனாகக் கூறுகிறது. எனவே முசுகுந்தன் காலம் கி.மு 3110 எனக் கூறப்படும் கலியுக ஆரம்ப காலமெனலாம். இந்த முசுகுந்தனே சிந்து வெளியில் இருந்து தெற்கே புலம்பெயர்ந்த நாகர்களை வென்றான் என்பதனால் இவனது காலத்தின் பின் நாகர் ஆட்சிகள் பற்றிய குறிப்புக்கள் தமிழகத்தை விட்டு மறையலாயின. ஏனெனில் இவ்விரு இனங்களும் பழந்தமிழர் மரபினர் ஆதலால் காலப்போக்கில் ஒன்று கலந்து விட்டன எனலாம். இவ்வாறான நிலை ஈழத்திலும் நாகர்களுக்கும், பழந் தமிழ்க்குடிகளுக்கும் ஏற்பட்டிருந்தது எனலாம். எடுத்துக் காட்டாக மயிலாடுதுறையில் செம்பியன் கண்டியூரில் திரு.வி.சண்முகநாதன் கண்டெடுத்த புதுக் கற்கால கருவியின் எழுத்துக்கள் சிந்து வெளி எழுத்துக்கள் என்பதனாலும் இவற்றின் காலம் கி.மு2000-1500வரை ஆகலாம் எனக்கருதும் ஐராவதம் மகாதேவன் அவ் எழுத்தக்களை முருகு - அன் (முருகன்) என வாசித்துள்ளார். இவற்றின் சமூகப் பின்னணிகளை சீர்தூக்கின் ஓர் இனமக்களையே கடல்கோல், ஆரியரின் படையெடுப்பு முதலானவை தாக்கின. இதனால் ஏற்பட்ட புலப்பெயர்வுகளை குமரிக் கண்டம் முதல் சுமேரியா, சிந்துவெளி, தமிழகம், ஈழம் என முதல் சுற்று வட்டதத்தினுள்ளேயே பார்க்க முடிகின்றது.

## மகாவம்சம் கூறும் அமானுசர்:

பழந்தமிழரின் குமரிக்கண்டம் ஆபிரிக்காவில் நின்றும் பிரிந்த ஒரு பகுதி என்பதாலும், பின் ஒரு பூமி இணைப்பு ஒன்று இரு பகுதியினரையும் இணைத்தது என்பதனாலும் நீக்ரோ இனத்தொடர்புடைய மக்களாகவே இயக்கர், நாகர் இன்னமும் அவதானிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கும், அவுஸ்திரேலியா பழங்குடியினருக்கும் உள்ள இனத் தொடர்பை M130 மரபணு அடையாளப்படுத்துவதாகவும் தெரிகின்றது. அத்துடன் ஊரின் (பபிலோனியா) அகழ்வுகளில் கிடைக்கப்பெற்ற பெண்ணின் தோற்றமும் பின் சிந்துவெளியில் கிடைக்கப்பெற்ற நடனமாதின் தோற்றமும் தட்டை மூக்கு, கரியநிறப்பண்பு ஆகியவற்றையே எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன. இருக்கு வேதம் அதனாலேயே சிந்து வெளி மக்களை அநாசர் (கூரிய மூக்கு அற்றோர்) மிலேச்சர், நாசர், தஸ்யுக்கள் என அடையாளப்படுத்தியிருந்தது.

ஆனால் தொடர்ந்து இடம் பெற்ற புலப் பெயர்வுகளால் குறிப்பாக மத்திய கிழக்கு நாட்டு செமிற்றிக் இனம், மற்றும், மத்திய ஆசிய இனங்கள் ஆகியவற்றுடன் ஏற்பட்ட இனக்கலப்புகளில் உருவாகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய இனமே M20 மரபணுவைக் கொண்ட புதிய திராவிடர் என்பர். இவ்வாறு விஜயன் குழுவினரும் "ஆர்மொனெயிட்" முதலான இனத் தொடர்பு கொண்ட ஒரு புதிய இனமாகத் தோற்றம் பெற்ற பின்னரே ஈழம் வந்த பொழுது அங்கு வாழ்ந்த மக்கள் இனக்கலப்புற்ற தமிழர், நாகர் ஆகியோர் ஆவர். அதனாலேயே மகாவம்சம் இவர்களை "அமானுசர்" என்று கூறிற்று என்பது தெரிகின்றது. பின் சிங்கள இனத்துடன் கங்கைப்பிரதேச ஆரியக்குடியேற்றங்கள் கலப்புற்ற நிலையினால் தம் ஆரிய இனப்பண்பையும் வலியுறுத்தத் தொடங்கினர்.

எனவே பழந்தமிழர்கள் மனிதநேயம், தெய்வீக சிந்தனை, உயரிய சிந்தனை மிக்க நூல்களை ஆக்கக் கூடிய அறிவு, மற்றும் சமூக வளர்ச்சிச் சிந்தனை என அறிவு மிக்கோராக இருந்த போதிலும் சிறிய பொலிவற்ற தோற்றமும், கரிய நிறமும் கொண்டோராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு ஆடம்பரமற்ற பழைய பாரம்பரியங்களைப் பேணும் மக்களாகவே இருந்தனர். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் சமாதனப் பிரியர்களாகவே வாழ விரும்பினர். இந்த மனித நேயப் போக்குக்களே இவர்கள் தம் ஆட்சி அதிகாரங்கள் கையிழந்து போகக் காரணமாகிற்று.

கலாநிதி சேவியர் தனது "எழுத்து மொழியினைக் கொண்ட நாடு" எனும் நூலில் சுமேரியருடன் வாணிப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த நாகர்களே புலம் பெயர்ந்து கங்கைப்பிரதேசம், தமிழகம், ஈழம் வரையும் ஆட்சிகளை உருவாக்கினர் என்றும் இப்புலப் பெயர்வுகளினாலேயே காஞ்சிபுரம் "அருவர்நாடு" எனவும் "மாகலிங்கை" எனவும் மேலும் சேழநாட்டுப் பிரிவு ஒன்று "மிழலை" என்றும் ஈழம் "இலங்கை" என்றும் பெயர் பெற்றன என்பதை ஆராய்ந்து நிரூபிப்பதோடு நாகர் பேசிய மொழியே "எழுமொழி" என்றும் கூறுவார்.

## மகாவம்சம் கூறும் திராவிட–ஆரிய இன மரபு:

வங்கத்தில் இருந்து நாடு கடத்தப்பட்ட விஜயனும் எழுநூறு தோழர்களும் ஈழத்தில் தஞ்சமடைந்தபொழுது குவேனி எனும் இயக்ககுலப் பெண் அவர்களுக்கு அடைக்கலம் அளித்தவகையில் அவள் மேல் காதல் மலர விஜயன் குவேனியை மணம்செய்கின்றான். இதனால் விஜயனுக்கு இரு பிள்ளைகளும் இருந்தனர். பின்நாளில் இயக்கரோடு இணைந்து ஆண்டிருந்த காலசேன மன்னனை சூழ்ச்சி செய்து விஜயன் கொன்று அரசியலைக் கைப்பற்றிய நிலையில் பட்டத்து இளவரசி தகுதி உடையோரை நாடவேண்டியிருந்தது. அப்போது உள்ளூரில் தமிழ் சிற்றரசுகளின் ஆட்சியும், கரையோரப் பகுதிகளில் நாகர் ஆட்சியும் நிலை பெற்றிருந்தன. பட்டத்து இளவரசியை விஜயன் மதுரை பாண்டிய அரசனிடம் நாடிய பொழுது அப்பாண்டிய அரசும் இளவரசி ஒருத்தியையும், அவளுக்கு வேண்டிய பரிவாரங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு அனுப்பியிருந்தது.

பாண்டியரோ குமரிக்கண்ட கடல்கோள் அழிவுகளின் பின் வடமதுரையில் புலம்பெயர்ந்து வாழ்ந்த பழந்தமிழ் குடியினராவர். இவ்வாறு தமிழ்க் குடிகளின் திருமணத் தொடர்பினால் M20 மரபனு சிங்களவரிடையே கலக்கலாயிற்று. நாகர்களும் தமிழ்க்குடி மரபினரே. இவர்கள் சிந்துவெளிக்கு ஆரியர் வருகை தந்த காலம் முதலாக இந்தியாவின் பல பாகங்களிலும் பரவியதோடு., ஈழத்திலும் தமது ஆட்சியை நிறுவியிருந்தனர். இயக்கர் மொங்கோலிய இனத்தவர். ஆயினும், அவர்களும் தமிழ் இனக் கலப்புடையவராகவே உருவாகியிருந்தனர் என்பதும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது. இராவணனுடைய வரலாறு இதற்கு சிறந்த சான்று எனலாம்.

விஜயன் வரலாற்றின் இரண்டாம் கட்ட வளர்ச்சி சிங்கள வரலாற்றில் மிக முக்கியமான ஒன்று ஆகும். நாடு கடத்தப்பட்ட விஜயன் வேறு ஒரு நாட்டின் அரசன் ஆகிவிட்ட நிலையில் இது வங்கத்தில் ஒரு பெருமை மிக்க எழுச்சியை ஏற்படுத்திற்று. விஜயனும் தனது புதிய அரசியற் தலமைகளைப் பயன்படுத்திக் கொண்டு தனக்குப் பின் வாரிசு இல்லாததால் தம்பியின் மகனான பண்டுவாசுதேவனை ஆட்சியை ஏற்கும்படி அழைத்தான். இப்புதிய நகர்வானது உள்நாட்டு மக்கள் அறிந்து கொள்ளாதவாறு அமைந்தது. முதலில் பண்டுவாசுதேவனும், அவனது குழுவினரும் பின்னர் இவனைத் திருமணம் செய்ய வந்த சாக்கிய வம்சத்துப் புத்தகச்சனாவும், பரிவாரங்களும், பௌத்தபிக்கு, பிக்குணி வடிவம் தாங்கி கோணாகமத்துறையில் (திருகோணமலை) வந்து இறங்கினர். இவர்களது வருகையைத் தொடர்ந்து வேறு பல வங்க தேசத்வரும் இலங்கையிற் குடியேறினர். ஆனால் இக்காலத்தில் கலிங்கம், வங்கம் எனும் நாடுகள் ஆரிய இனக்கலப்பிற்குரிய களங்கள் ஆகவில்லை. ஆயினும் வியாபார நடவடிக்கைகளுக்காக வங்க நாட்டினரும், மத்திய கிழக்கு நாட்டினரும் ஆற்றுப்பாதைகளூடாக பயணம் செய்தனர். இத்தகைய போக்குவரத்துக்களினால் அல்பைன் (**Alphine)** தினாரிக் (**Dinaric**) ஆர்அமயினட் (**Armenod**) முதலிய இனக்கலப்பு பிற்காலம் வங்கம், கலிங்கம், குசராட் முதலிய பகுதிகளில் இடம் பெற்றதாக ஆய்வாளர் கருதுவர்.

இக்காலத்தில் இந்தியாவின் கங்கைப் பிரதேசம் வரையே ஆரியர் முதலில் நகர்ந்திருந்தனர். கி.மு 6ம் நூற்றாண்டு அளவில் ஆரியர் பரவுகை கங்கைப் பிரதேசம், மதகம் வரை எல்லையிடப்பட்டு "ஆரியாண்டம்" அல்லது "ஆரியார்வத்த" என அழைக்கப்படலாயிற்று. இக்காலத்தினைத் தொடர்ந்து பௌத்த மத வருகையுடன் கங்கைப் பிரதேச குடியேற்றங்கள் பல இடம்பெற்றதாக மகாவம்சம் கூறுகின்றது. எனவே இன்று சிங்களவரிடையே 10 வீதம் அளவிலே காணப்படும். ஆரிய மரபணுவான M17 இக்காலத்திலே கலப்புற்றதாகக் கருதலாம். அதனாலேதான் சிங்கள இனம் இன்று தம்மை "ஆரிய இனம்" என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளப்படுத்துகின்றது.

மூன்றாவது கட்ட வளர்ச்சியில் தமிழர் ஆட்சிக் காலங்களை சிங்கள அரசு போரிட்டுப் பெற்றுக் கொண்டதுடன், அப்பகுதிகளில் தமிழ்க் குடிகளைச் சிங்களமயப்படுத்திய வரலாறுகளையும் மகாவம்சம், சூலவம்சம் ஆகிய நூல்கள் பதிவு செய்துள்ளன. தேவநம்பிதீசன் ஆட்சிக் காலத்தில் (கி.மு 247-207) இவனது தம்பியான மகாநாகன் மாகாமையில் (திஸ்ஸமகாராம) இன்னோர் சிங்கள அரசினை உருவாக்கிக் கொண்டு கதிர்காமம், சந்தனகாமம் (கல்லோயா) எனும் பகுதிகளை ஆண்டு கொண்டிருந்த பாண்டிய சிற்றரசுகளை அழித்து அவர் தம் ஆட்சி நிலப்பரப்பினைத் தனதாக்கிக் கொண்டான். இவன் இக்கொலைகளுக்குப் பாவம் தீர்க்கும் வகையில் 50 விகாரைகளைக் கட்டுவித்தான் எனத் “தாது வம்சம்” குறிப்பிடுகின்றது. இச் செய்தியை “போவத்கல” கல் வெட்டும் உறுதி செய்கிறது.

உண்மையில் மனித நேயம் மிக்க கதிர்காமத்து, சந்தனகாமத்து சிற்றரசுகள் தேவநம்பியதீசனின் அழைப்பின் பேரில் அனுராதபுரத்தில் இடம் பெற்ற புனித அரசமரக்கிளை நாட்டு விழாவில் கலந்து கொண்டதோடு தம் தமிழ் மக்களிடையேயும் பௌத்தத்தை அறிமுகம் செய்திருந்தனர். ஆனால் பின்வந்தோரை வாழவைத்த இம்மன்னரும், குடிகளும் அழிக்கப்பட்டமை ஒரு கறை படிந்த வரலாறு ஆகும். இவ்வேளை தழிழகத் தலையீடுகள் ஏற்படலாயின. சேனன், குட்டன் எனும் குதிரை வியாபாரிகள் அனுராதபுரத்தில் ஆட்சியில் இருந்த சூரத்தீசனை வென்று 22 வருடங்கள் ஆண்டனர் என்றும் பின் அசேலனை வென்று எல்லாளன் 44 ஆண்டுகள் ஈழம் முழுவதையும் நீதியாக ஆண்டதாக மகாவம்சம் கூறுகின்றது.

கதிர்காமத்து அரசுகளை கொலை செய்த கோத்தபாயன் பரம்பரையில் வந்த துட்டகைமுனு (கி.மு. 101-77) முழு ஈழத்தையும் ஆளும் ஆசையில் கதிர்காமத்தில் இருந்து படை நடத்தி அனுராதபுரத்தை நோக்கி வருகையில் மகாவலிக் கங்கைப் பகுதிகளை ஆண்ட 32 தமிழ் சிற்றரசுகளையும் வெற்றி கொண்டு முன்னேறினான். இதேவேளை தென்னிலங்கைக் கரையோரங்களில் வாழ்ந்த சேர நாட்டுக் குடிகளும் சிங்களமயமாக்கப்பட்டனர். விஜயன், கோதாபயன், துட்டகைமுனு ஆகிய மூவரும் கையாண்ட ஆக்கிரமிப்புப் பொறிமுறைகளால் அனுராதபுரம் முதல் தென்னிலங்கை வரை வாழ்ந்திருந்த தமிழ்க்குடிகள் அனைவரும் சிங்கள மயமாயினர். என்பதை மகாவம்சமே கூறிக்காட்டுகின்றது. அதனால் சிங்களவரிடையே பெருமளவில் அவதானிக்கப்பட்ட M 20 மரபணுக்களுக்கு இத்தமிழர்களே காரணம் ஆவார். எனவே மரபனுக்களும் எம் ரேகைகள் போல சில பூர்வீகக் கதைகளையே கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நியர் எதிர்ப்பியக்கத் தலைவன் கயிலை வன்னியனார்

சாகித்தியரத்னா கலாநிதி முல்லைமணி

வடஇலங்கை வரலாற்றில் வன்னியர் என்னும் குறுநில மன்னர்கள் குறிப்பிடத்தக்க பங்கை வகித்துள்ளனர். யாழ்ப்பாண இராச்சியம் தோன்றுவதற்கு முன்பே வட இலங்கையில் வன்னிச் சிற்றரசுகள் இருந்திருக்கின்றன. வன்னிப் பிரதேசம் மிகவும் பழமைவாய்ந்த வரலாறுள்ள பிரதேசம். கிறிஸ்துவுக்கு முன்பே இங்கே சிற்றரசுகள் தோன்றி இருந்தன. வன்னியர்கள் இப்பிரதேசத்தை ஆளத் தொடங்கிய பின்பே “வன்னிநாடு” என அழைக்கப்பட்டது.

இலங்கையில் தமிழ், சிங்களப் பிரதேசங்களில் வன்னிமை என அழைக்கப்பட்ட குறுநில அரசுகள் காணப்பட்டன. அடங்காப்பற்று, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய தமிழ்ப்பிரதேசத்தில் வன்னிமைகள் இருந்தமைக்குச் சான்றுண்டு. எனினும் இன்று அடங்காப்பற்றே வன்னி என்னும் பெயருக்கு உரிமை பூண்டு நிற்கிறது. செட்டிகுளம், பனங்காமம், மேற்பற்று, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, கருநாவல்பற்று, தென்னன்மரத்தடி என்னும் ஏழுவன்னிமைகளை உள்ளடக்கியதாக அடங்காப்பற்று திகழ்கிறது.

அடங்காப்பற்றின் ஏறக்குறைய அரைவாசிப் பிரதேசம் பனங்காம வன்னிமையாக இருந்தது. வன்னிமைகள் அனைத்திலும் பனங்காமமே கீர்த்தியும் வலியும் வளமும் பொருந்தியதாக விளங்கியது. ஆரியச் சக்கரவர்த்திகளும், பின்வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரும் வன்னியர்கள் தமக்குத் திறை செலுத்த வேண்டும் என நிர்ப்பந்தித்தனர். யாழ்ப்பாண அரசின் ஒருபகுதியாகவே வன்னிநாடும் கருதப்பட்டது. ஆனால் நடைமுறையில் வன்னியர்கள் யாழ்ப்பாண ஆட்சியாளர்களின் மேலான்மையை ஏற்றுத் திறை செலுத்தியதாகத் தெரியவில்லை. கடுமையாக வற்புறுத்திய போது ஒரு சில வன்னியர்கள் மட்டும் இடைக்கிடை திறை செலுத்தினர். வன்னியர்கள் பெரும்பாலும் சுதந்திர அரசர்களாகவே திகழ்ந்தனர். வன்னியின் உள்ளூர் நிர்வாகம் முழுவதும் இவர்களிடமேயே இருந்தது. முதலியார், கங்காணி, பண்டாரப்பிள்ளை, தலையாரி, அடப்பனார், மொத்தக்கர் என்னும் எல்லா அதிகாரிகளையும் வன்னியரே நியமித்தனர். அத்துடன் வன்னி நாடுகளிலுள்ள வாரம், தீர்வை, காணிக்கடன், ஆள்வரி முதலிய எல்லா வரிகளையும் வன்னித் தலைவர்களே பெற்றனர். படைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தனார். வெண்கொற்றக் குடை, சாமரம், ஆசனம் ஆகியவற்றைத் தம் பதவிச் சின்னங்களாகக் கொண்டனர்.

அந்தியர் எதிர்ப்பு எனவரும்போது பனங்காம வன்னியரின் தலைமையில் ஏனைய வன்னியர் ஒன்றுபட்டனர். எல்லா வன்னித் தலைவர்களும் ஒருவருக்கொருவர் உறவுமுறை உடையோராகத் திகழ்ந்தனர். பனங்காம வன்னிமையில் வலிமையும் வீரமும் மிக்க பல தலைவர்கள் அரசோச்சினர். கயிலை வன்னியன், மரியா செம்பாத்தை என அழைக்கப்பட்ட நல்லநாச்சியார், நல்லமாப்பாணவன்னியன், இலங்கை நராயண வன்னியன் போன்ற பலர் பனங்காமம் பற்றுக்கு அதிபதிகளாக இருந்தனர்.

இவர்களுள் கயிலைவன்னியனே ஏனையோரைவிட வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறான். கயிலைப்பிள்ளை வன்னியன் என்பதே இவனது முழுப்பெயராகும். சுருக்கமாகக் கயிலை வன்னியன் எனவும் கயிலாய வன்னியன் என்றும் இவனை அழைப்பர். இவனைப்பற்றிய சில தகவல்களை கயிலாய வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டயத்தில் இருந்தும், ஒல்லாந்தரின் ஆவணங்களிலிருந்தும் பெறக் கூடியதாக இருக்கிறது.

"......... சுபதினத்திலே சிதம்பரம் பரராச சேகரமகாராசாவின் கட்டளை நடத்தும் சூரியமூர்த்தித் தம்பிரான் அவர்களுக்கு பனங்காமத்து வன்னிபம் நிச்சய சேனாதிராய முதலியார் அவர்களும், கரிக்கட்டு மூலைப்பத்து, தென்னமரவடிப்பத்து வன்னிபம் புவிநல்ல மாப்பாண வன்னியனார் அவர்களும், புண்ணியப்பிள்ளை வன்னியனார் அவர்களும், மேல்பத்து வன்னிபம் ரணசூர ரணதீரராக வன்னியனார் வன்னியனாரவர்களும், மூத்தர் வன்னியனாராவர்களும், மேல்பத்து முள்ளியவளை வன்னிபம் இலங்கை நாராயண முதலியார் அவர்களும், மயிலாத்தை உடையார் அவர்களும் இவர்களைச் சேர்ந்த குடியானவர்களும் தங்கள் கயிலைப்பிள்ளை வன்னியனார் அவர்கள் மடதர்மத்துக்குத் தர்ம சாதனப்பட்டையம் குடுத்தபடி கமத்துக்கு மூன்று மரக்கால் நெல்லு மடதர்மத்துக்குத் சந்திராதித்ய வரைக்கும்...... குடுத்துவரக் கடவேமாகவும்....."

லேலே குறிப்பிட்ட கயிலை வன்னியனார் மடதர்மசாதனப் பட்டையத்தை உற்று நோக்குகையில் கயிலைவன்னியனார் பெருமளவு அதிகாரமுடையவராய் இருந்திருக்கிறார் என அறிய முடிகின்றது. சாசனத்தில் குறிப்பிடப்படும் கரிக்கட்டு மூலை, தென்னமரவடி, மேற்பற்று, முள்ளியவளை, பச்சிலைப்பள்ளி வன்னியர்கள் இவரைத் தங்கள் கயிலைப்பிள்ளை வன்னியர்கள் என விழித்துக் கொள்வதிலிருந்து இவருக்கு ஏனைய வன்னியர்கள் கட்டுப்பட்டவர்களாக இருந்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மேலே குறிப்பிட்ட வன்னிமைகளில் அதிகாரிகளில் கயிலை வன்னியனார் தவிர ஏனையோரின் பெயர்களுக்கு முன் தொன்பிலிப், தொன்கஸ்பார், தொன்தியோகோ, தொன் அந்தோனி என்னும் கத்தோலிக்கப் பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளன. எனினும் இவர்கள் பெயரளவிற்கே கத்தோலிக்கராக இருந்தனர். மறைமுகமாகச் சைவசமயத்தையே கடைப்பிடித்தனர். சைவசமயத்தினரின் புனித ஸ்தலமான சிதம்பரத்திற்குத் தானம் வழங்கியதிலிருந்தும் இதனை ஊகிக்கலாம்.

கயிலைவன்னியனார் பரராசசேகர மகாராசாவின் சிதம்பர மடத்திற்குச் சில நிவந்தங்கள் விட்டிருந்தார். யாழ்ப்பாண மன்னர்குலம் அழிவுற்ற பின்னரும் வன்னிக் குறுநிலமன்னர் சிதம்பரத்திலுள்ள மடத்தை ஆதரித்துவந்தனர். வன்னியர் சிதம்பரத்தைக் கயிலையாகவே கருதினர். பட்டையத்திலே "பூலோக கயிலாயமாகிய சிதம்பரத்திலே" என்னும் தொடர் வருகிறது.

திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் கயிலாசங்கள் அழிநிலையில் இருந்தமையாலேயே பூலோக கயிலாயம் என அழைக்கும் மரபு தோன்றியது. 4 கயிலை வன்னியனார் என்னும் பெயரும் சிதம்பரத்துடன் தொடர்புடையதாக விளங்குவதை அவதானிக்கலாம்.

இலங்கையில் போர்த்துகேயர் ஆட்சியின் பிற்பகுதியிலும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் முற்பகுதியிலும் கயிலைவன்னியனார். (1644- 1678) பனங்காமத்தில் ஆட்சி புரிந்திருக்கிறார் என ஒல்லாந்தரின் குறிப்பிலிருந்து தெரியவருகிறது. இதனை ஆராய்ந்த பேராசிரியர் சி.அரசரத்தினம் பின்வருமாறு கூறுகின்றார்.

"1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் படையெடுத்த போது கயிலை வன்னியன் என்பவனே மிகக் கூடிய அதிகாரம் உடையவனாய் இருந்தான். வன்னி மாகாணங்களில் செல்வ வளமுடையதும் மிகப் பெரியதுமான பனங்காமம் பற்றுக்கு இவன் பொறுப்பாக இருந்தான். சமகாலத்தைச் சேர்ந்த ஐரோப்பியர் சிலர் கயிலை வன்னியனைப்பற்றிக் குறிப்பிடும் போது அவனை ஒரு இளவரசன் எனக் கூறியுள்ளனர்."

மத்திய அதிகாரத்தைப் பொறுத்து இவன் அதனுடன் கொண்ட தொடர்பும் அவன் மத்திய அதிகாரம் பற்றிக் கொண்டிருந்த கருத்தும் இவன் தான் ஒரு இளவரசன் என்ற நிலைக்கு எந்த விதத்திலும் குறைந்தவன் என நினைக்கவில்லை என்பதனைக் காட்டுகின்றன. போர்த்துகேய ஒல்லாந்த ஆட்சிக் காலங்களில் இவனை யாழ்ப்பாணக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைக்கு வரவழைக்கும் அவர்களது கட்டளையைப் புறக்கணித்தான். ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிலும் பார்க்க தங்கள் அதிகாரங்களை நிலை நாட்டுவதில் அக்கறையுடையவர்களாய் இருந்தனர்.

ஆரம்பத்திலிருந்தே இவர்கள் கயிலைவன்னியனது அதிகாரத்தை அவன் தங்களில் தங்கியிருக்குமளவிற்குக் குறைக்க வேண்டும் என்ற நோக்கங் கொண்டிருந்தார்கள். குறிப்பாக ஒல்லாந்தர் வன்னியர் தங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன்களை, நிலவரிகளை ஒழுங்காகவும் தாமதமின்றியும் பெற்றுக் கொள்வதில் அக்கறை உடையோராய் இருந்தனர்.

ஒல்லாந்தர் மேற்கொண்ட ஆரம்ப நடவடிக்கைகள் கயிலை வன்னியனுடன் அவர்களை முரண்படச் செய்தன. ஒல்லாந்தருக்கு எதிராக எதிர்ப்பியக்கத்துக்குக் கயிலைவன்னியன் தலைமைதாங்கினான். ஏனைய வன்னியர்கள் ஒல்லாந்தரின் கட்டளைக்கு அடிப்பணிந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்றாலும், கயிலைவன்னியன் ஒருவனே அவ்வாறு கீழ்படிந்து செல்லாது விட்டான். ஒல்லாந்தர் கயிலைவன்னியனைக் கைப்பற்றுவதற்குப் பெரிதும் விரும்பியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அந்த நேரத்தில் வன்னிக்குப் படையனுப்ப முடியாதவர்களாக இருந்தனர்.

இதனால் சிலகாலத்துக்குக் கயிலை வன்னியனுடன் இராசதந்திர நட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்தார்கள். டச்சுக் கவர்ணரான தோமஸ் வான்றீ (1692 - 1697) பின்வருமாறு எழுதுகிறார். “வன்னி ஆட்சியாளர்கள் ஒருகாலைக் கொம்பனியாரின் மண்ணிலும் மற்றையதைக் கண்டி அரசனின் பிரதேசத்திலும் வைதிருக்கின்றார்கள். போர்த்துக்கேயருக்குப் போலவே ஒல்லாந்தருக்கும் அவர்களின் நடவடிக்கைகள் சினமூட்டுவனாவாக இருக்கின்றன. வன்னி தலைவர்கள் வருடாந்தத்திறையான யானைகளையும், நிலவரிகளையும் ஒழுங்காகச் செலுத்துவதில்லை. கவர்ணர்களால் அழைக்கப்பட்ட போதும் வருடந் தோறும் நடைபெறும் தர்பாருக்கு சமூகமளிப்பதில்லை. விசேடமாகப் பனக்காமத்துக் கயிலை வன்னியன் தொடர்ச்சியாக பன்னிரண்டு ஆண்டுகள் டச்சுக் கவர்ணர் முன் சமூகமளிக்கவில்லை.”

1661 ஆம் ஆண்டு ஜீலைமாதம் இருபத்தாறாம் திகதி தேசாதிபதி றைக்லொவ் வான்கூன்ஸ் எழுதிய குறிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

“வன்னியர்களைப் பொறுத்தமட்டடில் அவர்களைத் தங்களுக்கு கீழ்படியச் செய்வதில் போர்த்துக்கேயர் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கினார்கள். போர்த்துக்கேயர் வன்னியர்களை ஒருபோதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவர முடியவில்லை. வன்னியர்களை தங்கள் முன் அழைப்பதற்கு கட்டளை அனுப்பினாலும் வன்னியர் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. இவ்வண்ணம் கயிலைவன்னியன் பன்னிரண்டு அல்லது பதினான்கு வருடம் யாழ்ப்பாணம் வரவில்லை."

கயிலை வன்னியன் கண்டியரசன் இரண்டாம் இராசசிங்கனின் (1635 - 1687) நண்பனாகவும் ஆதரவாளனாகவும் இருந்தான். கண்டிமன்னனுக்கும் கயிலை வன்னியனுக்குமிடையே கடிததத் தொடர்பு இருந்தது. இருவரும் பரஸ்பரம் நட்புறவை வளர்த்துக் கொண்டனர். கண்டி அரசன் 1675 இல் ஒல்லாந்தருக்கு எதிராகப் படையெடுத்தபோது இப்படைக்கு வழிகாட்டியாகக் கயிலைவன்னியன் திகழ்ந்தான். இப்படை ஒல்லாந்தரின் இரண்டு கோட்டைகளைக் கைப்பற்றியது.

கயிலைவன்னியன் கண்டியரசன் நட்புறவுக்குக் காரணம் அவன் வன்னித் தலைவர்களது ஈடிணையற்ற வன்னித்தலைவனாக இருந்ததாலேயாகும்.

ஒல்லாந்த பிரதேசங்களிலிருந்து வன்னியுள் நுழைந்து கொள்ளும் குற்றவாளிகளையும், கொலையாளிகளையும் அடிமைகளையும் கைது செய்து ஒல்லாந்த அதிகாரிகளிடம் வன்னியர்கள் ஒப்படைக்க வேண்டும். அடிமையொருவனைக் கைப்பற்றி அவனது எசமானிடத்து ஒப்படைக்குமிடத்து வன்னியர்களுக்கு இரண்டு இறைசால் கொடுக்கப்படும். இக்கடமையில் தவறின் வன்னியர் தமது கவனக் குறைவிற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு டச்சு நிர்வாகத்துக்கு ஐம்பது இறைசால் தண்டனப்பணம் செலுத்த வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது. எனினும் கயிலை வன்னியன் இதனை என்றுமே அநுசரித்ததில்லை.

தேசாதிபதியின் மகனான இளைய வான்கூன்ஸ் 1971 இல் பாணமை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியபின் தனது படையுடன் முல்லைத்தீவில் இறங்கி அங்கிருந்து வன்னியர்கள் அங்கு சென்று சமாதனம் செய்து கொண்டனர். ஆனால் கயிலைவன்னியன் மட்டும் செல்லவில்லை.

இங்ஙனம் ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டு காலம் வன்னியின் சுதந்திரத்தைக் கட்டிக்காத்து ஆட்சிபுரிந்த தன்னிகரில்லாத் தலைவன் 1678 இல் மரணத்தைத் தழுவிக் கொண்டன்.

கயிலை வன்னியனுக்கு ஏற்பட்ட மரணம் ஒரு அடங்காத்தனமான அதிகாரமுள்ள ஒரு வன்னிப்பெருந்தலைவனை - வன்னிப்படைகளை ஒன்று திரட்டி அந்நியரை எதிர்த்த ஒருவனை - வன்னி நாடு இழக்கச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தது.

"பத்தேவியா டாக்" பதிவேடு தரும் தகவலின்படி கயிலை வன்னியனாரின் மரணத்தைத் தொடர்ந்து அவரின் பேரன் முறையான காசியனார் டச்சு நிர்வாகத்தின் எவ்வித தலையீடுமின்றி ஆட்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அடிக்குறிப்பு

1. கலாநிதி சி.பத்மநாதன் வன்னியர் 1970
2. கலாநிதி சி.பத்மநாதன் மு.கு
3. செ.குணசிங்கம் கள்ளியங்காட்டுச் செப்பேடுகள் 1970
4. கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை - பண்டிதமணி நினைவுப் பேருரை
5. Prof.S.Arasaratnam - Vanniyas of North Ceylon
6. C.S.Navaratnam - Vanni and the Vanniyas 1969
7. Instruction From the Govenor General and Council of India to the Governor of Celon
8. S.Thommanuppillai, Atue Patriot and Freedom Fighter Fourth international Conferrence Seminar of Tamil Studies 1974
9. Robert Knox (Junior) Historical Relation of Ceylon.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “வளங்கொழிக்கும் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளின் மக்களும் பண்பாடும்”

கலாபூசணம் சி.தெய்வேந்திரம்பிள்ளை
(குமுளமருதன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வடகிழக்கின் எல்லைப் பிரதேசமாக அமைந்துள்ள பெரிய இத்திமடு, தண்டுவான், பழம்பாசி, பெரியகுளம், ஒதியமலை ஆகிய கிராமங்களின் வளங்கள் பற்றியும், மக்கள் பண்பாடு பற்றியும் நானறிந்தவரை பதிவு செய்கிறேன். பெரிய இத்திமடு தவிர்ந்த ஏனைய நான்கு கிராமசேவகர் பிரிவுகளிலும் பயிர்ச்செய்கை உத்தி யோகத்தராகவும், கிராமசேவை அலுவலாகராகவும் 1984ம் ஆண்டு தொடக்கம் 2010ம் ஆண்டு வரை பணியாற்றிய எனது அனுபவத்தின் திரட்சியாக இது அமையும்.

எனது பதவிக்காலம் முழுவதுமே குமுழமுனை, கொக்கிளாய், மேற்கூறிய நான்கு பிரிவுகளிலே தான் திகழ்ந்தன. பலரும் பணிசெய்யப் பயந்த அக்காலத்தில் நாட்டுப்பற்றுக் காரணமாக வலிகள் நிறைந்த இப்பிரதேசங்களில் மனவுறுதியேடு நான் செய்த இப்பணிகூட மாபெரும் போராட்டமாகவே அமைந்தது எனலாம். கர்ண பரம்பரைக்கதைகள், செவிவழிச் செய்திகள் மூலம் இவ்விடங்களில் நான் பெற்ற தகவல்களை இங்கு சுருக்கமாகவே குறிப்பிடுகின்றேன்.

மேலே குறிப்பிட்ட ஐந்து பிரிவுகளும் முன்பு வவுனியா மாவட்டமாகவும், பின்பு முல்லைத்தீவு மாவட்டமாகவும் பிரிக்கப்பட்டவை ஆகும். 1990ம் ஆண்டு ஒட்டுசுட்டான் பிரதேசச் செயலகம் ஆரம்பிக்கப்பட்ட பின் இவை ஒட்டுசுட்டான் பிரதேசச் செயலகத்தோடு இணைக்கப்பட்டன. அதுவரை காரைதுறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவும், மறுபுறம் வவுனியா வடக்கு பிரதேசசெயலர் பிரிவும் எல்லைகளாக அமைந்திட, வேறொருபுரம் “வெலியோயா” திட்டம் எல்லையாக விளங்கும். இங்குள்ள மக்களை நெடுங்கோணி பிரதேசசெயலர் பிரிவோடு இணைப்பதே முறையாகும். அரசியல் காரணங்களால் ஒதுக்கப்பட்ட இவர்கள், தொடர்ந்தும் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே இருந்திட முடிவெடுத்தமை வேடிக்கையானதே.

போக்குவரத்து, சுகாதாரம், வர்த்தகம், கல்வி போன்ற விடயங்களுக்கு நெடுங்கேணியை மையமாகக் கொண்ட இவர்கள் நிர்வாக ரீதியாக முல்லைத்தீவு கச்சேரி. ஒட்டுசுட்டான் பிரதேசச் செயலகம், ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையம், புதுக்குடியிருப்புப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சபை எனும் நிர்வாக மையங்களையே நாடவேண்டியுள்ளது. காலை ஏழு மணிக்கு ஒரு பஸ், முல்லைத்தீவிலிருந்து வவுனியா செல்கிறது. மாலை மூன்று மணிக்கு ஒரு பஸ் வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு செல்கிறது. மற்றும்படி இவர்கள் நடையாகவும், துவிச்சக்கர வண்டிகளிலுமே பயணம் செய்து வருகின்றனர். நிர்வாகத் தேவைகளுக்காக நீண்டதூரம் பயணம் செய்யும் இவர்கள் பெருமளவு மனிதவலுவையும், பணத்தையும் நாளாந்தம் இழந்து வருகின்றனர்.

குளங்களும், ஆறுகளும், சிறுசிறு குன்றுகளும், பெரும் வனப்பிரதேசங்களும், பெருமளவு நெற்காணிகளும், மேட்டுப்பயிர்க் காணிகளும், எருமை பசுமாடுகளும், நிறைந்துள்ள இக்கிராமங்களில் வறியவர்கள் என எவரும் இல்லை. சலியாத உழைப்பும், விருந்தோம்பல் பண்பும், பிறரை, பெரியோரை மதிக்கும் பண்பும் நிறைந்த மிகவும் நல்ல மனிதர்களை இங்கு காணலாம். வன்னியின் வழமையான பண்பாட்டினை இன்றும் வழுவாது கடைப்பிடிக்கும் இவர்களை, வன்னியிலுள்ள ஏனைய பிரதேசத்தவர்கள் "வன்னியர்" என்று வர்ணிப்பதை இன்றுங்காணலாம். வன்னிக்குள் வன்னியான இங்குள்ள மக்களின் பண்பாடானது கோவிலையும், குளத்தையும் மையமாக கொண்டது.

பாமர மக்களை அதிகமாகக் கொண்ட இப்பிரதேசத்தில் கற்றவர் தொகை குறைவாகக் காணப்படினும் கள்ளங்கபடமற்ற வெள்ளையுள்ளங் கொண்டோராக வழ்ந்து வருகின்றனர். இதனால் எளிதில் ஏமாந்து போகும் தன்மையுள்ளவர்களாய், எல்லோரையும் நம்பி வாழ்ந்து வந்தனர். இதனால் போலும் "வன்னி" என்று ஏனையோர் அழைக்கத்லைப் பட்டிருக்கலாம். இது அக்கால நிலை. ஏமாற்றங்கள் பலகண்ட இவர்கள் இப்போது கல்வியில் சாதனை படைக்கும் புதிய பரம்பரையாக மாறத் தொடங்கியுள்ளனர். "வன்னி" என்ற சொல்லை இழிவாகக் கருதிடும் காலம் மெல்ல மெல்ல மறைந்து வருகிறது. எழுத்தாளர், கவிஞர், ஆய்வாளர்கள், அரசியல்வாதிகள், எல்லோருமே வன்னியில் வெற்றி கண்டுள்ளனர் எனலாம்.

பெரிய இத்திமரங்கள் நின்றிருந்த குளமொன்றினால் பெரிய இத்திமடு என அழைக்கப்பட்ட இப்பிரிவு பெரிய இத்திமடு, சின்ன இத்திமடு, அலைக்கரை, தட்டாமலை ஆகிய கிராமங்களோடு கோடாலிக்கல்லு வயல்கிராமத்தையும் உள்ளடக்கியதாகும். பல சிறிய, பெரிய குளங்களை உள்ளடக்கிய இப்பிரதேசம் பெருமளவு வனப்பிரதேசங்களைத் தன்னகத்தே கொண்டதாகும். இருபதுக்கும் மேற்பட்ட குளங்களைக் கொண்டதாகும். இலங்கையில் புகழ்பூத்த பண்டைய நாகதம்பிரான் ஆலயம் இங்குள்ளது. மேலும் வன்னிவளநாட்டார் பாடல்களில் வரும் "ஐயனார்சிந்தில்" போற்றப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடாலிக்கல் ஐயன், செம்பெடுத்தகுளம் ஐயனார் ஆலயங்கள் பிரசித்தமானவை.

தண்டுவான் பிரிவில் தண்டுவான் பண்டாரக்குளம், கிருஸ்ணநகர் போன்ற கிராமங்கள் காணப்படுகின்றன. பண்டைக்கால மக்கள் கால்நடையாகவோ, கட்டை வண்டியிலோ தான் பயணஞ்செய்தனர். முல்லைத்தீவிலிருந்து வவுனியா சென்ற இப்பயணிகளுக்குத் தங்கிச் செல்லும் பிரதான தரிப்பிடமாகத் தண்டுவான் கிராமம் விளங்கியது. செல்வச்செழிப்பில் ஏனைய பிரிவுகளைவிட உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. மேற்கூறியவாறு தங்கிச் செல்பவர்களுக்கு இலவசமாக உணவளித்த இவர்கள் கொடைவள்ளல்கள். இதனால் "தங்குவான்" என்று பெயர் மருவி தண்டுவான் என்றாகியுள்ளது.

தண்டுவானில் பெரிய விநாயகர் ஆலயம், புளியங்குளம் விநாயகர் ஆலயம் என்பனவும், கோணமடுப் பிள்ளையார், முத்துமாரியம்மன் (பாவற்குளம்) ஆலயங்களும் வரலாற்றுச் சிறப்புடையன. பிரித்தானிய அரசின் காலத்தில் நீதிமன்றத்தினரால் குற்றவாளிகள் சத்தியம் செய்வதற்குச் சிபாரிசு செய்யப்பட்ட ஆலயம் கோணமடுப்பிள்ளையார் ஆலயமாகும். அடர்ந்த காட்டில் காணப்படும் பெரிய கோணமடுக்குளக்கட்டில் இவ்வாலயம் அமைந்துள்ளது. மேலும் இதன் முன்புறம் கோணமடுவும், பின்புறம் வெளிக்கோணமடு என்னும் குளமும் காணப்படுவதோடு கரையா ஒதியமலை வயல் வெளியும் அழிவுற்ற நிலையில் வீமன்காமம் கிராமமும் காணப்படுகின்றன. 1948ம் ஆண்டில் அமரர்.வீ.சிங்காரவேலு (பிரதேசச் செயலாளர் கரைத்துறைப்பற்று) அவர்களால் உருவாக்கப்பட்ட "கிருஸ்ணநகர்" (A.F-C பாம்) சர்வோதய திட்டமாகும். தலா அரை ஏக்கர் வீதம் முப்பது போருக்கு காணியும், வீடும் கொடுக்கப்பட்டது வன்செயல் காரணமாக மேற்படி திட்டம் அழிந்துவிட்டது.

தண்டுவான் பிரதேசத்தில் வாழ்ந்த உடையார் பரம்பரை ஏனைய பிரதேசங்களை நிர்வாகித்துவந்தது. கிராமசேவையாளராக நீண்டகாலமாகத் தண்டுவான் பிரதேசத்திலேயே இருந்து ஏனைய பிரிவுகளை உள்ளடக்கிக் கடமையாற்றி வந்துள்ளனர். முல்லைத்தீவு, வவுனியா செல்கின்ற வீதியில் உள்ள தன்டுவான் கிராமமே ஐந்து பிரிவுகளின் தலை நாகரான இருந்து வருகிறது.

பழம்பாசிப் பிரிவை எடுத்து நோக்கும் போது பழம்பாசி, மாமடுச்சந்தி கரடிப்பிலவு, 17ம் கட்டை, தண்ணிமுறிப்புக்குளம், என்பன அடங்குகின்றன. பழம்பாசி என்னும் ஒரு செடி வன்னிநாட்டில் காணப்படுகின்றது. பழைய பாசிகள் அடர்ந்த குளங்கள், கிணறுகளும் காணப்பட்டிருக்கலாம். பெயர்க் காரணத்தை அறியமுடியவில்லை. (இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்குரியது.)

பழம்பாசியில் தவசிகுளம், பழம்பாசிக்குளம், ஆகிய குளங்கள் காணப்படுகின்றன. முன்னொரு காலத்தில் "தவசிகள்" பலர் இருந்து தவம் செய்த ஆற்றை மறித்துக்கட்டியே தவசிகுளம் கட்டப்பட்டதாக கூறுவர். நூற்றைம்பது ஏக்கருக்கு மேல் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் தவசிகுளம் வெளிக்கு இங்கிருந்து நீர்ப்பாசனம் இடம்பெறுகிறது. தண்டுவான்-ஒதியமலை செல்கின்ற பிரதான வீதி பழம்பாசியை ஊடறுத்துச் செல்கின்றது. இவ்வீதி தவசிகுளக்கட்டின் வெளிப்புறமாகச் செல்வதால் இரண்டு இடங்களில் குறுக்கிடும் ஆறுகளின்மேல் பாலம் போட்டு வீதியைச் செப்பனிட்டால் எல்லா மக்களுக்கும் பயணஞ்செய்வதற்கு இலகுவாகும்.

பழம்பாசியில் அமரர் ஆறுமுகம் எனும் பெரும்புலவர் ஒருவர் வாழ்ந்துள்ளார். அவரது பாடல்கள் அவரது பேரனால் தனது தாயாரின் கல்வெட்டில் வெளியிடப்பட்டுள்ளன. அத்தோடு 2014ம் ஆண்டுக்குரிய கரைத்துறைப்பற்று பிரதேசச் செயலக கலை இலக்கியப் பெருவிழாவில் வெளியிடப்பட்டுள்ள "சிலம்பொலி" யில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலும் இவர்கள் பற்றிய விபரங்களையும், இவரது பாடல்களையும் ஆய்வுசெய்து வெளியிட வேண்டிய பாரிய பொறுப்பு இப்பிரதேசத்தில் பிறந்தவர்களின் கடமையாகும்.

பெரியகுளங்கிராமம் தொடர்பாக அறியவருவது, பெரியகுளம் என்னும் பெரிய நீர்ப்பாசக்குளமொன்று இங்கே காணப்படுகின்றது. அரசியல் பழிவாங்கலால் இக்குளம் சிறிய நீர்பாசனக்குளமாக மாற்றப்பட்டுள்ளது. பெரிய குளத்தில் விநாயகர் ஆலயம் காணப்படுகின்றது. அம்மனுக்கு ஓர் ஆலயம் உண்டு 1984ம் ஆண்டிலிருந்து பலதடவை இடம் பெயர்ந்த மக்களில் பெருமளவானோர் தாம் சென்ற இடங்களிலேயே குடியேறி விட்டனர். இருநூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வளத்தோடும், வசதியோடும் வாழ்த்த இவ்விடத்தே தற்போது பத்திற்கு மேற்பட்ட குடும்பங்களே காணப்படுகின்றன.

இவர்களில் பலர் யாழ் மாவட்டலிருந்தும், சிலர் மணலாற்றிலிருந்தும் குடியேறினர். ஆரம்ப காலத்தில் ஒதிய மலையில் ஆரம்பக் கல்வியையும், நெடுங்கேணியில் இடைநிலைக் கல்வியையும் பெற்ற இவர்களுக்குப் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டது. அதுவும் வன்செயலால் அழிந்துவிட மீண்டும் புதிய கட்டிடம் கட்டிய போதும் மக்கள் குடியேற மறுத்து விட்டதால் அக்கட்டடிடமும், சனசமூக நிலையமும் பற்றை மூடிக் காணப்படுகின்றன. எல்லைப் பிரதேசமான இங்கே நீண்டகாலமாகப் பதட்டமே நிலவி வந்ததால் மக்கள் இங்கு வாழப் பயந்து விட்டனர். துணிவு கொண்ட சிலர் இன்னும் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர்.

## "ஒதியமலைக் கிராமத்தின் வரலாறு ஒரு நோக்கு"

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான ஒதியமலையானது, ஒட்டுசுட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவிலுள்ளது. ஒதியமலைக் கிராம சேவை உத்தியோகதர் பகுதியான இது பழம் பெரும் கிராமமாகும். இலங்கை வரலாற்றில் கறைபடிந்த சம்பவங்களால் பெருமளவில் சீரழிந்து தற்போது மீண்டும் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கின்றது.

இவர்களுடைய பூர்வீக வரலாறானது இரு வெவ்வேறு இடங்களிலிருந்து இங்கே வந்து இவர்கள் குடியேறியமையை அறிய முடிகிறது. நாகர் குல மன்னர்களால் அரசாளப்பட தண்ணிமுறிப்புக் குளத்தின் கலிங்கின் கீழே இன்று காடாகக் காணப்படும் "முடவன் குடியிருப்பு" என்னும் இடத்திலுள்ள "காரைவாய்க்கால்" என்னும் கிராமத்திலிருந்து ஒரு சாராரும், மற்றொரு சாரார் தண்டுவானுக்கும் , பண்டாரிக் குளத்திற்கும் இடையே காட்டில் காணப்படும் "செருக்கினவெளி" என்னும் இடத்திலிருந்தும் இங்கு வந்து குடியேறினர்.

இவ்வாறு குடியேறியோருள் காங்கேசு வையித்தியர், என்பவர் குழுழமுனையிலும், நாகமணி வைத்தியர் கற்சிலை மடுவிலும் அவர்களது மூதாதையர்கள் குடியேறியதால் மேற்படி பரம்பரை வாழ்ந்து வருகிறது. முன்பு குறிப்பிட்ட காரைவாய்க்காலில் இருந்து எடுக்கப்பட்ட மூன்று விநாயகர் விக்கிரகங்களில் ஒன்று ஒதியமலையிலும், இரண்டாவது விக்கிரகம் பட்டிக்குடியிருப்பிலும், மூன்றாவது விக்கிரகம் பெரிய குளத்திலும் கோவில் அமைத்து வழிபாடியற்றப்பட்டு வருகிறது. இதில் முதலிரு விக்கிரகங்களும் செதுக்கப்பட்ட பிள்ளையார் சிலையாகவும், மூன்றாவதாகிய பெரியகுளம் விநாயகர் சிவலிங்க வடிவிலும் காணப்படுகின்றன.

செருக்கின பிலவிலிருந்து கந்தர், கதிரவேலு, கோவிந்தர் ஆகியோரின் பரம்பரையினர் ஒதியமலையில் குடியேறினர். கோவிந்தர் என்பவருடைய பரம்பரை விடத்தை குணப்படுத்தும் விஷகடி வைத்தியர்களாக விளங்குகின்றனர்.

பண்டார வன்னியன் 1803ம் ஆண்டு கற்சிலைமடுவில் தோற்கடிக்கப்பட்டபோது, அவனைத் தேற்கடித்த ஆங்கிலேயத் தளபதியான "வொன் றிபேக்" என்பவனுக்கு பண்டாரிக்குளம் கிராமத்தை தேசாதிபதி பரிசளித்தான். அவர்களுடைய பரம்பரையில் வந்த அந்தோனிப்பிள்ளை கமவிதானையாரிடம் மேற்படி காணி உறுதிப்பத்திரம் இருந்ததை நான் கண்டிருக்கின்றேன். அவர்கள் கிறிஸ்தவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலமும் அமைத்துள்ளார்கள் இதன் பின்புதான் மேற்படி "செருக்கின பிலவு" மக்கள் இடம் பெயர்ந்து ஒதியமலைக்குச் சென்றுள்ளனர் என ஊகிக்க இடமுண்டு.

ஒரு சமயம் தண்ணிமுறிப்பு காரைவாய்க்காலுக்கு வேட்டைக்குச் சென்ற பெரியகுளம் மக்கள் பிள்ளையார் சிலைகளைக் கண்டு இரண்டு சிலைகளைக் காவுதடிகளில் காவிவந்து ஒதியமலைப் பிள்ளையார் கோவில் இருக்குமிடத்தில் இருந்த கருங்காலி மரத்தின் கீழே வைத்துவிட்டு, முன்புறம் காணப்படும் ஒதியமலைக் குளம் (அப்போது ஒரு மடுவாகக் காணப்பட்டது.) அதில் தண்ணீர் அருந்திவிட்டு வந்து பிள்ளையாரைத் தூக்கியபோது முடியாது போகவே, சிவலிங்கவடிவில் காணப்பட்ட மற்ற விநாயகரை எடுத்துச் சென்னு பெரிய குளத்தில் வைத்து வழிபடலாயினர்.

ஒதிய மலையில் காணப்படும் மலையில் ஒதிய மரங்கள் காணப்பட்டமையினால் "ஒதியமலை" என இக்கிராமம் பெயர் பெற்றிருக்கலாம். இம்மலையான புராதனமான சிவலிங்க வழிபாட்டுத்தலமாக விளங்கியுள்ளது. அடிவாரதத்தில் காணப்படும் வையிரவர் ஆலயம் காரணமாக மலையடி வைரவர் ஆலயம் என இவ்வாலயம் பெயர் பெறலாயிற்று இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் என்போருக்கு முன்பு இலங்கை முழுவதும் காணப்பட்ட சிவலிங்க வழிபாடு இங்கும் காணப்பட்டுள்ளது. வாவெட்டிச் சிவன் ஆலயத்திற்கும் இவ்வாலயத்திற்கும் தொடர்பு இருந்துள்ளது. இவ்விடம் புதைபொருள் ஆராய்வுக்கு உரியதாகும் இலங்கை வரலாற்றில் அடிக்கடி நடந்த போர்களால் இவ்வாலயம் அழிவடைந்து விட்டது.

தற்போது இம் மலையின் முன் புறம் ஏழெட்டுக் குடும்பங்கள் குடியேறியுள்ளன. இவர்கள் எல்லோரும் மேற்படி மலையைக் காடு வெட்டித் துப்பரவு செய்து மீண்டும் வழிபாட்டை ஆரம்பித்த போது அயலில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் இதனைத் தடை செய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

ஒதியமலையில் 1984ம் ஆண்டு வரை 175 குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். 1984 - 12- 02ம் திகதி முப்பத்திரெண்டு பேர்வரையில், ஒதியமலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து இஸ்ரேவிய உளவு அமைப்பான "மொசாட்" படையால் படுகொலை செய்யப்பட்டனர்.

இதனைத் தொடந்நது மேற்படி மக்கள் பல்வேறிடங்களுக்கும் இடம் பெயர்ந்து சென்று பெரும்பாலோர் அவ்வவ் இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். தற்போது பாடசாலை மாணவர்கள் 10 பேர் மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியமலைப் பாடசாலையில் கல்விகற்கின்றனர். மொத்தம் 48 குடும்பமே ஓதியமலையில் வாழ்ந்து வருகின்றனர் இவர்களுக்கு போதியவசதிகள் கிடைக்கவில்லை. கூட்டுறவுச் சங்கத்திற்காக தண்டுவான் கிராமத்திற்கும், பிரதேசச் செயலகத்திற்காக ஒட்டுசுட்டானுக்கும் அவ்வாறே கமநலச் சேவை மத்திய நிலையத்திற்கும் சென்று வருகின்றார்கள் போக்குவரத்து வசதிகள் எதுவுமே இல்லை வீதிகள் செப்பனிடப்படவில்லை. தண்டுவான் சந்தியிலிருந்து பழம்பாசி ஊடாகப் பெரியகுளம் சென்று அங்கிருந்து ஒதியமலை செல்கின்ற பாதையே பிரதான பாதையாக இருந்தபோதும் அவர்கள் நெடுங்கேணி - சேனைப்பிலவு வீதியாலும், நெடுங்கேணி - ஒலுமடுவீதிச் சந்தியிலிருந்துமே பயணஞ் செய்கின்றனர்.

தற்போது ஒதியமலையில் போரால் சேதமுற்ற பசளைக்களஞ்சியம் மீண்டும் கட்டப்பட்டுவருகிறது. தவசிகுளம் கலிங்கிற்கும், பெரியகுளம் ஆற்றுக்கும் பாலம் கட்டப்பட்டுள்ளதால் முன்பு கூறிய பிரதான பாதையைச் செப்பனிட்டு அவ்வழிப் போக்குவரத்தை ஏற்படுத்தி விட்டால் மக்களின் பலவித தேவைகளும் இலகுவில் நிறைவேறிவிடும்.

ஒதிய மலையில் வாழ்ந்துவரும் கமக்காரர் அமைப்புத் தலைவர் சின்னையா மனோகரன் வயது 55, சேனைப்பிலவில் வாழ்ந்து வரும் திரு.கணபதிப்பிள்ளை கிருஷ்ணப்பிள்ளை வயது 65, கரடிப்பிலவில் வாழ்ந்துவரும் திரு.சின்னத்தம்பி சிவஞானம் வயது 73, கணபதிப்பிள்ளை சோதி வயது 48 என்போரிடம் மேற்படி தகவல்களைப் பெற முடிந்தது. ஒதியமலை வரலாறு அக்காலத்தில் பாடப்பட்டு அந்த ஏட்டுப்பிரதி ஒதியமலைப் பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதனைப் பாடி வசந்தன். அடித்து வந்தனர் மேற்படி பிரதியானது அழிவடைந்துள்ளது.

செருக்கிபிலவு என்னும் இடத்தில் இவர்கள் வாழ்ந்த தடையங்களை இன்றும் காணலாம். கணபதியாரின் மகன் சுப்பர். இவரின் மகன் கோவிந்தர் இவர்களுக்கு இவ்விடத்தில் நாற்பது ஏக்கர் நிலமுண்டு. இவர்கள் பிரசித்தி பெற்ற விஷக்கடி வைத்தியர்களாவர். கோவிந்தரின் மகன் கணபதிப்பிள்ளை அவர்களும் ஒதியமலைப்படுகொலையில் கொல்லப்பட்டுள்ளார்.

மேற்படி செருக்கின பிலவு என்னும் இடத்திலுள்ள காட்டைத் தண்டுவானைச் சேர்ந்த இருவர் வெட்டி வெளியாக்கி அதன் உறுதியை இவர்களிடம் கேட்டபோது இவர்கள் மறுக்கவே இதனை அரசாங்கம் மீளப்பெற்றுக் கொண்டது. ஒதியமலையின் வரலாற்று ஆவணமான ஏட்டுப்பிரதி கிடைப்பின் மேலும் பூரணமாக விபரங்களைப் பெறமுடியும். வசதிக் குறைபாடுகளால் இங்கு குடியேற மறுப்பவர்களை ஏற்ற வசதிகளை ஏற்படுத்திக் குடியமரவைக்கலாம். இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறிடங்களிலிருந்து இங்கு குடியேறிய மக்கள் அரசர்களோடு நெருங்கிய தொடர்புள்ள வைத்தியத்தொழிலையும், பூசாரித் தொண்டுகளையும் செய்தவர்களாவர். பெருங்குடியினராகிய இவர்களது பூர்வீக வரலாறானது சிவவழிபாட்டின் மரபை உணர்த்துவதாகும்.

பந்தியில் அமர்ந்து பசியாறும் போது பக்கத்தில் உள்ளவர்களுக்கு நல்லவிதமாகவும், இருப்பவர்களுக்கு ஏனோதானோ என்றும் உணவு பரிமாறுவது போல் நெடுங்கோணிப் பிரதேசத்தில் அமைந்த குறித்த ஐந்து பிரிவு, மக்களும் ஏங்கிப் பெருமுச்சு விடுவது வேதனைக் குரியது தானே? தண்டுவான் பாடசாலையைத் தரமுயர்த்த வேண்டும். ஐந்து பிரிவுகளுக்கும் கமநல சேவை நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். போக்கு வரத்து வசதிகள், வைத்திய வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். இப்பிரதேசங்களை உள்ளடக்கிய ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவு தனியான பிரதேச சபையாக்கப்பட வேண்டும். இன்னும் மீளக்குடியமர மறுப்போரை மீள்குடியேற்றி அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

மங்கி மறைந்துவரும் அரிய வரலாறுகள் பதிவு செய்யப்பட வேண்டும். துறைசார் நிபுணர்கள், மேலதிகாரிகள் அடிக்கடி சென்று மக்கள் குறைகளைக் கண்டறிந்து தீர்க்க வேண்டும். நடமாடும் சேவைகள் மூலம் மக்களின் பல்வேறு சிரமங்களையும் போக்கி வைக்கவேண்டும் என்பது என்னுடைய அனுபவத்தால் நன்கு உணரப்பட்டுள்ளது.

முடிவாக எல்லாவற்றையும் தொகுத்தும், பகுத்தும், வகுத்தும், நோக்கில் மக்களையும், பண்பாட்டையும், அழியாது பாதுகாக்க வேண்டிய அவசர அவசியத் தேவை இங்கு தான் அதிக அளவில் உண்டு எனலாம். ஏனெனில் சிறுதோட்டக்காணி மட்டுமுள்ள பலருக்கு நெற்காணிகள் கிடையாது. இதனால் அவர்களது உழைப்பில் பெரும் பகுதி அரிசிக்கே செலவாகி விடுகிறது. தோட்டச்செய்கை தேல்வியில் முடிந்தால் பட்டினி தான். ஆகவே உடல் வள நோயாளர்களாக இவர்கள் மாறுவதைத் தடுத்திட வேண்டுமல்லவா?

பெரிய இத்திமடு, தண்டுவான், பழம்பாசி, பெரியகுளம், ஒதியமலை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு மத்தியில் அமைந்திருக்கும் தண்டுவானில் ப-நோ-கூ-சங்கம் ஒன்றை அமைக்கலாம். அல்லது முன்பு போல் நெடுங்கேணியோடு சேர்த்துவிடலாம். முத்தையன்கட்டு ப-நோ-கூ சங்கத்தின் சேவைகளை மக்களால் முழுமையாகப் பெறமுடியவில்லை.

மேற்படி பிரதேசங்களில் தண்டுவான், பிரிவில் அமைந்துள்ள பண்டாரக்குள கிராமம் வரலாற்றுச் சிறப்புடையது. மாவீரன் பண்டாரவன்னியன் இக்கிராமத்தையே தன் வாழிடமாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தான். 1803ம் ஆண்டு அக்டோபர் 31ம் திகதி கற்சிலைமடுவில் இவனையும் படைகளையும் பிரித்ததானிய இராணுவத் தளபதி "வொன்றிப்பேக்" என்பவன் தோற்கடித்தமைக்கு அவனுக்குப் பரிசாகவே இக்கிராமம் வழங்கப்பட்டது. கப்டன் வொன்றிப்போக்கின் சந்ததியினரால் கட்டப்பட்ட கிறிஸ்தவ ஆலயத்தை இன்றும் காணலாம்.

பண்டாரக்குளம் கிராமத்தின் மேற்புறம் அடர்ந்த வனத்தில் அரண்மனையின் இடிபாடுகளில் எஞ்சிய சிலவற்றை இன்றுங்காணலாம். கிராமம் முழுவதுமே அமைச்சர்கள், பிரதானிகள், அரண்மனை வைத்தியர் வாழ்ந்த இடங்களில் செங்கற்கள் பரந்து காணப்படுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்ந்து கிடக்கும் "ஒட்டுசுட்டான் ஒட்டுத்தொழிற்சாலை"

திரு.சி.நாகேந்திரராசா,
அதிபர்,
மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை.

ஒட்டுசுட்டானிலிருந்து முல்லைத்தீவு செல்லும் வழியில் சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் உயரமான நிலப்பிரதேசத்தில் இடப்புறமாக ஓங்கி உயர்ந்த கட்டிடங்களோடு **ஓய்ந்து கிடக்கிறது ஒட்டுசுட்டான் ஒட்டுத் தொழிற்சாலை.**

## தோற்றமும் வளர்ச்சியும்

இயற்கை வளமும் கடல்வளமும் நிறையப் பெற்ற முல்லை மண்ணில் மக்களைக் குடியேற்றி வளங்கொழிக்கும் வன்னியை செழிக்கவைக்கும் நோக்குடன் முத்தையன்கட்டு, விசுவமடு, வவுனிக்குளம் ஆகிய பிரதான குடியேற்றத்திட்டங்களுக்கான அடித்தளங்கள் ஆயிரத்துத் தொழாயிரத்து அறுபதுகளின் நடுப்பகுதியில் இடப்பட்டு ஆயிரத்துத் தொழாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டில் முத்தயன்கட்டுத் திட்டத்தில் விவசாயக்காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு முத்தயன்கட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. விவசாய முயற்சிகள் இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட சமநேரத்தில் இத்திட்டத்திற்கு அண்மையில் ஓர் கைத்தொழில் சாலையை உருவாக்கி இப்பிரதேச மக்களின் தேவையைப் பூர்த்தி செய்தல், மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குதல் என்ற நோக்கங்களின் அடிப்படையில் 1964 ஆம் ஆண்டு ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டு 1968 ஆனி 31ஆம் நாள் அப்போதய விவசாய, கைத்தொழில் அமைச்சராக இருந்த பிலிப்குணவர்த்தன அவர்களால் "பண்டாரவன்னியன்" ஒட்டுத் தொழிற்சாலை என்ற பெயருடன் தோற்றம் பெற்றது ஒட்டுசுட்டான் ஒட்டுத்தொழிற்சாலை.

பாரிய இயந்திரங்கள் மூலம் கூரை ஓடு, மூலை ஓடு, கல்லு (ஓட்டைக்கல்லு) ஆகிய உற்பத்திகள் பிரதான உற்பத்திகளாக உற்பத்தி செய்யப்பட்டன. சுமார் நூற்றியென்பது தொழிலாளர்கள் பணிபுரியும் ஒரு சிறந்த தொழிற்சாலையாக இத் தொழிற்சாலை உருவானது. இதன் முதலாவது முகாமையாளரான திருவாளர் அருள்நாயகம் அவர்களின் முகாமைத்துவத்தின் கீழ் சிறந்த மிளிர்ந்தது ஒட்டுசுட்டான் ஒட்டுத்தொழிற்சாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலப்பொருள் கண்டுபிடிப்பும் அகழ்வும்

தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான முன்முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை பிரதான மூலப் பொருளான களிமண்ணை பெற்றுக் கொள்வதற்கான அயற்பிரதேசங்களின் மண்மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதுடன், அயலிலுள்ள சிறு குளங்களிலும் களிகளை அகழமுடியுமா என்றும் ஆராட்சிகள் நடைபெற்றன. இவ் ஆய்வில் ஈடுபட்டவர்களுள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பிரேமவன்ச பிரதான பங்கை வகித்தவராவார். இவர் ஒரு நாள் கூழாமுறிப்புக் குளத்திற்கு அண்மையில் மாடுகள் நடந்து செல்லும் பாதையில் மாடுகளின் குரைகளிலிருந்து வீழ்ந்து கிடந்த காய்ந்த களிமண் துண்டுகளைக் கண்டு அவற்றை எடுத்து ஆய்வு செய்த போது மிகவும் தரமான களிமண் துண்டுகளாக அவை காணப்பட்டன. அதை தொடர்ந்து அவை கூழாமுறிப்புக் குழத்திலிருந்து மாடுகளின் குரைகளில் ஒட்டியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பொருந்தமான மூலப்பொருள் கூழாமுறிப்புக் குளத்தில் கிடைத்தமையால் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்திலிருந்து களியை அகழ்ந்தெடுத்து உற்பத்தியை மேற்கொள்ள முடிந்தது. எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளித்தது. குளத்திற்கு நீரைக் கொண்டுவரும் ஆற்றுப் படுக்கைகளால் அள்ளப்பட்டு வந்து அடையலாய் படியும் களிமண் வருடத்திற்கு மூவாயிரம் கியூப் என்ற அடிப்படையில் அகழப்பட்டு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டது.

## மட்பாண்டக் கூட்டுத்தாபனம் கையேற்பு

கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்த தொழிற்சாலையை இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் 1973ஆம் ஆண்டு கையேற்றுக் கொண்டது. அதன் பின்னர் இத் தொழிற்சாலை ஓட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை என்றே அழைக்கப்பட்டது. பரிபாலன அமைப்பில் மாற்றம் ஏற்பட்டதே தவிர தொழிற்சாலையின் செயற்பாடுகள் சிறப்பாய் முன்னேற்றம் கண்டன.

மாவட்டத்தின் கூரை ஓட்டுத் தேவையியையய் பூர்த்தி செய்வதற்கும் அப்பால் தேசிய ரீதியிலும் விற்பனை வியாபகம் பெற்றது. விசேடமாக இங்கே உற்பத்தி செய்யப்பட்ட தவர்கல்லு (ஓட்டைக்கல்லு) எல்லோராலும் விரும்பிக் கொள்வனவு செய்யப்பட்டது. காற்றை தன்னகத்தே நிறைத்து எப்போதும் குளிர்மையைத் தருவதாக அக்கல்லு அமைக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை வேலைவாய்ப்புக்கள்

களி ஏற்றுதல் பிரதான மூலப்பொருளான களியினை கூழாமுறிப்புக் குளத்திலிருந்து இயந்திரங்களின் மூலம் அகழ்ந்தெடுத்து உழவு இயந்திரங்களின் மூலம் தொழிற்சாலைக்கு ஏற்றிச் சென்று சேமித்து வைத்தே பின்னர் உற்பத்திக்கு தேவைப்படும் களி வெட்டி எடுக்கப்படும்.

இதன் மூலம் ஓட்டுசுட்டான், முள்ளியவளை, கருவேலன்கண்டல், கூழாமுறிப்பு போன்ற ஊர்களிலிருந்தும் இன்னும் பிற ஊர்களிலிருந்தும் உழவியந்திர உரிமையாளர்கள் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டனர்.

## விறகு வெட்டுதல்

உற்பத்திப் பொருளை காய வைப்பதற்கான சூளைகளுக்கு எரிபொருளாக விறகுகளே பயன்படுத்தப்பட்டன. பெருந்தொகையான விறகுகள் தேவைப்பட்டதால் விறகு வெட்டி வழங்குதலும் பிரதான தொழிலாகக் காணப்பட்டது.

ஒப்பந்த அடிப்படையில் விறகுகளை வழங்கும் ஒப்பந்தகாரர்கள் விறகு வெட்டும் தொழிலாளர்களை வேலைக்கு ஈடுபடுத்தி சஞ்ஜீவி விறகுகளை வெட்டி வழங்கி வந்தனர். இதனால் விறகு வெட்டும் தொழிலாளர்கள் வருவாயைப் பெற்றுக் கொண்டனர்.

## சஞ்ஜீவி மர நடுகைத்திட்டம்

இன்றும் கூழாமுறிப்பு கிராமத்தைத்தாண்டிச் செல்லும் போது கிறிஸ்தவ சவக்காலையை அண்மித்த பகுதிகளில் சஞ்ஜீவி மரங்கள் விரவிக் கிடக்கின்றன. சூளைகளிற்குத் தேவையான அதிக வெப்பத்தைத் தரக்கூடிய எரி பொருளானக சஞ்ஜீவி விறகுகள் இனங் காணப்பட்டமையால் இப் பிரதேசத்தில் சஞ்ஜீவி காடுகள் மீள்வனமாக்கலாக உருவாக்கப்பட்டன. மரக்கன்றுகளை நாட்டுதல், பராமரித்தல் போன்ற வேலைகளுக்கும் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டதால் இதன் மூலமாகவும் ஒரு தொகுதி மக்கள் வருமானம் ஈட்டிக் கொண்டனர்.

## கலப்பதற்கான மண் வழங்குதல்

ஓடு, கல் உற்பத்திக்காக பயன்படுத்தும் களிமண்ணுடன் கலந்து பதப்படுத்தும் மணல்மண் ஆரம்பத்தல் முல்லைத்தீவு கடற்கரையிலிருந்தும், பின்னாளில் முள்ளியவளை, குஞ்சுக்குளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியிலிருந்தும், ஏற்றி வழங்கப்பட்டது. இதன் மூலமாகவும் மண்ணை ஏற்றும் கூலித் தொழிலாளிகளும் உழவு இயந்திர, பார ஊர்தி ஊரிமையாளர்களும் வருமானத்தை ஈட்டிக்கொண்டனர்.

## தொழிற்சாலையின் இயக்கமும் தொழிலாளர்களும்

வெளியே சேமிக்கப்பட்ட களிமண்ணை தொழிலாளர்கள் வெட்டி அகலமான பட்டிகளில் இட அவை மேலே கொண்டு செல்லப்பட்டு அரைக்கும் இயந்திரத்தில் சேர்த்து அரைக்கப்பட்ட பின் மணல் மண்ணும் நீரும் சேர்க்கப்பட்டு கலக்கும் இயந்திரத்தின் மூலம் கலக்கி குழைக்கப்பட்டு பததிற்காக ஒயிலும் சேர்க்கப்பட்டு பதமாக குழைக்கப்பட்ட களி இயந்திரத்தின் மூலம் அச்சுகளிற்கு செலுத்தப்பட வேகமாக மேலும் கீழும் அசையும் அச்சுக்கள் களியினை அழுத்தி ஓடு உற்பத்தி செய்யப்படுகின்றது. இதே போன்றே கல்லுற்பத்தி இயந்திரத்தின் மூலம் அளவளவாய் கல் துண்டாக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் களியை வெட்டுதல், உற்பத்தி செய்யப்பட்ட ஓடுகள், கல்லுகளை அடுக்குதல், சூளைகளுக்கு விறகடுக்குதல், சூளைகளில் இருந்து ஓடுகள் வெளியில் எடுத்தல் ஆகிய வேலைகள் தொழிலாளர்களின் பிரதான வேலைகளாகும்.

இந்த வேலைகளை மேற்பார்வை செய்வதற்கான தலைமை நிருவாகியாக முகாமையாளர் செயற்பட அதன் கீழ் பணியொழுங்கு கிளைவிட்டுக் காணப்பட்டது. இந்த பணித்தொகுதியில் நூற்று எண்பது (180) தொழிலாளர்கள் இணைந்து உழைத்தனர்.

## உள்நாட்டு போரும் தொழிற்சாலையின் இயக்கமும்

எண்பதுகளில் உள்நாட்டில் போர் பரவலாக்கப்பட்ட வேளை இயந்திர சாதனங்களை பரிபாலிப்பதில் மட்பாண்டக் கூட்டுத்தாபனம் நேரடியாக தொடர்புபடுவதில் நெருக்கடிகள் தோன்றின. அப்போதிருந்து நிருவாகம், திருவாளர். வரதராஜா அவர்களின் முகாமையின் கீழ் இயங்கியது. இயந்திர பரிபாலகராக திருவாளர் செல்வராஜா அவர்கள் கடமையாற்றினார். இவர்கள் இருவரும் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பினைப் பேணி ஓரளவுக்கு தொழிலாளர்களின் நலனைப் பேணும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உற்பத்தியை மேற்கொள்ளலாயினர். உள்நாட்டுப் போரில் திருப்பங்கள் ஏற்பட்டு இந்திய இராணுவம் எங்கும் பரவிய போது ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை இந்திய இராணுவத்தின் இராணுவமுகாமாக மாற்றம் பெற்றது. இக்காலமே ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையில் முதலாவது ஓய்வுக்காலமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச நிருவாகத்திலிருந்து விடுபட்ட காலத்தில் தொழிற்சாலையின் நிலை

அரச நிருவாகம் வவுனியாவுடன் எல்லைப்பகுத்தப்பட்டு வன்னியில் விடுதலைப்புலிகளின் நிருவாகம் நிலவிய காலத்தில் 2008 வரை பொருண்மிய மேம்பாட்டு பகுதியினரால் மீண்டும் பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை என்ற பெயருடன் சிறியளவிலான உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது முன்னரிருந்த முகாமையாளர் வரதராஜா, இயந்திரப்பரிபாலனர் செல்வராஜா ஆகியோர் இயற்கை எய்தியிருந்தனர். இறந்தது போக எஞ்சி இருந்த தொழிலாளர்கள் அன்று தொழிற்சாலையுடன் இணைந்திருந்தனர்.

## 2010 இன் பின் தொழிற்சாலையின் நிலை

பாரிய உற்பத்தி நிறுவனமாக விளங்கிய தொழிற்சாலை பல சிதைவுகளுடன் மௌனமாகக் கிடந்தது. அப்போது முல்லைமாவட்ட சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் துறைசார்ந்த அமைச்சர்களுடனும், அரச துறையுடனும் தொடர்பு கொண்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் துனையுடன் தொழிற்சாலையை இயக்குவதற்கான முயற்சிகளை எடுத்தது ஈற்றில் சிறிய கல்லுற்பத்தியை ஓரிரு ஆண்டுகள் செய்து விற்பனை செய்த போது திட்டம் வெற்றியளிக்காது அவர்களும் வெளியேற இன்று அப்படியே அமைதியாய் கிடக்கிறது.

## அரசியலில் தொழிற்சாலை

முன்னயஆட்சியாளர்களின் காலத்தில் அமைச்சராக இருந்த சிறுகைத்தொழில் அமைச்சர் தொழிற்சாலைக்கு நேரில் வந்து கட்டடங்கள் கட்டப்பட்டு இயக்குவோம் என்றும், தொழிலாளர்களின் கிடைக்காத வேதனத்தைப் பெற்றுத்தருவதாகவும் கூறிச் சென்றுள்ளனார்.

நல்லாட்சி அரசு உதயமாகியதன் பின்னர் கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சின் கீழ் குறித்த தொகை நிதி ஒதுக்கி ஆரம்ப தூய்மைப் படுத்துதல் வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் இளையோர் மத்தியில் ஓட்டுத் தொழிற்சாலை வேலை கொடுக்கும் காமதேனுவாக காட்டப்பட்டது. தேர்தல் முடிந்ததும் வேலை வழங்குவதாக படிவங்களும் நிரப்பப்பட்டன. புதிய அரசு தொழிற்சாலையை இயக்கும், இளயோர் வேலையும் பெறுவார், உற்பத்தியும் பெருகி தொழில்வாய்ப்பும் பெருகும் என்று எல்லோரும் அன்று போல் இன்றும் இருக்க இன்னமும் தொழிற்சாலை அமைதியாகவே கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிற்கதியாய்ப் போன தொழிலாளர்கள்

நூற்று எண்பது பேரில் எழுபத்தி நான்னு பேர் மட்டும் தற்போது உயிர்வாழ்கின்றனர். 1990 ஆனி மாதத்திலிருந்து இன்று வரை தமக்கான வேதனம், இறந்தவர்களின் சேமலாபநிதி போன்றவற்றை பெறுவதற்காக தென்னிலங்கைக்கு சென்று அண்மையில் நல்லாட்சி அரசின் பிரதமரைச் சந்தித்தது, கதைத்ததுவரை சென்றுவந்த பயணங்களுக்கு கணக்கே இல்லை. தமக்கான ஒரு நல்ல தீர்ப்புக் கிடைக்கும் எனற ஏக்கத்துடன் இந்தத் தொழிலாளர்களும் குடும்பங்களும் நல்லாட்சி அரசையும் எதிர்பார்த்து நிற்கின்றது.

## மீண்டும் பொலிவுடன் மிளிரவேண்டும்

மூலப்பொருளும், தொழிலாளர்களும் தாராளமாக உள்ள இன்றய சூழலில் மீளக்குடியேறிய பகுதிகளில் முதலீடுகளை ஊக்குவிக்க பலரும் முயன்று கொண்டு இருக்கும் இக்காலத்தில் எமது பிரதேசத்தின் வளமான ஓட்டுத் தொழிற்சாலையை இயங்கவைப்பதற்கான முயற்சிகளை அரச நிருவாக மட்டத்தினூடாகவோ, மத்தியில் அரசின் துறைசார்ந்த அமைச்சுக்களுக்கூடாகவோ, மாகாண அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கூடாகவோ மீண்டும் இயங்கவைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மீண்டும் தொழிற்சாலை இயங்குமாயின் நிற்கதியான தொழிலாளர்களின் வாழ்வு சிறக்கும், எமது பிரதேச மக்கள் நியாயமான விலையில் தரமான பொருட்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## முத்தெழிலில் பதிவிடுதல்

காலத்தின் பதிவான இம்மலர் எமது பிரதேசத்தின் இருப்புக்களை பதிவிடுகின்றபோது வரலாறுகளில் தடம்பதித்து எழிலுடன் திகழ்ந்த எமது பிரதேசத்தின் சொத்து பாராமுகமாய் உக்கி உருக்குலையும் நிலையை ஆவணப்படுத்துவதுடன், அல்லலுறும் தொழிலாளர்களின் நிலையினையும் எழுத்துருவாக்கி எதிர்காலத்தில் பிரதேச செயலாளர், மாவட்டச் செயலாளர் போன்ற மாவட்ட பரிபாலனத்தின் பொறுப்பிலுள்ளோர் எமது வளங்களை பாதுகாப்பர் என்ற எதிர்பார்ப்புமே ஆகும்.

நன்றிக்குரியவர்கள் - திரு.த.தவராசா
திரு.வீ.பிரதீபன்
(கலாசார உத்தியோகத்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியமும் முல்லைத்தீவு மாவட்டமும்

ஜெ.ஜெகன்
புதுக்குடியிருப்பு

## அறிமுகம்

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உயிரியில் அடிப்படையிலான வேறுபாடே பால் ஆகும். சமூகத்தால், கலாசாரத்தால் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் உருவாக்கப்படும் வேறுபாடுகளே பால்நிலையாகும். மனிதன் என்ற அங்கியின் இரு பாலியல் குறியீடுகள்தான் ஆணும் பெண்ணும்.

தாய்மையே பெண்களின் தலையாய பணி என்கின்ற வகையில் திருமணம் அவர்களுக்கு அவசியமானது. ஆதிகாலந்தொட்டே ஆண் வேட்டையாடவும் பெண் பழவகைகளைப் பொறுக்குவதற்கும் பொருத்த மானவள் எனக் கருதப்படுகின்றது. கணவனுக்கு அடங்கி - ஒடுங்கி வீட்டோடு இருக்கும் பொம்மையாகப் பெண் இருப்பதனையே ஆண்கள் விரும்பினர். தமிழில் ஆளுகை என்பதிலிருந்து ஆணும், பேணுகை என்பதிலிருந்து பெண்ணும் வந்ததாகப் பொருள் கொள்ளப்படுகின்றது.

பெண் பிறந்ததிலிருந்து பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற ஏழு பருவங்களுக்கு உரித்துடையவள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, கற்பு, பெண்மை, இரக்கம், அழகு, புரிந்துணர்வு, அதிகாரமின்மை, தாய்மை, பின்னுக்கு நிற்றல், வீட்டுவேலை, சீதனம் போன்ற குணாம்சங்கள் கலந்திருக்கின்றன.

## பெண்கள்

சமூகத்தில் பெண்களுக்கென சில நடை முறைகள் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. அவைவருமாறு மரத்தில். ஏறாதே, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு உள்ள நீ இரவில் வீட்டுக்கு வெளியே போகாதே, காலை ஆட்டாதே, கத்திப் பேசாதே, கண்டபடி சிரிக்காதே, நிலம் அதிர நடாக்காதே, அடக்க ஒடுக்கமாக இரு என்றெல்லாம் வரையறுத்து இருக்கின்றன.

1946ஆம் ஆண்டு முதல் பெண்களும், ஆண்களும் ஒரே உரிமைகளுக்கு உரித்தானவர்கள் என்பதனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உபகுழுவாக பெண்களின் அந்தஸ்துக்கான ஆணைக்குழு நிறுவப்பட்டது. இவ்வாணைக்குழு வருடாவருடம் உலகெங்கும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை ஆராய்ந்து



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவற்றை நிவர்த்தி செய்வதற்கான உடன்படிக்கைகளை உருவாக்கி வந்தது. இதன்படி 1952இல் பெண்களின் அரசியல் உரிமை குறித்த உடன்படிக்கை, 1957இல் திருமணமாகிய பெண்களின் பிரஜாவுரிமை குறித்த உடன்படிக்கை, 1965இல் திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயது, திருமணப் பதிவு திருமணத்திற்கான சம்மதம் குறித்த உடன்படிக்கை ஆகியன வந்தன.

'சீடோ' சமத்துவத்தைப் பற்றி விளக்குகின்றது. அது 'கொக்கும் நரியும்' கதைக்கும் ஒப்பிடுகின்றது. கொக்குக்கு நீண்ட சொண்டு, நரிக்கு கட்டை வாய். கொக்கினை நரி விருந்துக்கு அழைத்து தன்னைப்போல கோப்பையில் சாப்பிடக் கொடுத்தது. கொக்குக்குக் கோப்பையில் சாப்பிடமுடியுமா? எனக்கு இருப்பதைப் போலத்தானே உனக்கும் தருகின்றேன் என்று நரி சமத்துவம் பேசிற்று. ஆனால் தனது இயல்பினாலேயே சமத்துவமாகத் தரப்பட்ட வாய்ப்பினை அனுபவிக்க கொக்குக்கு முடியவில்லை. கொக்கு சாப்பிடவேயில்லை. எனவே கொக்கு பிறகு நரியை விருந்துக்கு அழைத்தது. நல்ல சாப்பாடு செய்தது. ஆனால் நீண்ட மூக்குடைய கூசாவில் அதனைப் பரிமாறியது. தான் அதை ருசித்துச் சாப்பிட்டது. நரியால் சாப்பிடமுடியுமா? சாப்பாடு எட்டவேயில்லை. இந்தத் தடவை கொக்கு நரிக்குச் சமத்துவம் பேசிற்று. "எனக்கு இருப்பதுபோலத்தானே உனக்கும் தருகின்றேன்" என்றது. நரி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு போனது.

பெண்களின் நிலையும் இப்படித்தான் என 'சீடோ' விளக்கியது. சிறுவதிலிருந்து வெளியுலகம் தெரியாதவர்களாகவும் அடங்கி நடப்பவர்களாகவும், பெண்கள் சமூகத்தினால் வளர்க்கப்படுகின்றார்கள். இன்ன - இன்ன தொழில்கள்தாம் பெண்கள் செய்யலாம் என்று திணிக்கப்படுகின்றது. இந்த நிலையில் எமக்குத் தரப்பட்டவைதானே உங்களுக்கும் தருகின்றோம் என்று ஆண்கள் கூறினால்போதுமா? போதாது. எப்படி நீண்ட மூக்குடைய கொக்குக்கு நீண்ட மூக்குடைய கூசாவிலும், குட்டை வாயுடைய நரிக்கு தட்டைக் கோப்பையிலும் உணவு கொடுக்கவேண்டிய தேவையிருக்கின்றதோ அதே போலவே சமூகமயமாகலினாலும், குடும்ப வளர்ப்பு முறைகளினாலும் பெண்கள் இன்று அனுபவிக்கின்ற "பிரதிகூலங்களைக் களையும் வகையில் அவர்களுக்கான ஏற்பாடு செய்யவேண்டும் என்று சீடோ வலியுறுத்துகின்றது.

## கைம்பெண்கள்

யாராவதொரு பெண்ணை "இவர் ஒரு கைம்பெண்" என்று அறிமுகம் செய்தால் அம்மொழியை உள்வாங்கியவர் மனதில் உடனேயே "ஐயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம்" என்கின்ற உணர்வு தோன்றுவது வழக்கம். கணவனை இழந்த பெண்ணை சமூகம் 'விதவை' என்றே அழைக்கின்றது. ஆனால் இங்கு கட்டுரையாளனினால் 'கைம்பெண்' என்ற பதமே பாவிக்கப்படும்.

முன்னாள் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டவை வருமாறு. "விதவையென்று அழைக்காதீர்கள் அவள் நெற்றியில் இல்லை குங்குமப்பொட்டு, விதவை என்ற பதத்தில் இல்லைக் குற்று, அதனால் அவளைக் "கைம்பெண்" என்று அழையுங்கள். அந்தக் கைம்பெண்ணிலாவது இருக்கின்றதல்லவா குற்று. அதிலாவது அவளுக்கு
வரட்டும் பொட்டு" என்றார்.

மக்காவில் நடந்த போரிலே பல ஆயிரம் ஆண்கள் இறந்தனர். இதனால் அங்கு ஆண்களின் தொகை குறைவாகவிருந்தது. இன்னும் பலர் போரிலே கணவன் கொல்லப்பட்டதினால் கைம்பெண் கோலம் பூண்டனர். இத்தருணத்தில்தான் நபிகள் நாயகம் ஆண் சமூகத்திடம் "ஆண்களே! நீங்கள் குறைந்தது நான்கு பெண்களையாவது திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நபிகள் நாயகத்தின் வார்த்தையைக் கேட்டு அக்கணமே பல ஆயிரம் ஆண்கள் ஒவ்வொருவரும் தலா நான்கு பெண்களைத் திருமணம் செய்யமுன்வந்தனர்.

இவ்வாறு கைம்பெண்களாக இருக்கின்ற பட்சத்தில் அவர்கள் உழைப்பாளிகளாக மாறும் நிலை ஏற்படுகின்றது. பாலியல் தொந்தரவுகளுக்கும் ஆளாகின்றனர். இவர்கள் உடல், உள ரீதியாகப் பாதிப்பிற்குள்ளாகின்றனர். கைம்பெண்களை அமங்கலிகளாக நோக்கும் தன்மையுள்ளது. எங்களின் பாரம்பரியச் சடங்குகள் யாவற்றையும் அவதானித்தால் அங்கு நிகழும் கொடுமைகள் புரியும். சடங்கினை முன்னின்று செய்வதற்கு கல்யாணம் செய்த அதுவும் குழந்தைப் பேறு கிடைத்த சுமங்கலிகளே அழைக்கப் படுகின்றனர். ஆனால் கணவனில்லாமல் வாழும் பெண்களுக்கு இவ்வைபவத்தில் ஒரு இடமும் கிடையாது. அவர்களை முற்றாக ஒதுக்கிவைக்க சமூகம் எத்தனிக்கின்றது.

மனைவியை இழந்த ஆணுக்கு வழங்கப்படும் "தபுதாரன்" என்கின்ற பதம் எப்படி வழக்கிலிருந்து போய்விட்டதோ, அதேபோலவே "விதவை" என்ற பதமும் வழக்கிலிருந்து போக வழிசமைக்க வேண்டும். சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கும், பலவீனமானவர்களுக்கும் இருக்கும் ஒரே பலம் அவர்கள் எண்ணிக்கையாகும். தமது பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமானால் கைம்பெண்கள் முதலில் ஒன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்டு தம்மை நிறுவனமயப்படுத்த வேண்டும். சமூக அநீதிகள் ஆக்கிரமிப்புக்களை எதிர்த்து நிற்க இவ்வமைப்பு உதவும். கைம்பெண்கள் பற்றிய படிமங்கள், பாலியல் தொந்தரவுகளைத் தட்டிக் கேட்டு இல்லாதொழிக்கவும் ஒரு அமைப்பிற்குத்தான் இயலுமேயன்றி தனிமனிதர்களுக்கு முடியாது.

கைம்பெண்கள் மறுதிருமணம் பற்றியும் சிந்திக்கவேண்டும். ஒருதார மணம் என்ற சமூக வரையறை வலுவாக இருந்தாலும் எதிர்கால நலன் கருதி மறுதிருமணம் செய்துகொள்ள வேண்டும்.

சர்வதேச மட்டத்தில் கைம்பெண்களுக்கென்று ஒரு பட்டயம் (WIDOWS CHARTER) உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதன் அடிப்படையில்தான் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 'சீடோ' குழு அதாவது பெண்களுக்கெதிரான சகலவிதமான பாகுபாடுகளையும் அகற்றும் குழு இந்தியாவிலே கைம்பெண்களுக்கு மாதாந்தம் 3300 கொடுப்பனவாக இருந்ததை அங்குள்ள கைம்பெண்கள் அமைப்பும் அரசாங்கத்துடன் வாதாடி மாதாந்தம் 3500 ஆக உயர்த்தியிருக்கிறது. நேபாளத்தில் யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட கைம்பெண்கள் இருப்பதனால், அங்கு கட்சிகளுக்கிடையில் நடந்த பேச்சுவார்த்தை மேடைகளில், கைம்பெண்களும் பங்குபற்றி காணாமல் போனோரைப் பற்றிய முடிவுகளைப் பெறவேண்டும் என்று நேபாள கைம்பெண் அமைப்பு வாதாடி வெற்றிகண்டிருக்கின்றது.

## பெண்களின் உரிமைகள்

ஆண்களுக்கு எவ்வாறான உரிமைகள் இருக்கின்றனவோ அதேமாதிரியான உரிமைகள் பெண்களுக்கும் இருக்கின்றன. இலங்கையில் சட்டத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பெண்ணுரிமைகள் வருமாறு.

இலங்கை அரசியலமைப்பின் 12(2) உறுப்புரையானது ஆண்கள், பெண்கள் என்று எல்லோருக்கும் முன் சமத்துவத்தை விளக்குகின்றது. பாலடிப்படையில் பாரபட்சம் எதுவும் செய்யக்கூடாது.

ஆண்களும், பெண்களும் வாக்குரிமை தொடர்பிலும் அரசியல் உரிமைகள் தொடர்பிலும் சம உரிமை உடையவர்கள்.

திருமணமான பெண்ணொருத்தி தனது சொந்தத்தில் வருமானம் எதுவும் இல்லாதவளானால் அத்திருமணம் நிலைத்திருக்கும் வரையில், தனது கணவனிடமிருந்து பராமரிப்புப் பெறுவதற்கு உரிமையுடையவளாகிறாள். விவாகரத்து வழக்கொன்றில் பெண் வாதியாக இருப்பினுஞ் சரி, பிரதிவாதியாக இருப்பினும்சரி, அவள் வழக்குக்கான செலவையும், வழக்கு முடியும் வரையிலான தாபரிப்புச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவையும் கணவனிடமிருந்து பெறுவதற்கு அவளுக்கு உரிமையுண்டு.

இறந்துபோன பொதுச்சேவை ஊழியர் ஒருவரின் கைம்பெண்ணானவள் கைம்பெண்கள், அநாதைகள் சேமலாபநிதியத்தின் நலன்களுக்கு உரித்துடையவளாவாள்.

நாட்டின் பொதுச்சட்டத்தின் கீழ், சொத்துறுதியற்ற வழியுரிமையில் பாலடிப்படையில் பாரபட்சம் எதுவும் காட்டப்படுவதில்லை. ஆணொருவர் இறுதி விருப்பாவணத்தை விட்டு இறக்காத பட்சத்தில் கைம்பெண்ணானவள் அவனது ஆதனத்தின் அரைப்பகுதியை வழியுரிமையாகப் பெற மறுபகுதியை அவனது பிள்ளைகள் ஆண், பெண் என வேறுபாடின்றி சம பங்குகளாகப் பெறுகின்றனர்.

பெண்ணொருவர் தனது ஆதனத்தை தான் விரும்பியபடி விற்கமுடியும். தனது மனைவியின் ஆதனங்கள் மீது கணவனுக்குக் குறிப்பிட்ட சில உரிமைகளைக் கொடுத்திருந்த "திருமணமான பெண்கள் ஆதனக் கட்டளைச் சட்டம்" தற்போது வலுவிலில்லை.

கைதுசெய்யப்பட்ட பெண்ணொருவர் சோதனையிடப் படவேண்டிய சந்தர்ப்பங்களிலெல்லாம், அச்சோதனையானது இன்னொரு பெண்ணினால் கண்டிப்பான பண்பு நெறியில் நின்று செய்யப்பட வேண்டும். பொணண்ணொருவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படவேண்டியிருக்கும் போது அவர் ஒரு பெண்ணதிகாரி அல்லது பெண் பொலிஸாரின் கூட்டுக்காவலில் வைக்கப்படவேண்டும்.

பிரசவ விடுமுறையானது 12 வாரங்களுக்காக, முதலாம் இரண்டாம் பிள்ளைகளது பிரசவத்தின் முன்னர் இரு வாரங்களுக்கும் பின்பாக 10 வாரங்களுக்குமாகக் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

மூன்றாவது அல்லது அதன் பின்னரான பிள்ளைக்காக 6 வார பிரசவ விடுமுறை கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். பெண்ணொருவர் பிரசவத்துக்கு உடனடுத்து முந்திய ஒரு வருட காலத்துக்குள் 150 நாட்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு ஒரு வேலை தருநரின் கீழ் வேலை செய்திருந்தால் மட்டுமே பிரசவ நலன்களுக்கு உரித்துடையவராக முடியும்.

கடை மற்றும் அலுவலக ஊழியர்களும் இந்த பிரசவ நலன்களுக்கு உரித்துடையவராவர். விடுமுறை காலத்துக்கான முழு அளவு ஊதியத்துக்கும் அவள் உரித்துடையவள்.

கர்ப்பத்தின்போதும் அதன் பின்னரும் அவளுக்கு அவளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்கு ஊறுவிளைவிக்கக்கூடியதான ஏதேனும் வேலையில் அவள் வேலைக்கமர்த்தப்படக்கூடாது.

கர்ப்பம் அல்லது பிரசவம் அல்லது அதையடுத்து விளைவதான ஏதேனும் சுகவீனம் காரணமாக அவளது வேலை முடிவுறுத்தப் படக்கூடாது.

பெண்ணொருவருடன் அவருடைய விருப்புக்கு மாறாக அல்லது அவரது சம்மதமின்றி அல்லது மோசடியாகப் பெறப்பட்ட அல்லது பலாத்காரத்தின்மூலம் பெறப்பட்ட சம்மதத்துடன் உடலுறவு கொள்ளுதல் 20 வருடங்களுக்கான கடூழியச் சிறைத் தண்டனையால் தண்டிக்கப்படக்கூடியதான பாலியல் வல்லுறவுக் குற்றமாகும்.

15 வயதுக்குட்பட்ட சிறுமி ஒருவருடன் அவளது சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ உடலுறவு கொள்ளுதல் பாலியல் வல்லுறவாகத் கருதப்படும்.

தனது மனைவியைத் தாக்குவதற்கோ அல்லது உடலூறு விளைவிப்பதற்கோ கணவனுக்கு உரிமை கிடையாது.

திருமணஞ் செய்வதாக வாக்குறுதியளித்து ஒரு கன்னிப் பெண்ணுடன் ஆடவன் ஒருவன் உடலுறவு கொண்டுவிட்டுப் பினர்ன அவளை மணக்காவிடின் "கன்னிமை கெடுதல்" என்பதற்காக அவன்மீது வழக்கிடவும் அவனிடமிருந்து நஷ்டஈடு பெறவும் அப்பெண்ணுக்கு உரிமையுண்டு.

இவ்வாறு பெண்களுக்கு உரிமைகள் இருந்தாலும் அவ்வுரிமைகள் பேணப்படுகின்றனவா என்பது ஆச்சரியமான விடயமே.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்கள் தலைமைதாங்குவதற்குப் பிரதான காரணிகள் வருமாறு

- போர்
- கணவன் நோய்வாய்ப்பட்டிருத்தல்
- கணவனின் அங்கவீனம்
- கணவனைப் பிரிந்திருத்தல்
- கணவன் வெளிநாட்டில் இருத்தல்
- கணவனின் மரணம்
- கணவனின் போதைவஸ்துப் பாவனை
- கணவன் காணாமல் போயிருத்தல்
- திருமணம் முடிக்காமை
- மறுமண மறுப்பு

போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பிரதான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணிகள் விரிவாக பின்வருமாறு பார்க்கப்படுகின்றன.

**போர்:**

இறுதியுத்தத்திலே கணவன்மார்கள் பலர் செல்லடிக்கும், குண்டடிக்கும் இலக்காகி அகால மரணத்தைச் சந்தித்தனர். இந்நிலையில் விரும்பியோ, விரும்பாமலோ மனைவியர் குடும்பத்தைத் தலைமைதாங்கவேண்டிய சூழலையை போர் ஏற்படுத்தியது.

**கணவன் நோய்வாய்ப்பட்டிருத்தல்**

மனைவியை விட கணவருக்கு வயது அதிகரித்து இருப்பது வழமை. இதனால் மனைவி முதுமை அடைவதற்கு முன்னர் கணவர் முதுமை எய்துகின்றார். இத்தருணத்தில் நோய்களுக்கு ஆளாகி நிற்க மனைவி கட்டாயமாக குடும்பத்தை தலைமை ஏற்க வைக்கின்றது. இது தவிர்க்கமுடியாத இயற்கையின் நிபந்தனை.

**கணவனின் அங்கவீனம்:**

போரிலே பல கணவர்மார் கை, காலை இழந்து மற்றும் சில அவயங்களை இழந்து ஊனமுற்றவர்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள். இன்னும் சிலர் இயற்கையிலேயே அங்கவீனர்களாக உருவெடுத்தனர். தொழில் செய்து குடும்பத்தைப் பார்க்கும் கணவனின் இந்நிலைகளால் பெண்கள் குடும்பங்களை தலைமைதாங்கும் இக்கட்டான சூழலிற்கு தள்ளப்பட்டனர்.

**கணவனைப் பிரிந்திருத்தல்**

ஆணும் - பெண்ணும், கணவன் - மனைவி என்ற நிலையில் தமக்கிடையே அன்பினை பரிமாறிக்கொள்ளுதல் அல்லது பகிர்ந்து கொள்ளுதலே திருமணமாகும். இத்திருமணத்தில் எழுகின்ற மனக்கசப்பு, குடும்பச்சுமை, சந்தேகம், சீதனக்கொடுமை என்பன காரணமாக கணவன் -மனைவிக்கு இடையே பிரிவினைகள் ஏற்படுகின்றன. இப்பிரிவினை நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ இருக்கலாம். ஆனாலும் இப்பிரிவினால் பெண்கள் குடும்பத்தைத் தலைமை தாங்கும் நிலைக்கு ஆளாகின்றனர்.

**கணவன் வெளிநாட்டில் இருத்தல்**

தொழில் வாய்ப்பினைக் கருத்திற்கொண்டு கணவன்மார் வெளிநாடுகளுக்குச் சென்று உழைக்கின்றனர். இவர்கள் ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு ஒருமுறை தமது குடும்பத்தைப் பார்வையிட வருகின்றனர். மீண்டும் அவர்கள் குறித்த காலம்வர தஞ்சம் கோரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிற்கே சென்றுவிடுகின்றனர். இக்காலப் பகுதியில் பெண்கள் குடும்பங்களை தலைமை ஏற்று நடாத்துகின்றனர்.

## கணவனின் மரணம்

இறுதிக் கட்ட யுத்தத்தில் பெண்கள் பலர் தமது கணவன்மாரை இழந்திருக்கின்றனர். அதே சமயத்தில் கணவன்மார் பலர் இயற்கை மரணத்தையும் அடைந்திருக்கின்றனர். இப்பொழுதில் பெண்கள் தலைமை ஏற்று குடும்பத் தலைவிகளாய் வலம் வருகின்றனர்.

## கணவன் காணாமல் போயிருத்தல்

இறுதிக் கட்ட யுத்தத்தில் பெருமளவான கணவர்மார் கடத்தப்பட்டிருக்கின்றனர். இவர்கள் காணாமற்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்களை நினைத்து மனைவியர் தினம் தினம் செத்துக் கொண்டிருக்கின்றனர். இப்படி கணவர்மார் இல்லாத சூழலில் பெண்கள் குடும்பங்களைத் தலைமை ஏற்கக் காரணமாகின்றது.

## கணவனின் போதைவஸ்துப் பாவனை

கணவர்மார் சிலர் நல்ல உழைப்பாளிகளாக இருப்பார்கள். ஆனால் குடும்பத்திற்கு ஒரு சதம் கூட கொடுக்கமாட்டார்கள். உழைத்த பணத்தை போதைப்பொருள் பாவனைக்குப் பயன்படுத்துவார்கள். இதனால் மனைவியர் பெரும் சங்கடத்திற்குள்ளாகி குடும்பங்களைத் தலைமை ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

## திருமணம் முடிக்காமை

பெண்கள் பலர் வயது, சீதனப் பிரச்சனை, காதல் தோல்வி, திருமண விருப்பமின்மை போன்ற காரணிகளினால் திருமணம் செய்துகொள்ளாமல் உள்ளார்கள். இவர்கள் பின்னைய காலத்தில் தமது சகோதரர்கள், பெற்றோர்களைப் பார்ப்பதற்காகவும், மேற்கூறிய காரணங்களானா திருமணம் முடிக்காது குடும்பங்களைத் தலைமைதாங்கி நிர்வகித்து வருகின்றனர்.

## மறுமண மறுப்பு

பெண்களிற் பலரின் கணவர்மார் போரிலே இறந்ததினால் அதிகளவான இளம் கைம்பெண்கள் எஞ்சியுள்ளனர். இவர்களுக்கு ஓரிரு பிள்ளைகள் உள்ளனர். பொருளாதாரப் பிரச்சனையிலிருந்து விடுபட, பாதுகாப்பு, பாலுணர்வுத் தேவையைப் பூர்த்திசெய்யவும் மற்றும் வேறு காரணங்களுக்காவும் மறுமணத்தைப் பலர் விரும்புகின்றனர். ஆனாலும் மறுமணம் தொடர்பாகச் சமூகம் சுமத்துகின்ற பழிச்சொல்லை ஏற்க இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. இன்னும் பலர் சட்டப்படி விவாகரத்துப் பெற்றும் மறுமணம் புரியாமல் உள்ளனர். இத்தகைய 'மறுமண மறுப்பு' இருக்கின்றதினால் பெண்கள் குடும்பங்களைத் தலைமைதாங்கிக் கொள்கின்றனர்.

## பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு மேற்கொள்ளப்படும் துஸ்பிரயோகங்கள்

பெண்கள் உடலியல் ரீதியாக, உளவியல் ரீதியாக, பாலியல் ரீதியாக துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப் படுகின்றனர். இதன் களங்களாக வீடு, வீதி, பாடசாலை, கல்வி நிலையங்கள், வேலைத் தளங்கள், மத நிறுவனங்கள், பேருந்துப் பயணம், பொது இடங்கள், அடைக்கலம் தேடும் இடங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், என விரிந்து கொண்டே போகின்றன. இந்த துஸ்பிரயோகத்தைப் புரிகின்றவர்களாக கணவன், தந்தை, சகோதரன், நெருங்கிய உறவினர், காதலர் ஆணாதிக்கச் சிந்தையுடையோர், மேலதிகாரிகள், ஆயுததாரிகள், ஆசிரியர்கள், அந்நிய நபர்கள், என்று பலர் தோன்றுகின்றனர்.

**துஸ்பிரயோகத்திற்குள்ளாகும் பெண்களால் அனுபவிக்கப்படுகின்ற உணர்வுகள் வருமாறு.**

- நம்பிக்கை இழத்தல்.
- பதகளிப்பு.
- எதற்கும் உபயோகமற்றிருத்தல் என உணர்தல்.
- தன்னையும் குழந்தையும் பற்றிப் பயப்படுதல்.
- உணர்வு மரத்துப்போதல்.
- பதற்றம்.
- திருப்தியின்மை.
- குற்ற உணர்வு.
- வெட்கம்.
- தோல்வி.
- மீளோட்டம் என்பனவாகும்.

உடலியல் ரீதியான துஸ்பிரயோகம், அறைதல், அடித்தல், குத்துதல், பலமாகத் தள்ளுதல் என்பன இதில் உள்ளடங்கும். வீட்டில் அல்லது ஏதாவதொரு களத்தில் கிடைக்கக்கூடிய பொருட்களால் அவர்களை காயப்படுத்துதல், உடலியல் ரீதியாக தொடுகை மூலம் தமது வெறியினைக் காட்டுதல், உடலின் சில பாகங்களுக்கு பெருமளவு வலி ஏற்படும் வண்ணம் தாக்குதல். உடலியல் ரீதியாக பெண்கள் துஸ்பிரயோகம் செய்யப்படும் இடங்களில் முதன்மை இடமாக வீடு உள்ளது. இரண்டாவது அவர்கள் தொழில் புரியும் அல்லது பணிபுரியும் இடங்களாகும். இத்துஸ்பிரயோகத்தின் விளைவால் பாலுறவின் மீதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பும், ஆண்கள் மீதான வெறுப்பும் ஏற்படுத்தப்படுகின்றது.

## உளவியல் ரீதியான துஸ்பிரயோகம்

உளவியல் ரீதியான துஸ்பிரயோகமானது பயமுறுதிப் பணம் பறிக்கும் அல்லது அவமானப்படுத்தும் எண்ணச் செயற்பாட்டைக் குறிக்கும். மனம் புண்படத்தக்க வகையில் பெண்களைத் திட்டுதல் இதன்போது பாலியல் சார்ந்த, பாலியல் சாராத வார்த்தைகள் பிரயோகிக்கப்படுகின்றன. சிலர் தூஷண வார்த்தைகளாலும் பெண்களைத் திட்டுகின்றனர். பிறர் முன்னிலையில் அவமானப்படுத்தல், பெண்கள் நடமாடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துதல், பெண்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துதல், பெண்களை அவர்களது குடும்பம், நண்பர் வட்டாரங்களை விருந்து தனிமைப்படுத்தி வைத்திருத்தல், அவர்களின் கருத்துக்களுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்காது ஒதுக்கிவைத்திருத்தல், பாலியல் ரீதியாக நடத்தை கெட்டவள் எனப் பழித்துரைத்தல் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் உளவியல் துஸ்பிரயோகத்திற்கு பெண்கள் ஆளாக்கப் படுகின்றனர்.

## பாலியல் ரீதியான துஸ்பிரயோகம்

பெண்ணொருவரை அவரது விருப்பதிற்கு மாறாக பாலியல் நடத்தையில் ஈடுபட வைப்பதை இது குறிக்கும். பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்து பதின்ம வயதில் தாய்மையடையச் செய்தல். பாலியல் வல்லுறவு, குழுப்புணர்ச்சி என்பவற்றிற்கு உட்படுத்துதல், பெண்களின் மீதான பாலியல் சுரண்டல்கள், அவர்களின் ஆடைகளை பலவந்தமாக களைதல், நிர்வாணமாய்ப் படமெடுத்தல், பலவந்தமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல், பாலியல் படங்களுக்குப் பெண்ணைப் பயன்படுத்துதல், பெண்களைக் கன்னிச் சோதனைக்கு உட்படுத்தல், பாலியல் சார்ந்த வார்த்தைகளைப் பயன்படுத்ததல், பாலுறுப்புக்களைச் சிதைத்தல், நெருங்கிய உறவினர்கள் பாலுறுப்பு, மார்பு என்பனவற்றைத் தீண்டுதல், பிரயாணங்களின்போது பாலியல் ரீதியான நடத்தையில் ஈடுபடுதல், இவ்வாறான நிகழ்வுகளால் பெண்கள் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளாகின்றனர்.

## பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் தேவைப்பாடுகள்

பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு மிகவும் தேவைப் பாடுடையதாக, "வாழ்விடங்கள்" உள்ளன. தகுதியற்ற வாழ்விடங்களைத் தற்காலிகமாக அமைத்து பெண்தலைமைத்துவ குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்நிலையில் அவர்களுக்கு முன்னிலையில் பாதுகாப்பு ஒரு சவாலாகவுள்ளது.

அவர்களுக்கான வாழ்வாதார வசதிகள் செய்து கொடுக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். உதாரணமாக சிறுகைத் தொழில்கள், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு என்பனவற்றை ஊக்கப்படுத்தி சுயகடன் வசதிகளை ஏற்படுத்தி தம்மை முன்னேற்ற வேண்டுமென்று அவர்கள் எடுத்துரைக்கின்றனர்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கி அவர்களின் குடும்பத்தின் சுமைகளைப் போக்க உதவவேண்டும். அவர்களுக்கான நிரந்தரத் தொழிலினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். உளவியல் ரீதியாக தமது வடுக்களைப் போக்க "சாந்திகம்" போன்ற அமைப்புக்களை நாடுகின்றனர்.

சுதந்திரமாகவும், கண்ணியமாகவும் நடமாடுவதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும். சமூக ரீதியான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பற்றிய தப்பான எண்ணத்தை நீக்கவேண்டும். பாரம்பரிய சடங்குகளின் போது அவர்களுக்குரிய உரிமை மறுக்கப்படுவதை நிவர்த்தி செய்தல் வேண்டும். உதாரணமாக திருமணச் சடங்கின் நிகழ்வுகளை கைம்பெண் முன்னின்று செய்யத் தடைவிதிக்கப் படுகின்றது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பெண்களை, அவர்களின் நடத்தைகளை அந்தச் சமூகத்தின் கலாசார விழுமியங்கள் மிக அதிகளவில் பாதிக்கின்றன. அதாவது ஆண்களை விட பெண்களையே அதிகம் பாதிக்கப்படுகின்றது. ஒரு பூப்புனித நீராட்டுவிழாவில் கலந்து கொள்ளும்போது ஆண் வேட்டி கட்டித்தான் செல்லவேண்டும் என்ற அவசியமோ எதிர்பார்ப்போ இல்லை. ஆனால் ஒரு பெண் சேலை கட்டிச் செல்வதையே மிக முக்கிய நடைமுறையாகக் கொள்கின்றது. இத்தகு தருணத்தில் பல உள நெருக்கீடுகளை பெண்கள் அனுபவிக்க நேரிடுகின்றது.

## பரிந்துரைகளும் தீர்வுகளும்

வன்னியில் ஏற்பட்ட போர் நிலைமைகள் காரணமாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளதை தரவுகள் காட்டுகின்றன. எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அப்பால் வேறு பல சமூகப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வருவதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு தத்தமது பிரதே செயலகங்களிலுமுள்ள உளவள உத்தியோகத்தர்களினால் அவர்களின் உளநெருக்கீடுகளை குறைக்க வாய்ப்பினையும் வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இவற்றோடு முல்லைத்தீவிலுள்ள "அமைதித் தென்றல்" உளவள நிலையத்தை நாடி அவர்களிடம் உள ஆற்றுப்படுத்தலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

உள்நாட்டுப் போர்முடிவடைந்த நிலையில், இடம்பெயர்ந்து பல பிரதேசங்களில் அகதிகளாக இருந்த மக்கள் மீள் குடியேற்றம் இடம்பெறும்போது தமது பிரதேசங்கட்கு திரும்பி வருவதில் ஆர்வம் காட்டுகின்றனர். தமது அடையாளங்களையும், ஆவணங்களையும் உறுதிப்படுத்தியோர் பிரச்சினைகளை எதிர்கொள்ளாது மீள்குடி யேறியுள்ளனர். கணவன்மாரை இழந்த பெண்கள், கணவன் மற்றும் பிள்ளைகள் காணாமற் போனோர், ஆவணங்களைத் தொலைத்தோர் தமது சொந்த இருப்பிடங்களில் மீள்குடி யேறுவதில் பல தடங்கல்களை எதிர் நோக்கியுள்ளனர். தேச வழமைச் சட்டத்தின் ஆளுகைக் குட்பட்ட பெண்கள் ஆண் போரில் இறந்த பின் அவர்களுடைய சம்பந்தமின்றி காணி உரிமை மாற்றம் பெறுவதற்குப் பல சிரமங்கள் உள்ளன. கணவன் இறந்ததற்கான மரணச் சான்றிதழ் தொடர்பான சரியான தரவுகளை முதலில் பிரதேச செயலகமும் பெண்கள் அமைப்புக்களும் திரட்டவேண்டும்.

அபிவிருத்தியில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் சிறப்பான தேவைகளை இனங்கண்டு அவற்றை மேம்படுத்துவதற்கான உபாயங்களை உட்புகுத்தல் வேண்டும். போரின் தாக்கங்களில் இருந்து விடுபடாத நிலையில், குடும்பங்கள் சமூகங்கள் மத்தியில் பிரச்சினைகள் தோன்றுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. உளத்தாக்கங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அகவொளி, சாந்திகம், போன்ற உள ஆற்றுப்படுத்தல் நிறுவனங்களின் உதவியுடன் அவர்களை அமைதியின் பால் ஈர்க்கமுடியும்.

ஊனமுற்ற கணவன்மார்களுக்குச் செயற்கை அவயங்களை ‘ஜெய்ப்பூர்’ போன்ற நிறுவனங்களின் உதவியுடன் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். இவை கிடைக்கப்பெறின் கணவன்மார் சுயதொழிலையாவது மேற்கொள்வர். இதனால் பெண்கள் முழுமையாக தலைமைதாங்கும் சுமை குறைக்கப்படும். கணவனை இழந்தவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். இவற்றோடு காப்புறுதித் திட்டங்கள், வாழ்வாதாரங்கள் என்பனவற்றை வழங்குவதன்மூலம் அவர்களிடம் இருக்கின்ற சிறுதுளி மூலதனத்தை இவற்றோடு சேர்த்து வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்வார்கள், இந்நிலையில் மன உளைச்சலுக்கு தொடர்ந்தும் முகங்கொடுக்கவேண்டிய சவால்கள் ஏற்படாது.

சமூக, பொருளாதார ரீதியாகப் பெண்களை வலுப்படுத்தல், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் என்பன செய்யப்படல் வேண்டும். திருமணமாகாமல் பெண்கள் பலர் பல சமூகப் பிரச்சினைகளுக்கு ஆளாகி வருகின்றனர். பாலியல் சேஷ்டைகளுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிடி வதைகளுக்கும், புறக் கணிப்புக்களுக்கும் ஆளாகி வருகின்றனர். இவ்வாறான தருணத்தில் அவர்களுக்கு குரல் கொடுக்கக் கூடிய அமைப்புக்களை அவ்வப் பிரதேசத்தில் நியமித்தல் வேண்டும். இதனால் ஓரளவுக்கேனும் பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

பெண்களுக்கான கற்றல் செயற்பாடுகளுக்கு விசேட புலமைப்பரிசில் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும். இதனால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கல்விக்காக பெரிதும் செலவு செய்யவேண்டிய நிலை ஏற்படாதிருக்கும். சிவில் சமூக அமைப்புக்கள் மூலம் பாதிக்கப்பட்ட பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி வாழ்வாதாரச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யவும் வேண்டும்.

குடிபோதைக்கு அடிமையாகி அதிகமான ஆண்கள் குடும்பத்தின் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்கின்றனர். இவ்வேளையில் பெண்கள் குடும்பத்தைப் பொறுப்பேற்கின்றனர். கணவர்மார் குடிபோதையைக் குறைக்க அல்லது நிறுத்த அவர்களுக்கு நல்ல ஆலோசனைகள் வழங்கப்படவேண்டும். எவ் ஆலோசனைக்கும் உடன்படாதவிடத்து தத்தமது கிராம சேவர்கள் ஊடாக அவர்களை வழிப்படுத்தவேண்டும்.

பெண்களுக்கான விசேட தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் வேண்டும். குறிப்பாக Parcic நிறுவனம் மூலம் தொடர்பு கொண்டு தையல் பயிற்சிகளையும் கடலுணவுகளை பதனிடுவதற்கான பயிற்சிகளையும் வழங்குதல் வேண்டும். இவற்றோடு இதர நிறுவனங்களின் உதவிகளையும் நாடலாம்.

விடுதலைப் புலிகள் பயன்படுத்தி தற்போது இராணுவம் கையகப்படுத்தியிருக்கும் விவசாயக் காணிகளை மக்கள் நலனுக்காக பயன்படுத்தும் விதத்தில் ஒப்படைத்தல் வேண்டும். இதனால் வீட்டுத் தோட்டப் பயிரையோ, நெற்செய்கையோ ஆரம்பித்து முன்னேற்றத்தைக் கண்டுகொள்வர் மக்கள்.

பெண்கள் அரசியல் ரீதியாகவோ, நிர்வாக ரீதியாகவோ உயர் பதவிகளில் இருப்பதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல் வேண்டும். பெண்கள் அரசியலுக்குள் நுழைகின்றபோது பெண்களின் நலனில் அகதிக கவனம் செலுத்துவர். ஆனால் இன்று ஆண்களே அதிகம் அரசியலில் ஈடுபடுவதனால் பெண்களின் நிலைமை நீட்சி பெறவில்லை.

மறுதிருமண வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். திருமண வயது எல்லை இருந்தும் சமூக அவதூறுகளுக்குப் பயந்தும் பலர் மறுதிருமணத்தை நிராகரிக்கின்றார்கள். இதனால் தொடர்ந்தும் குடும்பத்தைத் தாங்க வேண்டிய சூழலில் தள்ளப்பட்டுவிட்டனர் பெண்கள்.

வலுக்கட்டாயத் திருமணங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் ஆணுக்கோ, பெண்ணுக்கோ, விருப்பமின்றிய நிலையில் பெற்றோரின் விருப்பத்திற்கு இணங்கித் திருமணங்கள் நிச்சயிக் கப்படுகின்றன. இதனால் காலகதியில் பிரிவுகள் ஏற்பட்டு அவை நிரந்தரப் பிரிவுகளாகவும் மாறுகின்றன. இந்நிலையில் கூட பெண்கள் அதிகம் பாதிப்படைகின்றனர்.

இளவயதுத் திருமணங்கள் பற்றி விளிப்புணர்வு செய்வதோடு அதன் தாக்கங்கள் பற்றி எடுத்துக் கூறுதல் வேண்டும். இத்தகு பயன்மிகு செயற்பாட்டினால் இளவயதுத் திருமணங்கள் குறைக்கப்பட்டு பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை குறைவடையும்.

60 வயதிற்கு மேற்பட்டவர்களும் குடும்பங்களுக்குத் தலைமை தாங்குவதனால் அவர்களுக்கான விசேட திட்டங்களை உருவாக்குதல் வேண்டும். உதாரணமாக முதியோர் கொடுப்பனவுகள், முதியோர் காப்பீடுகள், முதியோர் கௌரவிப்பு என்பனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

பாலியல் கல்வி பற்றிய அடிப்படை விடயங்களை வழங்குதல்வேண்டும். பாலியல்கல்வி என்ற தோற்றம் சமூகத்தில் விரும்பப்படாத ஒன்றாகவிருக்கின்றது. இயற்கையிலே ஆண் - பெண் ஆகிய இருபாலாரிடமும் பாலியல்பு உள்ளது. இதனைத் தவிரத்து அணுவேனும் அசைய மானிடம் முற்படாமல்விட்டால் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே மனித வர்க்கம் முற்றுப்பெற்றிருக்கும். இத்தகைய நிலமைகளை எடுத்துக்கூறி அவர்களைப் பாலியல்பு, பால் அறிவைத் தேட வழிசமைக்க வேண்டும்.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படுதல் வேண்டும். இவற்றின் போதும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டால் உளச் சாவல்களை அவர்கள் மேலும் சுமக்கவேண்டி நேரிடும்.

அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்து கொடுத்தல் வேண்டும். பன்னாட்டுத் தொண்டு நிறுவனங்களின் அடிப்படையிலேயே வழங்கப்படும் உதவிகளில் மலசலகூடங்கள், கிணறுகள், பாதுகாப்பான இருப்பிடங்கள், என்பனவற்றை பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு முதலில் வழங்குதல் வேண்டும்.

தொழில் வாய்ப்புக்களை இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியவாறும், பாடசாலைகள், கோயில்கள், போன்றவற்றைக் கவனத்தில் கொண்டு போக்குவரத்துப் பாதைகளை ஒழுங்கமைத்து மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச நியமனங்களில் கட்டாயம் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேரந்தவர்களுக்கு விசேட சுற்று நிருபம் தயாரிக்கவேண்டும்.

பாலியல் தொந்தரவுகளை ஏற்படுத்துவோர் மீது கடும் சட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும். இவற்றோடு பாலியல் துஸ்பிரயோகத்திற்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டங்களை நடாத்துதல் வேண்டும்.

இளம் கைம்பெண்களுக்கு மறுதிருமணத்தை விளக்குதல் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், குறிப்பாகத் திருமணச் செலவுகளை ஏற்படுத்துவதற்கு நிறுவனங்களின் பங்களிப்பை நாடுதல், திருமணம் செய்வதற்கான சமூக அந்தஸ்தை வழங்குதல் வேண்டும். மாதர் சங்கங்கள் பெண்களின் மறு திருமணங்கள் பற்றி விளிப்புணர்வு கொடுக்கவேண்டும்.

பெண்களின் வேலை நேரத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் வேலைக்கேற்ற ஊதியத்தை பெற்றுக்கொடுக்க வழிவகைகள் செய்தல் வேண்டும்.

பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்கி பெண்களை வலுவூட்டல் வேண்டும். பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் மூலம் குறிப்பாக மகளிர் போன்ற நிறுவனங்களின் மூலம் பிரச்சினைகளை எடுத்துக்கூறி சிறந்த தீர்வைப் பெறுவதோடு பெண்களின் தனித்துவத்தைப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறான நிவாரணிகள் வழங்கப்படுமாயின் பெண்களின் உளச் சவால்கள் குறைக்கப்படும். பெண்களின் தலைமை தாங்கும் குடும்பங்களின் ஏதேனும் ஒரு தேவை நிறைவேற்றப்படாதவிடத்து இங்கே உளச் சவால் உருவெடுக்கின்றது. அவர்களுக்கு எதிராகப் புரிகின்ற மற்றவர்களின் செயற்பாடுகள் மூலமும் உளச்சாவல்கள் ஏற்படுகின்றன. இச்சவால்களை மேலே குறிப்பிட்ட பரிந்துரைகளினாலும் தீர்வினாலும் குறைத்துக் கொள்ளமுடியும்.

## எனது அனுபவம்

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை நேர்காணல் செய்யச் சென்ற வேளை, அவர்களின் வேதனைகளையும் வியாகுலங்களையும் மேலும் துருவுகின்ற செயற்பாடாக இது அமைந்துவிடுமோ என்ற ஏக்கத்தோடு என் நோக்கத்தை நோக்கிப் பயணித்தேன்.

முதலில் எதையும் அறிந்து கொள்ளமுடியாது என்ற வசனங்களை அவர்களின் முகங்களில் கண்டு கொண்டேன். தொகுக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்களுக்கு பதிலை தணிக்கை செய்தே கூறினர். போகப்போக அவர்களின் விடைகள் காத்திரமானவையாக இருந்தன. பலர் கண்கலங்கி கதைத்தனர். அவர்களோடு நானும் ஒத்துணர்வைக் காட்டினேன்.

இன்னும் சிலர் தொண்டைக் குழி மட்டும் வந்த வார்த்தைகளை அவர்களின் மடைதிறந்து வந்த கண்ணீர் மறித்தது. சற்றே மௌனம் தலைவிரித்தது. மீண்டும் தொடர்ந்தனர். தமது கவலைகளைச் சொல்ல, எனக்கும் அவர்களோடு ஒன்றித்துப் போக முடிந்தது.

பெண் தலைத்துவக் குடும்பம் என்கின்ற காரணத்தினால் பலர் வேலைகளுக்குச் சென்றனர். இதனால் அவர்களைப் பல நாள்களாக சந்திக்க நேரிட்டது. அவர்கள் எதிர்நோக்கும் உளச்சாவல்களை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

இவர்கள் பலர் தகவல்களை தர மறுத்துவிட்டார்கள். ஏனெனில் தாம் கணவரை இழந்தவர்கள் இனி எமக்கு என்ன வாழ்க்கை என்ற விரக்தியின் நுனியில் தொங்கிக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு அவ்வப்போது பொருத்தமான எடுத்துக்காட்டுக்களை எடுத்துக்கூறி அவர்களின் நெஞ்சை நெகிழ வைத்தேன்.

ஒரு கட்டத்தில் ஏன்தான் இந்தத் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டேன் என்ற நெருடல் கூட ஏற்பட்டது. போகப்போகத்தான் தெரிந்தது அலசி, ஆராயப்பட வேண்டிய முக்கியமான தலைப்பையே எடுத்தேன் என்று. என்னை என் நெஞ்சு வலுப்படுத்தியது. அது உண்மைதான். மீன் தின்ன ஆசைப்பட்டால் முள்ளு இருக்கும்தானே. ரோஜா பறிக்கையில் முட்கள் இருக்கும்தானே. **வாழ்க்கையென்றால் தடைக்கற்கள்** இருக்கும்தானே. அறுபதிற்குப் பின்னர் சேவைக்கு ஓய்வு, அடுத்த தலைமுறையினரும் படிக்கச் செய்யவேண்டும் ஆய்வு. என்று எனது கள அநுபவம் கணக்காய் வந்தது.

இவ்வாய்வானது உளச்சாவல்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இதன் மூலமாக பெண்தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இதனால் ஏற்படும் தாக்கங்கள், பாதிப்புகள் குறித்து நல்ல விளிப்புணர்வு நிலையினை மக்களுக்கு ஏற்படுத்த இவ்வாய்வு உதவும் என நம்புகிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைமணியின் கமுகஞ்சோலை - ஒரு பார்வை

தே.கஜீபன்
தமிழ் சிறப்புத்துறை (2ம் வருடம்)
பேராதனைப் பல்கலைக்கழகம்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளையில் பிறந்த முல்லைமணி என்னும் புனைபெயரைக் கொண்ட வே.சுப்பிரமணியம் இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் சிறப்புக் கலைமானிப் பட்டத்தைப் பெற்றதோடு, இவரது கலை இலக்கிய ஆய்வுப்பணிகளை அங்கீகரித்து 2005ல் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டத்தையும் வழங்கியது. பாடசாலை அதிபராகவும், ஆசிரியகலாசாலை விரிவுரையாளராகவும், பிரதம கல்வி அதிகாரியாகவும், மாவட்டக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றிய இவர் நாடகம், சிறுகதை, நாவல், கவிதை, வரலாற்று ஆய்வுகள், இலக்கியத்திறனாய்வு போன்ற துறைகள் மூலம் தமிழ் எழுத்துலகில் கால் பதித்தார். இவர் மல்லிகைவனம், வன்னியர்திலகம், மழைக்கோலம், கமுகஞ்சோலை போன்ற நாவல்களைப் படைத்துள்ளார். இவற்றுள் "கமுகஞ்சோலை" என்னும் நாவல் இங்கு அலசப்படுகிறது.

இந்நாவல் பற்றி நாவலாசிரியர் கலாநிதி முல்லைமணி அவர்கள்,

> "மேலே என்ன? உம்..உம்.. என்று வாசகர்களின் ஆவலைத் தூண்டக் கூடிய தொடர்கதைப் பாணியில் இந்த நாவல் எழுதப்பட வில்லை. மக்கள் வாழ்க்கை, அதில் அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், போராட்டங்கள், வெற்றி தோல்வி, அடக்கு முறைகள் என்பனவே நாவலின் மைய நிகழ்ச்சிகள் ஆகும். அத்துடன் சுவாரஸ்யமான வாழ்க்கை அம்சங்களும் இடம் பெறவில்லை"

என்று கூறுகிறார். தான் வாழும் நிலத்தின் மக்களின் வாழ்வியல் சிக்கலை யதார்த்தமாக நாவல் கொண்டுள்ளமையை இவர் கூற்றிலிருந்து அறியலாம்.

இந்நாவலின் கதைச்சுருக்கத்தை நோக்கின், கதிராமனும், கற்பகமும் திருமணம் செய்து கொள்கின்றனர். கதிராமனது அண்ணி அனைத்துப் பாத்திரங்களுக்கும் எதிர்ப்பாத்திரமாகக் காணப்படுவதோடு கற்பகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டைவிட்டுத் துரத்த தன் கணவனுடன் இணைத்து சந்தேகப்பட்டம் கட்டுகிறாள். அதனை யாருக்கும் வெளிப்படுத்தாது கணவன் கதிராமனுடன் வீட்டைவிட்டு வெளியேறிய கற்பகம் சிறிதுகாலம் தன் தாய் தந்தையருடன் இருந்துவிட்டு தனிக்குடித்தனம் போகிறாள். கதிராமனின் தந்தை நோய்வாய்ப்பட்டு இருக்கும் நிலையில் அக் குடும்பத்தினர் பெரும் வறுமைக்கு உட்படுகின்றனர். சீதனம் மூலமாக கதிராமனுக்கு கிடைத்த கமுகஞ்சோலை நல்ல விளைச்சலைக் கொடுத்ததால் குடும்பம் செழிப்பாகவே இருந்தது. தனது மாமா, மாமியின் நிலையினைக் கேள்வியுற்ற கற்பகம் வண்டி நிறையப் பொருட்களோடு அவர்களுக்கு உதவுவதற்காகச் செல்கிறாள். மறைந்து போன சந்தோசம் மீண்டும் அக் குடும்பத்தினரிடம் துளிர் விடுகின்றது.

இதற்கிடையில் கற்பகத்தின் திருமணத்திற்கு முன்னரான காலப்பகுதியில் செந்தில் என்பவனிடம் அவள் காதல் வயப்படுகின்றாள். ஆனால் அவன் ஆசை வார்த்தைகளைக் கூறி பல பெண்களது கற்பைச் சூறையாடியவன். அவனது குழந்தை கமலத்தின் வயிற்றில் வளர்வதை அறிந்த கற்பகம் தன்னை காத்துக் கொண்டதோடு அவனை அவமதித்தாள். இவ் அவமானத்திற்குப் பழிதீர்க்க எண்ணிய செந்தில் கற்பகத்தை கடத்துவதற்கும், திருமணத்தைக் குழப்புவதற்கும் போட்ட சூழ்ச்சிகள் எவையும் நிறைவேறாமல் போகவே நெல் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு சிரமமாக இருப்பதோடு ஆங்கிலேயர்களுக்கு அதன் மூலம் எந்த வருமானமும் இல்லை எனவும் அதிகாரிகளுக்கு கடிதம் எழுதி கதிராமனின் கமுகஞ்சோலையை அழிப்பதற்கான சூழ்ச்சியை மேற்கொள்கிறான். அதிகாரியின் கட்டளை கிடைத்ததும் கமுகஞ்சோலை அழிக்கப் படுகின்றது. மக்கள் எவ்வாறான போராட்டங்களை மேற்கொண்டும் அவர்களது முயற்சி பயனின்றியே போனது. செந்தில் ஒரு பைத்தியக்காரியின் கத்திக் குத்திற்கு இலக்காகி உயிரை விடுகின்றான். அவள்தான் இவனால் ஏமாற்றப்பட்ட கமலம். கதிராமன் பழுத்த பாக்குகளை அள்ளிக்கொண்டு ஏதோ ஒரு காலத்தில் அவன் அவற்றை பயிரிடப் போவதாகக் கூறிக் கொண்டு செல்கின்றான். இவ்வாறாக இந்நாவலின் கதை அமைந்து விடுகின்றது.

மக்களிடம் பயிலப்பட்டு வந்த "கமுகஞ்சண்டை" என்னும் கதைப்பாடலை அடிப்படையாகக் கொண்டே இந்நாவல் எழுதப் பெற்றுள்ளது. இதனடிப்படையில் இக்கதையின் மையக் கருத்தாக ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் மக்கள் எவ்வாறு அடக்கியாளப்பட்டார்கள், சமுதாயத்தின் பண்பாட்டு பாரம்பரியங்கள் எவ்வாறு காணப்பட்டன. போன்ற விடையங்கள் அமைந்துள்ளன. இந்த வகையில் "கமுகஞ்சண்டை" என்ற பாடலை மையமாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கப்பட்ட இந்நாவல் "கமுகஞ்சோலை" என்ற தலைப்பைக் கொண்டு அமைந்துள்ளமை மிகவும் பொருத்தமுடையதாகவே காணப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் தோன்றிய நாவல்கள் தனிமனித கொள்கைகளையும் ஜதார்த்த வாதத்தையும் அடிப்படையாகக் கொண்டே தோற்றம் பெற்றன. புனைகதை என்ற வடிவத்தின் ஆதாரமாக ஜதார்த்தவாதமே விளங்கியது இவ்வகையில் ஈழத்து ஆரம்பகால நாவல்களும் இதற்கு விதிவிலக்கல்ல. தமிழ் உலகில் இலக்கியத் துறையின் வளர்ச்சியும் மனிதனது சிந்தனையாற்றலும் இணைந்து காலப்போக்கில் பல பரிநாமங்களைப் பெற்றுக் கொண்டன. அந்த வகையில் காதல், மர்மம் சார் நாவல்கள் பலவும் ஜதார்த்த பண்பை விடுத்து கற்பனையின் உச்சத்தை தொட்டு அமையப் பெற்றாலும் சமூகம், வரலாறு, தலித்தியம், பெண்ணியம் சார் நாவல்கள் ஜதார்த்தத் தன்மையோடு அமையப் பெற்றன. அதனடிப்படையில் கலாநிதி முல்லைமணியினுடைய கமுங்கஞ் சோலையும் நாவல் ஒன்றிற்குத் தேவையான ஜதார்த்தப் பண்புகளை கொண்டு அமையப் பெற்றுள்ளமையைக் காணலாம்.

பொருளுடைமையாளர்களாகக் காணப்படும் மேல்தட்டு வர்க்க மக்கள் தங்களது செல்வாக்குகளின் காரணமாக தமக்கு கீழ் காணப்படுகின்ற மக்களை ஏதோ ஒருவகையில் ஆளமுற்படுவதும், அவர்களது துன்பங்களுக்கு காரணமாக அமைவதும் வாழ்வின் உண்மைத் தன்மையே. இதனையே செந்தில் என்ற பாத்திரம் மூலமாக ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். பல பெண்களை காதலிப்பதும் ஆசை வார்த்தை காட்டி அவர்களைத் திருமணம் செய்து கொள்வதாக கூறி கற்பினை சூறையாடுவதும், ஆண்களால் ஏமாற்றப்பட்ட பெண்கள் வயிற்றில் குழந்தையுடன் சமூகத்தில் வாழமுடியாமல் தற்கொலையை வாழ்வின் முடிவாக்கிக் கொள்வதும், அவர்களிலும் ஒரு சிலர் லட்சிய வாதிகளாக வாழ்ந்து சம்பந்தப்பட்ட ஆண்களை பழி தீர்த்து கொள்வதும் பைத்தியங்களாக தம் வாழ்க்கையை தொலைத்துவிட்டு பகட்டுப் பேச்சுகளுக்கும் பொய்க் காதல்களுக்கும் மயங்கி வாழ்வை நரகமாக்கி வாழும் பெண்களும் காணப்படுகின்றனர். இதனையே ஆசிரியர் செந்தில், கமலா, கற்பகம் என்ற பாத்திரங்களினுடாக எடுத்துரைக்கின்றார். இவ்வாறான சம்பவங்கள் நாவல் எழுந்த காலச் சூழலில் மட்டுமன்றி தற்காலத்திலும் நம் சமூகங்களிடையே நடக்காமலில்லை.

கூட்டு குடும்பவாழ்க்கை முறையென்பது நம் முன்னோர்கள் காலந்தொட்டு தமிழ் மரபில் பேணப்பட்டு வந்த ஒன்றாகும். இவ்வாழ்வியல் முறையில் அனைவரும் ஒரேமாதிரியான சிந்தனையாற்றல் கொண்டவர்களாகவும் ஒரே இயல்புள்ளவர்களாகவும் இருப்பதில்லை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவரவர் மனநிலைகளுக் கேற்ப அவர்களது செயற்பாடுகள் அமைந்துவிடுவது இயல்பானதே. இதனைக் கைலைவாசம் என்ற குடும்பத்திலுள்ள பாத்திரங்கள் மூலமாக மிகவும் சுலபமாக ஆசிரியர் கூறிவிடுவதனைக் காணலாம். பவளத்தம்மாள் போன்ற இயல் புடையவர்கள் இன்றைய சமுதாயத்திலும் வாழத்தான் செய்கிறார்கள். ஆனாலும் பொருளாதாரமும், நவீன மோகங்களும் இன்றைய நிலையில் கூட்டுக்குடும்ப வாழ்க்கையைச் சிதைத்துத்தான் விட்டுள்ளன. தனிக்குடித்தனமும், வெளிநாட்டு வாழ்க்கையும் நமது சமூகத்தவர் மத்தியில் பெருகிக்கொண்டு வருகின்றமை நமது மரபார்ந்த பண்பாட்டுக் கோலங்களைச் சற்று அசைக்கத்தான் செய்கின்றன.

வன்னிச் சமுதாயத்தினுடைய நாட்டுப் புறவியல் சார் பண்பாட்டம்சங்கள் இந்நாவல் மூலம் வெளிப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. நாட்டார் இயல் வாழ்வியல் அம்சங்கள் ஒரு சமூகத்தின் வரலாற்று எழுகைக்கு முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் இந் நாவலிலும் இதனைத்தரிசிக்க முடிகின்றது. சமூகத்தில் பேணப்பட்டு வந்த பழமரபுக் கதைகளை ஆசிரியர் நாவலிலே சித்தரித்துள்ளார். இதனை "வன்னியரசர்கள் காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கிய குமாரபுரம் சித்திரவேலாயுதர் கோயில் அற்புதமான சித்திர, சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்திருந்ததாகவும் இது போன்ற அழகிய சிற்பங்களை வேறெந்தக் கோயிலுக்கும் செய்யக் கூடாதென்று நினைத்து சிற்பியின் கையையே வன்னியரசன் வெட்டிவிட்டதாகவும், பறங்கியர் சைவ ஆலயங்களை இடித்து வருகின்றனர் என்பதை அறிந்த ஆலயக்குருக்கள் மூலஸ்தான விக்கிரகத்தைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு கடல்மார்க்கமாக யாழ்ப்பாணம் சென்று கந்தவனக் கடவையில் பிரதிஸ்டை செய்ததாகவும்" கூறப்படுகின்றது. இது ஒரு பழமரபுக்கதையாகக் காணப்பட்டாலும் வன்னித் தமிழர்களது கலைகள் தொடர்பான திறன்களையும் மக்கள் இந்துப்பண்பாட்டை வளர்த்தெடுப்பதிலும் பேணிப் பாதுகாப்பதிலும் முயற்சியுடையோராய் விளங்கினர் என்பதனையும் பறைசாற்றுவதாகவே அமைகின்றது.

புராண இதிகாசக்கதைச் சம்பவக் குறிப்புக்களும் இந் நாவலில் காணப்படுகின்றது. "பரதனை நாடாளவிட்டு சடைமுடிதரித்து பதினான்கு ஆண்டுகள் காட்டில் போய் வசிக்கும்படி அரசன் கட்டளையிட்டதாக கைகேயி சொன்னாளாம்" என்பதுபோல நாச்சியம்மாள் மாமியின் கட்டளையை பவளத்தம்மாளிடம் கூறுவதாக ஆசிரியர் கூறுகின்றார். ஆசிரியர் கதையோட்டத்திற்கேற்ப உதாரணமாகக் கூறினாலும் இவை இந்து மதம் தொடர்பான புராணக் கதை மரபுகள் மக்களிடையே பயின்று வந்திருப்பதைக் காட்டுவதாய் அமைகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டாரியல் வகைகளுள் ஒன்றான பழமொழிகளின் பயன்பாடும் இந்நாவலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளமையைக் காணலாம். இதனடிப்படையில் வன்னிமக்களிடையே பயன்பாட்டில் இருந்த பழமொழிகளாக, "தானாடாவிட்டாலும் சதையாடும்," "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு," "ஊர்வாயை உலைமூடியால் மூடமுடியாது," "முதல்க்கோணல் முற்றும் கோணல்," "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்," "பிள்ளையார் பிடிக்க குரங்காகியது போல," "தினை விதைத்தவன் தினையறுப்பான் வினை விதைத்தவன் வினையறுப்பான்," "காலம் மாறக் கருத்தும் மாறும்," "உழுகிற நேரம் ஊர்வழி போனால் அறுக்கிறநேரம் ஆள் வேண்டாம்," "கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்," "ஆத்திரக் காரனுக்கு புத்தி மட்டு," "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை," "பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்லு," "வெள்ளியிட்ட காலுக்கு வெறுங்கால் அடிமையில்லை," "எலிப்பாளி என்டாலும் தனிப்பாளி வேண்டும்," போன்ற பழமொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரு சமுதாயத்தின் வாழ்வியல் அம்சங்களை பழமொழிகள் பிரதிபலிக்கவல்லன. கதையோட்டத்தின் நகர்விற்கேற்ப ஆசிரியர் பழமொழிகளைக் கையாண்டாலும் அவை அச்சமூகத்தில் பயின்று வந்தனவேயன்றி வேறானவையல்ல.

வன்னிவாழ் மக்களது தொழில் முறைகள், உணவுப் பழக்க வழக்கங்கள் தொடர்பாகவும் இந்நாவல் பேசுகின்றமையைக் காணமுடிகின்றது. வேட்டையாடுதல், விவசாயம் செய்தல், கள்ளுச்சீவுதல், பாக்குப் பயிர்ச்செய்கை பண்ணல், தேன் எடுத்தல், மீன் பிடித்தல், போன்றன அக்கால மக்களின் தொழிலாகக் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் பல சமுதாயப் பிரிவினர் வன்னிச் சமுதாயத்தில் காணப்பட்டனர் என்பது தெளிவாகின்றது. பனாட்டு, தயிர், கானாந்தி வறை, பால்ச்சொதி, நெய், கத்தரிக்காய் தீயல், முசுட்டை வறை, வாழைக்காய் பொரியல், திப்பிலிக் கொச்சிக்காய் போன்றன உணவில் சேர்த்துக் கொள்ளப்பட்டதோடு உடும்பு, மான், மரை, உக்கிளான், முயல், காட்டுக்கோழி, இறால் போன்ற மச்ச மாமிசங்களையும் உணவாக உட்கொண்டுள்ளனர். பண்டிகைக் காலங்களிலும், திருவிழாக் காலங்களிலும், விசேட தினங்களிலும் பயிற்றம் பணியாரம், அரியதரம், முறுக்கு, சிப்பி போன்ற பலகார வகைகளை உட்கொண்டதோடு மா, பலா, வாழை முதலான பழவகைகளையும் உணவின் பின் உட்கொண்டுள்ளனர். கற்கண்டு போட்டுக்காய்ச்சிய பாலையும் அக்கால மக்கள் பருகியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்றைய காலத்தில் இவற்றில் சில உணவுப் பழக்க வழக்கங்கள் அருகிக் காணப்படுகின்றமை கவனிக்கத்தக்கது.

வன்னித் தமிழரின் சடங்குகள், சம்பிரதாயங்கள் தொடர்பாகவும் ஆசிரியர் கூறத்தவறவில்லை. திருமணம், சீதனமுறமை, சித்திரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடப்பிறப்பு, போன்ற பண்டிகைகள், சடங்கு சார் நிகழ்வுகள் என்பவற்றையும் மக்கள் சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர். சாத்திர முறைகளிலும் நம்பிக்கை உள்ளவர்களாகக் காணப்பட்டதோடு கடவுள் நம்பிக்கை மிக்கவர்களாகவும் காணப்பட்டுள்ளமையையும் இந் நாவலூடே அறிய முடிகின்றது. கசம், பிளவை போன்ற நோய்கள் தொடர்பாகவும் சித்தமருத்துவமுறைகள் தொடர்பான அறிவினைக் கொண்டவர்களாகவும் அக்கால மக்கள் காணப்பட்டுள்ளனர். கடுக்காய் பேதிமருந்து, வேர்க்கொம்பு, பனங்கட்டித்தண்ணி, கொத்தமல்லி, சித்தமட்டி, பேரமட்டி, ஆடாதோடை, தேன், போன்றவற்றின் மருத்துவக் குணம் அறிந்து மக்கள் அவற்றினை மருந்துகளாகப் பயன்படுத்தி உள்ளமைமையை நாவல் காட்டுகிறது. இன்றும் வன்னி வாழ் மக்களிடையே சித்த மருத்துவ முறமை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கூத்து முறமைகளிலும் ஈடுபாடுள்ளவர்களாக அக்கால மக்கள் காணப்பட்டுள்ளனர். மகிடிக்கூத்து அக்கால மக்களிடையே ஆடப்பட்டு வந்துள்ளது. மகிடிக்கூத்து இரண்டு குழுவினரிடையே முரண்பாடுகள் ஏற்படுவதையும் அவர்கள் தங்கள் தங்கள் மந்திர சக்திகளைப் பயன்படுத்துவதையுமே உட்பொருளாகக் கொண்டு அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் இக் கூத்தின் மூலம் இஸ்லாமிய, இந்து சமயங்கள் சார் சடங்குமுறைகள் வெளிப்பட்டு நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. அக்காலப் பகுதியிலே இந்து, முஸ்லீம், மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ளமையினையும் நாவலூடாகத் தரிசிக்க முடிகிறது. சுல்தான் கண்டுவும், காதறுசாய்பும் கதிர்வேலனுடன் வேட்டைக்குச் செல்வதும், கிடைத்த இறச்சியைச் சமனாகப்பங்கிடுவதும், ஒன்றாக அமர்ந்து வெற்றிலை போடுவதும், கமுகமரங்கள் தறிக்கப்படும் போது ஒன்றாகச்சேர்ந்து போராடுவதும் இந்நாவல் காட்டிநிற்கும் இன ஒற்றுமைக்குச் சான்றாக அமைகின்றன. அத்தோடு “வேட்டைக்காரரர் போகுமுன் மான் இறந்துவிட்டால் அதன் இறச்சியை முஸ்லீம் மக்கள் உண்ணமாட்டார்கள்” என ஆசிரியர் கூறுவதானது முஸ்லீம் மக்கள் கொண்டிருந்த உணவுப்பழக்கம் தொடர்பான கொள்கையினை எடுத்துக் காட்டுவதாய் அமைகின்றது.

நாவல் காட்டும் மக்களிடையே கல்வியறிவென்பது அதிகம் இருக்கவில்லை எனினும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் அரச உத்தியோகம் செய்ய வேண்டுமானால் அரைகுறையாகவாவது ஆங்கிலம் கற்றிருக்க வேண்டிய தேவை இருந்தது. அக்காலத்தில் அனைவரும் கல்வி கற்றிருந்தார்கள் என்பதற்கில்லை. எனினும் திண்ணை மரபுக்கல்வி முறமை இங்கு காணப்பட்டுள்ளதோடு. பனையோலையில் எழுதும் மரபும் காணப்பட்டுள்ளது. நாணயப் புழக்கங்கள் மக்கள் மத்தியில் நிலவியதோடு அக்காலத்தில் அவை சதக்கணக்கு பெறுமதியானதாக அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கால மக்களிடையே அவை பெறுமதியானவையாகவே கருதப்பட்டன என்பது மறுப்பதற்கில்லை.

வன்னி வாழ் மக்களிடையே அக்காலத்தில் பல விளையாட்டுக்களும் பொழுது போக்கு அம்சங்களில் ஒன்றாகக் இருந்துள்ளதை இந் நாவலூடே காணமுடிகிறது. கிளித்தட்டு, பாக்குக்கட்டும் போட்டி, போர்த்தேங்காய், ஊஞ்சலாடல் போன்ற விளையாட்டுக்கள் விளையாடப்பட்டுள்ளமையைக் காணமுடிகின்றது. அத்தோடு விளையாட்டுப் பாடல்களுள் ஒன்றான ஊஞ்சல் பாட்டும் சிறுவர்களால் பாடப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. "**ஆலமிலை** போல வயிறு வாடுதேடி தோழி, அழகான ஊஞ்சலை **ஆறவிடு தோழி**" என்னும் பாடல் கூறத்தக்கது. வன்னி மண்ணின் வீரன் பண்டார வன்னியனது வாழ்க்கை வரலாற்றை நாடகமாக நடித்துக் காட்டுகின்ற நாடக மரபும் இம் மக்களிடையே நிலவியுள்ளது. வரலாற்றடிப்படையில் வன்னித் தமிழர்களது வீரத்தை மீள் நினைவுபடுத்தும் ஒரு வரலாற்று நாடகமாக இது அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

வன்னிச்சமூகத்தின் மண் வாசனை இந் நாவலுடாக வெளிப்பட்டு நிற்றலைக் காணமுடிகிறது. இதற்குச்சிறந்த எடுத்துக்காட்டாக " "மாட்டுப்பட்டிக்குச் சென்ற வினாசியர் நான்கைந்து பசுக்களில் பால் கறந்து வந்து கற்பகத்திடம் கொடுக்கிறார். அடுக்களையில் ஈரவிறகுடன் போராடிக் கொண்டிருந்த மீனாட்சி அடுப்பை மூட்டுவதில் ஒருவாறு வெற்றி கண்டுவிட்டாள். கற்பகம் பாற்கலயத்தை தாயிடம் கொடுத்துவிட்டு தனது நாளாந்த பணிகளில் ஈடுபடுகிறாள். வீடு, மால், அனைத்தையும் கூட்டித்தள்ளிவிட்டு வளவு முழுவதும் கூட்டித்துப்பரவு செய்தாள். பலாமரச் சருகுகளை கூட்டி அள்ளிக்குப்பையைப் புறம்போக்கான இடத்தில் குவித்தாள்." என ஆசிரியர் வினாசியின் வீடுபற்றி வர்ணிக்கும் போதே அச்சூழலின் மண் வாசனையைப் பதிவு செய்து விடுகிறார். வினாசியர் உமிக்கரியால் பல் துலக்குவதும், கதிர்வேலன் வேப்பங்குச்சியால் பல் துலக்குவதும் அச்சமூகத்தின் வழமையைக் காட்டி நிற்கிறது. நாடக மரபுகள், கூத்து முறமைகள், விளையாட்டுக்கள், பழமொழிகள், உணவுப்பழக்க வழக்கங்கள், தொழில் முறைகள் ஆகிய அனைத்து வாழ்வியல் அம்சங்களிலும் ஆசிரியர் வன்னிச் சமூகத்தின் மண்வாசனையைப் பதிவு செய்யத் தவறவில்லை என்றே கூறவேண்டும்.

குறிப்பிட்ட சமுதாயத்திற்கான பேச்சுவழக்கு பயன்பாடுகளையும் கொண்டு இந் நாவல் அமையப் பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. சீதனபாதனப்பேச்சு, வடிவுசங்கை, இடிச்ச புளிமாதிரி இருக்கிறியள், காத்தைத்தான் குடிக்கோணும், பலிக்கடாவாக்குதல், வேசையாடுதல், தோறை, எளிர்காட்டல், கிட்டகிளலைக்கும், போன்ற சொற் பிரயோகங்கள், வன்னி வாழ் மக்களிடையே காணப்பட்டுள்ளன, இவை சாதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது பேச்சு வழக்கு சொற்களாகவே அமைந்துள்ளன. எனினும் இன்றைய நிலையில் இவற்றில் சில சொற்பிரயோகங்களை காணமுடிவதில்லை. மேலும் வன்னியில்லா மக்களாலும் குறிப்பாக யாழ்ப்பாணச் சமூக மக்களிடையே சில சொற்கள் வழக்கில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் தான் கூறவந்த மையக்கருவை அதாவது வன்னிச் சமூகத்தில் ஏற்பட்ட வரலாற்று நிகழ்வை நாவல் என்ற இலக்கிய வடிவத்தினூடாக கூறியுள்ளமையும் வரலாற்றுச் செய்திகள் சிதைவுபடாத வகையில் நாவலுக்கான புனைவினை மேற்கொண்டுள்ளமையும் வரவேற்கத்தக்கது. சம்பவங்கள் மக்கள் மத்தியில் சென்றடையக்கூடிய வகையில் கதையினைச் சலிப்பின்றி நகர்த்திச்செல்வதும் தேவையான இடங்களில் பழமொழிகள், உவமையணிகள் போன்றவற்றைப் புகுத்தியும் சிறந்த பாத்திரவார்ப்புகளூடாக கதையினை நகர்த்திச் சென்றுள்ளமையும், காட்சிப்படுத்தல் தன்மையும் ஆசிரியரின் உத்திகளாக அமைவதோடு கதையின் வெற்றிக்கு காரணமாகவும் அமைந்துள்ளன.

வராற்று அறிவியற்துறையில் கல்வெட்டு, செப்பேடு, வெளிநாட்டார் குறிப்புக்கள். தொல்பொருட் சான்றுகள், நாணயங்கள் போன்றன ஒருவரலாற்றை எழுத உதவும் சான்றுகளாக எவ்வாறு அமைகின்றனவோ அதேபோல நாட்டாரியல் அம்சங்களும் ஒரு சமூக வரலாற்றை எழுத முக்கிய சான்றாக அமைகின்றன. ஒரு சமூகத்தின் தொன்மை, தொழில், பண்பாடு ஆகியன குறித்த தரவுகளை நாட்டாரியல் மரபுகள் கொண்டுள்ளன. ஓர் இனத்தின் வரலாறும் வாய்மொழி வழக்காறுகளை உள்ளடக்கிய நாட்டார் வழக்காறும் ஒன்றோடொன்று நெருங்கிய பிணைப்பைக் கொண்டவை. சுருங்கக் கூறின் இன வரலாற்றின் ஓர் அங்கம் நாட்டார் வழக்காறு என்று தான் கூறவேண்டும்.

ஓர் இனத்தின் வாய்மொழி வழக்காறுகளிலும், சடங்குகளிலும், பழக்க வழக்கங்களிலும் மற்றும் தட்டுமுட்டுச் சாமன்களிலும் அதன் சமூக பண்பாட்டு வரலாற்றுக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இதனடிப் படையிலே மக்கள் வரலாற்று எழுதுகைக்கான முதன்மைச் சான்றாக வாய்மொழி வழக்காறுகளைக் கொள்கின்றனர். அந்த வகையில் "கமுகஞ்சோலை" என்ற நாவல் ஆங்கில ஏகாதிபத்திய காலத்தில் வன்னியில் நடந்த உண்மைச் சம்பவங்களை கூறி நிற்பதோடு, மக்களது பாரம்பரிய பண்பாட்டம்சங்களை மீட்டி நிற்கின்றதென்றே கூறலாம். கதைப்பாடல்கள், பழமொழிகள், சடங்குகள், உணவுப்பழக்க வழக்கங்கள், தொழில் முறைகள், விளையாட்டுக்கள், வைத்திய முறைகள், கூத்துக்கள், நாடக மரபுகள், பழமரபுக் கதைகள், என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு குறிப்பிட்ட சமூக வரலாற்றை எழுத முடியும், இதனடிப்படையில் மேற்கூறிய அனைத்து அம்சங்களையும் தன்னகத்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கட்டிக்காக்கப்பட்ட வன்னிப் பாரம்பரிய, பண்பாட்டு வாழ்வியல் வழக்காறுகளைப் பேசி ஓர் சமூக வரலாற்றை இந்நாவல் கட்டமைத்துள்ளது என்றே கூறலாம், நாட்டுப்புறவியல் பார்வையில் இந்நாவலைப் பார்க்க முயலும் எவருமே இதனை ஒரு சமூகவரலாற்று நாவலாகவே கொள்வர். இவற்றினடிப்படையில் "கமுஞ்சோலை" என்ற இந்நாவல் ஓர் சமூக வரலாற்று நாவல் என்பதில் எவ்வித ஐயமில்லை.

## கமுகஞ்சண்டை - நாட்டார் கதைப்பாடல்

| | | | |
|---|---|---|---|
| **காட்டுராசா** | **கதிர்வேல்வினாசி** | **வாரும்** | **நீ ரென்றான்.** |
| **கமுகு தறிக்கக்** | **கட்டளை வந்தது** | **பாரும்** | **நீ ரென்றான்.** |
| **பக்கிரீத் தம்பி** | **சுலுத்தான் கண்டு** | **வாரும்** | **நீ ரென்றான்.** |
| **பாக்குமரங்கள்** | **தறிக்கிறகட்டளை** | **பாரும்** | **நீ ரென்றான்.** |
| **காதறு சாய்பு** | **மீராலெவ்வை** | **வாரும்** | **நீ ரென்றான்.** |
| **கமுகு தறிக்கிற** | **கட்டளை வந்தது** | **பாரும்** | **நீ ரென்றான்.** |

### ஊரவர் எதிப்பு

**எல்லோரும் கூடி ஆலோசனைகள் நன்றாய்ச் செய்தனரே!**
**கமுகு தறிக்கில் தலைப்புடைபடுவீர் சங்காரப்பயல்காள்!**
**கத்திக் குத்து விழுகுதுபார் காதறு சாய்பென்றான்.**

### ஹோட்டன் துரை ஓட்டம்

**திரண்ட சனத்தைக் கண்ணால் கண்டான் ஹோட்டன் துரைதானும்,**
**குமுறி விழுந்தே ஓடிப்போனான் ஹோட்டன் துரைதானும்,**
**குழுகுழு வென்றே வாரிப்பாயும் குஞ்சிநீலக்குதிரை**
**அரைநா ழிகைக்குள் அரண்மனை சேர்ந்தான் ஹோட்டன்**
**-துரைதானும்,**
**வக்கணம் கண்டு வெட்கம் பொருந்தி ஹோட்டன் துரைதானும்.**

### பெரியதுரைக்கு விண்ணப்பம்

**பெரிய துரைக்கு காயிதம் எழுதி ஹோட்டன் துரைதானும்**
**தண்ணீ ரூற்றில் கமுகுதறிக்கத் தடையாம் குடியோனோர்**
**சண்டை வந்து மூண்டு கொண்டது காணும் துரையே நீர்!**
**மன்னார் பரவரை அனுப்பிவையும் பரமா நீயென்றான்.**

### பெரியதுரை சினம்

**காயிதம் உடைத்து வாசித்துப் பார்த்தான் பெரிய துரைதானும்**
**கலகல வென்று சிரித்தான் அங்கே பெரிய துரைதானும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசை துடிக்கப் பார்த்தான் அங்கே பெரிய துரைதானும்
வாசல் மந்திரி தாமோதரியை வாரும் நீரென்றான்.

## தண்ணீரூற்றில் முகாமிட ஏற்பாடு

| | | | |
|---|---|---|---|
| கூடாரங்கள் | குடிவகை ஏற்று | குரிசை | நீரென்றான் |
| குசினிக்கேற்ற | சாமான் எல்லாம் | குறையா | தேற்றென்றான் |
| மருந்து குண்டு | இடிதுப்பாக்கி | வண்டியி | லேற்றென்றான் |
| மந்திரிமாரும் | வந்திடவேனும் | குரிசை | நீ ரென்றான் |
| ஊரிற் | சனத் தோ | டெதிரிடை | செய்தால் |
| உமக்கு | வசையாமே, | | |
| கூடாதையா | கமுகுதறிக்கக் | கூறும் | நீரென்றான் |
| உபாயம் பண்ணிக் | கமுகுதறிப்பேன் | உண்மை | தானையா. |

## பெரியதுரை வருதல்

அந்த வேளையில் வந்திறிங்கினான் பெரிய துரைதானும்
கூடாரங்கள் போட்டானங்கே பெரிய துரைதானும்.

## உடையாரை அழைத்தல்

கணக்கவளந்தான் காசி உடையான் வாடா! முன்னாலே
கோணன் விதானையைக் கொண்டோடி வாடா! காசி உடையா நீ
கூட்டி வாறேன் என்றே போனான் காசி உடையாரும்.

## விதானையாரிடம் கூறல்

பெரிய துரையுடை கட்டளை வந்தது வருவீர் தானிப்போ
சரிகை தலைப்பா தானேயணிந்தார் கோணன் விதானையுமே
வன்னிய சிங்கனைக் கொண்டோடிவாடா கோண விதானை நீ!
வயிறு குலுங்கப் பாய்ந்தார் அங்கே கோணன் விதானையுமே.

## வன்னிய சிங்கரை அழைத்தல்

ஐயா கேளும் ஐயர்கேளும் வன்னிய சிங்கையா!
பெரியதுரையுடைய கட்டளையின்படி வந்தேன் நானிங்கே
உம்மைக் கூட்டி வரச்சொன்னாரே பெரிய துரைதானும்.

## வன்னியசிங்கர் புறப்படல்

சட்டை தலைப்பா தன்னை மறந்தார் வன்னிய சிங்கருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பாத்துத்தோல் தன்னை மறந்தார் வன்னிய சிங்கருமே
தின்கிற வெற்றிலை பாக்கு மறந்தார் வன்னிய சிங்கருமே
திகைத்து நடுங்கி வந்து நின்றார் வன்னிய சிங்கருமே.

## பெரியதுரை சினம்

வன்னிய சிங்கா மதிகேடா நீ வாடா முன்னாலே!
வம்மிசம் எல்லாம் அடியோடிழிப்பாய் போடா பின்னாலே!
பூமியில் உன்னைப் போட்டு மிதிப்பேன் வன்னிய சிங்கா நீ!
போ போ என்று சினந்தே சொன்னான் பெரிய துரைதானும்.

## வன்னிய சிங்கர் மன்னிப்புக் கோரல்

கோபம் வேண்டாம் கோபம் வேண்டாம் ராசமன்னவரே!
கடிதே கமுகஞ் சோலை புகுவேன் ராச மன்னவரே!
என்றே சொல்லிப் போய்ப்புகுந்தான் கமுகஞ்சோலையிலே.

## ஏவலர் முறையீடு

மழையும் பொழியும் மயிரும் நனையும் வன்னிய சிங்கையா!
மாட்டோ மென்றால் கேட்கிறீர் இல்லை வன்னிய சிங்கையா!
சுனையில் அட்டை சூழ்ந்துகடிக்க துடைப்போம் கையாலே
சுற்றிப் பார்த்துக் கமுகுதறிக்கிறோம் சூழ்ந்து வினையாலே.

## கமுகுகள் சரிதல்

கடகட வென்று கமுகுகள் எல்லாம் பாறி விழுகுதையா!
கமுகு முழுக்கத் தறித்து முடிந்தது வன்னிய சிங்கையா!
பணத்துக் கெட்டாய் விற்றுதும் போச்சு பையும்வெளியாச்சே
ஊரிலே உள்ள ஆடுகள், கோழிகள் அதுவும் போச்சுதே!
கெட்டோமையா கெட்டோமையா வன்னிய சிங்கையா
கேடுவந்து சேர்ந்ததாலே வன்னிய சிங்கையா.

## பெரியதுரை கூற்று

தாரணி மெச்சு கின்ற தாமோதர மந்திரியே சற்றுக் கேளாய்,
பூரணி சிறக்கச் செய்த பொலிதரு தண்ணீருற்றின் வயலுக்கெல்லாம்
(நீரது சாச்சுதற்கு நெடுநாளாய் இடஞ்சல் செய்த)
பேரணி கமுகஞ் சோலை பிரட்டியே தந்திட்டாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை மோடியில் அமைந்த கோவலன் கூத்து

சாகித்தியரத்னா கலாநிதி முல்லைமணி

ஈழத்தின் மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணப் பிரதேசங்களைப் போலவே முல்லைத்தீவு பிரதேசத்திலும் பல நாட்டுக் கூத்துக்கள் ஆடப்பட்டு வந்துள்ளன. குசலவன், கர்ணன் போர், வெடியரசன் நொண்டி நாடகம், ஆட்டுவணிகன் காத்தவராயன், கோவலன் கூத்து என்பவை இவற்றுட் சிலவாகும். இவற்றுள் கோவலன் கூத்தும், காத்தான் கூத்துமே இன்றுவரை மக்கள் மத்தியில் செல்வாக்குடன் நிலவுகின்றன. இவை இரண்டும் கிராமிய தெய்வ வழிப்பாட்டுடன் இணைந்திருப்பது தொடர்ந்து நிலைபெறுவதற்கான காரணமாகும்.

கண்ணகை அம்மன் வழிபாடும், முத்துமாரி அம்மன் வழிபாடும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரசித்தி பெற்றுத் திகழ்கின்றன. நாவலரின் எதிர்ப்பால் யாழ்ப்பாண மாவட்டத்தில் கண்ணகி அம்மன் வழிபாடு தளர்ச்சியடைந்தும், முள்ளியவளை வற்றாப்பளை கண்ணகி அம்மன்பால் வடமாகாண மக்கள் அனைவரும் ஈர்க்கப்பட்டனர் எனக் கொள்ளலாம். கிழக்கு மாகாணம் முழுவதும் ஊர்கள் தோறும் கண்ணகை அம்மன் கோயில்கல் உண்டு எனினும் கோவலன் கூத்து முல்லைத்தீவு பிரதேசத்தைப் போல அங்கு முக்கியத்துவம் பெறவில்லை.

சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ் காப்பியம் கோவலன் கண்ணகி வரலாற்றைக்கூறுவது யாவரும் அறிந்ததே. ஆனால் யாழ்ப்பாணத்தில் வழங்கும் கோவலனார் கதை மட்டக்களப்பிலுள்ள கண்ணகி வழக்குரை, முல்லைத்தீவிலுள்ள சிலம்பு கூறல் என்னும் பொதுமக்கள் காப்பியங்களில் கூறப்படும் கோவலன் கண்ணகி கதை சிலப்பதிகாரக் கதையை விட விரிவானதாகவும் வேறுபாடுடையதாகவும் திகழ்கின்றது. சிலப்பதிகாரம் மானிடப் பெண்ணொருத்தி தன் கற்பின் திண்மையால் கடவுள் நிலை அடைவதை சித்தரிக்கிறது. ஈழத்து பொதுமக்கள் காப்பியங்கள் உமாதேவியாரின் அவதாரமே கண்ணகி என்கிறன. உமாதேவியார் பாண்டியன் மகளாக மாங்கனியில் அவதரித்ததாகக் கூறப்படுகின்றது.

கண்ணகை அம்மன் வழிபாடு மக்கள் மத்தியில் நிலை பெற்று விட்டபின்னர் சைவமரபில் இவ்வழிபாட்டுக்கு அமைதி காண வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கலாம். மானிடப்பெண்ணைத் தெய்வமாக வழிபடுவதற்குச் சைவமரபு இடந்தராது. எனவே கண்ணகியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாதேவியாரின் அவதாரமாகவே ஈழத்து காப்பியங்கள் சித்தரிக்கிறன. மூன்று ஈழத்துக் காவியங்களும் ஒரு மூலகாவியத்திலிருந்தே தேற்றம் பெற்றதற்கு அகச்சான்றுகள் உண்டு. இவற்றில் கூறப்படும் கண்ணகி கதையே கோவலன் கூத்தில் இடம்பெறுவதைக்காணலாம்.

கூத்து முழுவதுமே ஆங்காங்கு கண்ணகியின் தெய்வத்தன்மை வலியுறுத்தப்படுகின்றது. சிலம்பு கூறலிலும், கூத்திலும் கண்ணகி என்ற பெயர் கண்ணகை, கண்ணகையார் என இடம்பெறுகிறது. இக்காப்பியத்தில் கண்ணகை அம்மன் பிறப்பு, அற்புதங்கள், கண்ணகை அம்மன் கோயில் கொண்ட இடம் என்பன கூறப்படுகின்றன. கூத்தின் ஆரம்பத்தில் விநாயகர் காப்பின் பின்னர் கண்ணகை அம்மன் காப்பு இடம் பெறுகிறது.

"சீர் கொண்ட மதுரைமா நகரிலே மாறனுடை காங்கையால்
செம்பொற் குடத்தினில் மாங்கனியதாகியே திருவுருவமானதாயே
செழியனுடன் வாதாடிச் சிலம்பினால் தீப்பரப்பி..........."

என்னும் பாடப்பகுதியில் மாங்கனியிலிருந்து கண்ணகை அம்மன் உதித்த செய்தியும் பாண்டியனுடன் வழக்குரைத்து மதுரையை எரித்த செய்தியும் இடம் பெறுகின்றன.

கோவலன் கண்ணகியை திருமணம் செய்த பின்னர் அவன் அவள் அருகில் சென்றபோது கண்ணகியின் உடம்பில் இருந்து கணல் வீசியதையும் அப்பொழுது கண்ணகியின் தெய்வத்தன்மையை தான் உணர்ந்து கொண்டதாகவும் கோவலன் குறிப்பிடுகின்றான்.

கண்ணகையே மணமுடித்த மணவறையில்
அன்றுமொரு கனலுண்டாக்கி
பெண்ணணங்கு நீயுமொரு தெய்வமெனக்
கண்டேன் அப்பெருமையாலே

எனக் கூத்துப்பாடல் கூறுகினள்றது.

மாதவி தனக்கு சேரவேண்டிய பொன்னைக் கோவலன் கொடுக்கத் தவறியதால் காவிரி ஆற்றிலும், கிணற்றிலும் தள்ளிய போது அவன் கண்ணகையை நினைக்க அவள் அருளால் கோவலன் உயிர் தப்புகிறான். இந்தக்கூத்தில் தீவினை சூழ்பவனாகவும், கொடியவனாகவும் சித்தரிக்கப்டும் வஞ்சிப்பத்தன் (தட்டான்) களரியில் தோன்றும் போது கண்ணகை அம்மனைத் தோத்திரம் செய்கிறான்

"அன்னமே தாயே போற்றி
ஆதி கண்ணகையே போற்றி"

என்பது தட்டானின் தோத்திரப்பாடலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடன் எடுத்துச் சென்ற சிலம்பையும் கோவலனிடம் கைப்பற்றிய சிலம்பையும் கண்ணகை அம்மன் தெய்வ சக்தியால் வரவழைக்கும் நிகழ்ச்சியும் கூத்தில் இடம் பெறுகிறது.

## கோவலன்

கோவலன் என்னும் பாத்திரம் சிலப்பதிகாரத்தில் உள்ளதை விட வித்தியாசமான முறையில் படைக்கப்பட்டுள்ளது. மாதவியின் நடனத்தைக் கண்டு களிக்கும் போது அவன் மனதிலே சிறு சலனம் ஏற்பட்ட போதும் மாதவியுடன் கூடி வாழவேண்டும் என்ற எண்ணம் அவனிடம் இருக்கவில்லை. மாதவி கம்பத்தின் மீது ஏறிநின்று ஒரு மாலையை எறியப்போவதாகவும் அந்த மாலை யார் கழுத்தில் விழுந்தாலும் அவரே தனது ஆசை நாயகன் என்றும் கூறி மாலையை எறிகிறாள் அது கோவலன் கழுத்தில் விழுந்ததும் அவன் அதை வெறுப்புடன் கழற்றி எறிகிறான். மாதவி மூன்று முறை எறிந்த போதும் அது கோவலன் கழுத்திலையே விழுகிறது அப்பொழுது கோவலன் சினந்து.

"மீண்டும், மீண்டும் நீயெறிந்தாய்
மாலை கொண்டு போ - எனக்கு
விண்ணவர் சேர் கண்ணகை தான்
பெண்ணே கண்டுகொள்"

என்று கூறுகிறான். பின்னர் மாதவியின் தாயான சித்திரலேகையின் ஆலோசனைப்படி வெற்றிலையில் வசியமருந்திட்டுக் கோவலனுக்குக் கொடுக்கப்படுகிறது. அதனால் மயங்கியே அவன் மாதவி பின் செல்கிறான்.

கோவலன் கள்வனெனக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கொலைக்களம் கொண்டு செல்லப்படுகின்றான் அங்கு அவன் வரலாற்றைக் கேட்ட மளுவர் உண்மையை உணர்ந்து அவனைத் தப்பிச் செல்லுமாறு கூறுகின்றனர் பாண்டியனின் ஆணையை மீறித் தப்பிச் செல்ல விரும்பவில்லையென்றும் மளுவால் தன்னை பிளக்குமாறும் கோவலன் கூறுகின்றான்.

கள்வனென்ற பேருமுற்றேன் வறுமையுற்றேன்
கைப்பொருளும் இழந்துயிரும் கலங்கப் பெற்றேன்
உள்ளபடி ஒளித்தோடு தலிலும் பார்க்க
உயிர்விடுவேன் உல்பிளந் திங்கு வைப்பீரே.

கூத்தின்படி கோவலன் நற்பண்புகள் நிறைந்தவனாகவே காணப்படுகிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதவி

கோவலன் கூத்து ஆசிரியர் மாதவியின் குணவியல்புகளை தலைகீழாக மாற்றியுள்ளார். சிலப்பதிகார மாதவி உன்னதமான பண்புகளை உடையவள். கோவலனை எந்த வகையிலும் துன்புறுத்தி பணம் பறிக்கவில்லை. கணிகையார் குலத்தில் பிறந்தும் கோவலன் ஒருவனையே தனது நாயகனாகக் கொண்டாள்.

நாடகத்தில் வரும் மாதவியோ ஈவிரக்கமற்ற கொடியவளாகச் சித்திரிக்கப்படுகிறாள். கோவலனுக்குப் பலவித இன்னல்களைச் செய்கிறாள். அவனைக்கட்டிச் சவுக்கால் அடிக்கிறாள். கடும் வெயிலில் நிறுத்தி நெற்றியில் கல் வைக்கிறாள் காவிரியாற்றில் தள்ளி விடுகிறாள். கிணற்றில் விழுத்தி அவன் மீது கல்லைத்தூக்கிப் போடுகிறாள். கோவலனின் செல்வம் அனைத்தையும் கவர்ந்ததுடன் ஆடை ஆபரணங்கள் அனைத்தையும் பிடுங்கி எடுக்கிறாள். கண்ணகி பாத்திரத்தை உயர்த்திக் காட்டுவதற்கும் கூத்திற்குச் சுவையூட்டுவதற்கும், ரசிகர்களைக் கவர்வதற்கும் கூத்தின் ஆசிரியர் இத்தகைய மாற்றங்களைச் செய்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது.

## வட்டக்களரி

ஏனைய நாட்டுக்கூத்துக்களைப் போலவே கோவலன் கூத்தும் வடடக்களரியில் ஆடப்படும். முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலய முன்றலிலும், வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு முன்பும் இக்கூத்து ஆண்டுதோறும் ஆடுப்படுகிறது. நடிகர்கள் விரதமிருந்து பயபக்தியுடன் இக்கூத்தினை நிகழ்த்துவர். கண்ணகை அம்மன் கண்ணுக்கு ஒளி தருபவள், வெப்பு நோய்களிலிருந்து மக்களைக் காப்பவள் என்பதால் இக்கூத்தினை ஒரு சமுதாயக்கடமையாக முள்ளியவளை மக்கள் ஆண்டு தோறும் அரங்கேற்றி வருகின்றனர். தண்ணீரூற்று வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு, வட்டுவாகல், சிலாவத்தை, அளம்பில், செம்மலை, குமுழமுனை முதலான ஊர்களிலும் இக்கூத்து ஆடப்பட்டுவந்துள்ளது.

புதுக்குடியிப்பபைச்சேர்ந்த வே.சுப்பிரமணியம் அண்ணாவியாரே முள்ளியவளையில் கோவலன் கூத்தினைப் பழக்கியவராவர். திரு.த. பொன்னம்பலம், சி. கனகசபாபதி, க.வேலுப்பிள்ளை முதலியபலர் அண்ணாவிமாராக திகழ்ந்தனர். உயர்ந்த மேடையமைப்பு எதுவும் இக்கூத்துக்கு இல்லை நிலத்தில் சுற்றிவர பன்னிரண்டு மரத்தூண்களை நட்டு மேலே வெள்ளை கட்டியிருப்பர். ஒரு புறத்தில் மட்டும் வாசல் விட்டுச் சுற்றிவரக் கயிறுகள் கட்டப்பட்டிருக்கும் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூணுக்குமருகில் வாழைக்குற்றி நடப்பட்டிருக்கும் இதன் மேல் மண்சட்டி வைத்து அதனுள் தேங்காய் எண்ணெய் ஊற்றி துணிப் பந்துகளை வைத்து எரிப்பர். இந்த வெளிச்சத்திலேயே கூத்து நடைபெறும் நாடகப் பாத்திரங்களுக்கு முன்னர் தீவெட்டி பிடிக்கும் வழக்கம் இல்லை.

## பாத்திரங்களின் வரவு

பாத்திரங்கள் முதன் முறையாகக் களரிக்குள் புகுமுன் வாசலில் பிடிக்கப்படும் திரையின் முன்பு நின்று ஆடியபின்னரே உள் நுழைவர். பாத்திரங்களுக்கு ஏற்றவிதத்தில் வெவ்வேறு வகையான தாளங்களை மத்தளத்தில் இசைப்பர். தாளங்களைச் சொற்கோப்பினால் கொடுத்து அமைத்தலைத் தாளக்கட்டு என்பர். தாளக்கட்டின் முதற் பகுதியை நடிகரின் வரவு தொடக்கத்தில் அண்ணாவியார் படிப்பார்.

தாசிகள் ஆட்டத்தரு பின்வருமாறு அமையும்:

தாதா திந்தக்க தகதா திந்தக்க
தக்கச் சோம் த்தரிகிட (தாதா)
தந்தித்தத்தா திந்தத் தகிர்தோம்
தந்தித்தத்தா திந்தத் தகிர்தோம்

நடிகர்கள் களரியில் சுற்றி வந்து ஆடுவர். ஒரு பாடலில் இரண்டு அடிகளைப் பாடி ஆட இரண்டாவது அடியைமட்டும் பிற்பாட்டுக்காரர் பாடுவர் கூத்துப் பெரும்பாலும் பாட்டினாலேயே அமையும் சிறுபாண்மை வசனமும் இடம்பெறும் வசனங்களும் நீட்டி இசைத்தே போடப்படும் பாட்டைப் பலமுறை படித்தாலும் வசனங்கள் மூலமும் கதையை மக்கள் மனதில் பதியச் செய்வர் ஒலிபெருக்கியின் உதவியின்றியே பாட்டு நெடுந்தூரம் கேட்கக் கூடியதாகவே பாடப்படும்.

பார்வையாளர் களரியைச் சுற்றிவர இருந்தே நாடகத்தைப்பார்ப்பர் இதனால் பார்வையாளர் அனைவருக்கும் ஆட்டம், நடிப்பு, என்பவை தெரிய வேண்டும் என்பதற்காகனவே பாத்திரங்கள் சுற்றி வர ஆடும் வழக்கம் ஏற்பட்டது. மத்தள இசையே நாடகத்தை நடத்திச் செல்லும் அண்ணாவியார் அல்லது இன்னொருவர். மத்தளத்தை இசைப்பர். பாத்திரங்கள் களரியில் வருவதற்கும் போவதற்கும் மத்தள இசையே வழிகாட்டியாக அமையும் எனவே மத்தளம் வெறும் பக்க வாத்தியமாக மட்டுமன்றி நாடகத்தை நடத்திச் செல்லும் இசைக்கருவியாக அமைகிறது.

## சபை விருத்தம்

களரியின் ஒருபுறத்தில் அண்ணாவியார், பக்கப்பாட்டுக்காரர், ஏடுபடிப்போர் நிற்பர் இவர்கள் சபையோர் என அழைக்கப்படுவர் நாடக நிகழ்ச்சியைத் தொடர்பு படுத்த இடையிடையே சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தங்கள் பாடப்படும். கோவலன் கொலையுண்டபின் கண்ணகி தேடி வந்த நிகழ்ச்சி பின்வரும் சபை விருத்தத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

வண்டுறையும் சீரகத்தார்
மாறனுமே கோவலரை மாறுபாடாய்
தண்டனைசெய் தவருடலம்
மளுவாற் பிளந்திட்ட சாட்சியாலே
துண்டமுறும் தோள் கழுத்துக்
கைகால் மார்பிலிடம் தோற்றம் தன்னை
கண்டனள் கண்ணகை
மனதில் கெம்பிமிக் கொதித்துக் கதறுவாளே.

பல்வேறு இசைவிகற்பங்களைக் கொண்ட பாடல்களுடன் விருத்தங்களையும், கொச்சகங்களையும் பாத்திரங்கள் பயண்படுத்துவர். கோவலர் சிந்து பின்வருமாறு அமையும்.

தரு: தான தனன தன தான தனன
தானான தன்னன்ன தானான தன்னன்ன
சிந்து: தோற்றுவிட்டேன நிதியெல்லாம் தோற்றுவிட்டேனே
தோற்றேனே் முன்னோர்கள் தேடியே வைத்திட்ட
சொர்ணங்கள் இன்னதென் றெண்ணுக் கடங்காமல்
வார்த்தையால் மாதவி சேர்த்துப் பொருளொலாம்
மாலாசை பூட்டிக் கண்ணாலே மருட்டியை
வாங்கிக் கொண்டாளே, இனியென்ன தாங்கிக்
கொண்டேனே.

ஈழத்துத் தமிழருக்குரிய புராதன இசைவடிவங்கள் நாட்டுக் கூத்துக்களிலும், நாட்டார் இசையிலும் புதைந்து கிடக்கின்றன. இவற்றை இனங்கண்டு ஸ்வரப்படுத்தி ஈழத்திற்கெனத் தனித்தன்மை வாய்ந்த இசை மரபைத் தோற்றுவிக்க வேண்டியது இசை நிபுணர்களின் முக்கிய பணியாகும்.

கண்ணகை கொச்சகம் பின்வருமாறு அமையும்:

சொல்லார் இடைச்சியம்பை
சூழும் வினை கேளுமிப்போ
நல்லார் சிலம்பு விற்க
நாயகனார் போயடைந்தே
எல்லோரும் காணமாறன்
இருபிளவாய்ப் பிளந்தான் நான்
பொல்லாக் கனவுகண்டேன்
போறனடி மாமியாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டம்

ஆட்டங்களில் தீவினையாளனான தட்டான் ஆட்டமே நுணுக்கமானதும் விறுவிறுப்பானதுமாகும்.

தாதா கிடஜொம் - தகதரிகிட
தாதா கிடஜொம் - தகதரிகிட
தாதா கிடஜொம் - தகதரிகிட

தக்கச் சோம் தீம்த தாகிர்த
தக்கச் சோம் தீம்த தாகிர்த

தாம் தாம் தக்க தக்கச்சோம் தத்தரிகிட
தக்கச் சோம் தத்தரிகிட
தக்கச் சோம் தக்கச் சோம் தக்கச் சோம்
தரிகிட தந்தத் ததிங்கிண

ஒரு கையிலே தற்பையும் குழலும்
ஒரு கையிலே செப்பும் தராசும்
தலையாண் பாண்டிய ராசன் வாசல்
தட்டா னும்பை தோற்றினான்

மாறனுக்கிவன் மறலி யானவன்
வணிகருக் கொரு பிணிய தானவன்
கூறும் மதுரை சுடவே கொள்ளி
போலவே இவன் தோன்றினான்

தாகுதாகுதா தாகிடசுந்தரி (இரண்டு முறை)
தாகிடசுந்தரி தாரிகிடசுந்தரி (இரண்டு முறை)
தக்கச் சோம் தீம்த தாகிர்த

தட்டான் ஆட்டம் சபையைக் கவரும் விறுவிறுப்பான ஆட்டமாகும் தட்டான் பலமுறை நிலத்திலிருந்து இரண்டடி துள்ளி ஆடுவதுண்டு

## உடையலங்காரம்

முக்கிய பாத்திரங்கள் கரப்புடுப்பினையே அணிவர். இது வில்லுடுப்பு என்று அழைக்கப்படும். முழு உடுப்பு ஐந்து தட்டினைக் கொண்டதாகவும் இருக்கும். பிரம்பு வளையங்களை மூடித் துணியாலும் சரிகைகளாலும் இவ்வுடுப்பை ஆக்குவர். அடியில் பெரிய வளையமும் மேலே போகப்போகச் சிறிய வளையங்களும் பொருத்தி கரப்புடுப்பு அமைக்கப்படும். சோழன், பாண்டியன், மந்திரி, முற்கோவலன் போன்ற பாத்திரங்கள் கரப்புடுப்பு தரிப்பர் கோவலன் அரசனாக இல்லாதவிடத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனுக்கு சமதையானவன் என்பதைக் காட்டக் கரப்புடுப்பே அணிவான். முருக்கமரத்தைக் கோதிக்கிரீடங்கள் அமைப்பர். இக்கிரீடம் அழகான வேலைப் பாடுடையதாக இருக்கும். கிரீடத்தின் உச்சியில் குடை பொருத்தப்படுவதில்லை. புஜங்களில் சிறகினையெத்த கைப்பட்டி அணியப்படும் கையில் உருண்டையான காப்பினை அணிவர். அலங்காரமான நெஞ்சுப்பட்டி அணியப்படும் அரசர் வாளையும், மந்திரி கட்டாரியையும் வைத்திருப்பர்.

ஆட்டங்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறானவை நடிகருக்குரிய ஆட்டச்சிறப்பினை காட்டுவதான தாளக் கட்டுகளுக்கு ஏற்ப அவர்கள் ஆடுவர்.

பிற்கோவலன், தட்டான், சட்டம்பியார், பிள்ளைகள் போன்றோர் கரப்புடுப்பு அணிவதில்லை கூத்தின் பிற்பகுதியில் கோவலனின் ஏழ்மையைக் காட்டவே சாதாரண உடுப்பு அணியப்படுகிறது.

## நகைச்சுவை

நவரசங்களும் பொருந்த அமைக்கப்பட்டிருக்கும் இக்கூத்தில் அவலச் சுவையே விஞ்சி நிற்கின்றது. தட்டாரப் பெடியன் போன்ற சிறு பாத்திரங்கள் மூலமே நகைச்சுவை வெளிப்படுத்தப்படுகின்றது.

## பாடல்களின் யாப்பமைதி

ஆட்டமும் பாட்டும் ஒருங்கிணைந்து மெய்பாடுகளை மிகுவிப்பதற்குப் பொருத்தமான பல்வேறு யாப்பு வகைகளை கூத்தாசிரியர் கையாண்டுள்ளார். இவை ஆசிரியரின் யாப்பறிவினையும் இசையுணர்வினையும் நன்கு வெளிப்படுத்துகின்றன. ஏடுபெயர்த்து எழுதுபவர்கள் கவன ஈனத்தால் பாடல்கள் சிலவற்றில் ஓசை முறிவு இடம்பெற்றிருக்கிறது. கல்வி அறிவு குறைந்த அடி நிலை மக்களே இக்கூத்தினைப் பேணி வந்தமையால் இத்தகைய தவறுகள் ஏற்பட்டுள்ளன.

தோடயம் என்ற வடமொழிப் பாட்டு வகையைச் சேர்ந்த யாப்பின் மூலம் கூத்தின் கதை சுருக்கமாகக் கூறப்படுகின்றது. கொச்சகம் என்னும் பாவகை இக்கூத்தில் அடிக்கடி வருகிறது.

காய்முன் நிரைவரும் அளவடியாலோ, மாச்சீர்களும், இனச்சீர்களும் வரும் அறுசீர் கழிநெடியடியாலோ அமைந்து கொச்சகம் வரும் எனக் கூறப்படுகின்றது. கோவலன் கூத்தில் வரும் கொச்சகம் இந்த இலக்கண அமைதியை மீறுவதாக அமைந்திருப்பதைக் காணலாம் ஏறத்தாள விருத்தத்தின் சாயலை கொச்சகத்தில் காணலாம் கண்ணகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொச்சகம், கோவலன் கொச்சகம் எனப் பலவிடங்களில் இப்பாவினம் இடம்பெறுவதைக் காணலாம். விருத்தம் என்னும் யாப்பு வகையே கூத்தில் மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளது. நாடகப் பாத்திரங்கள் விருத்தம் மூலம் கருத்தை வெளிப்படுத்துவதை அடிக்கடி நோக்கலாம். கதையோட்டத்தின் தொடர்பை ஏற்படுத்துவதற்கும் விருத்தம் என்னும் பாவினம் பயன்படுத்தப்படுகின்றது.

கூத்துப் பாட்டுக்களைப் பாடும்முறையை அமைத்துக்காட்டும் ஒருவகைச் சொற்கோப்பே 'தரு' எனப்படும் தரு என்னும் யாப்பு மராட்டிய இசைப்பாட்டு வகையை ஒட்டியது என ஆய்வாளர் கருதுகிறார்.

தரு: தாகதந்தை தானானேதந்தை தானின தந்தை
தன தந்தை தானானே தந்தை

என்னும் தருவில்

கள்ளர் வந்து கொள்ளை கொண்டரோ! - தட்டாக்குலத்துக்
குள்ளப்புத்தி தள்ளப் போகா தோ!

என்னும் பாட்டு அமைந்திருப்பதைக் காணலாம்.

தேவாரம் என்னும் யாப்பு வகையொன்றும் கூத்தில் இடம் பெறுகின்றது. விசயமனோகரன் நாடகத்தில் இறை வணக்கப் பாடலாக இடம்பெறும் இசைப்பாட்டு தேவாரம் என அழைக்கப்படும். மூவிராசா நாடகத்தில் திருவாசகம் என்னும் யாப்பு பயண்படுத்தப்படுகின்றது. கோவலன் தனது எண்ணம் நிறைவேற வேண்டும் என அம்பிகை பங்காளனைத் துதிக்கும் பாடல் ஒன்று தேவாரம் என அழைக்கப்படுகின்றது. கலிப்பாக்களும் கூத்தில் இடம் பெறுகின்றன. கலிப்பாவின் இனமான கலித்துறை பின்வருமாறு அமைகிறது.

கையைப் பிடியெடி மாமகளே யோர்கலவைப் பொடி
பையைத் தொடர்ந்தவன் நாடியிலே கை படத்தடவி
செய்யும் இழமந்த நேரத்தி லேவெற்றி லையில் தடவி
செய்யும் வசம்விட்டுச் சீக்கிரம் போமுந்தன் திருமனைக்கே

கதை நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்து அகவற்பா பயன்படுத்தப்படுகிறது. மதுரைக்குச் செல்லும் வழியில் கோவலனும் கண்ணகையும் இடைச்சியர் சேரியை அடைகின்றனர். இடைச்சியர் வினாவியபோது கண்ணகை தன் வரலாற்றை அகவல் மூலம் எடுத்துச் சொல்கிறாள். கண்ணகை அகவல் எனக் குறிப்படப்படும் இப்பகுதி கலிவெண்பாவாக அமைகிறது. இது ஏடுபெயர்த்து எழுதியோர் தவறாகலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கும் ஆட்டத்திற்கும் உகந்த யாப்பாக சிந்து இடம் பெறுவதற்கு பின்வரும் உதாரணத்தைக்கூறலாம்.

விற்கவந்தேன் வாங்கவாருங்கோ! சிலம்புதன்னை
விலைமதித்தேன் கொள்ள வாருங்கோ! (விற்க)

பொற்புனைந்த நன் முகத்தாள்
நட்பு மிகு மாதவிக்கு
பொன்கொடுக்க வேனுமிதை
நல்விலையதாக விற்று (விற்க).

கோவலர் சிந்து, தட்டான் சிந்து, மளுவர் சிந்து, கட்டியக்காரர் சிந்து, கண்ணகை சிந்து என இந்தப் பாவினம் பல இடங்களில் வருகின்றது.

கூத்தில் இடம் பெறும் கண்ணகை ஒப்பாரி இப்பிரதேச மக்கள் மத்தியில் ஒப்பாரியை ஒத்த ஓசை ஒழுங்கினையுடையது.

வாசமலர் பஞ்சனை மேல்
மேவிமறை கண்துயிலும்
மன்னவரே, ஓவியமே என்னுடைய நாயகனே!
உனக்கு மரநிழலே பஞ்சு மெத்தை

மாதவி பரத மிதியுடன் கூடிய வெண்பா என்னும் தலைப்பில் ஒரு பாட்டு கூத்தில் உண்டு. இதில் வெண்பாவுக்குரிய இலக்கணம் கடைப்பிடிக்கப் படவில்லை முதல் மூன்று அடியிலும் வெண்பாவுக்குரிய சீர்களும், தளையும் அமைந்திருக்க, நாலாவது அடிகளையும் தட்டுவதையும் முச்சீராய் அமைவதற்குப் பதிலாக நாற் சீராய் அமைவதனையும் காணலாம்.

## முல்லை மோடி

மட்டக்களப்பு நாட்டுக் கூத்துக்களை ஆய்வு செய்தோர் அவற்றுக்குரிய இயல்புகளை வகுத்துக்கூறுகினள்றனர். ஆட்டம், பிற்பாட்டு பாடும் முறை, வசனங்களைப் பேசும் முறை, அணியும் உடுப்பு என்பவற்றால் இருமோடிகளுக்குமான வேறுபாடுகளைக் கூறுவர். வட மோடிக்கூத்துக்கள் போர் செய்து வெற்றிபெறுவதைக் கூறுவன. இவற்றில் வீரம், கோபம், அழுகை முதலிய சுவைகளை முதன்மைப்படுத்தும் தென்மேடிக் கூத்துக்கள் காதற் சுவை பயந்து காதல் கைகூடுவதோடு முடிவடைகின்றன. இவற்றில் நகை, வியப்புப் போன்ற சுவைகளே அதிகமாக இடம்பெறும் தென் மோடி ஆட்டங்கள் வட மோடி ஆட்டங்களை விட நுணுக்கமானவை, விறுவிறுப்பாவை இதனால் வரவைக்குறிக்கும் பாட்டை அன்னாவியார் அல்லது பக்கப் பாட்டுக்காரர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுவர். வடமோடி நடிகர் வரவுப்பாட்டைத் தாமே பாடுவர். தென்மேடியில் வசனங்கள் இழுத்துப் பேசப்படும். வடமோடியில் சாதாரணமாகப் பேசப்படும். வடமோடியில் பாட்டை நடிகர் படிக்க பக்கப்பாட்டுக்காரர் அதனை முழுதாகத் திரும்பிப்படிப்பர். தென்மேடியில் கடைசிப்பகுதியை மட்டும் பிற்பாட்டுக்காரர் படித்து விட்டு பாட்டு முழுவதற்குரிய தருவைப் படிப்பர் .

தென் மோடியர் உடைகள் வட மோடியர் உடைகளை விட பாரங்குறைந்தவை. வட மோடியர் மரத்தினால் செய்த பாரமான கெருடத்தை (கிரீட) அணிவர். தென் மோடியர் பூமுடியை அணிவர் வட மோடியில் வில்லும் அம்பும், தண்டாயுதமும், கட்டாரியும் ஆயுதங்களாக அமையும். தென்மோடியார் வாள் ஒன்றையே தரித்திருப்பர். வடமோடியார் கரப்பு உடுப்பினை அணிய தென் மோடியர் சாதாரண உடைகளை அணிவர். வட நாட்டு புராண இதிகாச கதைகளை வடமோடியும், தமிழ் நாட்டுக்கதைகளை தென்மேடியும் கொண்டவையாக இருக்கும் என்று பேராசிரியர் சு.வித்தியானந்தன் கூறுகிறார். (தமிழியற் சிந்தனை பக் 35யாழ்ப்பாணம் 1979) கலாநிதி சி.மௌனகுரு வடமேடி, தென்மேடிக்கூத்துக்ககளில் பட்டியல் ஒன்றை வெளியிட்டார் (மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள் பக்கம் 260 மட்டக்களப்பு 1998) இதில் தென்னாட்டுக்கதையான கண்ணகி கதையைக் கொண்ட கண்ணகையம்மன் நாடகக்கதை வடமோடிக்கூத்து எனக் கூறுகின்றார். தென் மோடியில் தமிழ் நாட்டில் எழுந்த கற்பனைக் கதைகளே அதிகமாக நாடகமாக ஆக்கப்பட்டன என்பதை அவதானிக்க முடிகிறது. கதையமைப்பில் வடமோடி தென்மோடி பாகுபாடு செய்தல் பொருத்தமாகக் காணப்படவில்லை.

தென்மேடி வடமோடிகளுக்குரிய பண்புகளுடன் கோவலன் கூத்தின் அமைப்பை பொருத்திப் பார்க்கும் பொழுது இக்கூத்து வடமோடி, தென்மோடி என்னும் பாகுபாட்டில் அடங்காத தனித்தன்மை வாய்ந்த தனி மேடியாகத் திகழ்வதைக் காணலாம்.

இந்தக் கூத்தினைப் பார்வையிட்ட போராசியரியர் சு.வித்தியானந்தன் இதுவரை ஆய்வு செய்யப்பட்ட வடமேடி, தென்மோடிக் கூத்துகளில் கோவலன் கூத்து அடங்கவில்லை இது ஒரு புது மோடியாக இருக்கின்றது. இந்தக் கலை வடிவம் முல்லைத்தீவுப் பிரதேசத்திற்கே உரித்தான சொத்து எனக் கூறியுள்ளார் அருணா செல்லத்துரையின் வன்னிப்பிராந்தியக் கூத்துக்கள் (கொழும்பு 2000 -பக்கம் 74)

எனவே இதனை முல்லைமேடியிலமைந்த கூத்து எனக்கூறுவதே பொருத்தமானது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்தின் கதை தமிழ் நாட்டைச் சேர்ந்தது. மிகவும் நுணுக்கமான விறுவிறுப்பான ஆட்டங்களை உடையது. போர் செய்து வெற்றி பெறுவதையோ, காதல் கைகூடுவது போலவோ கதை அமையவில்லை. வடமோடியர் அணியும் கரப்பு உடுப்பிணையே பெரும்பாலான நடிகர்கள் அணிவர். வாளும் கட்டாரியுமே இவர்களின் ஆயுதங்கள். பாட்டின் பிற்பகுதியையே பக்கப்பாட்டுக்காரர் படிப்பர். வசனங்கள் இழுத்துப் பேசப்படும் இவற்றை அவதானிக்கும் போது வடமேடிக்கும், தென்மேடிக்கும் உரிய பண்புகள் இணைந்திருப்பதுடன் முல்லைத்தீவுக்கே உரிய தனிப் பண்புகளும் இக்கூத்தில் விரவி வருவதைக் காணலாம். இக்கூத்தில் இடம் பெறும் இசை விகறபங்கள் மட்டக்களப்பு, மன்னார், நாட்டுக்கூத்துக்களில் பயிலும்இசையை விட வித்தியாசமான தனித்தன்மை வாய்ந்தவை ஆட்ட முறையிலும் குறிப்பிடக்கூடிய வேறுபாடுகளைக் காணலாம். இதனாலேயே இக்கூத்து முல்லைமோடியென அழைக்கப்படுகின்றது. இக்கூத்துப்பாணியில் ஆனை கட்டிய அரியாத்தையின் கதை "வேழம்படுத்த வீராங்கனை" என்னும் பெயரிலும் வன்னி நாட்டின் இறுதி மன்னனின் கதை பண்டாரவன்னியன் கூத்து என்னும் பெயரிலும் ஆக்கப்பட்டடுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து நாவல் உலகில் இன்றும் பேசப்படும் பாலமனோகரனின் "நிலக்கிளி"

திரு. ந.பார்த்தீபன்,
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கல்வியியற் கல்லூரி, வவுனியா.

"நிலக்கிளிகள் நிலத்தில் வாழ்பவைதான் உயரே பறக்க விரும்பாதவைதான். இலகுவில் பிறரிடம் அகப்பட்டுக் கொள்பவைதான். ஆனால் அவை எளிமையானவை!, அழகானவை!" இவ்வாறு நிலக்கிளி நாவலின் முடிவைக் காட்டுகின்றார் பாலமனோகரன் தனது முதல் நாவலிலேயே தமிழ் இலக்கிய நெஞ்சங்களில் அழுத்தமான இடத்தைப் பிடித்துக் கொண்டவர் இவர். "முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தண்ணீரூற்று என்ற கிராமத்தைப் பிறப்பிடமாக் கொண்ட இவர் இந்த நாவல் வெளிவந்த பின்னர் "நிலக்கிளி பாலமனோகரன்" என்றே வாசகர்களால் இன்று வரை இனங்கானப்பட்டு வருகிரார்." என மல்லிகைப் பந்தல் வெளியீடாக, இரண்டாம் பதிப்பாக 2002ம் ஆண்டு இந்நாவல் வெளியிடப்பட்ட போது பதிப்புரை வழங்கிய "மல்லிகை" ஆசிரியர் டொமினிக் ஜீவா குறிப்பிடுவது நோக்கலாம். புனை பெயர்களை தாமாகவே சூட்டிக் கொள்ளும் எழுத்தாளர் மத்தியில் தான் எழுதிய நாவலினூடாக அந்த நாவலில் பெயரை அடை மொழியாகக் கொண்டு இன்றுவரை பேசப்படுபவர் பாலமனோகரன் ஒருவர் தான் என்று கூறலாம்.

1973ம் ஆண்டு வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது இந்நாவல். வீரகேசரிப் பிரசுரமாக எத்தனையோ நாவல்கள் வெளிவந்த போதும் "நிலக்கிளி" நாவல்தான் இரண்டாம் பிரசுரத்தைக் கண்டுள்ளது. என்பது அதன் சிறப்பை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. வளமான வன்னி மண் தந்த தரமான படைப்பாளி பாலமனோகரன் என்றால் மிகையாகாது. தற்போது டென்மார்க்கில் வாழும் பாலமனோகரன் இரண்டாவது பதிப்புப் பற்றிக் கூறும் போது

> "என்னைக் காணும் வாசகர்கள் பலர் நிலக்கிளி எம்மிடம் இல்லையே, உங்களிடமாவது அதன் பிரதி இருக்கின்றதா என மிகவும் அக்கறையுடன் விசாரித்தார்கள் இதன் விளைவே இந்த இரண்டாவது பதிப்பு"

என தனது உரையில் குறிப்பிடுகிறார். அந்தளவிற்கு இந் நாவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களைக் கவர்ந்துள்ளது.

"நான் வன்னி மண்ணில் பிறந்தவன் அந்த மண்ணை மிக அதிகமாக காதலிப்பவன். இந்த மண்ணையும், மக்களையும் தான் எனது கதைகளில் அதிகமாக சந்திக்க முடியும்" என 1973ல் வெளியான முன்னுரையில் குறிப்பிடுகின்றார். மேலும் கூறுகையில் "இந்த இருபது வருட அகதி வாழ்வின் பின்னர் வன்னியினதும், அதன் மக்களினதும் அருமையும், பெருமையும் அதிகமாகவே எனது நெஞ்சை நிறைக்கின்றன" என்கின்றார். இதிலிருந்து "நிலக்கிளி" நாவலின் பாத்திரங்களும், அவர்கள் உலாவரும் நிலமும் படிப்பவர் மனங்களையும் நிறைக்கின்றன என்றே கூறலாம்.

இந் நாவலில் உலாவரும் பதஞ்சலி, கதிராமன் என்ற இரு பாத்திரங்களும் இன்றும் அழியாத சித்திரங்களாக வாசகர் நெஞ்சிலே உலாவருகின்றனர். பதஞ்சலி, கதிராமர் என்ற இருவரையும், அவா்களோடு தொடர்பு கொண்ட பாத்திரங்களையும் எழுத்தாளர் தான் நேசித்த அளவிற்கு வாசகர்களையும் நேசிக்க வைத்ததே அவர் நாவலின் வெற்றி எனலாம். எழுத்தாளன் தான் உருவாக்கும் பாததிரங்களை முதலில் காதலிக்க வேண்டும். அப்போது தான் வாசகர்களும் அவர்களை நேசிப்பர். தான் உருவாக்கும் பாத்திரங்கள் ஒவ்வொன்றையும் குழந்தைகளாக எண்ணும் தாய்மனம் எழுத்தாளனிடம் இருக்க வேண்டும். அத்தாய்மைப் பண்பு பாலமனோகரனிடம் நிறையவே உண்டு. என்பதற்கு "நிலக்கிளி" நாவலில் படைக்கப்பட்ட பாத்திரங்களே சான்று.

பாலமனோகரன் தனது கதாநாயகன் கதிராமனை அறிமுகப்படுத்தும் போது

> "தண்ணி முறிப்புக் காடுகளில் காணப்படும் மரைகள் நீலம் கலந்த கருநிறம் படைத்தவை, அழகிய கொம்புகளை தலையில் ஏந்தி அவை கம்பீரமாக நடக்கையில் காண்பவர் நெஞ்சு ஒரு தடவை நின்றுதான் பின் அடித்துக் கொள்ளும். அவ்வளவு கம்பீரம். கதிராமனுடைய நடையிலும் அதே கம்பீரம் காணப்பட்டது"

என வர்ணிக்கும்போது கதிராமனுடைய தோற்றம் வாசகர் மனதிலே இடம் பிடித்துக் கொள்கின்றது. மேலும்

> "சிறுவயது முதல் பாலும், தேனும், காட்டிறைச்சியும் ஊட்டி வளர்க்கப்பட்ட உடல், கடுமையான உழைப்பினால் உறுதி கொண்ட தசைகள், தகப்பன் வழிவந்த உயர்ந்த நெடிய தோற்றம், கரிய மேனி, சுருண்டகேசம் இவை அத்தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகித்திரண்டு கதிராமன் என்ற உருவில் நடமாடினான். காடு அவனுக்குச் சொந்தம். அவன் காட்டுக்கே சொந்தம். காட்டோடு அவன் கொண்ட தொடர்பு அவன் தோற்றத்தில் நன்கு தெரிகிறது"

இந்தக் கதிராமன் என்ற கதாநாயகனை எழுத்தாளர் வர்ணிப்பது, இராமனை கம்பன்

"மையோ, மரகதமோ, மறிகடலோ, மழைமுகிலோ..."

என வர்ணிப்பது போன்றிருக்கிறது. உண்மையில் இலக்கியங்கள் ஆணின் அழமை வர்ணிப்பது குறைவு. பெண்ணையே பெரும்பாலும் வர்ணிப்பர். வாசகரும் அதனையே விரும்புவர். ஆனால் இங்கு சற்று வித்தியாசமாக கதாநாயகன் வர்ணிக்கப்படுகிறான்.

பாலமனோகரன் கதாநாயகி பதஞ்சலியை அறிமுகப் படுத்துகையில்

"பதினாறு நிறைந்த பதஞ்சலி தண்ணி முறிப்புக் காடுகளிலே தன்னிச்சையாகத் திரியும் பெண் மான்களைப் போல் அழகும், நனினமும் நிறைந்து விளங்கினாள். கிடுகிடுவென வளர்ந்து மதாளித்து குலை தள்ளியிருக்கும் வாழையின் செழுமை அவள் உடலில் தெரிந்தது"

என்று அவள் அழகை வெளிப்படுத்துகின்றார். இன்னோரிடத்தில்

"அவளுடைய சிவந்த விரல்களையும், செழுமையான முகத்தையும், வண்டு போன்ற விழிகளையும் பார்க்கையில் கதிராமனுக்கு புதியதோர் உணர்வும் சுகானுபவமும் ஏற்பட்டன."

என உவமை நயம் ததும்பக் கதையை நகர்த்திச் செல்கின்றார். வாசகரின் வாசிப்பு நயத்திற்கான உத்திகளாக இவற்றைக் கருத முடிகின்றது. பதஞ்சலியின் மீதான வர்ணிப்பு வளர்ந்து செல்லும் போது வாசகர்களை ஓர் எதிர்பார்ப்பினுள் நாவலாசிரியர் தள்ளி விடுகின்றார்.

பாத்திரங்களை வர்ணிக்கும் போது நிலம், பொருள், விலங்கு, காலநிலை என்பவற்றோடு தொடர்புபடுத்தி விரசமில்லாது அத்தோடு காட்சிகளையும் காட்டிச் செல்வது சிறப்பாக அமைகிறது. இதனால் பாலமனோகரன் ஒரு சிறந்த வாசகனாக இருந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளலாம். அதனால் தான் பாலமனோகரன் தான் வாழும் ஐரோப்பிய நாட்டிலும் அங்கு வாழும் மக்களின் மொழியை நன்கு கற்று அவர்களது மொழியிலேயே தனது படைப்புக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிருஷ்டித்து வருகின்றார்.

தந்தையைத் தெரியாத, தாயையும் இழந்த பதஞ்சலி பேரன் உமாபதியுடன் வாழ்ந்து வரும் வேளையில் பாம்பு கடித்துப் பேரன் இறக்க அநாதையாக்கப்படுகின்றான். அயல் வீட்டுக்காரனான கதிராமன் தந்தையின் எதிர்ப்புக்கு மத்தியில் பதஞ்சாலிக்கு வாழ்வு கொடுக்கின்றான். இவ் எளிமையான மக்களின் வாழ்க்கையை

> "எளிமை நிறைந்த வாழ்விலே ஆசைகள் மிகக்குறைவு. அந்த மிகச்சிலவான ஆசைகளும் எளிமையாகவே இருப்பதனால் அவை இலகுவில் நிறைவேறிவிடுகின்றன. அவை நிறைவேறிய ஆன்மதிருப்தியுடன் வாழும் எளிமையான மக்களின் மனங்களில் நிராசைகளோ, ஏமாற்றங்களோ நிரந்தரமாகத் தங்கியிருப்பதில்லை. சினம், பொறாமை, கவலை முதலியவற்றைப் பெரிய அளவிலே பிறப்பித்து அவர்களை அலைக்கழிப்பதில்லை"

எனத் தொட்டுக் காட்டும் சந்தர்ப்பங்களில் மிகச்சிறந்த கருத்துக்களை ஆசிரியர் கூற்றாக வெளிப்படுத்துவது (எதுவித) பிரசார வாடையுமில்லாது இயல்பாக அமைகிறது.

பதஞ்சலியோ, கதிராமனே உலகம் என வாழ்கின்றாள். அவள் ஒரு "நிலக்கிளி" போல் தான் வாழும் சின்னஞ் சிறிய குடிசையில் பெரிய எதிர்பார்ப்புக்கள் இன்றி இருப்பதனை

> "நிலத்தில் பொந்துகள் அமைத்து அவற்றினுள் கூடு கட்டி வாழும் நிலக்கிளிகள் தாம் இருக்கும் வளைகளை விட்டு அதிக உயரத்துக்கெல்லாம் பறப்பதில்லை. தொடர்ந்து ஓரிடத்திலே தரித்திருக்காமல் அடிக்கடி நிலத்தை ஒட்டியவாறே பறக்கும் காட்சி அவற்றின் அழகையும், குதூகலத்தையும் மேலும் மிகைப்படுத்திக்காட்டும்"

எனக் கூறுவது ஆசிரியர் கூறவந்த கருத்தினை வாசகர் மனதிலே பதியவைக்கின்றது.

கதிராமர் - பதஞ்சலி இருவரதும் சந்தோசமான வாழ்க்கை ஓட்டத்தின் தடைக்கல்லாக அமைகின்றார் சுந்தரம் வாத்தியார். வளர்ச்சியடையும் சமூகத்தின் குறிகாட்டி இவர் பரஸ்பரம் இக் குடும்பத்தோடு நெருக்கியவராகிறார். விளைவு....? கல்வி அறிவு வளரவளர மனிதன் தடம்மாறிப்போவதை பதஞ்சலியின் உள்ளத்தில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட சலனத்தின் மூலமும், சுந்தரம் வாத்தியாரின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றத்தினூடாகவும் நாவலாசிரியர் வளர்த்துச் செல்வது இயல்பாக அமைகின்றது. சந்தர்ப்பமும், சூழ்நிலையுமே மனித நடத்தைகளை தீர்மானிக்கின்றன. வாசகர்கள் சுந்தரம் வாத்தியாரிலோ, பதஞ்சலியிலோ காழ்ப்புணர்வு கொள்ளாது நாவலை வளர்த்துச் செல்லும் எழுத்தாளரின் ஆற்றல் போற்றப்படல் வேண்டும்.

சுந்தரமும், பதஞ்சலியும் மிகவும் நல்லவர்களாகவே காட்டப்படுகின்றனர். கதிராமனுக்குத் துரோகம் செய்யும் எண்ணம் அவர்களுக்கில்லை. இருப்பினும், இயற்கையின் சீற்றத்தால் அந்தத் துரோகம் நிறைவேறிவிடுகின்றது. அதன் பிறபாடு

> "எது நடக்கக் கூடாது என்று எண்ணியிருந்தானோ அது உண்மையில் நடந்துவிட்டு அதன் உண்மையை உணர்ந்தபோது அவனுடைய மனம் வெடித்து விடும் போல் இருந்தது"

என எழுத்தாளர் கூறிக்காட்டுமிடத்து சுந்தரத்தின் துரோகம் தொடர்பாக அவன் மீது காழ்ப்போ, வெறுப்போ ஏற்படாத நிலை தோன்றுகின்றது. அதே போல் இந்தப் பயங்கரப் புயல் வீசிய இரவின் பின்னர் நெருப்பைத் தொட்டுப் பார்த்துச் சுட்டுக் கொண்ட குழந்தை ஒன்று நெருப்புச் சுடும் என்று அனுபவப்பட்டுக் கொள்வது போன்று அவளும் தன்னைச் சுட்டுக் கொண்டாள். அவள் குமுறி அழுதாள் எனக் கூறும் போது, பதஞ்சலிமேல் இரக்கமே தோன்றுகிறது. எனவே தான் படைத்த பாத்திரங்களை பாலமனோகரன் நன்கு நேசிப்பது அவர் கதையோட்டத்தின் வெளிப்பாடு ஆகிறது.

மண்வாசனை கமழும் நாவல்களின் வரிசையில் நிலக்கிளிக்கு நிகரான நாவல்கள் இலங்கையில் எழவில்லை என்று துணிந்து கூறலாம்.

> "கார்த்திகை மாதத்தின் கடைசி நாட்கள் அடிக்கடி பெய்த பெருமழையில் குளித்த தண்ணி முறிப்புக்காடுகள் பளிச் சென்று இருந்தன. ஈரலிப்பை சுமந்து வந்த காலை இளங்காற்றில் முரலிப்பழங்களின் இனிய மணம் தவழ்ந்து வந்தது"

இவ்வாறு நாவல் தொடங்குகின்றது. இடையிடையே வன்னியின் வரட்சி தோன்றிய போதும் நாவலில், மழையில் குளித்த தண்ணி முறிப்புக்காடுகள் போன்று வாசகர் மனங்கள் குளிர்ச்சியாகவே இருந்தன.

> "அடர்ந்து கிடக்கும் இருண்ட காடுகள், அவற்றின் ஊடாக சலசலத்து ஓடும் காட்டாறுகள், அவற்றின் கரைகளிலே கானமிசைக்கும் காட்டுப் பறவைகள்......."

7732 (P)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இயற்கை வர்ணனைகளில் மண்வாசனை மணம் கூடுகிறது.

> "வேட்டை நாய்களால் துரத்தப்பட்ட குழிமுயல் பற்றைக்குள் ஒழிந்து கொள்வது போல உமாபதியாரும் ஏதோ ஒன்றால் துரத்தப்பட்டவனாகத்தான் ஓடி வந்தார். இது வரை இயற்கையின் இறுக்கத்தில் இருந்த அந்தத் தொன்னம்பாளை இன்று வெடித்து மெல்லச் சிரித்து நின்றது. அவ் வெடிப்பினூடாக தெரிந்த அழகிய முத்துக்கள் உமாபதிக்கு மகள் முத்தம்மாவின் சிரிப்பை ஞாபகப்படுத்தின. அதே பாளைச் சிரிப்பு இவரும் நெடுகக் காட்டிலே சந்தோஷமாகத் திரிகிறார். அந்த மரையைப் போல பெருமழையில் அகப்பட்ட செங்கீரைக்கன்றைப் போல அவள் கசங்கிக் காணப்பட்டாள். தாயை இழந்த மான்குட்டி யைப் போல் நிர்க்கதியாகக் கிடந்த அவளை......"

இவ்வாறு கதைக்கேற்ப, பாத்திரங்களுக்குக் கேற்ப வர்ணனைகளை அவற்றை மண்வாசனையோடு வாசகரின் மனம் கவரும் வண்ணம் அமைந்திருக்கிறார் பாலமனோகரன்.

இன்று நாற்பத்தி இரண்டு வருடங்கள் கடந்தாலும் இந் நாவலை வாசிக்கும் போது அதே விறுவிறுப்பு, அதே நாட்டம், வாசிக்கத் தூண்டும் ஆற்றல் என "நிலக்கிளி" மிக உயர்ந்த தரத்தைக் கொண்டுள்ளது. மரபு ரீதியாக சிந்தனையின் அடிப்படையில் சில மீறல்களைச் செய்ய முற்படாத நிலையும் இந்நாவலில் காணப்படுகின்றது. கதிராமனின் தந்தை உயிர் பிரியும் தறுவாயில் கதிராமனுக்கு மகன் கிடைப்பது போன்ற விடயத்தினைத் தவிர்த்திருக்கலாம். கதிராமனுடன் திருமணபந்தத்தில் ஈடுபட்ட பதஞ்சலி சுந்தரம் வாத்தியாருடன் ஒரு கணப்பொழுதில் கொண்ட தொடர்பு சற்றுச் சிந்திக்க வேண்டிய விடயமாகிறது. மேலும் தன் கணவனுடன் உறவு கொண்ட போதும் சுந்தரத்துடனான கணப்பொழுது உறவிலே தனக்குத் குழந்தை உருவாகி அது தனக்கு அவமானமாக கருதித் துடிப்பதும் ஏற்றுக் கொள்வதில் ஒரு நெருடலைத் தருகின்றது. கதிராமன் நீண்ட காலம் இல்லாது இருந்தால் பதஞ்சலியின் பயம் நியாயமானது. இருப்பினும் தான் சொல்ல வந்த விடயத்தை "நிலக்கிளி" எனும் பறவையை குறியீடாக்கி வாசகரை சிந்திக்கவைத்து நிலக்கிளிகள் இலகுவில் பிறரிடம் அகப்பட்டுக் கொள்ளக் கூடியவையே என்ற உண்மையை நிலை நாட்டிய பால மனோகரனின் கருத்தியல் அறிந்து போற்றுதற்குரியதாகும். இன்றும் எத்தனையோ பெண்கள் நிலக்கிளிகளாகவே எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிப் பாடசாலைகளும் அவற்றின் இன்றைய நிலையும்

சி.மோகனராசா
மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர்,
மாவட்ட செயலகம், முல்லைத்தீவு.

## 01. அறநெறிப் பாடசாலை என்பது?

இத்தகைய வினா பலரின் மத்தியில் எழுகின்ற வினாவாகும். இது பாடசாலை கற்பித்தல் செயற்பாடுகள் யாவற்றிற்கும் அப்பாற்பட்டதாகும். வேலை வாய்ப்பினைப் பெறுவதற்காகவோ அன்றி வருமானத்தினை ஈட்டுவதற்காகவோ நடாத்தப்படுவதில்லை. பண்புமிக்க ஒரு சமூகத்தினை உருவாக்குவதற்காக நடாத்தப்படும் பாடசாலையாகும். சமயக்கல்வியையும், அறக்கல்வியையும், ஒழுக்கவிழுமியங்களையும், பண்பாட்டு மற்றும் கலாசார அடையாளங்களை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் நடாத்தப்படும் சேவைநோக்கம் கொண்ட பாடசாலையாகும்.

அறநெறிப் பாடசாலைகளை நடாத்துவதற்கு ஆலயங்களுக்கும், இந்து மத நிறுவனங்களிற்கும் மட்டுமே உரிமை உண்டு. வாழ்க்கைக்கான கல்வியினைக் கற்பிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட கல்வி முறையினை ஆலயங்களை மையமாகக் கொண்டு நடாத்துவதே மிகவும் பொருத்தமானதாகும். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஒளவை மொழிக்கு இனங்க ஆலயத்தின் முக்கியத்துவம் உணரப்படுவது போல அறநெறியின் முக்கியத்துவத்தினையும் ஆலயங்கள் அறிந்து செயற்பட வைப்பது அவசியமானதாகும்.

## 02. ஆலயங்கள் ஏன் அறநெறிப்பாடசாலையினை நடாத்த வேண்டும்?

ஆலயம் என்பது வெறுமனே வழிபாட்டிற்கு மட்டும் உரியது அல்ல. நல்ல பண்புகளை வளர்க்கின்ற களமாகவும் அமைவது அவசியமாகும். ஆலயத்தைப் பாரிபாலனம் செய்யும் பரிபாலகர்களும் ஒழுக்கம் மிக்க பண்பாளர்களாக இருக்க வேண்டும் பண்புகள் என்று கூறினால் அது பாரம்பரிய ரீதியாக வரவேண்டியது. இவற்றையெல்லாம் ஆலயங்களைப் பரிபாலிப்பவர்கள் அறிந்திருக்க வேண்டும். ஆலயத்தில் நடைபெறும் கிரியைகள், விழாக்கள், விரதங்கள், உற்சவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றிற்கு இறைவனை அலங்கரிப்பதற்கு மலர்மாலைகள் தேவைப்படும். இவற்றை அறநெறி மாணவர்களைக் கொண்டே மலர் கொண்டு மாலை தொடுக்க முடியும். ஆனால், இன்று அதற்காக பெருமளவு பணம் செலவு செய்யப்படுகின்றது. தோரணம் கட்டுதல், கோலம் போடுதல், பிரசாதம் பொதியிடுதல் போன்ற செயற்பாடுகளை இம் மாணவர்களைக் கொண்டே செய்துவிட முடியும்.

இறைவன் இசைப்பிரியன் என்றும் இசையிலே தன்னை மறப்பான் என்றும் கூறப்பட்டாலும் ஆலயத்திலே பண்ணோடு தோத்திரத்தை ஓதக்கூடியவர்கள் இன்று அரிதாகிவிட்தோடு புராணங்கள் படிப்பதற்குக் கூட வேதனம் கொடுத்து பணிக்கமர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அறநெறிக் கல்வியினூடாக பண்ணிசை வகுப்புக்கள் புராண படிப்பு முறைகளைப் போதிப்பதனூடாக இப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும்.

ஆலயத்தில் நடைபெறும் அனைத்து சரியைத் தொண்டுகளிலும் இளம் சந்ததியினரை ஈடுபடுத்த இது வாய்ப்பாக அமையும் பெரும்பாலான ஆலய பரிபாலன சபையினர் உற்சவ காலங்களில் சுவாமியை சுமந்து வீதிவலம் வருவதற்கே ஆட்கள் இல்லை என்று கூறிக்கொள்கின்றனர். இவற்றிற்குத் தீர்வுகாண வேண்டுமாயின் ஒவ்வொரு ஆலயமும் அறநெறிப் பாடசாலையின் முக்கியத்துவத்தினை உணர்ந்து செயற்பட வேண்டும்.

## 3. இன்றைய கல்வி முறையும் அதனால் பாதிப்புறும் சமயக் கல்வியும்

இன்றைய பாடசாலைக் கல்வி முறையும் உயர் கல்வி மற்றும் ஏனைய கல்வி முறைகள் யாவும் பொருளியலை நோக்காகக் கொண்டவையாகும். ஏதாவது ஒரு வாழ்வாதாரத்தை ஈட்டிக் கொள்வதற்கான கல்வி முறையாகவும் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்தவையாகவும் காணப்படுவதால் சமய மற்றும் ஒழுக்கம் நோக்கிய கல்விக்கு முக்கியத்துவமளிப்பதில்லை. பாடசாலைகளிலோ அல்லது தனியார் கல்வி நிலையங்களிலோ சமயக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. அதனால் சமய மற்றும் ஒழுக்கங்களை போதிப்பதற்கு அறநெறிப் பாடசாலைகள் அவசியமாகின்றன. உயர் தரத்தில் கலைத்துறை பயில்கின்ற மாணவர்களில் இந்து நாகரிகம் கற்கின்ற மாணவர்களை ஏளனம் செய்கின்ற நிலை காணப்டுவதனால் அவர்கள் மிகவும் அரிதாகக் காணப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. அறநெறியும் அதன் ஆசிரியர்களும்

அறநெறிப் பாடசாலைக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் உயர்தரத்தில் இந்து நாகரிகம்/ இந்து சமயம் கற்று அப் பாடத்தில் சித்தி பெற்றிருக்கின்றவர்களே அடிப்படைத் தகுதியாகக் கருதப்பட்டு அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் உயர்தரத்தில் இப்பாடங்களை கற்கின்றவர்கள் அரிதாக இருப்பதால் உரிய முறையில் ஆசிரியரை நியமிக்க முடியாதுள்ளது. இதனால் தகுதியற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டியதாகவும் உள்ளது.

அறநெறி ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்குவதில்லை. ஆண்டுதோறும் அத்தியாவசிய தேவையின் நிமித்தம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். அறநெறி ஆசிரியர் சேவை நோக்கம் கருதிய பயன் கருதாத சேவையாகும். சமூகசேவை மனப்பான்மை கொண்ட வேதனத்தினை எதிர்பார்காதவர்களே இப் பாடசாலையில் பணியாற்றுகின்றனர். தகுதியான பலர் வேதனத்தை எதிர்பார்ப்பதால் அறநெறிப் பாடசாலைகளில் கற்ப்பிப்பதற்கு முன்வருவதில்லை.

ஆண்டுதோறும் ஆசிரியர்களுக்கான கருத்தமர்வு மற்றும் பரீட்சைகள் போன்றன திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். ஞாயிறு தினங்களில் காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை அறநெறி வகுப்புகள் நடைபெற்றாலும் தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகளால் அறநெறிப் பாடசாலைகளை நடாத்த முடியாதுள்ளது என்பது ஆசிரியரிகளின் கருத்தாகும்.

ஆசிரியர்களிடம் விட்டுக்கொடுப்பு, வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு என்பன கட்டியெழுப்பப்படுதல் வேண்டும். போட்டிப் பரீட்சைகள், கலை இலக்கியப் போட்டிகளின் போது இத்தகைய மனப்பாங்கின்மையினை உணர முடிகின்றது. தோல்வியுறும் போது இனி பாடசாலையினை நடாத்த மாட்டோம், போட்டியில் கலந்து கொள்ளமாட்டோம் எனக் கூறுவது வருந்துவதற்குரியதாகும்.

## 5. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிக்காக ஆற்றும் பணி

மேற்படி திணைக்களத்தில் பதிவுசெய்யப்படும் நாடளாவிய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், மற்றும் பயிற்சி நூல்கள் போன்றவற்றையும் மாணவர் மற்றும் ஆசிரிர்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருடைகள், தளபாடக் கொள்வனவு, அறநெறிப் பாடசாலை அமைப்பதற்கான நிதியுதவிகள் என்பவற்றை வழங்குவதோடு போட்டிப் பரீட்சைகளை நடாத்தி மாவட்ட மட்ட தேசிய மட்ட வெற்றியாளர்களுக்கு பரிசில் மற்றும் சான்றிதழ்களை வழங்கிவருகின்றது.

பண்ணிசை வகுப்புகள், குருபூசைகள், விழாக்கள் போன்றவற்றினை நடாத்துவதற்கு நிதியுதவியினை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். பிரதேசமட்டங்களின் இந்து கலாசார உத்தியோகத்தர்களை நியமித்து மேற்படி அறநெறிப் பாடசாலையினை கண்காணிக்கும் பணியில் ஈடுபடுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

அரசினால் முன்னெடுக் கப்பட்டுவரும் இத்தகைய சேவையினை உரிய முறையில் பெற்று பயன்பெறும் ஆலயங்களோ, அறநெறிப் பாடசாலைகளோ அரிதாகவே உள்ளன. ஒட்டு மொத்த இந்து சமூகமும் இணைந்து எதிர்கால சந்ததியின் உயர்வை எண்ணி செயற்பட்டாலேயொழிய அறநெறியை முன்னெடுக்க முடியாது என்பது வெளிப்படை உண்மையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறனாய்வென்பது புகழுரையல்ல.

வே.முல்லைத் தீபன்

தமிழ் இலக்கியத்துறையின் ஆரம்ப கட்டத்தில் இத் திறனாய்வு பேசாப் பொருளாகி இருந்தாலும், உரை நடை இலக்கிய வளர்ச்சியின் பின்னரே இத் திறனாய்வுத்துறை தனக்கென ஓர் இடத்தினைப் பெற்றுக் கொண்டது.

மனிதன் போல இலக்கியமும், குற்றம் குறை உடையது. நிறைகள் அதிகம் இருப்பின் மனிதன் மதிக்கப்படுகிறான், போற்றப்படுகிறான். ஆனால், அறிவாராய்ச்சி உள்ளம் கொண்டவர்கள், நிறைகளைப் பாராட்டுவது போலவே, குறைகளையும் கண்டறிந்து சுட்டிக்காட்டி அறிவுரை தருவார்கள். இது சான்றோர் பணி.

நிறைகளைக் கேட்கும் போது ஏற்படும் சந்தோசம், குறைகளைக் கேட்கும் போதிருப்பதில்லை. உண்மையில் குறைகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் தான் பின் அதனைச் சரிசெய்து முழு நிறைவடையச் செய்கிறது. நூல் வெளியீட்டிலோ, அல்லது சம்பந்தப்பட்ட திறனாய்விலோ. மூத்தவர்கள் கூறும் குறைகளை மனக்கசப்பாகவே எடுப்போரும் உண்டு. அது அவரவர்க்கு வேதனையைத் தந்தாலும். அதுவே, கனதியான இலக்கியப் பிரசவத்திற்கு வழிவிடும் என்பதே உண்மை. தட்டித் தட்டிச் செதுக்கும் சிற்பியைப் போன்ற திறனாய்வாளன் இலக்கியத் துறைக்கு அளப்பெரிய தொண்டாற்றுகிறான். தன் அதீத வளர்ச்சிக்கான காரணம் தன்னை ஆரம்பத்தில் குறை கூறியவர்களே என்பதனை எழுத்தாளன் பின்னாளில் மறக்காதிருப்பான்.

இலக்கியத் திறனாய்வாளனும், 'இலக்கியத்தில் அதன் எல்லாப் பண்புகளையும் பார்க்கிறான். நிறைகளை மட்டும், அல்லது குறிப்பிட்ட இலக்கியப் பனுவலில் தனக்கு மிகவும் பிடித்ததை மட்டும் எடுத்துக்காட்டி ஆகா, ஓகோ என்று புகழ்ந்தால், அது போற்றியுரையாகுமேயன்றித் திறனாய்வாகாது. போற்றியுரைகள், குறு நோக்கம் கொண்டவை. ஒரு சிலரை திருப்திப்படுத்த நினைப்பவை. தரம் மிக்க இலக்கியப் படைப்பின் தூர நோக்கம் கருதாதவை. மேலோட்டமானவை அவை இலக்கியத்தை என்றும் வளர்ப்பதில்லை.

அதுபோலவே, குறைகளைக் கண்டுபிடிப்பதிலேயே கவனம் செலுத்தினால், திறனாய்வாளனுடைய எதிர்நிலைப் பண்பாகவே அது அமையும் மேலும், இலக்கியம் வளராது சேதம் அடையும். தனக்கேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் தெரியும் எனும் எண்ணநிலைப்பாட்டுடன். எப்பவும் மற்றவரையே குற்றங்காணும் இயல்புடைய நபராகத் தன்னை இனங் காட்டுவதுடன், பலரைப் பகைக்கவும் நேரிடும். ஆதலால். நிறையுள்ளதை நிறைத்து, குறையுள்ளதைக் குறைத்து, உள்ளதை உள்ளபடி தக்க தருணத்தில் எடுத்துரைக்க வேண்டும். எனவே, திறனாய்வுக்கு எடுத்துக் கொண்ட ஒரு நூலினுடைய இரண்டு பக்கங்களையும் மயக்கமின்றி, தயக்கமின்றிப் பார்க்க வேண்டும். எது எப்படி இருக்கிறது என்று காணவேண்டும். எது மிகையாக இருக்கிறது என்பதைக் கூறவேண்டும். சுட்ட வேண்டும். தட்ட வேண்டும். திருத்த வேண்டும்.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

என்பதே திறனாய்வின் தார்ப்பரியம். திறனாய்வாளன் என்பவன் படைப்பாளிக்கும், வாசகனுக்குமிடையில் பாலமாக நின்று தொடர்பாடலை ஏற்படுத்தி விடுபவனாவான். படைப்பாளனை தன் வித்துவச் செருக்கினால் இனங்கண்டு பல்வேறு கோணங்களிலும் வாசகர்களுக்கு புரிய வைக்கும் தார்மீக பொறுப்பு ஒவ்வொரு திறனாய்வாளனிடமும் இருக்கிறது.

திருவள்ளுவரின் திருக்குறளானது இரு அடியில் கற்றோரே விளங்கிடா வண்ணம் பல இடங்களில் காணப்படுகிறது. அதனை இலகு படுத்தியிருந்தனர் பல்வேறு விளக்கவுரையாசிரியர்கள். அதுபோல் இறையனார் களவியல் மிகச் சுருக்கமான நூற்பாக்களைக் கொண்டது. ஆனால் அதற்கு கொடுக்கப்பட்ட விளக்கவுரைதான் அதனை இன்றும் வாழ வைத்துள்ளது. இப்படி தமிழிலக்கியங்கள் பலவற்றை எடுத்துக்காட்டலாம். சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த காலமென்றாலும் சரி, அதனைச் சார்ந்து வந்த ஆரம்பகால இலக்கியங்கள் என்றாலும் சரி ஏன், இக்காலத்தில் வெளிவரும் சில இலக்கியங்களுக்குக்கூட விமர்சனம் அல்லது திறனாய்வு என்பது கட்டாயமானதாகி விட்டதுடன் தேவையாகியும் விட்டது.

நல்ல திறனாய்வாளனின் பண்பு, குணம் - குற்றம் என்ற இரண்டையும் பார்ப்பது. எது அதிகமோ, அதனைச் செய்வது. ஆனால் அதேபோது, மற்றதை, அதாவது, குறைவாகி இருப்பதைச் சொல்லாமலே விட்டு விடுவது அல்ல. அப்படிச் செய்யாமல் விடுவது, பெரும் குறையாகும். "இடிப்பார் இல்லையெனில், கெடுப்பார் இல்லையெனினும் கெடும்" புகழ்ந்து சொல் - போற்று - பாராட்டு ஆனால், நிதானமாக இருக்க வேண்டும். நிதானமற்ற புகழ்மொழி, படைப்பாளியைச் செருக்கும், தறுக்கும் உடையவனாக ஆக்கிக் கெடுத்துவிடும். அதேபோது, குறைகள் இருக்குமானால், சற்றுக் கணிசமாகவே இருந்தாலும் கூட - அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கமாகச் சொல்ல வேண்டும். ஓங்கும் போது பெரிதாகத் தோன்றினாலும் அது அதனை எறிகிறபோது - விழுகிறபோது - மெல்ல விழவேண்டும். 'கடிதோக்கி மெல்ல எறிக'.

திறனாய்வாளரிடம் இருக்க வேண்டிய மிக முக்கிய பொறுப்பு பக்கம் சாராமையாகும். படைப்பாளியில் உள்ள விரோதத்தினை வைத்துக் கொண்டு, படைப்பினை கண்டபடி தாறு மாறாக விமர்சிக்கும் பல வித்துவான்களை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். உண்மையில் படைப்பின் போக்கினையும் தன்மையினையும் கெடுத்து அதற்கு ஓர் திறனாய்வாளரினால். அவதூறு ஏற்படுத்தவும் முடியும். ஆகவே படைப்பிலக்கியத் திறனாய்வென்று தொடங்கி தனி மனித ஆழுமையில் கை வைக்காது பார்த்துக் கொள்ளவும் வேண்டும். எனவே, நிறை கூறுக குறை காட்டுக அதன் மிகை சொல்லுக வளரும் நெறி தருக. இவ்வாறு, திறனாளியாய்க் கடமையாற்றுக.

## அரசியல் மேடைகளாகும் இலக்கிய விழாக்கள்

வணக்கம்..! மேற்படியான "அரசியல் மேடைகளாகும் இலக்கிய விழாக்கள்" எனும் தலைப்பிற்கான கட்டுரையினை பின்வரும் இரண்டு பிரதான உப தலைப்புக்களினூடாக ஆராயலாம்.

### 1.படைப்பிலக்கிய வெளியீடுகளும் வாசகர்களும்

தமிழிலக்கியவரலாற்றின் ஆரம்பகாலங்களில் அதாவது சங்கம் மற்றும் அதனைச் சார்ந்ததும், பின்னயதுமான காலங்களில் இலக்கியங்கள் அதீதமாகப் படைக்கப்பட்டிருந்தாலும் அவற்றிக்கென விழாக்கள் எடுக்கப்படவில்லை. ஆனால் பல்வேறு காரணங்களினாலும், தமது தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் புரவலர்களைத் தேடி வரும் புலவர்களின் பாடல்கள் வெளிக்கொணரப்படும் போது அச்சபை விழாக்கோலம் கண்டதுமுண்டு.

பின்வந்த ஐரோப்பியர் கால இலக்கிய வளர்ச்சியில், இலக்கியங்களை தமது மதம் பரப்புவதற்கும், ஏகாதிபத்தியக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்குமாகவே விழாக்கள் மற்றும் கூட்டங்கள் நடாத்துவதை ஒரு நடமுறையாகக் கொண்டிருந்தார்கள். அதனால் பின்வந்த காலங்களால் ஒழுங்குவிதியற்ற ஒரு முறையாகவே இந் நூல் வெளியீடுகள் நடைபெறுகின்றன.

நூல் வெளியீட்டை நடாத்துவதன் நோக்கம் படைப்பாளிக்கான அங்கீகாரத்தை ஒருமுகப்படுத்தி ஊரவர் ஒன்று கூடி வழங்குவதும் ஏழ்மையின் இருப்பிடமான படைப்பாளிக்கான செலவை ஓரே இடத்தில் ஈடு செய்வதற்குமாகவே இருக்கும் என நான் நினைக்கிறேன். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் வெளியீட்டில் பின்வரும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களே இலக்கிய ஆர்வலர்களையும், மக்களையும் கவர்கின்றனர். அந் நூல் வெளியீட்டை கனதியாக்குவதிலும், கவலைக்கிடமாக்குவதிலும் இவை பெரும் செல்வாக்கும் செலுத்துகின்றன.

01. படைப்பாக்க ஆசிரியர்.

02. ஒழுங்குபடுத்தும் அமைப்பினர்

03. பிரதம அல்லது முக்கிய பேச்சாளர் அல்லது விருந்தினர்.

04. வெளியீடு நடைபெறும் இடம்.

05. மேலதிக விமர்சகர்கள் அல்லது பேச்சாளர்கள்.

06. தொடர்பாடலும் அணுகுமுறைகளும்

மேற்படி இவற்றில் எங்காவது ஓரிடத்தில் பிறழ்வு நிலை காணப்பட்டால் மக்கள் அங்கீகாரத்தைப் பெறமுடியாது போவதுடன், இலக்கிய ஆர்வலர்களின் திரளையும் காண முடியாது போகலாம்.

எப்போதும் வாசகர்கள் அல்லது இலக்கிய ஆர்வலர்கள், மூவகை நிலை சார்ந்தே இலக்கிய வெளியீடுகளைப் பார்க்கின்றனர். இம் மூநிலைப் பார்வைகள், நான் மேலே கூறியவற்றுடன் ஒப்பிடப்படுகின்றன.

## தன்னிலை சார்ந்த பார்வை

அதாவது வாசகர்கள் வெளியீட்டை அங்கீகரிப்பதற்கு, ஆக்கப்படைப்பாளி, ஒழுங்கமைப்பினர், பேச்சாளர், இடம், விமர்சகர்களை வாசகர்களுக்குப் பிடிக்க வேண்டும். அவை சார்ந்த நல்லபிப்பிராயம் இருத்தல் வேண்டும். எனவே தமக்கு ஏற்றுக்கொள்ளும் மன நிலை வரும் போதே வாசகர்கள் அவ் வெளியீட்டை அல்லது படைப்பாக்கத்தை ஏற்றுக் கொள்கிறார்கள்.

## படைப்பாளி சார்ந்த பார்வை

படைப்பாளியின் படைப்புக்கள் காத்திரமானவையா..? படைப்பாளியை சமூகம் அங்கீகரிக்கிறதா..? படைப்பாளியுடன் இருப்போர் அல்லது உதவுவோர் ஆரோக்கியமானவர்களா..? படைப்பாளி ஒருதலைப் பட்சமான இன, மத, சமூக வெறி கொண்டவரா..? (வெறி என்பது விருப்பெனும் பொருள் படாது) என்பவற்றையும் அவதானித்தே வாசகர்கள் வெளியீட்டை ஏற்றுக் கொள்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகம் சார்ந்த பார்வை

மேலே காட்டப்பட்ட 01 ம், 02 ம் தனிநபர் சார்ந்தவை. ஆனால், வாசகர்கள் சமூக மயப்படுத்தப் பட்டவர்களென்பதால் நிச்சயம் சமூகம் சார்ந்தும் வெளியீடுகளைப் பார்க்கின்றனர். அதாவது மேற்கூறப்பட்ட ஆக்கப்படைப்பாளி, ஒழுங்கமைப்பினர், பேச்சாளர், இடம், ஏனைய விமர்சகர்கள் தொடர்பாக சமூக அபிப்பிராயம் எவ்வாறிருக்கிறது..? இப்படைப்பு இந்தச் சமூகத்திற்கு தேவைதானா..? என மேற்காட்டப்பட்ட விடயங்களில் ஏதோ ஒரு இடம் சமூகத்துடன் ஒத்துவராத பட்சத்தில் அதனைக் காரணம் காட்டி வாசகர்கள் அல்லது இலக்கிய ஆர்வலர்கள் வெளியீடுகளைப் புறக்கணிக்கின்றனர்.

குறிப்பாக, ஆரோக்கியமான உறவு நிலையொன்று படைப்பாளியூடாக ஒழுங்கமைப்பினருக்கும், வாசகர்களுக்கும் இருத்தல் வேண்டும். அப்படியிருந்தால் அழைப்புக் கொடுக்கப்படாது விட்டாலும்.. வாசகர்கள் நிகழ்வுகளைத் தேடிச் செல்வார்கள். அல்லது அவ்விலக்கியத்தை தேடி வாங்கிப் படிப்பார்கள். இதனை எனது அனுபவத்திலும், நான் அறிந்ததிலும் இருந்து எழுதுகிறேன்.

## 2.அரசியல் மயப்படும் இலக்கிய வெளியீடுகள்.

பொதுவாக இலக்கியங்களை காலத்தின் கண்ணாடி என்பார்கள். அக்கால அரசியல், சமூக, பொருளாதார, கலை கலாசார, பண்பாட்டு விழுமியங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டும் ஊடகம் எனும் பொருள் கொள்ளலாம். அரசின்றி மக்கள் இல்லை. கிரேக்க உரோம இராட்சியங்களுக்கு முன்பே ''அரசுஇயல்பு'' இருந்திருக்கிறது. தனிமனிதன் கூட்டமாகி குடும்பம் ஆகின்ற போதே அவனுடன் அரசியலும் கலந்திருக்கிறது. அதனால்த்தானோ என்னவோ இலக்கிய விழாக்களும் அரசியல் மேடைகளாகின்றன.

மனிதர்களில் பெரும்பாலனவர்கள். அகம் அல்லது புறம், சரி அல்லது பிழை, வேண்டும் அல்லது வேண்டாம் எனும் மன நிலை உடையவர்கள். எதுவானாலும் சரி சமாளிப்போம் எனும் சிந்தனையுடையவர்கள் மிகக்குறைவே. ஒரு உண்மையுள்ளது நிவாரணத்திற்கும் ஆர்ப்பாட்டத்திற்கும் சேரும் மக்கள் கூட்டம் படைப்பிலக்கிய வெளியீடுகளுக்குக் கூடுவதில்லை.

## ஒன்று

சில புத்தக வெளியீடுகளை, ஏதாவது அமைப்பு சார்ந்தோர் நடாத்துகின்ற போது மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கிறது. (அது அமைப்பு சார்ந்தோர் )ஆனால் அதே இடத்தில் படைப்பாளி சுயமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்தும் போது வாசகர்களை காண முடிவதில்லை. அதற்காக விழா ஒழுங்கமைப்பினர் வேறு இடங்களிலிருந்து வாகன வசதி செய்தும், பேருந்துகளை அனுப்பியும் வாசகர்களை திரட்ட முற்படுகின்றனர். அப்படியிருந்தும் இலக்கிய ஆர்வலர்கள் அருமையாகவே காணப்படுகின்றனர். அதனால்த்தான் அரசியற் பிரமுகர்களை வெளியீட்டகத்தினர் நாடுகின்றனரோ தெரியவில்லை.

## மற்றது

சில வெளீடுகளில் படைப்பாளி ஒருவர் அமைப்பு சார்ந்து வெளியிடும் போது திரண்டிடாத இலக்கிய ஆர்வலர்கள், அப்படைப்பிலக்கியம் சுயமாக ஆசிரியரால் வெளியிடப்படும் போது ஆர்வலர்கள் குவிகிறார்கள். தனிப்பட்ட முறையிலான விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் வெளியீட்டு நிகழ்வு நிறைந்திருந்ததை நான் பார்திருக்கிறேன். அது அவருடைய எழுத்தின் மீதான வீச்சாகவும் இருக்கலாம். அல்லது அவர் ஏனையவர்களோடு கொண்டிருக்கும் இறுக்கமான தொடர்பாகவோ அல்லது அவரோடு இயங்கியவர்களின் ஒத்துளைப்பாகவோ இருக்கலாம்.

இவைகளின் பால் தெரியவருவது என்னவெனில், எழுத்தாளனும் அவன் சார்ந்தவர்களும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் போதும், ஒருதலைப் பட்சமில்லாத எழுத்தும் நிகழ்வும் ஒழுங்கமைக்கப்படும் போதும் சம்பந்தப்பட்ட இலக்கிய ஆர்வலர்களை இனங்கண்டு அவர்களுடன் நெருக்கமான தொடர்பாடலைக் கொண்டிருந்தாலுமே நிறைவான ஓர் புத்தக வெளியீட்டை எழுத்தாளன் கண்டு கொள்வான்.

## கடைச்சரக்காகும் கவிஞர் பட்டங்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில், சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த காலத்திலிருந்து இன்று வரை, தமிழ் இலக்கியத்துறை பல்வேறு வடிவங்களில் நகர்ந்து கொண்டேதான் இருக்கிறது. அதில் கவிதைக்கென்று தனியிடமும் இருக்கிறது. பேச்சு மொழிக் காலத்திலையே ஒரு வகை சந்த அசைவுகள் இருந்திருக்கென்பது ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பின் வந்த எழுத்து மொழி வளர்ச்சியடையும் காலத்தில் இலக்கியமானது தனது முதல் வடிவமாக கவிதையினை எடுத்துக் கொண்டது என்கின்றனர். எனவே தமிழ் இலக்கியத் துறையின் ஆரம்ப வடிவம் கவிதையே.

சங்கத்தமிழ் காலத்தில் கவிதை பாடிய பாணர்களே பின்னர் புலவர்களாகவும் கவிஞர்களாகவும் விளங்கியிருக்கின்றனர் என்கிறது ஓர் இலக்கிய ஆய்வு. அக்காலத்தில் பொருள் தேட வேண்டிய தேவையும், வறுமையும், புகழின் மீதான விருப்பும், மன்னர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வழிப்படுத்த வேண்டிய தேவையும் இருந்ததினால் புலவர்கள் அகம் மற்றும் புறம் சார் ஏராளமான இலக்கியங்களை படைத்திருக்கிறார்கள். இப்பண்புகள் காலம் கடந்தும் மருவியகாலம், சோழ மற்றும் நாயக்க காலங்கள் மட்டுமன்றி பின்வந்த காலங்களினூடே இன்றும் காணப்படுகின்றன. கவிஞர்களின் வறுமை மற்றும் சமூக சீர்ப்படுத்தல் கருத்துக்கள் என்பவற்றைக் கடந்து இன்று வெறும் புகழுக்காக தங்களுக்குத் தாங்களே பல்வேறு பட்டங்களை இட்டு இலக்கியங்களை ஏனோ தானோவெனப் படைக்கும் போக்கே அதிகம் காணப்படுகிறது.

பட்டங்கள், விருதுகள் என்பவை சமூக அந்தஸ்துடையவை. அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்கள், துறை சார் பாண்டித்தியமுடைய நபர்கள் அல்லது நிறுவனங்கள் என்பவற்றினாலையே அவை வழங்கப்படுவதுண்டு. அப்படி வழங்கப்படும் பட்டங்களே செல்லுபடியாவதுடன் மரியாதைக்குரியதாகவும் கணிக்கப்படும். அதனை வைத்திருப்பவரும் பெறுமதியாகக் பார்க்கப்படுவார். பட்டங்களை வழங்கும் நபரோ அல்லது அமைப்போ சமூக ரீயில் ஒத்துவராத பட்சத்தில் அதனால் வழங்கப்படும் பட்டங்களும், நபர்களும் எள்ளி நகையாடப்படுவார்கள்.

இன்றைய நிலையில் முகநூல் பக்கத்தில் தங்களுக்குத்தாங்களே "கவிஞர்" எனவும் "கவிதாயினி" எனவும் பட்டங்களை வைத்துக் கொண்டு சிலர் உலாவுவதைக் காணக் கூடியதாக உள்ளது. உண்மையில் கவிஞர் பட்டமென்பது கவித்துவமுடையவர்கள் மற்றும் கற்பனைத்திறன் உடையவர்களுக்கு, அவர்களின் அறிவு, ஆற்றல், அனுபவம் என்பவற்றைக் கருத்திற் கொண்டே வழங்கப் படுவதுண்டு. ஆனால் எவ்வளவுதான் கற்பனைத்திறன் இருந்தாலும் அவர்களால் ஆக்கபூர்வமான பல்துறைசார் படைப்புக்களும் படைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அடிப்படையில் இலக்கியத்தை நேசிப்பதுடன் மற்றவரை மதிக்கத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். ஏனெனில் ஒரு பட்டம் பெறுபவன் அச்சமூகத்தை ஏதோ ஒரு வடிவத்தில் நெறிப் படுத்துபவனாகவே இருத்தல் வேண்டும். ஆனால் இங்கு நடப்பதோ வேறாக இருக்கிறது. தாமே ஓர் சமூக விமர்சனத்திற்கு உட்பட்டவர்களாக இருந்து கொண்டு, சமூக அந்தஸ்துடைய "கவிஞர்" பட்டங்களை தமக்குத் தாமே வைத்துக் கொண்டு, இலக்கிய உலகில் கண்களை மூடிக்கொண்டு பால் குடிப்பதனைச் சுற்றம் அவதானித்துக் கொண்டுதான் இருக்கிறது.

எம் தமிழ் இலக்கியப்பாதையில் எத்தனையோ கவிஞர்கள், எண்ணில்லா படைப்புக்களை வெளியிட்டும், படைத்தும் இருக்கின்றனர். ஆனால் அத்தனைபேரும் தங்களைத்தாங்களே கவிஞர்கள் என அழைத்தது இல்லை. ஈழத்து இலக்கியப்பாதையில் எட்டுப் பத்துக் கோணத்தில் படைப்புக்களை வெளியிட்டு தேசிய விருதுகளைப் பெற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த எழுத்தாளர்கள் பலர், அங்கீகரிக்கப்பட்ட பட்டங்கள் இருந்தும் இன்று கூட தம்மைத்தாம் கவிஞர்கள் என அழைப்பதில்லை. தமது படைப்புக்களிற்கும் தமது வாழ்விற்குமிடையே இடைவெளியை அவர்கள் வைத்திருந்ததும் இல்லை. அவ்வாறான நிறைகுடங்கள் எங்களுக்குள்ளேயே இருக்கும் போது, இந்த சில் வண்டுகள் ஆர்வக் கோளாறினாலும், அவசர புத்தியினாலும் செயற்படும் விதமானது ஒட்டுமொத்த கவிஞர் வட்டத்தினையும் கேலிக்குரியதாக மாற்றியிருக்கிறது. கவிஞர் எனும் பதத்திற்குரிய பெறுமதியே அற்றுப்போயிருக்கிறது. இக் "கிலுசுத்தனமான கவிஞர்" களை முகநூலில் ஏராளமாகக் காணலாம்.

அப்பொழுது மட்டுமல்ல இப்பொழுதும் கூட, பெயருக்காகவும் புகழுக்காகவும் பட்டங்களை இரந்து கேட்கும் நபர்களையும், காசு கொடுத்தாவது பட்டங்களைப் பெறவேண்டும் என நினைக்கும் நபர்களையும், நெறி தவறாத இலக்கிய உலகம் தூக்கி எறிந்தே வந்திருக்கிறது. அப்படியானவர்களை தயங்காமல் விமர்சித்தே வந்திருக்கிறது. சில பட்டங்களை மீளப் பெற்றும் இருக்கிறது. அப்படியான ஓர் தூய இலக்கியப்பரப்பு இருக்கின்ற வேளை, தங்களுக்குத் தாங்களே "கவிஞர்" எனப் பட்டம் இட்டுக்கொள்ளும் தற்புகழ்ச்சிக் காரர்களை விட்டுவைக்குமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். எனவே, எந்த ஒரு விடயத்தினையும் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களுக்கே சொல்லிக் கொண்டிருக்க முடியும். ஏற்றுக் கொள்ளாதவிடத்து பொது வெளியே சிறந்ததாகும். நன்மை பயப்பின் நாலு பேருடன் பகைப்பது பெரிதல்ல. ஆகவே இக்கட்டுரை எவர் மனதையும் நோகடிப்பதற்காக வரையப்பட்டதல்ல. மாறாக விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளும் சமூகத்தாலேயே ஆரோக்கியமான படைப்புக்களை பிரசவிக்க முடியும் எனும் நப்பாசையினால் வரையப்பட்டதாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய இலக்குக்கொண்ட அந்நாளைய தமிழரின் வாழ்வு

மைதிலி தயாபரன்
மின்னியல் பொறியியலாளர்
வவுனியா

சாதாரணமாக ஒரு மனிதனின் ஆயுட்காலமானது சுமார் நூறு ஆண்டுகளாகும் என்பதும், மனிதன் முற்று முழுதான ஆரோக்கியத்துடனும் திடகாத்திரத்துடனும் இருக்கும் காலம் அறுபது ஆண்டுகளாகும் என்பதும் அனைத்து மாந்தரின் கணிப்பீடாகும். அவ்வாறு வாழும் காலத்தில் உடல் ரீதியிலும், மன ரீதியிலும் ஆரோக்கியம் பேணப்பட வேண்டும் என்பதற்காக, பல பழக்கவழக்கங்களையும் தங்களுடைய நாட்டின் விதிமுறைகளுக்கும், காலநிலைக்கும் ஏற்றவாறு திட்டமிட்டுக் கொண்டவாறு மனித சமுதாயம் வளர்ந்தது. இதனால் வெவ்வேறு பகுதியைச் சேர்ந்தவர்கள் வேறு நடைமுறைகளைப் பின்பற்றித் தமது வாழ்வியலை வகுத்துக் கொண்டனர். இவர்களில் எமது மூதாதையரான தமிழர் புவியியல் ரீதியாகப் பொருத்தமான பகுதியில் பிறந்து வளர்ந்தவர்கள். கடினமான உடலுழைப்பைக் கொண்டவர்கள் என்பது மட்டுமல்ல தீர்க்கதரிசனமான அவர்களுடைய சிந்தனைகளையும் அவர்களுடைய பழக்கவழக்கங்களிற் கண்டு கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது.

## தமிழரின் மருத்துவம் என்பதன் எண்ணக்கரு

"யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" என்று சொல்லிய வாக்கிலே, இரப்பவர்களுக்கு இட்டுண்ண வேண்டும் என்பதை மட்டுமல்ல, அளவோடு ஆகாரம் எடுத்திடவேண்டும் என்று இயம்பிய திருமூலர் அவர்கள் தமிழ் மருத்துவத்தின் முன்னோடி என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது. அவரின் வார்த்தைகளில் சொல்லப்பட்டிருக்கும் மருத்துவக் குறிப்புக்களை, இருபதாம் நூற்றாண்டின் மருத்துவர்களும் விவாதித்து விடமுடியாதது என்பது உண்மையானதாகும்.

முறையான உணவுப் பழக்கவழக்கங்களையும், மிகக்குறைவான மருந்து பாவனையையும், சீரான உடற் பயிற்சிகளையும் கொண்டு, நாநூறு ஆண்டு காலம் உயிர் வாழ்ந்த திருமூலர், ஆரோக்கியமான வாழ்வு என்பது பற்றிச் சொல்லியது மட்டுமல்ல, தானும் முன்னுதாரணமாகவே வாழ்ந்து காட்டிவிட்டுப் போயிருக்கிறார். மருத்துவம் என்பதன் கருப் பொருளில் ஆரோக்கிய வாழ்வு என்ற விடயத்தையும் அழுத்திவிட்டுச் சென்றிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்து, என்பது நோயுற்றவர் துன்பத்தில் இருந்து விடுபடுவதற்கும், நோயின் போது வலிகளைக் குறைத்துக் கொள்வதற்கும், அந்நோயானது வேறு விளைவுகளைக் கொண்டு வராதிருப்பதற்கும் வழங்கப்படும் ஒரு வகையான உணவுப் பொருளேயாகும். இதனால் மருந்து என்பது ஆற்றவேண்டிய கருமங்கள் பலவுள்ளன என்பதை தெளிவாக்குகின்றது.

மேலும், உணவுகூட, நேரம் போய் சாப்பிடுவதாலோ அன்றி, அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுவதாலோ சில வேளைகளில் உயிருக்கு ஆபத்தாகியும் விடுவதுண்டு. அதே போல் மருந்தும் சில வேளைகளில் விஷமாக மாறி உயிரைக் குடித்துவிடுவதும் உண்டு. இதனால் "விருந்தும் மருந்தும் மூன்று வேளை" என்பதைச் சொல்லி, மருந்து கொடுக்கப்பட வேண்டிய அளவைக்கூடச் சுட்டிக் காட்டுகின்றது தமிழ் நாகரிகம்.

பஞ்ச பூதங்களால், அதாவது நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் முதலிய ஆக்கக்கூறுகளாலேயே மனித உடலும் ஏனைய இயற்கைப் பொருட்களும் ஆக்கப்பட்டுள்ளன என்பதைச் சொல்லும் தமிழனின் கருத்து, அவர்கள் வாழும் காலத்திலும் அந்த பூதங்களிலிருந்தே தமக்குத் தேவையான உணவுகளை எடுத்துக் கொள்கின்றனர் என்றும், அவர்கள் மடிந்தபிறகு, பஞ்ச பூதங்களுக்கே அவை பங்கிடப்பட்டு விடுகின்றன என்பதையும் சொல்லியிருக்கிறது. அது மட்டுமல்ல, தாவர உணவுகள் அதிகளவு கலோரியையும், விரைவில் களைத்துவிடாத தன்மையையும் கொண்டிருக்கிறது. என்பது தமிழனின் கருத்து. அவற்றுக்குச் சான்று பகர்வதைப்போல தாவர உண்ணிகளான குதிரை போன்றவை, பல மைல் தூரம் ஓடிய பின்னாலும்கூட விறைப்பாக நிற்பதையும், ஆனால் ஊனுண்ணிகளான சிங்கம், புலி போன்றவை ஓடும்போது நாக்கைத் தொங்கப்போடுவதையும் குறிப்பிடலாம்.

உணவுச் சங்கிலியில் தாவரங்களை உற்பத்தியாக்கிகளாக வைத்து, முதலாம் படி நுகரியாகத் தாவர உண்ணிகளை வைத்து, உணவுக்கூம்பகம் மூலம் மேலே செல்லச் செல்லக் கலோரிப் பெறுமானம் குறைவதைக் காட்டி தமிழனின் கருத்துக்கு சான்று பகர்கின்ற, இன்றைய விஞ்ஞானம் தாவர உணவுகளை உட்கொள்ளுமாறு ஊக்குவிக்கின்றது. மருத்துவம் என்பதன் அடிவேர்வரை சென்று தேகாரோக்கியத்தை வற்புறுத்தும் ஏனைய விடயங்களையும் சொல்லியிருக்கிறது. தமிழர் வாழ்வு.

### வாழிடம் காரணமாகக் கொண்டிருந்த ஆரோக்கியம்

உலகிலே முதன்முதலாக நாகரிகம் உருவாகிய பகுதி இலங்கை மற்றும் பாரதம் உள்ளடங்கலாக, கிழக்கிலே அவுஸ்திரேலியா வரைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கிலே அத்திலாந்திக் சமுத்திரத்தை ஒட்டிய பகுதி என ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்தப் பிரதேசத்திலே மிதமான சூரிய ஒளி அதாவது பன்னிரண்டு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட பகல் காலம் நிலவியதால், மக்கள் சீராக வாழ்வதற்கும் தேகாரோக்கியத்தைப் பேணுவதற்குமான சுற்றாடல் காணப்பட்டதெனவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். இதில் தமிழர் வரலாற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் முதற் சங்கம், இடைச்சங்கம் மற்றும் கடைச்சங்க காலத்திற் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரதேசங்கள் மேற்குறிப்பிடப்பட்ட பகுதியில் அடங்குவதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இருந்து பண்டைக்காலம் தொட்டே தமிழர், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும் தேகாரோக்கியத்திலும் முன்னிலையான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வந்திருந்தனர் என்பதை நிறுவிக் கொள்ள முடியும்.

காலப்போக்கில் கடல் கோளினாலும், எம் சமூகத்தினரிடையே ஏற்பட்ட போட்டி, பொறாமைகள், படையெடுப்புக்கள் என்பவற்றாலும் எம்மவர் பின்னே சென்றுவிடவும், உலகிலே மக்கள் வாழ்வதற்குச் சிறிதும் பொருத்தமில்லாத பகுதிகள்கூட வல்லரசு நாடுகளாற் குடியேற்றமாக்கப்பட்டதும் அனைவரும் அறிந்ததொன்றே. ஆனாலும், தொன்மையை ஆராயும்போது தமிழினம் இருப்பது முன்னிலையிலேயே என்பதை மட்டும் இங்கு சொல்லிவிட்டுச் செல்கிறேன்.

அது மட்டுமல்ல சித்த வைத்தியம் எனப்படும் தமிழரின் வைத்திய முறை, வேதத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. வேதங்களாவன, மனிதன் வாழும் முறைமையென கடவுளால் தெரிவிக்கப்பட்டன என்பதும் தமிழரின் நம்பிக்கையாகும். இதனால் இன்றைய மேலைத்தேய இரசாயன மருத்துவத்தோடு போராடும் தமிழரின் மருத்துவம், சரிசமமாகவே செல்வாக்குச் செலுத்தியிருப்பது எமக்குத் தெரிந்ததுதான்.

## வாழ்க்கை முறைகளினாற் பெற்றிருந்த ஆரோக்கியம்

மனிதன் வாழ்வதற்கு முற்றிலும் பொருத்தமான பகுதியிலே குடியேறிப் பெருகிய இனம், எம்மினம் என்பதை ஏலவே குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் தங்கள் வாழ்க்கை முறையின் மூலம் மருத்துவரை விரட்டி தேகாரோக்கியத்தைக் கட்டிக் காத்தனர். அவர்கள் அதிகாலையிலேயே, சூரியன் உதயமாவதற்கு முன்பாக எழுந்துவிடும் வழக்கத்தைக் கொண்டவர்கள். கடின உழைப்பாளிகளாகவும் இருந்தனர். நடுத்தர வயதுக்காரர்களான ஆண், பெண் இருபாலரும் வயலில் இறங்கிக் களை பறித்து, நாற்று நட்டு, சூடடித்து, அரிவு வெட்டிக் கடின உழைப்பில் ஈடுபடுபவர்களாக இருந்தனர்.

ஆண்கள் கடின உழைப்பாளிகளாகவும் அதிகாலையிலேயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்யத் தொடங்குபவர்களாகவும் இருந்ததனால், அவர்களிடையே புகை மற்றும் மதுபானப் பாவனை மிகக்குறைவாகவே இருந்தது. அத்துடன் அவர்கள் உண்ணும் தாவர வகை உணவுகளும், அளவான உணவுகளும், அவர்களைத் தொடர்ந்து ஆரோக்கியமாக்கின.

தொடர்ந்து வேலை செய்யும்போது ஏற்படும் தலைவலி மற்றும் உடல் அசதி போன்றவற்றுக்கு, அவர்கள் மருத்துவக்குணமுள்ள இலைகளாக வல்லாரை, கொத்தமல்லி, தூதுவளை போன்ற இலைகளைக் கஞ்சி போலே தயாரித்து அதிகாலையில் எழுந்தவுடயேயே பருகி வந்தனர். இதனால் உடலுக்கு வேண்டிய சக்தி, அதிகாலையிலேயே வழங்கப்பட வேண்டிய நீரின் அளவு மற்றும் உடல் அசதியைத் தீர்க்கும் மருத்துவ குணம் அனைத்தையும் பெற்றுக் கொண்டதால் அவர்கள் ஆரோக்கியமாகவே இருந்தனர்.

"ஆறிய கஞ்சி பழங்கஞ்சி" என்று எம் முன்னோர் சொல்லுவார்கள். வேறு வேறு அர்த்தங்களுடன் அதைச் சொல்லியிருந்தாலும், சமைத்த சாப்பாட்டை வெகு நேரம் காக்க வைத்ததுவிடாமல் சாப்பிட்டுக் கொள்வது உடலுக்கு ஆரோக்கியம் என்பதைத் தான் அவ்வாறு சொல்லியிருந்தார்கள். சமைக்கப்பட்ட உணவுகளில் கிருமிகளின் தாக்கங்கள் அதிகமாகக் காணப்படும். இதனால் சிறிது நேரத்தின் பின்பாக அவை பழுதடைந்து உடலுக்குக் கேடு செய்யத் தொடங்கிவிடும். இதனால் இன்று பெரிய நட்சத்திர விடுதிகளில்கூட உடனடியாகவே சமைத்து உணவு பரிமாறுவதை நாம் பார்த்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, அபிவிருத்தியடைந்த நாடுகளில், உடனடியாகத் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிகள் ஒரு விலையிலும், சில மணி நேரம் கடந்தபின்பு அரைவிலையிலும் வழங்கப்படுவது நாம் அறிந்ததே. இதைத்தான் எமது முன்னோர் பழமொழியிலேயே சொல்லிச் சென்றார்கள்.

## ஆரோக்கியம் பேணும் உணவுப் பழக்க வழக்கங்கள்

ஓரளவு வயதினராகும்போதே பெண்களும் வயலிலும் மற்றும் வீடுகளிலும் கடினமாக உழைப்பவர்களாக இருந்தனர். திருமணமான பெண்கள், தங்கள் கணவருக்கு முன்னாலே எழுந்து, வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, மதியத்தில் கணவருக்குச் சாப்பாடு எடுத்துக்கொண்டு வயல்வெளிக்குச் செல்வார்கள். அங்கு அன்புடன் அவர்களுக்குப் பரிமாறித் தாமும் உண்டுவிட்டு சிறுசிறு வேலைகளை ஒத்தாசையாகவே செய்வார்கள். கருவுற்றிருக்கும் பெண்கள்கூட ஆனந்தமாக வயலில் இறங்கி வேலை செய்வார்கள். சுகமாகவே பிரசவித்துவிடுவார்கள். இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட வைத்தியர்கள் கர்ப்பிணித் தாய்மாரை நன்றாக நடக்கச் சொல்லியும், அவர்களுக்குப் பழக்கமான அனைத்து வேலைகளையும் தொடர்ந்து செய்யும்படி வற்புறுத்துவதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

பெண் கருவுற்றிருக்கும் காலங்களில் உணவின் அளவை அதிகமாக எடுத்துக் கொள்ளுதலும், உணவில் ஒவ்வொரு நாளுமே இலைவகைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும், பழங்களை அதிகமாக உண்ண வேண்டும் என்றும் அவர்கள் பழகி வைத்திருப்பது இன்றைய விஞ்ஞான யுகத்திலுமே சொல்லப்படுகின்ற ஒருவிடயம் தான். குழந்தை நிறமாகப் பிறக்க குங்குமப்பூவைக் கலந்து சாப்பிடும் பெண்களை இன்றும் காண்கின்றோம்.

மகப்பேற்றின் போது கூட முருக்கம் பட்டையுடன் வெந்தயத்தையும், வெள்ளைப் பூட்டையும் சேர்த்து அவித்துக் குடிக்கக் கொடுத்து பிரசவத்தை இலேசாக்கிவிடுவார்கள். ஆயுதங்கள் எதுவும் பாவிக்கப்படாமலேயே ஆன்மா வெளியிலே வந்துவிடும். தொற்று நீக்கம் என்ற விடயத்தில் இன்றைய மருத்துவர்கள் ஒரு வாதத்தை எழுப்பினாற்கூட பூரணமாய் உருவாகி வளர்ந்த மனிதனின் வரலாறுகள், அவற்றை வென்றதைப் பறைசாற்றுகின்றன. மகப்பேறடைந்த தாயொருவருக்கு, தமிழ் பேசும் மக்களால் வழங்கப்படுகின்ற பத்திய உணவு, ஒரு மருத்துவிச்சி போலவே அவர்களின் அருகிலிருந்து காப்பதை யாரும் மறுத்துவிடமுடியாது. கொத்தமல்லி, வேர்க்கொம்பு, மஞ்சள், சின்னச்சீரகம், மிளகு, வெள்ளைப்பூடு என்பவற்றை சிறிதளவு எடுத்து, அதை அம்மியில் போட்டு நன்கு அரைத்துக் கொள்வர். அரைத்த கலவையுடன் பழப்புளியைக் கலந்து, அவர்களின் விருப்பப்படி முருங்கைக்காயுடனோ அல்லது வாழைக்காயுடனோ சேர்த்துக் கூட்டாக்கி, தவிடு நீக்காத அரிசியைக் குழையக் காய்ச்சி இறக்கி அதனுடன் சேர்த்து உண்ணக் கொடுப்பார்கள்.

பிறந்த குழந்தையையும், பெற்றுவிட்ட தாயையும் வெகு சிரத்தையுடனேயே கவனித்திடவேண்டும். அவர்களின் உணவின் அளவையும் இயல்பையும் பொறுத்தே, கழிவகற்றும் உறுப்புக்கள் சீராக இயங்குகின்றன. பத்திய உணவாக நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்த கலவையில் இவ்வாறான மருத்துவ இயல்புகள் இருப்பதனால், தமிழரின் பத்திய ஆகாரம் தலைசிறந்த ஆகாரமாகவே இன்று வரை கொள்ளப்படுகின்றது.

பிறந்த குழந்தைக்கு, குறிப்பிட்ட நாட்களுக்குப்பின் எண்ணெய் தேய்ந்து கை, கால் அனைத்தையும் நன்றாக இழுத்துவிடுவார்கள். இதனால் அவர்களுடைய அவயவங்களுக்குத் தேவையான குருதிச்சுற்றோட்டம் போதியளவு கிடைப்பதனால் அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியமானவர்களாக ஆற்றலுள்ளவர்களாக வளர்கின்றனர். இன்றும் மேலை நாடுகளில் விபத்துக்களால் அவயவங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குக்கூட 'எண்ணெய் தடவுதல்' என்ற மருத்துவம் ஒரு அம்சமாக இருப்பது அனைவரும் அறிந்ததே. இவை தமிழரால் உலகிற்கு வழங்கப்பட்ட வைத்தியமே.

பெண் பூப்படைந்து விட்டால், அவளுக்கு வழங்கப்படும் ஆகாரம் வேறு வகையினதாகும். பச்சையரிசியை மிதமான நீர்விட்டுக் காய்ச்சி கத்தரிக்காயை நல்லெண்ணெயில் பொரித்து எடுத்துக் கொடுப்பார்கள். வயிற்றில் உள்ள காயம் ஆறுவதற்காக வேப்பிலையையும் மஞ்சளையும் சேர்த்து அரைத்து, சிறுசிறு உருண்டைகளாக்கி வாயில் போடுவார்கள். புரதச்சத்து அதிகமுள்ள உழுந்து, நல்லெண்ணெய் என்பவற்றை அதிகமாகச் சேர்த்துக் கொள்வார்கள். இவையனைத்தும் இன்று வரை யாராலும் தோற்கடிக்கப்பட முடியாத தமிழரின் பத்தியமுறைகளாகும்.

தமிழரின் மருத்துவம் முழுமையாக சித்த வைத்தியம் என்ற பெயரில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்பதும், இது முற்றுமுழுவதுமாக பத்தியத்துடன் வழங்கப்படுவதால் உணவு முறைகளுடனேயே மருத்துவத்தை விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

## அவசியத்துக்குத் தேவையான மருந்துகள்

இனி, பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் அடிக்கடி ஏற்படும் பலவிதமாக நோய்களுக்கும் உடல் நலமின்மைக்கும் அவர்களின் வைத்தியமுறை என்ன என்பதை விரிவாகவே பார்ப்போம். சித்த வைத்தியத்தின் ஒரு பகுதியாக வீட்டு வைத்தியம் அல்லது கைவைத்தியம் என்பது கையாளப்படுகிறது.

எது நாடு போன்ற உஷ்ண பிரதேசங்களிலே, சாதாரணமாக அடிக்கடி சளி போன்றவை எல்லாருக்குமே வருவது இயற்கை தான். இவற்றுக்குத் தூதுவளையுடன் கொத்தமல்லியைச் சேர்த்து அவித்துக் குடித்தல், கற்பூரவள்ளிச் சாற்றைக் கற்கண்டு கலந்து உண்ணல் மற்றும் செவ்வரத்தைப் பூவின் சாற்றைக் குடித்தல் போன்ற கைவைத்திய முறைகள் பாவிக்கப்படுகின்றன.

காய்ச்சல் என்பது எல்லா நோய்களுக்குமுரிய பொதுவான ஒரு அறிகுறியே ஆகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏனைய அறிகுறிகளையும் அவதானித்தே மருந்தைச் செய்து கொள்ள வேண்டும். அவசரப்பட்டு நோவு கொல்லிகளைப் பாவிக்கக்கூடாது. அவ்வாறான வேளைகளில் கஷாயம் அல்லது புளிக்கஞ்சி என்பவற்றைக் கொடுத்து, உடம்பை சோர்ந்து விடாது கவனித்துக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலச்சிக்கல் என்பது எல்லா நோய்களுக்கும் தாய் என்றே சொல்லலாம். உண்ணும் உணவும் கழிவகற்றலும் முறையாக நிகழும்போது உடம்பில் ஏற்படும் தாக்கம் குறைவானதாகும். இதனால் மலர்ச்சிக்கல் வராதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். அதிகாலையில் எழுந்தவுடன் வெறு வயிற்றில் நீர் அருந்துதல். தினமும் பழவகைகளையும் நார்ப் பொருட்களையும் உணவிற் சேர்த்துக் கொள்ளல், அளவாக சீராக மேற்கொள்ளப்படும் உணவுப் பழக்கவழக்கங்கள், தேவையற்ற மன அழுத்தங்களைக் குறைத்தல் என்பவற்றின் மூலம் மலச்சிக்கல் வராமல் தடுக்கலாம் என்று தமிழர் கண்டுபிடித்த முறைகள் இன்று எல்லாராலுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நாளாந்த உணவுப் பழக்கங்களில் சேர்த்துக் கொண்டிருப்பதால், மலச்சிக்கலையும், அதன் பின்னாலே எழக்கூடிய மூலவியாதி போன்ற வியாதிகளையும் இல்லாமற் செய்யலாம் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல, இன்றும் மூலவியாதிக்கு சித்த வைத்தியமே பிரதானமாகக் கொள்ளப்படுகின்றது.

வயிற்றோட்டம் முதலான வியாதிகள் அடிக்கடி எம்மிடம் வந்துசெல்லும். அவற்றுக்கு மருந்து மாத்திரைகளோ, ஊசியோ பாவிப்பது தேவையே இல்லாத ஒன்றாகும். உடலுக்கு ஒவ்வாத பொருள் ஒன்று குடலுக்குள் நுழைந்துவிட்டதால் அதை வெளியேற்றுவதற்காக உடல் தானாக எடுத்துக்கொள்ளும் ஒரு முயற்சியாகும். இங்கே உடலுக்கு ஒவ்வாதது வெளியேறியதும் நோய் மறைந்துவிடும். அதனால் மாத்திரைகளைக் கொடுத்து அவற்றை நிறுத்த முனைவது பாரதூரமான விளைவுகளையே உருவாக்கும். ஆனால் இந்நேரத்தில் உடலில் இருந்து நீரிழப்பு அதிகமாகி விடாதவாறு உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அடிக்கடி நீரையோ, நீராகாரங்களையோ வழங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

மேலும் தேயிலைச் சாயத்தினுள், தேசிக்காயைப் பிழிந்துவிட்டு தேனையும் கலந்துகொடுக்கும்போது வயிற்றைக் குளிர்வித்துக் கொள்ளமுடியும். தவிரவும் ஓமத்தை வறுத்தெடுத்து, அதற்குள் தண்ணீர் கலந்து குடிக்கக் கொடுப்பதன் மூலமும் வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தலாம்.

வயிற்றிலே பூச்சி காணப்படுதல் போன்ற நிலைமை கூடுதலாக சிறுவர்களிடத்தும் பெரியவர்களிடமும்கூட காணப்படும். எமது உணவுகளின் மூலமும், பழக்கவழக்கங்கள் மூலமும் உடலுக்குள்ளே சென்றுவிடும் பூச்சிகள் உள்ளே அதிகமாகக் காணப்படும்போது மயக்கம், வாந்தி, உணவு சமிபாடடையாத தன்மை என்பன ஏற்படும். இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களில் வேப்பெண்ணெயை ஒரு தேக்கரண்டியில் எடுத்துப் பருகுவதன் மூலம் இந்நிலையிலிருந்து மீண்டு கொள்ளலாம்.

பொக்குளிப்பான் (அம்மாள் வருத்தம்) போன்ற வியாதி வந்தால் எந்தவொரு மேலைத்தேய வைத்தியமுமே பலனளிக்காது என்பது அனைவருக்கும் தெரியும். நோயாளிகளைத் தனிமைப்படுத்தி அவர்களை வெளியிற் செல்லவிடாமல் கவனித்துக் கொள்வார்கள். நோய் மேலும் உக்கிரமடைவதைத் தடுப்பதற்கும், மற்றவர்களுக்குத் தொற்றாது தடுப்பதற்குமாக அவ்வாறு செய்யப்படும். அத்துடன் அந்நேரத்தில் புலாலுணவுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது எமது முறையாகும். வயிற்றில் உள்ள உஷ்ணம் மேலும் பெருகி நோயைக் கூட்டிவிடக்கூடாது என்பதற்காகவே புலாலுணவு தவிர்க்கப்படும். அத்துடன் சமிபாடு சம்பந்தமான பிரச்சினைகளைக் குறைப்பதற்காக எண்ணெய் வகைகளைப் பாவிப்பதற்கும் அனுமதிப்பதில்லை.

மேற்குறிப்பிடப்பட்ட நோயாளர்களுக்கு வேப்பிலையால் படுக்கை அமைக்கப்பட்டு அதன் மேல் வளர்த்தப்படுவர். வேப்பிலையிலுள்ள மூலிகைச் சக்தி இந்த நோய்க்கிருமிகளை அழித்துவிடுகின்றது. மேலும் வெண்டிக்காய், இரத வாழைப்பழம், இளநீர் மற்றும் தயிர் போன்றவற்றைக் கொடுத்து, படுக்கையில் வைத்துப் பராமரித்து இந்த நோயை விரட்டிவிடுவர்.

கூகைக்கட்டு நோய்க்கும் தனிமைப்படுத்தல் முக்கியமாகும். மேலே குறிப்பிடப்பட்ட நோய்க்குப் போலவே பத்திய உணவுப் பொருட்களை வழங்கியும் சவ்வரிசிக் கஞ்சி கொடுத்தும் பராமரிப்பர்.

உஷ்ண காலங்களின் கண்களின் ஏற்படும் நோய்க்குத் தமிழ் வைத்தியமே உகந்ததாகும். காலையில் நீரில் இடப்பட்ட நந்தியாவட்டை மலரினால் கண்களைக் கழுவிக்கொள்வர். சவர்க்காரத்தை நுரைக்கச் செய்து கண்களை நன்றாகக் கழுவிக் கொள்வர். வெளியிலே எங்கும் செல்லாமலும் மிதமான வெளிச்சத்தைப் பார்க்காமலும், கண்களைக் கடினமாகப் பாவிக்காமலும் இருப்பதனால் இந்த வருத்தத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.

மூலிகை மருத்துவம் என்பது இயற்கையான மூலிகைகளின் மருத்துவ இயல்புகளைக் கொண்டு நோயுற்றபோதும், நோய் வருமுன் பாதுகாக்கும் முகமாகவும், அவற்றைப் பாவிப்பதைக் குறிக்கின்றது. பின்வரும் மூலிகைகள் விசேட இயல்புகளைக் கொண்டதாகக் காணப்படுககின்றன.

வேப்பிலையானது தொற்று நீக்கியாக எப்பொழுதுமே பாவிக்கப்படக்கூடியது. வயிற்றிலுள்ள பூச்சிகளை அழிக்கக்கூடியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குருதியில் சக்கரை அதிகமாகும் நிலையைக் கட்டுப்படுத்தக்கூடியது. ஆடாதோடையிலை மற்றும் கற்பூரவள்ளி இலையானது சளியைக் கட்டுப்படுத்தக்கூடியது.

கொய்யாக் குருத்து மற்றும் வல்லாரையிலை குருதியில் சக்கரையின் அளவைக் கட்டுப்படுத்தக் கூடியது பொன்னாங்காணி கண்ணுக்கு ஒளியைத் தரவல்லது. முருக்கம் இலை குருதியின் செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் அளவை அதிகரிக்கவல்லது கறிவேப்பிலை கறிக்குச் சுவையூட்டுவது மட்டுமல்ல கொலஸ்ரோலின் அளவைக் குறைக்கக் கூடியது. நெல்லிக்கனி குருதியில் வெண்குருதிச் சிறுதுணிக்கைகளை கூட்டவல்லது.

மேற்குறிப்பிடப்பட்டவாறு மருந்துகளைத் தெரிந்து வைத்திருப்பதால், தாம் வாழ் நாளிலே வைத்தியசாலைப் பக்கமே போனதில்லை என்று சிலர் சொல்லும் வார்த்தைகள் உண்மையாகவே இருக்கலாம் என்ற நம்பிக்கை எம்முள் எழுகின்றது அல்லவா!

## நோய்கள் வருமுன் காத்தல்

மனித உடலில் உட்புறமாக ஏற்படும் மாற்றங்களை இயற்கை எமக்கு வெளிக்காட்டுகின்றது. இதையே அறிகுறி என்று சொல்லுகிறோம். மனித உடலில் ஏற்படும் மாறுபாடுகளைச் சமப்படுத்துவதற்காக உடம்பில் ஏற்படும் மாற்றங்களை நோய்கள் என்கிறோம். எந்த ஒரு நோய் வந்து போகும்போதும் அதற்குரிய உடல் பொருள் எதிரியை உடம்பு தோற்றுவித்துவிடும். அவ்வாறு உடல் நலிவடையும் வேளையில் உடலை வேறு நோய்கள் தாக்காதிருக்குமாறு நாம் எடுத்துக் கொள்ளும் உட்பொருட்களையே மருந்துகள் என்கிறோம்.

தமிழரின் மருத்துவம் இவ்வாறு உட்பொருட்களைச் சொல்லும்போது, மேலைத்தேயவர்களின் மருத்துவம் அறிகுறிகளை மறைக்கவல்ல இரசாயனங்களை உள்ளெடுக்கப் பழக்குகின்றது. அவற்றை நோவு கொல்லிகள் என்று சுலபமாகவே குறிப்பிடுகின்றோம். இங்கு நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். நோவு கொல்லிகளை வழங்கி, உடலில் அசாதாரண நிலையை தற்காலிகமாக மறைப்பதால் எந்தவொரு பயனும் இல்லை. இதே போல தொற்று நீக்கிகள் என்று பொருள்படும் அமொக்சிலின் முதலானவையும் பாவனைக்கு உகந்ததல்ல. இன்று உலகின் பல நாடுகளில் இவற்றைப் பாவிப்பதற்குத் தடை இருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் தமிழரின் சாவகாசமான நிரந்தரமான தீர்வு நோக்கியே அனைவரின் கவனமும் திசை திருப்பப்படுவதும் இங்கு அவதானிக்கப்பட வேண்டியதொன்று.

இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞானத்திற்கு ஈடாகவே வளர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும் மனிதனின் ஆரோக்கியமின்மையைக் காட்டும், மனிதனுக்குச் சவாலாக இருக்கும் மிகமுக்கியமான வியாதிகள், வாழும் காலத்திலேயே மனிதனுக்கு எமனாகும். சக்கரை வியாதி, கொலஸ்திரோல், மற்றும் இருதய நோய் என்பவற்றுக்குத் தமிழரின் வைத்தியம் எதைச் சொல்கின்றது என்பதைப் பார்ப்போம்.

மனிதனுடைய குருதியில் இருக்கவேண்டிய குளுக்கோசின் அளவு ஒரு லீற்றருக்கு 80-120 மில்லி கிராம் என்பதாகும். இந்த அளவு அதிகரித்துக் காணப்படின், குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிப்பதாக அல்லது குளுக்கோசை சமிபாடடையச் செய்யவேண்டிய இன்சுலின் எனப்படும் ஓமோன் சுரக்கும் வீதம் குறைவடைவதாக எடுகோள் மேற்கொள்ளப்படும். குருதியின் சக்கரையின் அளவு அதிகரித்தல் என்பது, பலவிதமான நோய்களுக்கும் காரணமாக அமையும் என்பதால் நீரிழிவு எனப்படும் இவ்வியாதியைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

சக்கரையின் அளவைக் கட்டுப்படுத்துவதாக மேலைத்தேய மருத்துவர்கள் பிரேரிக்கும் மாத்திரைகள், சொன்ன வேலையைச் செய்வதில்லை. மாத்திரை மட்டும் போதாது பத்தியமும் வேண்டும் என்று சொல்லுவார்கள். பத்தியத்தால் மட்டுமே முடியும்போது, மாத்திரைகள் அவசியமில்லையே. தமிழ் முறையிற் சொல்லியதைப் போல பத்தியம் மட்டுமே போதுமானதே.

தமிழரின் உணவு மற்றும் பழக்கவழக்கங்களை ஒழுங்காகக் கடைப்பிடிப்பவர்களை அந்நோய் நெருங்கவும் மாட்டாது என்பதே உண்மையாகும். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, வெய்யிலில் நின்றுழைக்கும் ஒருவன், நன்கு பசித்த பிறகு போசனம் அருந்திவிட்டு தொடர்ந்தும் வேலை செய்யத் தொடங்குவானானால் அவனை இவ்வருத்தம் அணுகவே முடியாது. எமது உணவுகளில் உள்ள சமவலுத்தன்மை, தாவர உணவுகளை அதிகமாக உட்கொள்ளுதல் போன்ற முறைகளால் சக்கரை வியாதியைச் சுலபமாகவே கட்டுப்படுத்தலாம். இது உண்மை. இதையே தான் இன்று மேலைத்தேய வைத்தியம் படித்தவர்களும் சொல்கிறார்கள்.

சாதாரணமாக தமிழனின் சாப்பாட்டு முறைகளிலும், பழக்கவழக்கங்களிலும் கொழுப்புச்சத்து உடலில் தேங்குவதற்கான சந்தர்ப்பம் மிகக்குறைவாகும். இவர்கள் இடைக்கிடையே கடைப்பிடிக்கும் விரதம் மற்றும் நோன்பு போன்றவையும், தேவைக்கு அதிகமாக கொழுப்புச் சத்து உடம்பில் தேங்குவதைத் தவிர்த்து உடலின் சமநிலையைப் பேணிக் கொள்ள உதவுகின்றது.

ஆரோக்கியம் என்பது அவ்வப்போது எடுக்கும் மருந்துகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் தங்கியிராமல், மனிதனின் தொடர் உணவு முறைகளிலும் பழக்க வழக்கங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது இங்கு நன்கு தெளிவுபடுத்தப்படுகின்றது.

புகையும், மதுவும் நோய்வாய்ப்படும் நிலைமைகளை உக்கிரமாக்கும். ஆனால் தமிழரின் பண்பாட்டில் இவை தவிர்க்கப்பட வேண்டியவை என்பது ஏற்கெனவே சொல்லப்பட்டுவிட்டது.

நீண்ட நாளாக இருந்து வரும் சக்கரை மற்றும் கொழுப்பு வியாதிகளே, இறுதியாக இருதயத்தைத் தாக்கிச் செயலிழக்க வைக்கின்றன என்பது எமக்குத் தெரியும்.

உணவும் பழக்கமும் மட்டுமன்றி, மனத்தை மாற்றக்கூடிய நிகழ்வுகள் இருதயத்தின் செயற்பாடுகளைச் சீராக்கும் என்பதையும் தமிழர் உணர்ந்து தான் இருக்கின்றனர். இதனாலேயே கலை, கலாசாரம், ஆடல் பாடல் என்று பலவிதமான விடயங்களையும் அறிமுகப்படுத்தினர்.

பிரணாயாகமம், தவம், தியானம் என்றெல்லாம் தமிழர் கண்டறிந்த விடயங்களை இன்று நோய்களுக்குத் தீர்வாகவே மருத்துவர்கள் பிரேரிக்கின்றனர். வாழ்க்கைக்கு ஏற்ற வளமும், அளவான உழைப்பும் தேவையானளவு ஓய்வும் என்றெல்லாம் மருத்துவத்துடனேயே பலவற்றையும் தருகின்றது. தமிழரின் பண்பாடு. இருபதாம் நூற்றாண்டைத் தீவிரமாக அச்சுறுத்தும் இன்னொரு நோயையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். சிறு பிள்ளைகளும் அறிந்து கொள்ளும் அளவிற்கு இன்று பேசப்படுவது புற்றுநோயாகும். உடலிலுள்ள கலங்கள் மிதமான வளர்ச்சியைக் காட்டும் ஒரு நிலையையே புற்றுநோய் என்கிறோம்.

கபாலத்தைப் பிளந்து செய்யும் ஒரு வகைப் புற்றுநோயை அகத்தியர் குணப்படுத்தியிருக்கிறார் என்று வரலாற்றில் சொல்லப்படுகின்றது. ஆனால் இன்று மூளையிலே புற்று நோய் ஏற்பட்டுச் செய்யப்படும் சிகிச்சைகள் பலவும் தோல்வியடைந்து விடுகின்றன என்பதும், அவ்வாறு உயிர்த்து எழுந்தவர்களும் ஓரளவு சித்த சுவாதீனமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்பதும் நாம் அறிந்ததே.

என்னதான் விஞ்ஞானம் தன்னுடைய உச்ச வளர்ச்சியைக் காட்டியுள்ள போதும், புற்று நோய் என்பதற்கு மருந்து இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதும் நிலைபெறுதகு ஆரோக்கியம் எனும்போது தமிழரின் மருத்துவத்துக்கே செல்லவேண்டும் என்பதை மேலும் வலியுறுத்தி வாழ்நாளில் ஆரோக்கியத்தைத் தரும் தமிழரின் மருத்துவத்தின் ஒருசில பகுதிகளையேனும் இங்கு தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றுமுள தமிழ் மொழி

தொகுப்பு :- சி.சிவனேசன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்

பழம் பாண்டியர்கள் தென்மதுரையிலும், கொற்கையிலும் முறையே முதலாம், இரண்டாம் தமிழ்கெழு கூடல்களை அமைத்துத் தமிழ்வளர்க்க சிவனும், முருகனுமே திருவிளையாடல்களைப் புரிந்திருந்தனர் என்பது தமிழ்மொழியின் தோற்றத்தைப் பற்றிய வரலாறாகும். அதனால் தான் தமிழ் இறைமொழி, பக்திமொழி, முத்தமிழ்மொழி, தனித்துவமான மொழி என்றெல்லாம் பாராட்டப்பட்டு வருகின்றது. ஆனால் பாண்டியர்கள் வளர்த்திருந்த முதலிரு கழகங்களுடன், பழந்தமிழ் நாடுகள் அனைத்தும் இறைவன் திருவிளையாடலால் என்னவோ, ஊழிப் பெருவெள்ளங்களுட் தாண்டு அழிவுறலாயின. அதனால் அதன் முழுமையான வரலாறுகளை ஆய்வதென்பது எம் ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டதாகும். அண்மையில் யப்பானில் இடம்பெற்ற (2011 பங்குனி முற்பகுதியில்) பூமி அதிர்வுடன் கூடிய ஆழிப்பேரலைகள் முப்பது அடிவரை பெங்கியெழுந்து 25,000 மக்களையும், அவர்களது கட்டிடங்கள், கப்பல்கள், கார்கள் முதலான அனைத்தையும் சுக்கு நூறாக்கி அடித்துச் சென்ற கொடூரங்களையும் சுனாமிப் பேரழிவையும் நாம் ஒப்பிட்டு நோக்கின் அன்றைய அழிவுகளை நாம் ஓரளவிற்கு மனத்தின் கண் திரைபோட்டுப் பார்க்கலாம். ஆனால் இந்தக் கடற்கோள்கள் தமிழை முற்றாக அழித்து விடவில்லை.

இறைவனின் திருவிளையாடல் மீண்டும் வட மதுரைக்குப் புலம்பெயர்ந்த பாண்டியர்களைத் தமிழ் வளர்க்க ஊக்கின. அதனால் கடல்கோளிற் தப்பி வந்த பாண்டியன் முடத்திருமாறன் வடமதுரையில் மூன்றாம் தமிழ் கெழுகூடலை அமைத்துத் தமிழ் வளர்த்திருந்தான். இக்காலத்தில் எழுந்த நூல்களே இன்று நாம் வியந்து படிக்கின்ற எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இலக்கியங்கள் ஆவன. இவையனைத்தும் தமிழ் ஒரு கட்டுப்கோப்பான மொழி என எமக்கு உணர்த்துகின்றன. இன்னும் சொல்லப்போனால், இக்காலத்தில் வளர்ந்திருந்த தமிழை இன்று நாம் "ஒரு அற்புதமான மொழி" என்றே பார்க்கின்றோம். மூன்றாம் தமிழ்கெழு கூடல் இலக்கியமான புறநானூற்றுக் காலத்துப் பாணர்கள் இனிய பாடல்களைப் பாட அவர்களுக்கு நூலறிவு கையெனவும், நா மருப்பு எனவும், அவற்றினாலே தான் இவர்கள் மன்னரையும் பிறரையும் வெல்கின்றனர். (புறநானூறு, செய், 388) இவர்களது தமிழ் மொழிவன்மை போற்றப்பட்டிருந்தது என்பதும் புலனாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, இவற்றுள் சிறப்பாகப் போற்றப்பட வேண்டிய நூல் திருவள்ளுவரின் திருக்குறளாகும். இதனை அன்றே ஔவையார் அணுவுடன் ஒப்பிட்டுப் போற்றியிருந்தார். அதாவது, தமிழின் அணுநிலையை வள்ளுவராலேயே உறுதிப்படுத்த முடிந்திருந்தது. இன்று வரை வேறு எவரும் இவருக்கிணையாகத் தோன்றவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. இளங்கோவடிகள் "பொய்யில் புலவன்" என்றும், சீத்தலைச் சாத்தனார் "பாமுறைதேர் வள்ளுவர்" என்றும் பாராட்டியிருந்தனர். இன்றும் அவருடைய தமிழ் மொழியின் பெருமை கன்னியாகுமரிக் கடலிலிருந்து கொண்டு உலகுக்குப் பறைசாற்றப்பட்டு வருகின்றது. இதற்கிணையான ஒரு நூல் வேறு எந்த மொழியிலும் உருவாகியிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தக் குறளிலே தான் தமிழ்மொழி பேசியவர் நீதி, நியாயங்கள் எத்தகையனவாய் இருந்தன என்பது நிலைநாட்டப்பெற்றிருந்தது. அநீதியான முறையில் மக்களைப் பாகுபாடு செய்த வடமொழி நூலான மனுதர்ம சாத்திரத்தை, மனிதநீதிகோரிய அம்பேத்கார் கிழித்தெறிந்தது போல், தமிழர்கள் நீதியை உள்ளடக்கிய திருக்குறளை எவரும் கிழித்தெறிவதற்கில்லை.

இனி, தமிழர்கள் மூன்று கெழுகூடல்களை அமைத்து தமிழுக்கு ஒரு மணி மகுடத்தையும் ஏற்படுத்திச் சூட்டியிருந்தார்கள் என்பது உண்மையே. ஆனால், பொதுவாக சில மனிதர்களுக்குத் தம் மண்ணை விட பிறர் மண்ணிலே தான் அன்றும், இன்றும் பேராசை ஏற்படுகின்றது என்பதை வரலாறுகள் எடுத்தியம்புகின்றது. இந்த வகையில் கி.பி 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 6ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் "களப்பிரர்" எனும் சமண ஆட்சியாளரின் ஊடுருவலால் பாண்டியர் அரசில் ஒரு வெற்றிடத்தை நாம் அவதானிக்க முடிகின்றது.

உண்மையில் இக்காலத்தில் தமிழ் மன்னர்களால் தமிழ் வளர்க்கப்படவில்லையென்பது உண்மையே. ஆனால் சமண முனிவர் விஜயநந்தி கி.பி 470 ஆம் ஆண்டில் சமண சமயக் கருத்துக்களை தமிழ் மொழியூடாகவெளியிட ஒரு தமிழ்ச் சங்கத்தினை ஏற்படுத்தியிருந்தார். இந்தச் சங்கம் மூலம் தமிழ் ஒரு புதிய வடிவத்தில் வளர்ந்தது. இத்தமிழ்ச் சங்கத்தினரால் யாக்கப்பட்ட நூல்களே சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, பெருங்கதை முதலான சமண சமயக் காவியங்கள் ஆவன. இவை பௌத்த காவியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை என்பனவற்றின் இன்னோர் வடிவமாக உருவாகின. ஆனால் இளங்கோவடிகள் தமிழகத்தையும், பாண்டியர், சோழர்களையும் வடநாட்டு மன்னரிடமிருந்து காப்பாற்றவே சேரன் செங்குட்டுவன், இவர்களைத் தன்னாட்சிப்படுத்தினான் என்று நியாயப்படுத்துகையில் ஒட்டுமொத்தத் தமிழகத்திலும், அவர் கொண்டிருந்த பற்று புலனாவதற்குக் காரணம், அவர் ஒரு தமிழ்வளர்க்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் ஆகையாலோயாம். அதனோடு இவர் புகார்க்காண்டத்தில் தமிழின் எட்டுவகைக் கூத்து, பதினொருவகை ஆடல், யாழிசை முதலான பல்வகைத் தமிழ்ப்பண்களை தவறாமல் குறிப்பிட்டுள்ளார். தமிழிசை வளர்க்கும் பணியில் இயல், இசை, நாடகக் கலவைகள் முதற்தமிழ்கெழு கூடல் காலம் முதலாகவே இருந்துள்ளன. பெருநாரை, பெருங்குருகு என்பன முதற்தமிழ்க் கழகக் காலத்து இசை நூலாகவும், அகத்தியம் மற்றும் நரம்பின்மறை எனும் நூல்கள் இரண்டாம் தமிழ்க்கழக இசை நூல்களாகவும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தமிழிசைகளை கி.பி.13 ஆம் நூற்றாண்டில் காஷ்மீரிலிருந்து தமிழகம் வந்த சாரங்கதேவர் ஆராய்ந்தே சங்கீதரத்னாகரத்தை வடமொழியில் எழுதினார் என்பதனால், தமிழ் மூவேந்தர் ஆதரவைத் தமிழ் இக்காலத்தில் முழுமையாகப் பெறவில்லையாயினும் ஒவ்வொரு மகனும் அதனைப்,

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே

எனக் கருதி வளர்த்திருந்தனர் என்பது கண்கூடு. அதனோடு கி.பி 8ஆம் நூற்றாண்டில் அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சராக மாணிக்கவாசக சுவாமிகள் இருந்த காலத்தில் இறைவனே பாண்டியராக இருந்து தமிழ் வளர்த்தார் என்பதனை, அவர்,

தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை

என்று சிவனை விளித்துப் பாடுவதனால் தமிழ் இறைவனிடமிருந்து சாகாவரம் பெற்ற மொழி என்பது உறுதியாகின்றது.

இனி, உலகியலில் மட்டுமல்லாமல் துறவு நிலையை ஏற்றிருந்த சித்தர்கள், முனிவர்கள் என்போராலும் தமிழ் வடக்கே இமயம் முதல், தெற்கே குமரிமுனை வரை வளர்க்கப்பட்டிருந்தது என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ளத் தவறியுள்ளோம். என்பதும் குறிப்பிடத்தக்கது. பூமியின் புவியியல் அமைவானது பூமி அதிர்வுகள், எரிமலைக் குமுறுல்கள், கடற்பெருக்குகள் முதலான இயற்கை அனர்த்தங்களால் காலந்தோறும் மாறலாயிற்று எனப் பூமியின் வரலாறுகள் தெரிவிக்கின்றன. முதலாம் தமிழ் வடக்கே இமயம் முதல், தெற்கே குமரிமுனை வரை வளர்க்கப்பட்டிருந்தது என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ளத் தவறியுள்ளோம் என்பதும் குறிப்பிடத்தக்கது. பூமியின் புவியல் அமைவானது பூமி அதிர்வுகள், எரிமலைக் குமுறல்கள, கடற்பெருக்குகள் முதலான இயற்கை அனர்த்தங்களால் காலந்தோறும் மாறலாயிற்று எனப் பூமியின் வரலாறுகள் தெரிவிக்கின்றன. முதலாம் தமிழ்கெழுகூடல், இரண்டாம் தமிழ்கெழுக்கூடல் நாடுகள் இருபெரும் கடற்பெருக்குகளினால் அழிவுற்றது போல, பின் எஞ்சியிருந்த பகுதிகளை கடல் கொண்டிருந்தது,



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதனை இளங்கோவடிகள்,

குமரிக்கொல்லம் முதலிய பன்மலை நாடும்
காடும் நதியும் பதியும் தட நீர்க்குமரி வட
பெருங்கோட்டின் காடும்
கடல் கொண்டொழிதலாற்
குமரியாகப் பௌவமென்றார்

(சிலம்பு - 8-12)

எனக் குறிப்பிடுவதிலிருந்து, எவ்வளவு நிலப்பரப்பினை கடல் உறிஞ்சிக் கொண்டது என்பது உய்த்துணரத்தக்கது. இந்த இயற்கையனர்த்தங்கள் ஏற்பட்ட காலங்களில் வடக்கேயிருந்த உரேசியன் நிலத்தட்டுடன், தெற்கேயிருந்த நிலத்தட்டு மோதியதனால் கடற்பாறைகள் மேலெழுந்து இறுக்கம் பெற்று இமாலயமலை உருவாகலாயிற்று. இதனைத் தொடர்ந்து கங்கை, யமுனை நதிகளும் உருவாகியிருந்தன. தென் தமிழகத்தில் முனிவர்களுக்கும், சித்தர்களுக்கும் உறைவிடங்களாக இருந்த மகேந்திரமலை, குமரிமலை, மணிமலை ஆகிய பன்மலைகளும், பஃறுளி ஆறு, தாமிரபர்ணி முதலான ஆறுகளும் கடலுட்தாண்டு போயின. அதனால் தென்னக முனிவர்கள் வடக்கே உருவாகியிருந்த இமயமலைச் சாரலைத் தம் தவத்திற்கு ஏற்ற இடமாகக் கருதிப் புலம்பெயர்ந்தனர். தவத்திற்கேற்ற சூழலைக் கொண்ட இமயத்தின் குகைகளில் தவமிருந்த இவர்கள், தம் இறைமொழியாகிய தமிழை அங்கும் வளர்த்திருந்தார்கள். இவர்களில் ஒருவரான திருமூலர்,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றதக தமிழ் செய்யுமாறே

என்பதனால் தமிழ் வளர்த்த முனிவனாகவே தன்னை அடையாளப்படுத்துகின்றார். அதனோடு இவர் காலத்தில் தமிழில் 51 எழுத்துக்களே இருந்தன என்பது பற்றியும், அவை எந்தெந்த உடல் உறுப்புக்களால் எழுப்பபப்பட்டு வெளியே ஓசை பெறுகின்றன என்பதனையும் இவர் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். (திருமந்திரம் 2698, 2699, 2700, 2701). இவற்றுக்குமேலாகத் திருமூலர் தமிழ் ஒரு கணிதமொழி என்பதனையும்,

கணக்கறிந்தார்க்கன்றி காண வொண்ணாது
கணக்கறிந்தார்க்கன்றி கை கூடாக்காட்சி

என்று அறிவுறுத்துவதனால் தமிழில் இறைவழிபாடும் ஒரு மர்மமான கணிதத்தினுள் உள்ளடக்கப்பட்டிருப்பது புலனாகும். அதாவது முதலில் 'நமசிவய' என ஐந்தெழுத்தின் மகிமையைக் குறித்துப் பின், 'ஓம் நமசிவாய' என ஆறு எழுத்தின் மகிமையைக் குறிப்பர். பின் இவற்றைவிட 'ஓ' எனும் ஒரெழுத்துக் கொண்டு உயிரை இறைவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடிகளில் நிலை நிறுத்துவது மேலானது என்பதைக் கணிதவரிசையில் சுருக்கிக் காட்டியுள்ளார். (திருமந்திரம் செய் 926, 963) திருவள்ளுவரும்,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

என்று குறிப்பிடுவது, உலகமொழிகளின் ஒலிகள் அனைத்தும் இறைவன் எழுப்பிய முதல் மொழியான 'ஓம்' என்பதிலிருந்தே பிறக்கலாயின என்ற கோட்பாட்டினை வலியுறுத்தவேயாம். இந்த உண்மையை நன்கு உணர்ந்து கொண்ட தமிழ், தான் வளர வேண்டும் எனக் கருதி, மற்ற இனங்கள் மீது திணிக்கப்படாமலே வளரும் பண்புடையதாம்.

தமிழ் பதிண்னெண் சித்தர்கள் அனைவரும் இன, மொழி, நாடு என்னும் பற்றற்ற பொதுமைவாதிகளானாலும், தாம் பிறந்து, வளர்ந்து, அனுபவித்த தம் தமிழ்க் குடிகள் நன்மை கருதி, சித்த மருத்துவம், யோகதத்துவம், சோதிடம் எனப் பல துறைகளிலும் தமிழில் பாடிவைத்துள்ளார்கள். விஞ்ஞானம் இன்று ஆய்வதனை, இவர்கள் அன்றே முடிந்த முடிவுகளாக அறிவித்து, வழிநடத்தியிருந்தார்கள். நாம் இவர்கள் வழிகாட்டலை எவ்வளவு தூரம் பயன்படுத்தினோம் என்பதற்கு விடை எம்மிடமிருந்தே பிறக்க வேண்டும்.

இவர்களைத் தொடர்ந்து தமிழ் உலகம் கண்ட ஒரு புதிய வளர்ச்சியாக தேவார, திருவாசகம் முதலான பக்தி இலக்கியங்கள் தோன்றி, தமிழைப் பட்டிதொட்டியெல்லாம் பாட வழிநடத்தியிருந்தன. அப்பொழுது பாமரமக்களும் இறைவனைத் துதித்துப் பாடி, ஆடி மகிழ தமிழ் கைகொடுக்கலாயிற்று. எல்லோரும் யோகிகள் ஆக முடியாத நிலையில், இறைவனுடன் நேரடியாகப் பேசி மகிழ வைத்த பக்திநெறி என்ற குடையின் கீழ் மக்கள் அனைவரும் ஒருங்கினைக்கப் பட்டனர். ஏற்கனவே தமிழகத்தில் சமணம், பௌத்தம் முதலான மதங்கள் மக்களை வழிநடத்த முடியாமற் கைவிட்ட நிலையில், தேவார ஆசிரியர்கள் எளிமையான தமிழில் இறைவனைப் போற்றி வழிபட்ட பாக்கள், மக்களின் உள்ளங்களை தொடலாயின. தமிழும் ஒரு புதிய வடிவில் தோன்றிப் படித்தோர், படியாதோர் என்ற வேறுபாடில்லாமல் அனைவரும் இறைவனைப் பாடியுருக வைத்திருந்தது.

இவ்வாறு மக்கள் மனங்களைத் தொட்ட தேவாரங்களை தமிழ்பக்தர் ஒருவர் கேதாரநாத்திற்கும் எடுத்துச் சென்றுள்ளார் என்பதனை கேதாரநாத் மடத்தின் சுற்று மதிலில் எழுதப்பட்டிருக்கும் தேவாரங்களே பரறசாற்றுகின்றன எனில் மிகையாகாது. இமாலயத்தின் பனியுறையும் பகுதிகளான பத்ரிநாத், கேதாரநாத் பகுதிகளுக்கு ஆதிசங்கரரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணர்களைக் குடியமர்த்தி சிவ வழிபாட்டினை நிலை நிறுத்தியவராவர். மிகவும் கடினமான போக்குவரத்தினைக் கொண்ட இப்பகுதியில் தமிழ்மொழி இறைவனைப் போற்றிக் கொண்டிருக்கிறது எனில், அதன் தெய்வீகமே காரணமாகும். கி.பி.12 ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் 'சைவ சித்தாந்தத்தை' நெறிப்படுத்திய தத்துவமொழியாகவும் மிளிரத் தவறவில்லை.

தமிழர் இறைவழிபாட்டிற்கென்றே பிறப்பெடுத்தவர்கள் என்பதைக் காலந்தோறும் எழுந்த திருவிளையாடல்கள் நிகழ்ந்த கோவில்கள் மட்டுமன்றிச் சந்துக்குச் சந்து, வீதிக்கு வீதி எழுப்பப்பட்டிருக்கும் சிறு சிறு கோவில்களும் எமக்கு நினைவூட்டியிருக்கின்றன. இந்நிலை வடமாநிலங்களில் இல்லை. அங்குக் கோவில்கள் போன்று பக்தர்களைப் பரவசமாக்கும் வகையில் அன்றி வெறும் கிரியைகளைக் குறிக்கோளாகக் கொண்டனவாகவே காணப்படுகின்றன. காசிக்குத் தென்னக மக்கள் பக்தி மேலீட்டினால் சென்று வருவர். அதனால் அங்கும் தமிழின் செல்வாக்கு இருப்பதாகவே சில சான்றுகள் தெரிவிக்கின்றன. அதாவது காசி விசாலாட்சி அம்மன் கோயில் வாயிலிலுள்ள அறிவிப்புப் பலகையில் அழகிய தமிழில் 'பிராமணச் சிறுவர் கல்விக்கு நன்கொடைகள் வழங்குமாறு' கோரிக்கை விடப்பட்டிருந்தது. அங்கு தமிழக நாட்டுக்கோட்டைச் செட்டியார் மடங்கள் தமிழ் வளர்க்கும் பணியிலிருப்பவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. வசிஷ்டர் குகை புனிதமானதெனப் பேணப்பட்டுவரினும், அங்கும் தமிழகத்தைச் சேர்ந்த சதானந்த சுவாமியே வாழ்ந்து வருகின்றார். அங்குள்ள நினைவுத் தூணில் "மாத சிவராத்திரி" எனத் தமிழில் ஒரு குறிப்பு பதியப்பட்டிருந்தது.

ரிஷிகேசத்தில் வாழ்ந்த தமிழ் முனிவர்கள் மரபினடிப்படையில், அங்கும் தயானந்த சுவாமி மடம், சிவானந்த மடம் என்பன தமிழர்கள் உருவாக்கிய மடங்களாகவே காணப்படுகின்றன. இவர்களுள் சிவானந்த சுவாமி, தமிழ் நாட்டைச் சேர்ந்த அப்பையர் தீட்சிதர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் முதலில் வைத்தியராகத் தொழில் புரிந்து செய்த தொண்டுப் பணியினாலேயே துறவு நிலையை எட்டியவர். இவர் எழுத்துக்கள் வடமொழி மூலங்களைக் கொண்டவையாய் இருப்பினும், அவர் உருவாக்கிய மடத்தில் தமிழில் 'ஓம்' எனும் மந்திரத்துடன், தமிழக முருகனின் கோலம் கொண்ட படமொன்றினையும் அவதானிக்கலாம்

கடற்கோள்களினாற் பாதிக்கப்பட்ட சித்தர் பலர் இமாலயம் நோக்கி நகர்ந்த நிலையில், தொடர்ந்தும் தமிழ்மொழி பேசுவோர் அங்கு ஆன்மீக வாழ்வினை மேற்கொண்டு வருகின்றனர் என்பதனைத் தற்கால வரலாறுகளும் உறுதிசெய்கின்றன. ஆனாலும் இவர்கள் வடமொழித் தாக்கத்திற்குட்பட்ட வகையிலேயே மாறியிருப்பதனால், அவர்கள் தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங்களை இழந்திருப்பது உணரத்தக்கதாம். எடுத்துக்காட்டாக பரங்கிப்பேட்டையில் கி.பி 203 ஆம் ஆண்டில் பிறந்தவரான பாபாஜி நாகராஜர் பூர்வீகமும் அறியப்பட முடியாத வகையில் திரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாம். தமிழர்கள் வரலாறுகளை எழுதி, தம் அடையாளங்களைப் பேணிக் கொள்ளவில்லை என்பது உண்மை தான். அதற்காகத் தமிழும் அழியவில்லை, தமிழினமும் அழியவில்லை என்பதும் நன்கு நிறுவப்பட்ட உண்மையே. மாறாகப் பூமியின் அனைத்து மண்ணிலும் தமிழ் தன் வேர்களைப் பதித்து வளர்த்து வருகின்றது. தமிழகத்தில் ஆங்கில மோகத்தினால் சிலர் தமிழை ஆங்கிலத்துடன் கலந்து பேசியும் எழுதியும் வருகின்றார்கள். ஒருகாலத்தில் பதிற்றுப்பத்து பாடல்களின் கருவூலங்களாக இருந்த சேரமன்னரும், மக்களும் எவ்வாறு தமிழ் மண்ணைக் காத்தார்கள் என்பதனை அறிந்து கொள்ள இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் சான்றாக அமைகின்றது.

கி.பி 12ஆம் நூற்றாண்டு முதலாகவே வடமொழி மயமாகிய சேரநாட்டுத் தமிழ், மலையாளமாகத் தன்னை அடையாளங்காட்டிக கொண்டது. ஆனால் அப்படியானதொரு தமிழ் இன்று ஆங்கிலக் கலப்புடைய மொழியாக உருவாகாமல் பாதுகாக்கவல்ல தமிழ்ப் பற்றாளர்களைத் தமிழகம் நிறைவாகப் பெற்றிருக்கின்றது. ஈழத்தமிழர்கள் இந்தத் தமிழுக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் தம் உயிர்களை துச்சமாகக் கருதிப் போராடி வருகின்றார்கள்.

தற்காலம் கணினியுகமாக மாறிவிட்ட நிலையில் தமிழும் கணினி மொழியாகி விட்டுள்ளது. எனவே இறைமொழியாகிய தமிழ் ஆரம்பம் முதல் இறுதிவரை தன் தனித்துவத்தை இழக்கவில்லை. கடற்கோள்கள் தாக்கினால் என்ன? ஆரியமாயை மயங்கினால் என்ன? யாராலும் தமிழை அழித்துவிட முடியாது. புலம்பெயர்ந்த நாடுகளில் உருவாகியுள்ள தமிழ்க் கல்விக்கூடங்கள், தூய தமிழைப் பாதுகாப்பதில் அதிக அக்கறையுடன் தொழிற்படுகின்றன இந்நாடுகளில் வாழும் இளைஞர்கள் அனைவரும் தமிழை வீட்டிலும், சமூகத்திலும் வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள். அதாவது, தமிழ் தன்னைத் தானே வளர்க்க வேண்டி உலகளாவிச் சென்றுள்ளனர் என்பதே உண்மை. ஒவ்வொரு தமிழனதும் பங்களிப்பிலேயே இந்நிலையேற்படலாயிற்று. அதனால் தமிழ் உலகத்தமிழர் மொழியாகிப் பொங்கிடும் நிலை தவிர்க்க முடியாததாகும்.

22.07.2011 அன்று GTV யின் வெளிச்சம் நிகழ்ச்சியில் ஊடகவியாளர் தினேஸ்குமார், பேராசிரியர் நா.கண்ணனை நேர்காணுகையில், அவர் தெரிவித்த தமிழின் பெருமைகள் பற்றியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு குறிப்பிடல் அவசியமாம். விஷ்ணு வழிபாட்டினரான ஆழ்வார்கள் இறைமொழியான தமிழில் வடிக்கப்பெற்ற நாலாயிரத் திவ்வியப்பிர பந்தத்தினை கருவறைக்குள் கொண்டு போன நிலையில், வடமொழி அதன் பின்னே செல்ல வேண்டிய நிலையேற்படலாயிற்று என்பதனை அனுபவித்துக் கூறினார். அதனோடு தென்கொரிய மொழியில் தமிழின் செல்வாக்கினால், அங்கு அப்பா, அம்மா எனும் சொற்கள் நிரந்தர இடத்தைப் பெற்றிருந்தன என்றும், தமிழில் போலவே ப, வ எழுத்துக்களின் பாவனை இருப்பதோடு, ப எனும் எழுத்து தமிழ் வடிவத்திலே தான் அமைந்துள்ளது என்பதையும் தெரிவித்தார். பிற்காலச் சோழப் பேரரசுகாலத்தில் இந்நிலையேற்பட்டிருக்கலாம். இது ஒரு தற்காலிக செல்வாக்கு. ஏனெனில் தமிழ் எப்பொழுதுமே பிறமொழிகள் மீது தன்னைத் திணித்துப் பரவ முயலவில்லை. அது இலக்கிய, இலக்கணங்களின் நிறைவுபெற்றுத் திகழ்ந்த நிறை மொழியாகையால், தன்னை நேசிக்கும் மக்களுடனேயே வாழவிரும்பிற்று.

(குமரிக் கண்டம் முதல்
சுமேரியாவரை தமிழர் வரலாறு
என்ற நூலில் இருந்து தொகுக்கப்பட்டது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நன்றி நவிலல்

ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டுப் பேரவையின் பிரசவிப்பான முத்தெழில் சஞ்சிகை வெளிவர எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் முதற்கண் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நூல் வளம்பெற ஆசியுரைகள், வாழ்த்துரைகள் அள்ளி வழங்கிய பெரியோர்களின் பாதம் தொட்டு நன்றிகளைக் கூறிக்கொண்டு இந்நூல் உருவாக ஆக்கங்களை வழங்கிய பேராசிரியர்கள், கட்டுரையாளர்கள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

குறுகிய காலத்தில் நூலை அச்சிட்டு உதவிய மல்ரிவிஷன் அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள். மேலும் இந்நூல் உருவாகி மணம் வீச எல்லாவகையிலும் உதவிய அனைவருக்கும் மனமுவர்ந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

7732 (P)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாவெட்டி மலைக் குன்றுகள், ஒட்டுசுட்டான்

Multivision Printers 024 2223669

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org